வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.,

அவர்கள் இயற்றிய

நாற்றொகுதி.

## முதற் பகுதி.

# 1. கலாவதி.

TO

HIS HIGHNESS

# THE RAJAH BHASKARA SETHUPATI

## OF RAMNAD

PATRON OF TAMIL LITERATURE

## THIS DRAMA

IS DEDICATED

WITH KIND PERMISSION

AS A SMALL TOKEN OF RESPECT AND ESTEEM

BY THE AUTHOR.

### உரிமையுரை.

எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

சீர்க்கள வங்கமெ லாமணி யார்ந்தவள் செய்ய தமிழ்ப்பல பாடலினுள்
பார்க்க வசீகர நாடக மானினி பாவைய ரேத்து கலாவதியாம்
யார்க்கு மினிப்புறு வாசகியைக்கர மீர்த்திவண் வாசகி யென்றழையாய்
பார்க்கர சேகுண வானென வேமினிர் பாற்கர சேது பதித்துரையே.

# சிறப்புக் கவிகள்

கும்பகோணக் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர்
பிரமஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள் சொல்லிய
நேரிசைவெண்பா.

பலாவதிகாத் தென்முகவைப பாற்கரபூ பற்குக்
கலாவதிநூல் செய்தளித்தான் கற்றோர்—சுலாமதுரைச்
சூரிய நாரா யணசூரி தொன்னூறோர்
கூரியரை ராய்ந்து குறித்து.

---

தஞ்சைச் சதாவதானம்
பிரமஸ்ரீ சுப்பிரமணிய ஐயரவர்கள் சொல்லிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பொன்பூத்த சூரியநா ராயணமா னுடகத்திற் பொலிந்து தோன்ற
மன்பூத்த கலாவதியைத் தன்னொளியான் விளக்கியிந்த வையத் துள்ளா
ரின்பூத்த வகக்கமல மலர்த்தியது பிறம்பூதோ வியல்பன் றற்கே
மின்பூத்தவன்னதும்வாய்க் குமுதமொடம் மரைமலர்த்தன் மிகுவியப்பே.

---

மதுரையம்பதி மகாவித்துவானும்
இந்நூலாசிரியரது போதகாசிரியருமாகிய
மகா-ள-ள-ஸ்ரீ சு. சபாபதி முதலியாரவர்கள் சொல்லிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

தோடகத்தா மரைமார்பன் சூரியநாராயணவேட் சுகுணன் செய்த
மாடகச்சீ ரிசையணிகள் வளருமெழிற் கலாவதிப்பேர் வசன நீரி
னூடகத்துக் கவிமலரிற் பொருண்மணமுஞ் சுவைத்தேனு முறப்பெற்றோங்கு
நாடகச்செந் தமிழ்த்தடத்தி னுவலிர்யாந் திளைத்தாடி நலங்கூர் வாமே.

---

சென்னைத் திருமயிலை வித்துவான்
மகா-ள-ள-ஸ்ரீ சண்முகம் பிள்ளையவர்கள் சொல்லிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

நலங்கிளரு மகப்பொருளின் றுறைநயமும் புறப்பொருளி னலக்க வோங்கும்
வலங்கிளருங் கோளுநயமுஞ் சொன்னயமும் பொருணயமும் வயங்கக் காட்டிப்
புலங்கிளரு நெறியின்றுட் களிப்பெய்தக் கலாவதியைப் புனைந்து தந்தான்
நலங்கிளரு நாடகமாச் சூரியநா ராயணச்செந் தமிழ்வல்லோனே.

---

# INTRODUCTION.

I have been asked by the author of this interesting Tamil Drama to write an introduction, and I do so with pleasure, because, at the present time, there is a dearth of really good books, which combine in them all that is good in the literature of the West as well as of the East. I remember a most interesting incident, connected with the visit of a European gentleman to the late Rajah Sir T. Madhava Rao, when the latter, on taking leave of his European guest, at his garden gate, pointed out to him with pleasure a tree which was covered over with a creeper in full blossoms. "There," said the Rajah Sir T. Madhava Rao, "is a good illustration of the present union of the East with the West. The solid tree standing there represents English suzerainty, while the creeper entwined around it with rich blossoms is India enriching and beautifying England." So it appears to me that a Tamil literature, which combines in it all that is best and purest in the literature of the West and in the ancient literature of the East will, in the words of the poet, be "A thing of beauty and a joy for ever." And who is it that should produce such a literature? It is of course the best products of our University, our graduates, who should undertake this work. And though at the beginning, we could not hope to have anything in the way of perfection, still every true lover of India should be proud and feel sincere pleasure when a graduate of the University takes upon himself the task of producing a work of this kind. I feel very strongly that the graduates of our University, as soon as they settle themselves in life, do not continue their studies, much less cultivate the literature of their own country, and devote their time in reading our ancient classics, which are a rich storehouse of information regarding the manners, the customs, the feelings and the modes of thinking of our Indian forefathers. I have no doubt that many graduates have a greater desire to distinguish themselves in the field of English literature, by producing books in that language, because it brings them greater

glory and greater honour and perhaps higher emoluments. But with regard to books of this kind, the readers are very few and an intelligent appreciative reading public has yet to be formed. And it is graduates like Mr. V. G. Suryanarayana Shastriar that we should look to for this very necessary and desirable result.

With regard to the book itself, I have gone through the book, and it is my honest conviction that the author has done his work very well. The matter and the form leave nothing to be desired. The plot of the story is well conceived and it can very safely be placed in the hands of Hindu men and women to admire truthfulness, the valour of its hero and his determination at all hazards to win his lady, even at the risk of his life, as well as the feminine virtues and the lovely innocence of the heroine. Nor should we forget here to appreciate the skill and the inimitable manner, with which our author has tried to depict the character and the virtues of that true friend of the hero of the story, *Sattyapriya*, so that we have in this drama three very special characteristics that strike even the ordinary reader. They are (1) the manly virtues of the hero depicted in all the charm of a sample and sweet style, (2) the feminine grace and the purity of the feelings of the heroine, and (3) the qualities of a true friend. With regard to the form, the style is simple and natural and there is in it everything for the unlearned to delight in and for the learned to appreciate and value. There is a naturalness in the language and it is not rugged or forced and there is a literary flavour in almost all its passages. I have no doubt that this book will be appriciated by the public and it is my earnest desire that the Dravidian Board of studies of the Madras University will see its way to recommending it as a Text Book for the higher Examinations of the University.

THOTTAKKADU HOUSE,
*Madras 16th March, 1898.*

T. RAMAKRISHNA.

# முகவுரை

தொண்டைநாட்டிற் சிறந்துவிளங்குங் காஞ்சிமாபுரியைத் தன் இராசதானி யாகக்கொண்டு சயதுங்கசோழனென்பான் செங்கோல் செலுத்திவந்தான். அவன் மல்லயுத்தத்தில் மிகப் பேர் படைத்தவன்; வீரமே பொருளெனக் கொண்டவன்; ஆதலின் 'மல்யுத்த மாவீரசயதுங்கன்' எனச் சிறப்புப்பெயர் பெற்றுத் திகழாநின்றான். அன்னான் மகப்பேறின்றிப் பன்னாள் வருந்தக்கண்ட கருணையங்கடலாகிய வொருமாவிற்பெருமான் சிறிது கடைக்கணித்தனன். சின்னாட் கழியலும் அவன்றன தாருயிர்த் துணைவியாய கமலாட்சி யென்பாளிடம் ஓரருந்தவச் செல்வக் குமாரி யுதித்தனள். அவள் பெயர் கலாவதி; அவள் இருமுதுகுரவரும் அருமையினு மருமையாய்ப் பாராட்டிச் சீராட்டி வளர்க்கவளர்ந்து யௌவன பருவ முற்றனள். அவள் பிறந்த நாண்முதற் சோழற்குச் செல்வம் மேன்மேலும் பெருகிற்று; போனவிடமெல்லாம் புகழும், சென்றவிடமெல்லாம் வென்றியும் பெற்றான். இவ்விராச குமாரியைக் கண்டாரனைவரும் மலர்மனை துறந்து மன்னவன் மாடம் புகுந்த திருமகள் கொல்லோ வென்று இறும்பூதெய்திக் கொண்டாடாநிற்பார். அவள் முகவிலாசங்கண்டார் மனக்குமுத மெல்லாம் மாண்பொடு மலரும்; உள்ளக்கவற்சி யொழிந்து பேருவகை பூப்பார். அவளது பரந்தவிழிகளும் இளநகையும் மெல்லியல்மேனியுஞ் சந்தவடிவுந் துறந்தார்மனத்தையும் பிணிக்கத்தக்கன. அவளதழகிற்கேற்றவாறே அறிவும் ஒழுக்கமும் அன்புஞ் சூழ்ச்சித்திறனும் பொறையும் மானமும் அவளிடங் குடிகொண்டிருந்தன. மேலுமவள் சாதுரியசம்வாதினி, மடந்தைப்பருவத்து மாதர்சிரோமணி, பல்கலை பயின்ற பாவையர்திலகம். அவளுடன் விளையாடு மகளிர் யாவரும் அவளுவப்பன தாமும் உவப்பார்; அவள் வெறுப்பன தாமும் வெறுப்பார், அவள் புன்முறுவல் பூப்பதையே யொரு பெரும்பேறென மதிப்பார். இத்தகைய மகளிருள் அவட்குயிர்ப் பாங்கியரெனக் கருதப்படுவோரிருவர். அவர்தாம் வாசந்திகையும் மாணிக்கமாலையுமாவார். அவர்தமுள் வாசந்திகை இசைவன்மையும் உலகியலறிவும் மெய்ம்மைவழி விழைவும் பொய்ம்மைவழித் தவிர்வும் தான் நியாயமென்று கருதுவனவற்றை யெடுத்துரைப்பதிற் றுணிவுமுடையாள்; மாணிக்கமாலையோ சித்திரந் தீட்டற்றிறனுந் தனக்குத் தகாதனவற்றிற் றூன்றலையிடல் தவறென்ற கொள்கையு மச்சத்தன்மையு முடையாள். இத்தகைய உயிர்த்தோழியரோடு கலாவதி நாடோறும் அரண்மனையை யடுத்துளதோர் வயந்தச் சோலைக்கட் சென்று விளையாடுகிற்பாள்.

இஃதிப்படி யிருக்க. கலிங்கநாட்டரசன் றன்னையிழித்துரைத்தானெனக் கேள்வியுற்ற சயதுங்கன் வெகுண்டு அவன்மீது வஞ்சிசூடிச் சென்று பொருது வென்று கலிங்கத்தை யெரி யூட்டி நின்றான். நின்றவன் காஞ்சிமாநகர் வருமுன் கமலாட்சியம்மை யுயிர் துறந்தனள். இது செவிசாத்திய சோழன் றுக்கசாகரத்தின்மூழ்கி வருந்துவானாயினன், உண்ணான், உறங்கான், உயிர்ப்பான் நெடிது, வியர்ப்பான் கடிது. இவற்றை யெல்லாங்கண்ணுற்றபிறர் அவனை யாற்றுவிக்கக்

கருதிப் பல்விதவிநோத கதைகள் படித்தும் நாடக நடித்தும் மன்னவன் மனத்தைச் சிறிது மறக்குமாறு செய்வார். இத்தன்மைய காட்சிகளைக் கண்ணுறும்போதே சிற்சில வேளைகளிற் சோழர்பிரான் றன்னை யறியாது தன் மனத்தினிற் பழையனினைவு வரவே மலமலவென்று தன் விழிமுளரிகளினின்றும் வெண்முத்துதிர்ப்பான். இதுவன்றே மனைவியை யிழந்தாரியல்பு!

இங்ஙன மிருந்துவருநாளில் அரசனுக்கு உறவினனும், பேராசை கொண்ட புல்லறிவாளனும், காமமெனு மந்தரத்தேதாவிக் கீழ்வீழ்ந்த கயவனும், இழிதொழிலாளனும், சனங்களாற் பொருட்செல்வம் பற்றிப் பிரபுக்கள் குழாத்தொருவனென வெண்ணப்படினும், குணம் பற்றிக் கொலை வினையர் கூட்டத்தலைவனெனற் பாலனுமாகிய சுகசரீர னென்பான் அரசனை மகிழ்விக்க வுன்னித் தான் வைத்துக்கொண்டிருந்த மநோமோகினி யென்னும் ஆடலும் பாடலும் அழகுஞ் சான்றவொருகணிகையை யலங்கரித்து அரசன்முன் நடிக்குமாறேவினன். சுகசரீர னுன்னியவாறே அது மன்னனை மகிழ்வித்தது. அந்தோ! அஃது அம்மட்டில் நின்று விட்டதோ? தேள்கொட்டிற்றென மருந்து தேடுழிப் பாம்பு கடித்த பான்மைபோல அரசன் மனத்தையும் வசீகரித்தது. இஃதுணர்ந்த அந் நடனமாது தனது செய்தொழி னலங்காட்டி அரசனதுள்ளந் திறைகொள்ளத் துணிந்து தன் விழி வேலா லவன் மார்பம் போழ்ந்து தன் நல்வரிக்கோலம் நன்னர் விளங்க மந்த நகையால் அவன் மனத்தினையுருக்கி மானெனத்துள்ளி மின்னெனத் துவண்டு மேகலை நெகிழ்த்துப் பிடியென நடந்து தனது மழலைச் சொற்களாற் கிள்ளையெனப் பேசிக் குயிலென வாய்திறந்து கலாபம் விரித்தாடு மயிலெனத் தன் பாவாடை விரித்தாடிக் கறங்கெனச் சுழன்று தரையினிற் படிந்து வணங்குநன் போலத் தலைக்கோலங் காட்டித் தளிர்நலங் கவற்றுந் தாள்களை யெடுத்தும் விடுத்தும் மடித்தும் நடித்துச் சதிநயந்தெரித்து நடன விகற்பங் காட்டி இயத்துடனொன்றி யின்னிசை பாடிப் புள்ளொலி யெழுப்பிப் பல்வகைக்கரண சாலமுஞ்செய்து, 'எவரையுங் கவனியாள் போன்று உலாவி விளையாடா நின்றாள். அவன் ஆட்டங் கண்டார் யாவர்க்கும் அம்மண்டப முழுது மவளாகவே காணப்பட்டது இவ்வாறு மண்டப நிறைந்து நாட்டிய மாடிய நங்கையைச் சோழர் பெருமான் உடனே கைப்பிடித்துக்கொண்டு போயினன். ஓ! நாட்டியங்காணுந் தீங்கு மிஃதன்றோ?

இது கண்ட மன்னவன் மந்திரி மேதாநிதியார் அரசற்கு நல்ல றிவுச்சுடர் கொளுத்துவான் முயன்றனர். அரசன் மனக்குகையினுட் காமமெனுங் கரியமில வாயு மிக்கிருத்தலிற் கொளுத்தக் கொளுத்த அச்சுடரவிந்து கொண்டேவந்தது. ஆயினுமவர் மன்னனை யவன் போக்கின்படியே முழுதும் விட்டுவிடாது நயம்படப் பேசியும் இடித்துக்கூறியும் பாங்குற மொழிந்துந் தீங்கினைக்காட்டியும் இடமெடுத்தியம்பியும், மதக்களிறு நடாத்தும் மாவுத்தன்போன்று மிகக்கவலையோடும் வேந்தனை நல்வழிப்படுத்தலே யொருபெருங் கருத்தாக்கொண்டு அரசன் மனக்குகையினிற் சில்புழைசெய்து பச்சாத்தாபமெனும் பிராணவாயுவைச் சிறிது சிறிதா யுட்புகுத்தினர். மன்னனோ மநோமோகினிபா லடங்காதபெருமோகங் கொண்ட

னாயினும், மந்திரியார் சொல்லிற்கு மாறு கூறுதலேனுஞ் செய்தலேனும் விரும்பிலன். இராச தந்திரங்களி னெல்லாம் அவன் மொழிகேளாது அமைச்சர் விரும்பியாங்கேசெய்து வந்தான். ஆ! இஃதென்னை யதிசயம்! நல்ல புத்தி சொல்லச்சொல்லப் புல்லறிவாளனும் நல்லறிவாளனா மென்னுந் தொன்மொழியியல்பென் சொல்கோ?

இவ்வாறு இராச காரியங்களிலெல்லாம் மந்திரியார் மதியின் வண்ணம் நடக்கும் மன்னவன் அரண்மனையைச் சேர்ந்த காரியங்களிலெல்லாம் மனோமோகினியை யதிகாரி யாக்கினான். ஐயகோ! அது பற்றித் தாயற்ற தனிநிலையாற் றளருந் தையல் கலாவதிக்கு விளைந்த சோகத்திற்கோ அளவில்லை. மன்னனும் மகளைக் கவனியாது விட்டனன். மனோமோகினியோ தான் பட்டமகிஷியாக முயன்றனள்; தன்னை யரசனது காமக்கணிகையாக மதியாது காதலியாக மதித்துக் கொண்டு அரசனோடேடித் தன்னை யவனுயிர்க் காதலியென்று கூறுதலை விரும்பினள்; கலாவதியைத் தன்னினு முயர்ந்தாளென் றெண்ணாது தன்னினுந் தாழ்ந்தாளென்றெண்ணி அவளை யேவல் கொளவும் புக்கனள். புக்குமென்? கலாவதி யவளை யெப்பொழுதுந் தனது விளையாட்டுக் கருவிகளு ளொன்றென மதித்தனளேயன்றி வேறன்று. அற்பர்களேதோ அதிட்டவசத்தா லதிகார மெய்தினும் விற்பனச் செல்வரா மேலோரவரைத் தந்தலைவணங்கித் தாழப்புகுவரோ?

இடையிற் சுகசரீரன் தன்னால் முதன்மையான நிலைக்கு வந்த மனோமோகினியின் மூலமாய்த் தான் கலாவதியைத் தன்றலைவியாய்க் கொள்ளுவான் முயலாநின்றான். மனோமோகினி சுகசரீரனுக்குக் கடமைப்பட்டவளாயினும் தொடக்கத்தில் இதன்கண் அவள் மனப்பூர்த்தியாக முயன்றாளல்லள். இது தெரிந்த சுகசரீரன் சோமநத்தனென்னு மோராண்மனைச் சேவகன் மூலமாயுங் கலாவதியைச் சந்தித்துப் பேசுமாறு முயன்றனன். இனி மந்திரி மேதாநிதியார்க்கு அறிவு நுழைய வொரு புழையுமில்லாத முழுமூடனான மகனொருவனிருந்தான். நீலாந்தகனென்னு மிப்பேதையுங் கலாவதியைக் கைப்பிடித்துக்கொள்ள விரும்பிச் சோழன் சமஸ்தான விதூஷகனாகிய விகடவசநனது ஏவலால் மனோமோகினியினது சிலதிகளுளொருத்தியாகிய மரகத மென்பாளொடு சூழ்ச்சி செய்யா நின்றான்.

சோணாட்டின் செய்திக ளிவ்வாறாகப் பாண்டிநாட்டில் மதுரைமா நகரின்கண், சுகேசனென்னு மொரு பாண்டிய னரசுசெலுத்திவந்தான். அவன் குடிகளிடத்தார்வமுங் கல்வியில் விழைவும் அரசாட்சி முறைத் தெளிவும் போர்செய் வன்மையும் பொருளாராய்ச்சியும் பெரிது முடையான். அவன் ஆனந்தவல்லி யென்ற மடந்தையைக் கடிமணம்புரிந்து வெகுநாள் வரை மகப்பேறின்றிக் காலஞ் செல்லக்கண்ட சோமசுந்தரக் கடவுளருளால் அவள்வயின் வலம்புரியீன்ற வெண் முத்தெனவோராண்மகவைப் பெற்றனன். அவன் சிதாநந்தனென்னு நாமம்பெற்று அறிவுடையோர் செய்த வறம்போலவும் பாத்திர மறிந்தீந்த கொடைபோலவும் விண்ணகத்து விளங்கு கலைமதி போலவும் வளராநின்றான். நூலினை நவிலுந் தோறும் புதிது புதிதாக நயந்தோன்றுமாபோல் நாடோறு மவனிடத்துப் புதிது

புதிதாக வனப்புந் தோன்றிற்று. "நாவின் கிழத்தி யுறைதலாற் சேராளே, பூவின் கிழத்தி புலந்து" என்ற முனிவர் வாக்கினை முனிந்து அவ்விருவரும் இனி நாம் அப்படிப் பிரிந்திராம லொன்றியிருந்து அவர்தங் கூற்றினைப் பொய்ப்படுத்தல் வேண்டுமென்று தமக்குள்ளே சூழ்ச்சி செய்துகொண்டு வந்து கூடியிருக்கின்றது போலு மவனிடஞ் செல்வமுங் கல்வியுஞ் சேர்ந்துள தன்மை! அவன் கலைபயில் கழகத்துப் பாவலர் குழாத்து வலம்புரியாயிரஞ் சூழ்ந்த சலஞ்சலமென விளங்கு கிற்பான். அன்புட னருளு மின்புட னெழிலு மவனையே யாகரமாக்கொண் டுறையா நின்றன. அவன் வீரமேயுருவெனவிளங்கு மேதகையோன், அறிவேயின்பமென் றறைதருமண்ணல். ஆகவே யவன் றக்கபிராய முற்றவுடனே தந்தையாரிடஞ் சென்று தேச சஞ்சாரஞ்செய்து வருமாறு விடை கேட்டனன். அரசன் மகன் மீது வைத்துள பரிவினானும், தேசசஞ்சாரஞ் செய்தற்கண் தீங்கு பலவிளையு மென்ற கருத்தினானும், தானும் வயோதிகப் பருவமெய்திய தன்மையினானும், சோழன் பாண்டிநாட்டைக் கைக்கோடற் கெப்பொழுது சமயம்வாய்க்குமென்று உறுமீன்வரவினை யெதிர்பார்க்குங் கொக்குப்போன்று காத்திருக்கு மியல்பினா னும், தன்மகற்கு விடைகொடாது தாழ்த்தனன். தாழ்த்துமென்? மகன் றந்தை யார் விடைகொடாமையாற் பெரிது மேக்கங்கொண்டு தூக்கமற்று ஊக்கமழிந்து மனவாட்டமெய்துவானாயினன். அதுகண்ட வழுதியர்பெருமான் றனது ஒழுக்கந் தவறா வுத்தம வமைச்சனாகிய சந்மதியை விளித்து அவனுடனாலோ சித்து முடிவிற் சிதாநந்தன் சத்தியப்பிரியனாகிய தனது கற்றறிபாங்கனோடு சோணாடுதவிர மற்றையநாடுகட்குச் சென்று அவையிற்றையெல்லாங் கண்ணுற்ற பின்னர்க் கடிதினிற் றிரும்பிவரல்வேண்டுமென்று வற்புறுத்திக் கூறிவிடுத்தனன்.

விடைபெற்ற விருவரும் இன்னநாட்டிற்கு முதற்கட்போதல் வேண்டுமென்று குறிக்கொளாது விரைந்துபுறப்பட்டு ஒன்றையுங்கருதாது சென்றமையின் அரைத்திங்களுள் வந்தடைந்தனர் அருநகர்க்காஞ்சி. காஞ்சியோ விலக்குநாட் டுளது. அதுகண்ட பார்ப்பனப் பாங்கன் றவிர்வழிப் போந்தமையை யெடுத்துக் காட்டியுஞ் சுத்தவீர சிதாநந்தன் றிரும்பி வேற்று நாட்டிற்சேக விரும்பிலன். தந் தையா ராணையைக்கடந்து நாமே வந்திலம், அவர்தம் ஆணை வழியொழுகிய நம்மை யிவ்வாறுய்த்தவன் இறைவனே யென்றவ் விருவருந் தேறி யந்நகரினுட் புகுந்து அதனை யடுத்துளதோர் வயந்தச் சோலைக்கணுற்றனர். அப்பொழுது ஆண்டுக் கலாவதி வாசந்திகை மாணிக்க மாலைகளோடு போந்து தன்னுடைய நிலையையுந் தன்றந்தையார் நிலையையுங்குறித்து விசனப்பட்டுக்கொண்டிருந்தனள். தோழிய ரிருவரு மவளை யெவ்விதமாயினும் ஆற்றுவித்தலே தகுதியென்ற கருத்தினராய் இன்புடன் பேசியும் அன்புடன் பாடியுமிருந்தனர். சோலைக்கணுற்ற சிதாநந்த சத்தியப்பிரியர்களிருவரும் இம்மாதராரிருக்கும் நிலையினையுணர்ந்து மரங்களி னிடை மறைந்து நின்று இவர்கள் பேச்சினைக் கேட்டனர். சிதாநந்தன்மட்டுங் கலா வதியைக்கண்ட வக்கணமே யவள்மீது காதல்கொண்டு தனதுள்ளம் பறிகொடுத்த னன். இஃதிப்படியிருக்க. மாணிக்கமாலை யென்பாள் தான் முன்னரே யெழுதி வைத்துள பல்வகைப்படங்களையுங் கலாவதி பார்த்துக் களிக்குமாறு அவள் கையின் கணிட்டனள். அவற்றைப்பெற்ற கலாவதி யொவ்வொன்றாகப்பார்த்துக் கழித்துக்

கடையி லொன்றைமட்டுங் கரத்திலேந்திக்கொண்டு வெகுநேர மதனையுற்று நோக்கினள், மலரவிழித்தனள், புன்முறுவல் பூத்தனள், நெட்டுயிர்ப்பு வீங்கினள், உடல் புளகித்தனள், உடனே படத்தை மூடினள், மீட்டும் பார்த்தனள், மீட்டும் மூடினள், நுதலினிற் குறுவியர் வியர்த்தனள். இவையெல்லாம் மனத்தினிற் கரவினிற் கொண்ட காதலை வெளிப்படுக்குங் குறிகள்போலும்! இத்தகைய அவத்தைகளடைந்த கலாவதி தன்றோழிகளிடத்திவனைப்பற்றி யாய்வாளாயினாள். அங்ஙனமாய்ந்தபின்னர்த் தன்னுள்ளங் கவர்ந்த தலைவன் றன்காதற்குரியவனே யெனக் கேட்டு ஆநந்தவாரியிற் றிளைத்தாடும் பிடியாயினாள். ஆயினுமவன் பகையரசன் குமாரனெனக்கேட்டு மனம் புழுங்கினள். இதுகாறுங் கலாவதியி னொவ்வோரவத்தையினையு முற்று நோக்கிக்கொண்டிருந்த சிதாநந்தனோ காதலெனும் பித்தேறி மதக்களிறாகிக் கலாவதிப் பிடியுடன் விளையாட விரும்பினனாயினும் அறிவெனும் பாகனெதிரேதோன்ற ஒழுக்கமெனுந் தளையிற்பட்டுத் தலைதாழ்ந்தனன். சிறிது நேரத்திற்கெல்லாங் கலாவதி யரண்மனைக்கேகினள். ஏகுழித் தான் மாணிக்கமாலையினிடங் கொடுத்துவிட்டதுந் தான் காதல் கோடற்குக் கருவியா யிருந்ததுமாகிய அப்படம் நழுவிக் கீழேவிழுந்துவிட்டது. சத்தியப்பிரியனெவ்வளவு கழறியுங் கேளாத சிதாநந்தன் அவளிருந்துழித் தானுமெய்தியிருந்தனன். அதனுடனமையாது அவள் சென்றுழியே தானுஞ் செல்ல விழைந்து போகும்போது கீழே வீழ்ந்திருந்த சித்திரத்தை யெடுத்துப் பார்த்தலும் அது தன் படமாகவே யிருந்தது. உடனே சிதாநந்தன் 'களிப்பெனுங் கரையிலாக் கடலுளாழ்ந்தனன்'; அதன்பின் அவளடிச் சுவடுகளைத் . தனகரங்களாற் றொட்டுக் கண்களி லொற்றியொற்றிக் காமுற்றுக் கருத்தழிந்தனன். இனி யென் செய்வது? தேசசஞ்சாரம் பாசசஞ்சாரமாயிற்று.

ஆகவே சிதாநந்தனுஞ் சத்தியப்பிரியனுஞ் சோழன்மந்திரி மேதாநிதியாரிடஞ் சென்று தாங்களிருவரும் பாண்டிநாட்டினின்றும் நாடுகாட்சியின் பொருட்டுப் போந்துள போர்வீரர்களென்று கூறி அவர்தங் கிருகத்திலேயே விடுதியிடம் பெற்றனர். ஆனா லிந்நாட்டிலோ பாண்டிநாட்டாரெவரும் அரசன் அநுமதியின்றி வருதல் கூடாது. அப்படி யரசன் அநுமதி பெறாது வந்தார்களெல்லாம் அரசனோடு மற்போர் புரியவே வேண்டும். அவர்கள் அதன்கண் வெற்றியுற்றாற் பரிசும் தொலைவுற்றாற் சிறையிழவும் பெறுவார்கள். இவ்வாறாகவும் மேதாநிதியார் அவ்விருவர்க்கும் விடுதியிடந் தம்மகத்தேயே கொடுத்து அரசனிட மிதைப்பற்றி வெளியிடாது அவர்தமைப் புரப்பதாகவும் வாக்களித்தனர். இத்துணையுமவர்பால் அவ்விருவரும் பெற்றதன் காரணம் யாவைகொல்? அவர்தம் அறிவுமொழுக்கமும் பணிவுமே யல்லவோ? இவையற்றார் நவையுற்றார்.

இதற்கிடையிற் சிதாநந்த சத்தியப்பிரியர்க ளிருவருங் காஞ்சிமாநகர் குறுகுமுன், சோழன் ஒரு பெரிய சபைகூட்டித் தன்மகள் கலாவதியின் விவாகத்தைக் குறித்து ஆலோசிப்புழி யவர்கள் யாவரும் ஒருசேரப் பாண்டியன் மகனுக்கே மணம் புரிவிக்க வேண்டுமென்று வலியுறுத்தனர். அதற்கரசனு மிணங்கினன். இது கேட்ட மநோமோகினியோ மன்னவனோடு பிணங்கிக் கலாவதியினது கல்யாண விஷயத்தைக்குறித்துத் தான் அவளிடம் பேசிக்கொள்ளுதற்கு விடைபெற்றுக் கொண்டனள். கொண்டபின்னர் மநோமோகினி கலாவதியை யழைத்து அவடன்

மணவினையைக்குறித்து அவளையே யுசாவவுந் தலைப்பட்டனள். பட்டுமென்? கலாவதி யொன்றற்கு மிணங்கிப் பேசாது மனோமோகினியையுஞ் சுகசரீரனையும் பழித்துரைத்தனளேயன்றி அவர்தந் தீச்செயல்களையுங் குயுக்திகளையுந் துராசைகளையும்பற்றி யிழிவுபட மொழிந்து வெளிப்போந்தனள். சுகசரீரன் விடயத்திலிதுகாறும் அரைமனத்துடன் முயன்ற மனோமோகினி யிப்போதுதான் முழுமனத்துடனும் முயலுதற்குக் கங்கணங் கட்டிக்கொண்டாள். அம்மம்ம! கலாவதியின் பக்கலிருந்து அவட்குக் குற்றேவல்செய்து அவடன் மலர்த்தாள் வருடற்கு முரியளல்லாதாள் அவளையதட்டி யதிகாரங்காட்டி வெருட்டாநின்றாள்! அச்சோ! இதனினும் மிகக் கொடிய நிலையுமுண்டுகொல்? மன்னனோ இதைப்பற்றி மனோமோகினியினிடமொன்றும் வினவாது கைகட்டி வாய்புதைத்துக் கொண்டனன்.

இனி மந்திரியார் வீட்டின்கண் விடுதியிடம்பெற்ற சிதாநந்த சத்தியப்பிரியரிருவரும் அற்றையிரவு மாடத்தும்பர் நிலாமுற்றத்து உலாவிக்கொண் டிருக்குங்கால் விகடவசநனாற் றூண்டப்பட்ட குலாந்தகன் மரகதத்தை யழைத்துக்கொண்டு அவ்விடம்வந்து அவட்கொரு மோதிரம் வெகுமதிகொடுத்து அவள் தான் மறுநாண் மாலைக் கலாவதியைத் தனியாய்ச் சந்திக்குமாறு அவளை வயந்தச்சோலையிற் சம்பங்கிக்கொடி மண்டபத்தருகே கொண்டு சேர்த்தல் வேண்டுமென்று ஒருறுதி யேற்படுத்திக் கொண்டனன். இவ்வாறிவர்கள் பேசியவற்றை யெல்லாங் கரந்துநின்று செவிசாத்திய வழுதிமகன் கோபங்கொண்டனனேனுந் தன்னண்பன் சத்தியப்பிரியனாற் றெருட்டப்பட்டு மற்றை நாண்மாலை வயந்தச்சோலைசென்று கலாவதியைப் பாதுகாத்தல் கடைப்பிடித்துக் குலாந்தகனையொன்றுஞ் செய்யாது விடுத்தனன். அதன்பின் அன்றிரவு முழுதுந் துயில்கொள்ளாத சிதாநந்தன் கலாவதியை நினைந்துகொண்டும் அவள்மீது பாடல்பாடிக்கொண்டுஞ் சந்திரோபாலம்பநஞ் செய்துகொண்டும் பொழுது போக்கினன்.

பிற்றைஞான்று மாலைப்போழ்தினிற் சிதாநந்தனுஞ் சத்தியப்பிரியனும் வயந்தச் சோலைக்கட் சம்பங்கிக்கொடி மண்டபமுற்றுழி, அவர்கட்குமுன்னே யாண்டு முதனாளிரவு மரகதங் கூறியாங்கு கலாவதியின் வரவினை யெதிர்பார்த்துக்கொண்டு போந்துள குலாந்தகனைக் கண்ணுற்றனர். உடனே குலாந்தகனவர்களிடஞ் சென்று தன்னைத் தன்றாதையார் தேடிக்கொண்டு வருமாறு அவர்களை விடுத்தனரோவென்றயிர்த்து அவர்களையே வினாயினன். அவர்கள் தனக்கெதிர்மறை விடைகொடுத்தலுங் குலாந்தகன் அவ்விருவர்களையுஞ் சோலையைவிட்டகலுமாறு அதிகாரத்தோடும் ஏவினன். ஏவியுமவர்கள் போகாமைகண்டு தன் பேதைமையினாற் றானே குறித்தவிடம் விட்டகன்றனன். அங்ஙனமகன்ற குலாந்தகனாற் கலாவதிக்கு வழியிலொன்று முறாவண்ணம் பார்த்துக்கொள்வான் சத்தியப்பிரியன் விடைபெற்றுச் சென்றனன். சென்றபின் கலாவதியின் வரவினை யெதிர்பார்த்துக்கொண்டே சிதாநந்த னுலாவிக்கொண்டும் பாடிக்கொண்டும் பாடல்களை மணலிலெழுதிக்கொண்டு மிருந்தனன். கவாவதி யின்னும் வந்திலள். சிதாநந்தனுக்கோ முதனாளிரவி லுறங்காமைபற்றி யுறக்கம் வரத் தலைப்பட்டது. அம்ம! அவனென் செய்வான்! எழுந்தனன், உலாவினன், இருந்தனன், மணலினிற்சாய்ந்தனன், மீட்டுமெழுந்தனன், மீட்டுமுலாவினன், மீட்டுமிருந்தனன், மீட்டும் மணலினிற் சாய்ந்தனன், பாடினன், அவ்வாறே மணலினி லயர்ந்து நித்திரை போயினன்,

சிறிது நேரத்திற்கெல்லாம் மாகதன் கலாவதியை யவடன்றோழிமாரழைத்தன ரென்று பொய் சொல்லி யழைத்துக்கொடு வயந்தச்சோலைகட் போந்தனள். அன்னணம்போந்த கலாவதி தன்பாங்கியரைக்காணாது மாகதத்தை வினவலும் அவள் "அவர்கள் சோலைக்குள் வேறெங்கேனுஞ் சென்றிருக்கலாம். யானவர்களைக் கடிதினி லழைத்துவருவேன். நீவிரீண்டேயிருமின்" என்று கூறியேகினள். தமியளாய் ஆண்டுநின்ற கலாவதி தனக்குற்ற விபத்துக்களை யெல்லாம் நினைத்து நினைத்து வருந்தித் தான் முதனாட்கொண்டகாதல் என்றுசிறக்குமோ வென்றேங்கி நாற்புறமுஞ் சுற்றிப் பார்ப்புழிச் சிதாநந்தனுறங்குவதுகண்டு அவனிடஞ்சென்று அவன் தான் முதனாட்காதல் கொண்ட தலைவனேயென்று தெளிந்தனள்; தெளிந்தவக்கணமே சிதாநந்தன் றான்கண்ட கனவினுள் 'என் காதற் கிளியே! கலாவதீ!' என்னக் கேட்டனள். கேட்ட கலாவதி அவனைத்துயிலெழுப்பக் கருதி யின்னிசைச் செந்தமிழ்த்தீம்பாடல் பாடினள். உடனே சிதாநந்தன் துயிலொழிதல் கண்டு கலாவதி பக்கத்திருந்த மரங்களினிடையே மறைந்தனள். கானங் கேட்டுத் துயிலொழிந்தெழுந்த சிதாநந்தனே ஒன்றையுங் காணிலாது கவலைகூர்ந்து கலாவதியை நினைந்து பாடிக்கொண்டிருக்கும்போது அவளது உருவு வெளிப்பட்டது. அதுகண்ட சிதாநந்தன் றன்னெதிர்ப்பட்டாள் கலாவதியே யென்றெண்ணி அதனருகே சென்று பாடியும் பணிந்து மிரந்து மெழுந்துந் தழுவியும் ஆண்டொன்று மின்மையின்வெள்கித் திரும்பலுங் கலாவதி மரங்களினிடை நிற்றலை நோக்கி யவள்பாற்சென்று தன் காதல்மொழிதலும் இருவருமொருவர்மே லொருவர் அன்புகூர்ந்து முத்தமிட்டுத் தழுவித் தமதன்பினுக்கு அறிகுறியாக ஆழி கைம்மாற்றிக்கொண்டனர்.

இவ்வாறு சிதாநந்தனுங் கலாவதியுங் காதல்கூர்ந்து முத்தமிட்டதனை யொளித்து நின்று கண்ட குலாந்தகன் உடனே யிதனை மன்னனிடந் தெரிவிக்குமாறு ஓடினான். அதன்பின் தன்றோழிமாராய வாசந்திகையும் மாணிக்கமாலையுஞ் சற்றுத்தூரத்தே வருதல்கண்ட கலாவதி தன்றலைவன்பால் விடைபெற்றுத் திரும்பினள். வாசந்திகையும் மாணிக்கமாலையும் கலாவதியும் ஆண்டுச் சிறிதுபோதிருந்து விநோதமாய்ப் பாடிக் களித்துப் போயினர்.

சென்ற குலாந்தகனே கணப்பொழுதுந் தாழாது அரசனிடந் தான் கண்ட காட்சியைக் கூறினன். உடனே மந்திரிமேதாநிதியார்க்கு மறுநாட் சிதாநந்தசத்தியப்பிரியராய அவ்விருவரையும் அரண்மனையி லவைக்களங் கொண்டுய்க்குமா றாணையும் பிறந்தது. இஃதுணர்ந்த விகடவசகன் குலாந்தகனைவிளித்துக் "கலாவதி சிதாநந்தன்மீது காதல் கொண்டமையினாலே நின்மீது காதல்கொள்ளாள். ஆகவே நீநின்வீட்டிற் போந்துள மதுரைவீரன்ற னுடைகளைக் காணாது கவர்ந்து தரித்துக்கொண்டு கலாவதியினிடஞ் செல்வையே லவள் நின்னைத் தன்றலைவனென்றே நினைப்பாள். அப்புறமெல்லாஞ் சரிப்படும்" என்றுகூறிக் குலாந்தகனை யிணக்கியதன்பின், "மறுநா ளரசன் மதுரைவீரனை விளித்து விசாரணை செய்யும்போது நீ நேற்றுக்கூறியன யாவும் பொய்யென்று சொல்லிவிடல் வேண்டு" மென்று வற்புறுத்தினன். குலாந்தகனு மவ்வாறே கூறுவலென் றொத்துக் கொண்டனன்.

மறுநாட் பிற்பகற் போழ்தத்து இராசசபைக்குச் சிதாநந்த சத்தியப்பிரிய ரிருவரும் மன்னவனாணைப்படி வந்தனர். வந்தபின் விசாரிக்கும்போது குலாந்தகன்றான் நேற்றுக் கூறியது பொய்யென்றான். ஆகவே யரச னவர்களைத் தண்டிப்பதற் கிடனில்லாதிருந்தது. மந்திரி மேதாநிதியாரு மவர்களைப்பற்றி மிகவு முயர்வாகச் சொல்லுகின்றனர். இனியென் செய்வது? மன்னவன் "நம்மாணை கடந்து அவர்கள் நந்நாட்டகத்துப் புக்கனரேனு மக்குற்றத்தைப் பொறுத்துக் கொள்கின்றாம்" என்றனன். உடனே யாண்டிருந்த சுகசரீர னெழுந்து பொறுத்த லொண்ணாதெனை மொழிந்து பாண்டிநாட்டாரையுமிழித்துரைத்தான். இது கேட்ட சிதாநந்தன் பொறாது அவனைத் தலைதுணிக்கப் புகுந்தனன். அக்கணம் விகடவசனனுஞ் சத்தியப்பிரியனும் நடுவட்புகுந்து தடுத்தனர். இதுகண்ட சோழன் வெகுண்டு சிதாநந்தனைத் தன்னொடு மற்போர் புரியுமாறு அறைகூவினன். அதற்குச் சிதாநந்தனு மிணங்கினன். உடனே போர்புரியுமிடம் பாலியாற்றிற்கும் வேகவதியாற்றிற்கும் நடுவணுள்ளயாற்றிடைக் குறையெனத்தீர்மானிக்கப்பட்டது. அதன்மேற் சுகசரீரன் சிதாநந்தனைப் போர்செய்யப் போகும்போது ஒளித்து நின்று கொல்லுமா றுறுதிகொண்டான். மனோமோகினியோ தானிருடி வேடம் பூண்டு சிதாநந்தன்போம்வழியிருந்து அவனுக்கு மயக்கஞ்செய்யு மருந்தொன்றினை அமிர்தகுளிகையென்று கொடுத்துப் போர்செய்யுமுன் அதனை யுண்ணுமாறு செய்வதற்குறுதிகொண்டாள்.

மறுநாட் காலை வயந்தச் சோலைக்கட் சிதாநந்தன் கலாவதியைச் சந்தித்து அவளை மனவருத்தப்படா திருக்கும்வண்ணந் தெருட்டியதன்மேல் அன்றுமாலை மற்போர்புரிந்து முடிந்தபின்னர்த் தானவ் வயந்தச்சோலைக்கட் போதுவதாகவும் அவள் ஆண்டுத் தன்னைவந்து காணல்வேண்டுவதாகவுங் கூறினன். அங்ஙனமே வருவலென் றிசைந்தாள் கலாவதியும். அதன்மேலன்று பிற்பகற் சிதாநந்தனுஞ் சத்தியப்பிரியனும் போர்க்களஞ்செல்லத் தலைப்பட்டுத் தத்தம் உடைகளைத் தேடும் போது சிதாநந்த னுடைகளிருந்துழிக் குலாந்தகனுடைகள் வைக்கப்பட் டிருந்தமைகண்டுந் தாழாது அவற்றையே தரித்துக்கொண்டு போர்க்கோலம்பூண்டு புறப்பட்டனர். புறப்பட்டுப் போம்வழியில் மனோமோகினி யிருடிவேடம்பூண்டு பதுமாசநத் திருந்தனள். அதுகண்ட சிதாநந்த சத்தியப்பிரிய ரிருவரும் அவள் பாற்சென்று வணங்கித் துதித்து அவளால் மயக்குமருந்து கொடுக்கப்பெற்றுச் சிறிதுதூரம் வயந்தச் சோலைக்கட்சேறலும் ஓரழுகைக்குரல் கேட்டு அஃதென்னெனத் திரும்பி நோக்கினர். அப்பொழுதொருவ னுதிரந்தோய்ந்த ஈட்டியுங் கையுமாய் மரங்களிடை மறைந்தனன். அவன்றான் சுகசரீரன். அவன் சிதாநந்த னுடைகளைத் தரித்துக்கொடு போந்த குலாந்தகனைச் சிதாநந்தனென மருண்டு தனீட்டியாற் குத்தலுமவன் கீழேவீழ்ந்து மூர்ச்சையாயினன். அவ்வாறவன் வீழும் போது செய்த சத்தமே யிவ்விருவருங் கேள்வியுற்ற வழுகைக்குரல். இது நிற்க. இவ்விருவருங் கூக்குரல் கேட்டவிடங் குறுகலுஞ் சுகசரீரன் சிதாநந்தனைக் குலாந்தகனென மயங்கிக் குத்துதற்கு முயறலுஞ் சிதாநந்தன் விலகிக்கொண்டு அவனையே தனது குந்தப்படையாற் குத்துதலும் அவன் மண்ணிடை வீழ்ந்து மாண்டனன்; மருந்துப் பெட்டியுங் கைநழுவிக் கீழே வீழ்ந்துவிட்டது.

அங்ஙனம் வீழ்ந்த தறியாத சிதாநந்த சத்தியப்பிரிய ரிருவரும் போர்க்களநோக்கி விரைந்து போயினர். போனபின் ஆண்டுச் சிதாநந்தனுக்குஞ் சயதுங்கனுக்கு மற்போர் நிகழ்ந்தது. அதன்கட் சிதாநந்தனே வெற்றியடைந்தனன். தொலைவுண்ட சோழன் உடனே சிதாநந்தனுக்குத் தன்னைத் தன தரண்மனையில் வந்து காணுமா றாணைதந்து போயினன். வெற்றியுற்ற சிதாநந்தனோ கொடிப்பொழுதுந் தாமதியாது தன்றேவி கலாவதியைக் காணுமாறு வயந்தச்சோலை சென்றனன்.

இதற்கிடையிற் கலாவதியோ கவற்சி மிகக்கொண்டு அரண்மனைக் கருகிலுள்ள காளிகோட்டம்புக்கு அம்மையைப் பராவலும் அம்மை பூசாரிமீது வெளிப்பட்டு வரமளித்தனள். அளிக்கப்பெற்ற கலாவதி தன்றலைவனாணையின்படி வயந்தச் சோலைசென்று ஆண்டிறந்து கிடந்த சுகசரீரனைப் பார்த்துப் பரிவுகூர்ந்து திரும்பலுங் குத்துண்டு மூர்ச்சித்துக் கிடந்த குலாந்தகனைக் கண்டு தன்னிறைவன் சிதாநந்தனே யென்றவனை யெண்ணிக் கொண்டு பெருமூச்செறிந்து விம்மி விழுந்து புரண்டு மனங்கலங்கி அவன்மேல் வீழ்ந்தாற்றி யழுது பக்கத்திற்கிடந்த மருந்துப்பெட்டியை யெடுத்து அதன்கணுள்ள மருந்திற் சிறிதருந்தி மயங்கி விழுந்தனள். உடனே தன்னுயிர்த் தலைவியைத் தனிமையிற் காண்பான் விரைந்து வந்த சிதாநந்தன் கலாவதியி னிலையினைக்கண்டு கோவமென் றயிர்த்துப் பல்வகைச் சீதளோபசாரஞ் செய்து மவளெழாமைகண்டு மயக்கமெனக் கருதும்போது தன்னுடைகளைத் தரித்துக் கொண்டு தன்னைப்போல வேடம்புனைந்து கிடந்த குலாந்தகனைக் கண்ணுற்றுத் தன்பிராணேசுவரி அவனைத் தானென மயங்கியே உயிர்துறந்தனளென் றெண்ணி வாய்விடுத் தாற்றித் தானு முயிர்துறப்பா னுறுதி கொண்டு வாளை யோச்சுதலும் விகடவசநன் வந்து அவன்ற னிருகரங்களையும் பிடித்துக் கொண்டு தடுத்து அவனுக்குக் கலாவதி யிறந்திலளென்று காட்டிநின்றான். அவ்வளவிற் சத்தியப்பிரியனாண்டுப் போந்தானாக விகடவசநன் அவனைச் சிறிது தண்ணீர் கொணருமாறு கூறிவிடுத்தனன். உடனே சத்தியப்பிரியனுந் தண்ணீர் கொணர்ந்தான். அதனைக் கலாவதியின் முகத்தினுங் குலாந்தகன் முகத்தினுந் தெளித்தலுமிருவரு முயிர்த்தெழுந் தேகினர்.

இனிப் பாண்டியனோ சென்ற மகனைப்பற்றி யொன்றுந் தெரிகிலாது திகைப்புழிச் சிதாநந்தன் சோணாடு சென்றனனென்றும், ஆண்டுச் சோழன்கையகப்பட்டுச் சிறையில் வைக்கப்பட்டுளனென்றுங் கேள்வி யுற்றனன். ஆகவே வழுதியர் பிரான் றனது தானைகளைச் சந்நாகப் படுத்திக்கொண்டு காஞ்சிமாநகர்மீது வஞ்சிசூடி வந்தனன். சயதுங்கன் மற்போரிற் றொலைவுற்று அரண்மனைவந்த வப்போது தான் பாண்டியன் படை கொடு வந்தனனெனத் தெரிந்துகொண்டனன்; வந்த காரணமின்னதென் றறிகிலாது செழியன்றன் பாசறைக்கோர் தூதுவனை விடுத்தனன். இது நிற்க. மநோமோகிநி தனக்குள்ளே யாலோசித்துக் கன்னடராசன் றம்பி மங்களநாதன்பா லோடலே நலமெனக் கடைப்பிடித்துத் தன்கையகப்பட்ட பல்வகைப் பொருள்களையும் வாரிக்கொண்டு மரகதத்தோ டோட்டம் பிடித்தனள். இது தெரிந்த சோழன் காவலாளரிற் சில்லோர் அவர்களைப் பின்பற்றிச் சேறலும் அவ்விருவரும் விரைந்தேகிப் பாலியாற்றினில் வீழ்ந்திறந்தனர்.

பாண்டியன் படையெடுத்துப் போந்துள செய்தி யறியாத சிதாநந்த சத்தியப் பிரிய ரிருவருஞ் சோழன் விரும்பியவண்ணம் அவனவைக்களம் புக்கனர். சயதுங்க னுடனே சிதாநந்தனைத் தனது தானைத்தலைவனுமாறு வேண்டினன். அதற்குச் சிதாநந்தனு மிணங்கியவளவிற் சிதாநந்தனைப் பாண்டியன் மகனென் றுணராது அவனுக்குத் தண்டெடுத்துவந்துள தனித் தமிழ்நாடனொடு சமர்செய்யுமா றாணை யிட்டனன். இட்டனனேனுஞ் சிதாநந்தன் சாமோபாய நாடிச் சமர்நிறுத்தலே தக்க தென்றுரைத்துச் செம்பியன்பால் விடைபெற்று உசிதன் பாசறையுற்றுப் பெற் றோர் தம்மடி பேணிவணங்கித் தான் வந்த செய்தியை மாண்புற மொழிந்திருந்த னன். இஃதிங்ஙனமாக விகடவசநன் மூலமாய்ச் சுகசரீரன் வைவச்சுத நகரம் நண்ணியதும், குலாந்தகன் குத்துண்டதும், சிதாநந்தனுங் கலாவதியு மிறக்கத் தலைப்பட்டதும், அப்போது அவனிருந்து தடுத்ததும் முதலாகிய யாவற்றையு முணர்ந்த சேரியன் தான் மநோமோகினியின் மாயவலையிற் சிக்குண்டமை பற்றிப் பெரிதும் மனம் புழுங்கி நேரியனேயாயினன். அதன் பின் கலாவதியை யவள் விரும்பிய சிதாநந்தனுக்கே மணஞ்செய்விப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. அப் போது தான் வளவர்பிரானுக்குச் சிதாநந்தன் மாறர்பெருமான் மகனென்று தெரிந்தது. உடனே யவ்விடத் திருந்தார் யாவரும் ஏகாம்பரேசர் தம்மின்னருளைத் துதித்து வியந்தனர்.

அதன்மேன் மறுநாட் காலைச் சோழன் கேட்டுக்கொண்டபடி அவன்றன் ஆத்தானிகர்களுங் கனவான்களும் பிரபுக்களும் மற்றையோரும் வாத்திய கோஷங் களுடனும், நாட்டியச்சிறப்புடனும், படையணிவகுப்புச் சிறப்புடனுஞ், சென்று அட்ட மங்கலங்கள் விளங்க ஆரணம் முழங்கப்பாசறையினின்றும் பாண்டியனையும் அவன்றனருந்தவக் குமாரன் சிதாநந்தனையும் அவர்தம் பரிவாரங்களுடன் அழைத்துவந்த பின்னர்ச் சிதாநந்தனுக்குங் கலாவதிக்குங் கனலிசான்றாய்க் கல் யாண மாயிற்று. அற்றைப் பிற்பகற்போழ்தே கலாவதியுஞ் சிதாநந்தனுஞ் சிங் காதநமேற்றப்பட்டுச் சோணாட்டினுக்கு அரசியு மரசனுமாயினர். அதன்மேற் சோணாட்டு முனிவரும் அரசன் குலகுருவுமாகிய சுயம்பிரகாச முனிவரெழுந்து பாடி யாசிர்வதித்தலும் யாவருங் கைகொட்டி யார்த்து மலர்மாரி பெய்தனர். இதனுடன் நாடகம் முடிகின்றது.

யாமிதற்கு முன்னர் ரூபாவதி அல்லது காணுமற்போனமகள் என்றொரு நாடகமியற்றி யச்சிட்டு வெளியிட்டிருக்கின்றனம். அது மேற்புலவிஞ்ஞானிகள் முறையினைப் பெரிது மடுத்துப் புனையப்பட்டுள்ளது. அதனை நல்லறிவுடைய நாவலர் பலர் அங்கீகாரஞ்செய்தனரன்றியுந் தாமவ்வாறுசெய்ததற்கு அறிகுறி யாகச் சிறப்புக்கவிகளுந் தீட்டிவிடுத்துளர். அஃதெமது ஊக்கமெழுப்பியத னும், தமிழ் மொழியின் மீதெமக்குள வார்வத்தினும், எந்தம் நண்பர்யாவரும் வடநூன்முறைகளைப் பெரிது மனுசரித்து நாடகம் புதுவதொன்று புனையுமாறு வயினமையானும், இறைவன் திருவருளை முன்னிட்டு அவ்வாறே யிந்நாடகமெழுதப் புகுந்தனம். எமது ரூபாவதி வெளிப்படுமுன்னர் ஸ்ரீ ரங்காசாரியாரவர்கள் செய்யுளும் வசனமுமாச் செய்த நந்திதுருக்கமும், காலஞ் சென்ற திருவனந்தை சுந்தரம்பிள்ளையவர்கள் முற்றுஞ் செய்யுளாச்செய்த மனோன்மணீயமும், திருவனந்தை லக்ஷ்மண பிள்ளையவர்கள் போலிச் செய்யுளாப் புதுமொழிபெயர்த்த

விலாசநாடகமும், பம்மல், சம்பந்தமுதலியாரவர்கள் முற்றும் வசனமாச்செய்த லீலாவதிசுலோசனையுமாகிய நான்கு நாடகங்கள் வெளிப்பட்டிருக்கின்றன. எமது ரூபாவதி வெளிவந்து ஒன்றரைவருடமாயினபின், எம்மை யடுத்துத் தமிழ்க்கலை பயிலுநராஉம் இயற்றமிழ்மாணவரு ளொருவராயிருந்து இப்போது காலஞ்சென்ற திரு. சலசலோசனச் செட்டியார் வசனமுஞ் செய்யுளுமாச்செய்த சாரசாங்கி யென்னுமொரு நாடகம் வெளிப்போந்தது; இனி யெமக்குப்பற்பல காலத்துப் பேருதவி புரிந்தவரும் எமதுயிர் நண்பருமாகிய † ஸ்ரீ ம. சோ. விசுவநாத முதலியாரவர்களால் பெரும்பாலும் வசனமாச்செய் தச்சிடப்பட்டு மின்னும்வெளிவாராத சந்திரவதனை யென்னு நாடகமொன் றுளது. இவையாவும் ஒவ்வொருவித வொழுங்கு பற்றியே யெழுதப்பட்டன.

இதுநிற்க.[1] இடையே நாடகவிலக்கண மணுத்துணையுமறியாத சில புல்லறிவாளர் தோன்றித் தாமும் நாடகமெழுதுவான் புக்குக்குன் றுமுட்டிய குரீஇப்போலப் பெரிதுமிடர்ப்பட்டு எழுதியதையும் வெளியிட வெள்கி மாழாந்து திரியாநின்றார். இப்போலிகள் நாடகவிலக்கணங் கற்றுத்தருக்கடங்கி யுறுதிகூடுதல் கருதியும், எந்தம் இயற்றமிழ்மாணவர்க்கு நாடகத்தமிழும் அறிவுறுத்தல் கருதியுஞ் சூத்திரமுமுறையுமாக நாடகவியலென்று தலைக்குறியிட்டு ஆங்கிலகீர்வாணவமைதிகளை யநுசரித்து ஒரு நூல் செய்துளேம். அஃதச்சிட்டு வெளிவரும் பருவத்திலுள்ளது. அன்ன இலக்கணத்திற்கு இலக்கியமாகவே இக்கலாவதி நாடகமு மியற்றப்பட்டது.[1] மாணுக்கர்க்கு விளங்குதற்பொருட்டுக் குறிப்புரையொன் றெழுதிச் செய்யுண்முதற்குறிப்பகராதியோடு * நூலினிறுதியிற் சேர்த்திருக்கின்றேம்.

இந்நாடகமாகிய பொருட்டொடர்நிலை நூலின்கண்ணே வசந்தருதுவின் வர்ணனையும், கானத்தினியல்பும், தேசசஞ்சாரஞ்செய்வதனாற் போதரும்பயனும், அரசிலக்கணமும், காஞ்சிநகர்ச்சிறப்பும், வசந்தச்சோலையின் வனப்பும், பல்வித வடமொழிவிருத்தங்களும், செந்தமிழ் யாப்புவிகற்பங்களும், யமகமும், திரோட்டகமுமாகிய சொல்லணிபொதிந்துளபாக்களும், நடுவெழுத்தலங்காரம், நான்காரைச் சக்கிரபந்தம் விருச்சிகபந்தம் முதலிய சித்திரகவிகளும், முடுகியலோசையுள்ள பாட்டுக்களும், கீர்த்தனங்களும், அகப்பொருட்டுறைகளும், புறப்பொருட் குறிப்பும் சிலேடையும், பல்வகைநீதியும், சந்திரோபாலம்பனமும், அன்னவிடுதூது கிள்ளைவிடுதூது மேகவிடுதூது வண்டுவிடுதூது முதலிய தூதுக்களும், உருவெளித்தோற்றமும், மன்மதோபாலம்பனமும், இவை போல்வன பிறவுமுள்ளன. பஞ்சகாவியங்களினின்றும், திருக்குறளாதிய நீதிநூல்களினின்றும், அகநானூறு புறநானூறு கலித்தொகை குறுந்தொகை முதலியதொகைநூற்களினின்றும், கம்பராமாயண முதலிய பெருங்காப்பியங்களினின்றும், தேவாரதிருவாசகங்களினின்றும், சூளாமணியினின்றும், கலிங்கத்துப்பரணி முதலிய சிறுநூல்களினின்றுஞ் செய்யுட்கள் மேற்கொள்ளப்பெற்றுப் பக்கங்களி னடியிற் குறிக்கப்பட் டிருக்கின்றன. இன்னும் நுண்புலனுடையோர் கண்ணுக்கு ஒன்பான் சுவையு முடைமையும், அற்புத கவிக

Rao Sahib M. S. Viswanatha Mudaliar, B.A., 20. Kalavala Chetty Street, Chintadripet, Madras.

குறிப்புரை அந்தந்தப் பக்கங்களிலேயே யச்சிடப்பட்டிருக்கிறது.

கற்பனைகளி னடைவும், பாடல்களிற் பத்துக்குணமும் பல்வகைப்பொருளணிகளுங் குறிப்புப்பொருளு மிறைச்சிப்பொருளு முள்ளுறையுவமமு மமைந்துள பான்மை யுஞ் சொற்பொருணயங்களும் புலப்படும்.

இனியிதனிடத்து உறுகதை பகுதிப்பட்டு ஓங்கிவளர்ந்து இறுதியிலொன்று கூடுமாறும், நாடகப் பாத்திரங்களின் சிறப்பியல்புகள் முகஞ்செய்து கிடக்குமாறும் அவை களந்தொறும் முதிருமாறு முற்றுணர்க.

அன்றியும், முற்றுஞ் செய்யுளாக யாக்கப்பட்டுப் பாத்திரங்களி னேற்றந் தாழ்வு கருதாது யாண்டு மொரேதன்மைத்தாய நடையினையுடைத்தா யுலகவியல் பொடு மாறுபட் டியலுறும் மனோன்மணீயமும், மரையிலை வெண்புனற் சிலைநுனி போல முன்னோர் பாக்களை யாங்காங்குப் பெய்யப் பெற்றமையன்றி வேறு செய்யு ளென்பது மருந்துக்கு மின்றி முற்றும் வசனமாயியன்றுள லீலாவதிசுலோசனை யும் போலாது இதன்கண்ணே பாத்திரங்களின் உயர்விழிவுகட்கு ஏற்றவாறே நடையமைதியும் அவ்வவர் தம் இயல்பாய சொற்களு மாங்காங்குச் செறிந்து கிடக் கும். அவைகண்டு பிழையெனக் கற்றோர் மருளாது வனப்பென மதித்துப் பாராட் டுகிற்பார். இவ்வாறே வடமொழிநாடகங்களுள் சம்ஸ்கிருதமும் பாகதமும் பயின்று வருதல் காண்க. இதுவே ஆந்திரமொழியிற் பிரதாபருத்ரீய நாடக முடையார்க்குங் கருத்தாத லுணர்க. மேலும் யாம் கூறியதே ஆங்கிலமொழியினறிவு சான்றோர்க்கு உடன் பாடாதல் தெற்றன விளங்கும்.

இன்னு மிந்நூல் "கூறிய வுறுப்பிற் சில குறைந்தியன்றும்" "ஒரு திறப் பாட்டினும் பலதிறப்பாட்டினு, முரையும் பாடையும் விரவியும் வரூஉம்" பெருங் காப்பிய மாமாறும், முந்தையோர்தம் ஒழுக்க வழக்கங்க ளுடைத்தாமாறும் உற்று நோக்குநர்க்கினிது வெளிப்படும்.

இந்நாடகம் சென்ற துன்முகி வருடம் பங்குனிமீ உக-ஆம் தேதி வெள்ளிக் கிழமை யன்றிரவு சென்னை வித்வந்மநோரஞ்சநீ சபையோரால் சென்னை விசயை பொதுஜன மண்டபத்து மிக்க சிறப்புடன் நடித்துக்காட்டி யரங்கேற்றப்பட்டது. அதுபற்றி யாமவர்க்கு வந்தனஞ் செலுத்துகின்றாம்.

இவ்வுரையிடையிட்ட பாட்டுடைச்செய்யுள் பற்பல தொழில்கள் புரியுங்கால் இடையிடைக் கிடைத்த அவகாசங்களில் எழுதியதாதலிற் பிழைகள்பல பொதுளி யிருத்தலுங் கூடும். அற்றேற் செந்தமிழ் பயின்ற செல்வர்கள் அவையிற்றினைத் திருத்தி யெம்மீது கருணை புரிவாராக.

தோன்று தோன்றிய யாவவை தூயன
வின்று தோன்றிய யாவவை தீயன
வென்றி யம்புமி யல்புண ராமக
னன்றி மூதறி வாள ரறைவரோ?

வி. கோ. சூ.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# க லா வ தி.

## பாயிரம்.

### கடவுள் வாழ்த்து.

---

விநாயகர் வணக்கம்.

நேரிசை வெண்பா.

தாதகித்தா ரார்தோட் சயதுங்க சோழன் மகள்
காதல் வல்லியாகுங் கலாவதிப்பேர்—மாதுறத்தித்
திக்குஞ் சரசமொழிச் செய்யாள் கதை சொலச்சித்
திக்குஞ் சரசரணஞ் சேர். (1)

---

சுப்பிரமணியர் வணக்கம்.

வஞ்சிவிருத்தம்.

தாவு பந்து தாவெனுக்
தேவ சேனை செந்தன
நீவி நிற்கு நேசனை
யோவலின்றி யுன்னுவாம். (2)

கலி விருத்தம்.

வள்ளியா னிகழ்ந்திடு மதுர நல்லிதழ்த்
தள்ளருங் குறிகளைத் தான்ம றைக்கிய
தெள்ளமிழ் துறழ்மொழித் தேவ சேனைமுன்
கிள்ளையொன் றேந்திறைன் கீர்த்தி பாடுவாம். (3)

---

பாட்டு 1. உறத் தித்திக்குஞ் சரசமொழிச் செய்யாள் = மிகவும் இனிய சுவையோடு கூடிய சொற்களையுடைய செவ்வியினள். சித்திக் குஞ்சர சரணம் = சித்திவிநாயகன் தாள்.

,, 2. முருகபிரானுந் தேவசேனையம்மையும் பந்தாடும் அவசரத்திற் பந்து அம்மையார் மடியில் தாவிற்றாக அதனைத் தருதி யென்னும் வியாஜத்தினலவர்தங் குங்குமந்திமிர்ந்த கொங்கைத் துணையினை நீவுமவ்வன்புடை யண்ணலை யிடைவிடாது சிந்திப்பாம்.

,, 3. தனது இதழினில் வள்ளியம்மையால் நிகழ்ந்த பற்குறிகளைப் பலவிதவுபாயங்களினாலும் நீக்க முயன்றும், அவை நீங்காமை கண்டு அவற்றை மறைப்பான் தனது அதரத்தினைக் கொவ்வைக்கனியென மருண்டு இக்கிள்ளையே யத்தீங்கிழைத்த தென்று கூறக்கருதிக் கையினிற் கிளியொன்றினைப் பிடித்துக்கொடு தேவசேனைமுன் போந்தானது கீர்த்தியைப் பாடுவாம்.

### நாமகள் வணக்கம்.

கலி விருத்தம்.

போங்கு தாமரைப் பூமகள் போல்பவ
ளங்க லாவதி நாடக நாஞ்செய
மங்கை வெண்கலை வாணியை யெம்முளப்
பங்க யத்திற் பரிவொ டிருத்துவாம். (4)

---

### நடராசர் வணக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஒன்றிடுகை யுடுக்கையடித் துலகிலுள வுயிர்கட்கு யொருக ரத்தா
னன்றபய மளித்திட்டா நந்தமுத்தி தருமிதென நடிக்குந் தன்றாண்
மன்ற வெழிற் கரந்தெரித்திம் மதுண்மையென வன்னியொரு மலர்க்கை யேந்தி
மன்றகத்துக் குனித்தருளு நடராசப் பெருமானை வணக்கஞ் செய்வாம். (5)

---

### அவையடக்கம்.

கலிநிலைத்துறை.

தறையி னிற்புகழ் சான்றசெந் தமிழ்ச்சொலிற் சிறியே
மறைபயின்றிடு வடமொழி வல்லுநர் போன்று
குறையி னுடகங் குயிற்றுவான் புகுந்தவிக் குறிப்புச்
சிறைபு றுமொரு சிறியபுள் பறப்பது சிவனும். (6)

---

### கட்டுரை.

குறள் வெண்பா.

மாதுறக்க மென்றுரைத்தன் மாந்தரீர் கேண்மினோ
சாதுக்கள் கூட்டுறவு தான். (7)

பாயிரம் முற்றிற்று.

---

பாட்டு 4. வெண்மையைப் பங்கயத்தொடுங் கூட்டுக.

5. நடராஜப் பெருமான்றன் நான்கு திருக்கரங்களினுந் தற்குறிப் பேற்றியது.

6. இன்னுஞ்சிறைகள் முளைக்கப்பெறாத வோரிளம்பறவை பறக்க முயல்வதனையொக்கும்.

7. மாதுறக்கம் = பெரிய சுவர்க்கம்.

## நடாத்துநர்.

1. சூத்திரதாரன். 2. நடி.

## நாடகப்பாத்திரங்கள்.

1. சயதுங்கன்: சோணாட்டரசன்.
2. சுகேசன்: பாண்டிநாட்டரசன்.
3. மேதாநிதி: சோழராசன்மந்திரி.
4. சந்மதி: பாண்டியராசன்மந்திரி.
5. சிதாநந்தன்: சுகேசன்மகன்; நாடகத்தலைவன்.
6. சத்தியப்பிரியன்: சிதாநந்தனது நண்பன்.
7. விகடவசநன்: சோணாட்டு விதூடகன்.
8. குலாந்தகன்: மேதாநிதியின்மகன்.
9. சுகசரீரன்: சோணாட்டில் இராசவமிசத்தைச்சேர்ந்தவொருபிரபு.
10. சுயம்பிரகாசர்: சோணாட்டிலொரு முனிவர்.
11. சோமதத்தன்: சோழ னரண்மனைச் சேவகன்.

ஆத்தானிகர்கள், தனவான்கள், சேவகர்கள், பூசாரி, மற்றையோர்.

12. ஆநந்தவல்லி: பாண்டியராசன் மனைவி.
13. கலாவதி: சயதுங்கன் மகள்; நாடகத்தலைவி.
14. வாசந்திகை:
15. மாணிக்கமாலை: } கலாவதியின் றோழிமார்.
16. மனோமோகிநி: சோழராசனது கணிகை.
17. மரகதம்: மனோமோகிநியின் பணிப்பெண்.

சிலதியர் முதலாயினோர்.

---

## நாடக நிகழ் விடம்.

பெரும்பான்மை சோணாட்டுத் தலைநகராகிய காஞ்சியினும் அதற்கடுத்த வயந்தச் சோலையினுஞ் சிறுபான்மை பாண்டிநாட்டுத் தலைநகராகிய மதுரையினுமாம்.

# கலாவதி.

## முன்னுரை.

சூத்திரதாரன் : [பிரவேசமாகி வாழ்த்துப்பாடுகின்றான்.]:—

மலர்மணம் போலெங்கு முறுபவனை மாவின்ப வாரிபுடை சூழுமுத்தி
யுலகினைப் பொதுநீக்கி யரசாளு மொருகோவை யொளிர்சுயஞ் சோதி
[தன்னை
யிலகுறு கலாவதி பராசத்தி யொடுமினிரு மீசனை யிறைஞ்சிவாழ்வா
மலகிறிரு விளையாட லயர்சிதா நந்தனையெ மையனைப் பன்முறையுமே. (8)

[மலர்களை அரங்கினிறைக்கின்றான்.

(திரும்பி) ஏ ! ஆரியே ! குணவதீ ! காலதாமத மின்றிச் சீக்கிரம் வா.

நடி பிரவேசமாகின்றாள்.

நடி:—ஐயா ! என்னை யாதுகாரணம்பற்றி யிவ்விடம் அழைத்தீர்கள் ? கட்டளை யெதுவோ அதன்படி நடக்கக் காத்துக்கொண்டிருக்கின்றேன்.

சூத்திரதாரன்:—ஏ ! அவிநயம்வல்லாய் ! நாம் இன்று இந்த நாடகசாலையில் நடிப்பதற்காக எடுத்துக்கொண்ட நாடகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் யாவற்றையுஞ் செய்து முடிந்துவிட்டனையா ?

நடி:—நாமின்றிரவு நடிக்கவேண்டியது எந்த நாடகமோ ? யாவரியற்றியதோ?

சூத்திரதாரன்:— (பாடுகின்றான்.)

---

பாட்டு 8 மலர்மணம்போ லெங்கு முறுபவன் = மலருமணமும் அத்துவிதமா நிற்றல்போல யாண்டும் வியாபித்தவனென்றும், மலர் அரும்பும் போது மாகுங் காலத்து மணம் வெளிப்படாதவாறுபோற் பெத்த தசையில் ஆன்மாக்களுக்கு வெளிப்படாதுடனிருந்தும், மலராங் காலத்து மணம் வெளிப்படுதல்போல முத்திதசையில் ஆன்மாக்களுக்கு வெளிப்பட்டு நின்றும் எவ்விடத்தும் உறைபவனென்றும் பொருள்கொள்க. மாவின்ப வாரிபுடை சூழுமுத்தியுலகினைப் பொதுநீக்கி யரசாளு மொரு கோவை = பேரின்பத்தையே சாகரமாகவும் முத்தியையே அதனாற் சூழப்பட்ட வுலகாகவும், கடவுளையே ஏகச்சக்கிராதிபத்தியஞ் செய்யும் அரசனாகவும் உருவகஞ் செய்திருத்தல் காண்க.

ஆரிய மாதரா யின்றிவ் வரங்கினி லாடுகிற்பச்
சீரிய தென்றே யெடுத்தது பாண்டியன் றென்மதுரைப்
பேரியன் மாநக ரான்சாம வேதியன் பீடுயருஞ்
சூரிய நாரா யணசூரி சொற்ற கலாவதியே. (9)

நடி:—அப்படியாயின் அதற்குரிய பாத்திரங்களை யெல்லாம் அப்பொழுதே சந்நாகப்படுத்தி வைத்திருக்கின்றேன். அவர்கள் யாவரும் மிகவும் அற்புதமாக நடிப்பார்கள்.

சூத்திரதாரன்:—பெண்மணி! நான் சொல்வதைச் சிறிது கேட்பாய்! (பாடுகின்றான்.)

கலைவல புலவர்கள் களிசி றக்குங்கா
றிலகவி நயத்தா மினிதெ னக்கொளோ
வலமுறப் படித்தவர் நயங்கொள் சிந்தைபு
முலவுறுந் தந்திரத் துறுதி யற்றரோ. (10)

நடி:—அஃதப்படியிருக்க. எத்துணையோ பலவித்துவான்கள் எவ்வளவோ பலநாடகங்கள் செய்திருப்ப அவற்றுள் வேறொன்றனையும் ஆடுதற்கு எடுத்துக்கொள்ளாது இந்தக் கலாவதி யென்னும் நாமமுடைய நாடகத்தை யாடும்படி யெடுத்துக்கொண்டது எக்காரணம் பற்றியோ?

சூத்திரதாரன்:—ஏ! பிரியே! இதோ பார்த்தனையா? இந்த மகா சபையிலுள்ள பலரும் வித்துவான்களுங் * கவிஞர்களுங் கமகர்களும் வாதிகளும் வாக்கிகளுமா யிருக்கின்றார்கள். அவர்கள் எத்தனையோ அளவற்ற நாடகங்கள் பார்த்துஞ் செய்து மிருப்பார்கள். ஆகையினாலே அவர்கள் பாராததுஞ் செய்யாததும் நவீனமானதுமாயிருப்பது இதுவே யாதலின் இதனை யின்றிரவு நடித்து இச்சபையிலிருக்குஞ் சான்றோர்களை யானந்தப்படுத்தும் பொருட்டு எடுத்துக்கொண்டோம்.

நடி:—ஆமாம். உண்மைதான். மற்றைப்படி இது நாடகமாடுவதற்கு ஏற்ற பருவகாலந்தானோ?

சூத்திரதாரன்:—அதற்குஞ் சந்தேகமுண்டோ? இது வசந்தகாலமன்றோ? இனி யிக்காலத்தைத் தவிர வேறெக்காலம் உலகத்திலுள்ள ஆன்மகோடிகளுக்கு ஆனந்தம் விளைக்கப்போகின்றது? இக்காலந்தானே மன்மதனுக்கு மிகவுந் துணைசெய்யுங் காலம்!—இதோபார்!— (பாடுகின்றான்.)

---

பாட்டு 10 களிசிறக்குங்காறு = களிகூறும் வரையும். உம்மை விகாரத்தாற் றொக்கது. வேற்றுப்பொருள் வைப்பணி.

* கவி, கமகன், வாதி, வாக்கி: இவர்தம்முள் வேற்றுமையை உய்த்துணர்க.

தேமா வெதிர்கொண்டு நிற்பச் சிறுகுயில் போற்றிசைப்பத்
தூமா ணிளங்கொடி தந்தளிர்க் கையாற் றொழுதசைய
வாமான் மகிழ மலர்மணம் வீச வசந்தமெனுங்
கோமா னணைந்தனன் காணுதி யென்றன் குலக்கொடியே. (11)

ஆகையாலன்றோ அவன் துணைவனாகிய மனோபவனுடைய கடன்முரசம் பெரிது முழங்குகின்றது! குயிற்காளங் களிப்புட னொலிக்கின்றது! சுருப்புநாணொலி கேட்கின்றது! இதோ இவ்விடத்திலுள்ள சித்தசன் பாசறைக்கண்ணே ஐங்கணைகளும் அளவின்றி வைக்கப்பட்டிருக்கின்றன! தென்றலந்தேருங் காரிருட்களிறுங் கிள்ளையம்புரவியும் ஆங்காங்கேயிருந்து தந்தலைவனாகிய மதராசனை யெதிர் பார்த்துக்கொண் டிருக்கின்றன!—ஆகையினாலே, ஏ! பிரேயசி! இப்பொழுது இந்தச் சபையிலுள்ள சான்றோரனைவருங்கேட்டு மிகக்களிப்படையுமாறு இவ்வசந்த ருதுவைப் பற்றி யேதேனும் வருணித்துப் பாடுவாயாக.

நடி:—ஆ! அங்ஙனமே தங்கள் விருப்பத்தின்வண்ணம் என்னாலியன்ற மட்டும் பாடுகின்றேன். (பாடுகின்றாள்.)

கானுறு பூவின் ஞிமிறிசை பாடக் கடிகமழத்
தேனமர் முல்லை நகைத்திடத் தென்றலஞ் சேடியொடும்
வானுறு மாலங் கவரி யசைதர வந்தனனால்
வேனி லெனப்பகர் கிற்கும் வனப்புறு மெல்லியலே. (12)

பூந்தளிர்க் குழையுஞ் செய்ய பொன்மலர்க் கலனும் பூண்டு
மாந்துகட் பருகிப் பின்சேர் வண்டராம் பாண ரோடு
மாந்தர்தாங் கண்டு சால மகிழ்தர வாடு கிற்பான்
போந்தனள் வசந்த மென்னும் பொற்புறு மாத ராளே. (13)

சூத்திரதாரன்:—ஆகா! உன்னுடைய கானம் மிகவும் அற்புதம்! மிகவும் அற்புதம்!! அதுவுமன்றி யிந்த வசந்தருதுவைப்பற்றி வெகு நன்றாய் வருணித்தாய்!—ஏ! ஆரியே! உன்றன் பாடலைக்கேட்டு என்றன் ஐம்பொறியும் ஆனந்தமடைந்தன வென்பதற்கு ஐயமுண்டோ? உன்னுடைய கானமாருதம் வீசியன்றோ இந்தச் † சர்வசனோத்தியானவனமுந் தலையசைத்து ஆரவாரியாநின்றது! ஆ! கானமே! நின்னுடைய சத்தியென்னே!—(பாடுகின்றான்)

---

*பாட்டு 11+12 இப்பாடல்களில் வசந்தகாலத்தை முறையே யரசனாகவும் அரசியாகவும் செய்துள்ள ஏகதேச வுருவகவணிகளைப் பூர்த்திசெய்துணர்க.

பாட்டு 13 உருவகவணி. இதன்கண் வசந்தத்தை நடனமாதாகக் குறித்திருத்தல் காண்க.

† சர்வசனோத்தியானவனமுந்தலையசைந்து ஆரவாரியா நின்றது:—இவ்வுருவகத்தை யுற்றுநோக்குக.

மோனமார் முனிவரை முறுவன் முல்லைநற்
பானலங் கண்ணொழிற் பாவை மார்களை
மானவாண் டகையரை வசீக ரிப்பையேற்
கானமே நின்வலி கழறற் பாலதோ. (14)

கானத்தா லிளகாத மனமுடைய மனிதனுமுண்டோ? உண்டெனில் மிகக் கொடும் பாதகன் அவனே யாவான்!—(பாடுகின்றான்.)

தன்னலங் கனிந்த பாடற் காயக னல்ல னோனு
மின்னிசை கேட்டு நெஞ்ச மிளகிடா திருப்பான் வஞ்ச
மன்னவர் துரோக மாதி மாபவஞ் செய்யத் தக்கா
னன்னவன் றனைநம் பாம லகற்றிட வேண்டுமன்றே. (15)

ஆ! ஆ! இஃதென்னை? அதிசயமா யிருக்கின்றதே! உன்னுடைய பாடல் கேட்டுப் பரவசமானயான் வந்த காரியத்தை முற்றும் மறந்துவிட்டேனே! நன்று! நன்று!!—(பாடுகின்றான்.)

சுந்த ரஞ்செறி குயிலிசைத் தோகைநின் றாய
கந்த ரத்தெழு கானத்தின் மயங்கினேன் காம
விந்தை சேர்மனோ மோகினி வலையினில் வீழ்ந்து
புந்தி மாழ்கிய சயதுங்க சோழனைப் போன்றே. (16)

[இருவரும் போகின்றார்கள்.

முன்னுரை முற்றிற்று.

---

பாட்டு 15 இப்பாடலானது, இந்நூலாசிரியர், பி. ஏ., பரீக்ஷையில் முதற் றரத்தில் தேறியதும், ராவ் பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்களைப் பார்க்கச் சென்றுழி, அவர் இவரது கவித்திறமையைப் பரீக்ஷிக்கும் நோக்கத்துடன், ஆங்கில மகாகவி ஷேக்ஸ்பியர் இயற்றிய வெனிஸ்வர்த்தகன் என்னும் நாடகத்திலுள்ள ஒரு ஆங்கிலக் கவியைத்தந்து அக்கருத்தமையத் தமிழில் ஒரு கவியியற்றுமாறு சொல்ல, இவர் அவ்விடத்திலேயே எழுதி யன்னார் கைக்கணிட்டனர் என்ப.

ஆங்கில கவி வருமாறு:—

The man that hath no music in himself,
Nor is not moved with concord of sweet Sounds,
Is fit for treasons, stratagems and spoils;
The motions of his spirit are dull as night
And his affections dark as Erebus:
Let no such man be trusted.

Merchant of Venice. Act. V. Scene I.

# க லா வ தி.

## அங்கம்—க.

### முதற்களம்.

இடம்: காஞ்சியிற் சோழனரண்மனையி னந்தப்புரம்.

காலம்: பிற்பகல்.

பாத்திரங்கள்: மனோமோகினி, மரகதம்.

**மனோமோகினி:**— (தனக்குள்) நம்முடைய யுக்தியே யுக்தி! இந்தச் சயதுங்க ராசரை நாமும் எப்படியாவது அவர் மகாராணியாரோ டிருக்கும் பொழுது நம்முடைய வலைக்குட் சிக்குமாறு செய்யவேண்டுமென்று எவ்வளவோ முயன்றுபார்த்தும் முடியவில்லை. அதுவும் என்ன அறி வின்மையான் முயன்றோம்! மகாராணியார்வனப்பின்முன் நமது வனப்பு மொருவனப்பா?— இப்பொழுது நாம் முயன்றது நியாயம். அவ்வாறே யரசனுக்கு உரிமைமாது மாயினோம்! ஒருகால் என்னையே யவர் தமது மனைவியாக வரிக்கவுங்கூடும். அப்படியாயின் நாம் மகா ராணியார் என்னும் பட்டமும் வகிக்கலாம்!— அந்தநாளெந்தநாளோ! அது மாத்திரஞ் சீக்கிரங் கைகூடுமாயின் ஆலடிப்பிள்ளையார்க்கு ஐந்து பணத் தேங்காயுடைப்பேன். பிள்ளையாரே! முன்னரே நீர் சுகசரீரரை யென்வயப்படுத்தியபோது உமக்கு ஒருபணத் தேங்காயுடைத்தேன்! அதை ஞாபகம் வைத்துக்கொண்டு இப்பொழுதும் அடியாளுக்கு உதவி செய்யவேண்டும்!—(பாடுகின்றாள்.)

மூலமே கணத்திற் கெல்லா முதல்வவென்னப்ப காஞ்சி
யாலடிப் பிள்ளையாரே யடியனேற் கருள்செய்வாயே. (17)

சோமதத்தன் வருகின்றான்.

**சோமதத்தன்:**— அம்மா! சுகசரீர எசமான்கள் இங்கே தங்களைப் பார்க்க வேண்டுமென்று வந்திருப்பதாகச் சொல்லச்சொன்னார்.

**மனோமோகினி:**— அப்படியானால் அவரை யுடனே நீ வரச்சொல்.

[சோமதத்தன் போகின்றான்.

(மரகதத்தைநோக்கி) அடீ! மரகதம்! நீ போய் மகாராசாவவர்கள் எங்கிருக்கின்றனரோ அங்கே சென்று அவர் இவ்விடம் வருகிற சமயம் பார்த்து வந்து முன்னரே தெரிவி! சீக்கிரஞ்செல். தாமதியாதே.

[மரகதம் போகின்றாள்.

---

பாட்டு 17. கணத்திற் கெல்லா முதல்வ=கணபதியே.

*சுகசரீரரும் வருகின்றார்! அவருக் கெவ்விதமாவது நாம் அரசன்மகள் கலாவதியை மணம் புரிவிக்கவேண்டும்!*

*சுகசரீரன் வருகின்றான்.*

*வாரும் சுகசரீரரே! இப்படி யுட்காரும்.*

**சுகசரீரன்:—** *ஆ! அப்படியே யுட்காருகின்றேன்! மற்றைப்படி யென்னுடைய காரியம் என்னாயிற்றோ?*

**மனோமோகினி:—** *என்ன? சுகசரீரரே! எனக்கு இவ்வளவு தூரம் உதவி செய்த உம்முடைய காரியத்தை மறப்பேனோ? அதைக்குறித்தொன்றும் யோசியாதீர்! கலாவதி நும்மைவிட் டெங்கே தவறப்போகின்றாள்? நீவிரோ ஒருபெரிய பிரபுவாயிருக்கின்றீர்! மகாராசாவினுடைய பிரீதியு முடையீர்! மகாராசாவுக்கு நெருங்கிய சுற்றத்தாராயு மிருக்கின்றீர்! உமக்கென்னையா குறைவு?*

**சுகசரீரன்:—** *ஒருகுறைவுமில்லை! தாங்கள் தாம் இராசபாரியையாய்விட்டீர்கள்! இனிமேலிந்தச் சுகசரீர னென்னத்திற்கு?— நான் போய் வருகின்றேன். (எழுந்திருக்கின்றான்.)*

**மனோமோகினி:—** *இஃதென்ன சுகசரீரரே! இப்படிச் செய்கின்றீர்? நீர் சொல்லுவதொன்று மெனக்குப் புலப்படவில்லையே! உம்மைக்கூட நான் மறப்பேனோ?— (அருகில் நெருங்கி) ஏனிப்படிக் கோபித்துக்கொள்கின்றீர்? (அணைத்துக்கொண்டு) என்ன சமாசாரம்?*

**சுகசரீரன்:—** *தாங்களோ மகாராணியாய்விட்டீர்கள். நானோ இருந்த நிலைக்குக் குறைவின்றி யிருக்கின்றேன்! பேருக்குமாத்திரஞ் சுகசரீரனானேன்! கலாவதியையும் மந்திரியார் மேதாநிதிமகன் குலாந்தகன் மணக்கப் போகின்றானாம்! இனிமேல் நமக்கென்னகுறை?— தங்கள் காரியம் முடிந்து விட்டதே யன்றோ?*

**மனோமோகினி:—** *என்ன? சுகசரீரரே! மேதாநிதியின் மகன் குலாந்தகனோ கலாவதியை மணக்கப்போகின்றானாம்? போம் ஐயா போம்! உமக் கென்னவேலை? எவனாவது என்னவாவது வாய்க்கு வந்தபடி பிதற்றிக் கொண்டிருந்தால் அவையாவும் உமக்கு மெய்யான சமாசாரந்தாம்! என்னவோ வீண்பேச்செல்லாம் பேசிக்கொண்டிருக்கின்றீர்! அவனும் மணக்கப் போகின்றான்! நீரும் பார்க்கப்போகின்றீர்!*

**சுகசரீரன்:—** *தாங்கள் என்ன அப்படிச் சொல்லுகிறீர்களே! அந்தமாதிரி வார்த்தைபிறந்து என்காதிலே விழுந்தவுடனேதானே யிங்கே தங்களிடஞ் சொல்லவேண்டுமென்று வந்தேன்! இல்லாமற் போனால் தாங்கள் செய்த வாக்குத்தத்தத்திலெனக்கென்ன அவநம்பிக்கையா?— மேலும் அவனோ மந்திரிமகன்! புத்திசாலி! அழகுள்ளவன்! இப்படி யடிக்கடி யவனே சொல்லிக்கொள்ளுகின்றான்! அப்படியிருக்க மேதாநிதியவர்களே பார்த்துக்கேட்டால், மகாராசாவவர்கள் தமதுபெண்ணை யவர்குமாரனுக்குக் கொடுக்கத் தடை சொல்லுவாரா?*

மநோமோகிநி:— ஐயா! 'உம்முடைய புத்தி யெப்பொழுதுஞ் சந்தேகப்பட்ட புத்தி' யென்கின்றார்களே! அஃதுண்மையாகவே யிருக்கின்றது. என்ன பைத்திய முமக்கு!— அவனுடைய புத்திசாலித்தனத்தைப் பற்றி நீர்தாம் மெச்சிக் கொள்ளவேண்டும்! உமக்கே னிந்த வீண் யோசனையெல்லாம்? நானிருக்கும்போது கலாவதியைக் குலாந்தகன் மணக்கப் போகின்றானா?

சுகசரீரன்:— என்னவோ? எப்படியாவது என் காரியத்தை முடித்து வைக்க வேண்டும். தங்களைத்தான் நம்பியிருக்கின்றேன்.

மநோமோகிநி:— சுகசரீரரே! நீரொன்றுக்கும் பயப்படவேண்டாம்! இன்னுங் கொஞ்ச நாளிற்குட்பாரும் மந்திரிமகன் போகும் வழியை! மகாராசாவவர்கள் என்னுடன் சேர்ந்திருப்பது இந்தமந்திரிக்கு என்ன கேடு காலமோ? தெரியவில்லை.— எப்பொழுது பார்த்தாலு மென்பேரி லேதாவது குற்றத்தைச் சொல்லிக்கொண்டிருக்கின்றாராம்!—அவரது அகந்தையைச் சிறிது அடக்கவேண்டும்!

சுகசரீரன்:— அவர்தாம் மகாராசாவின் முக்கிய மந்திரியாயிருக்கின்றாரே! அவரைத் தாங்களென்ன செய்யக்கூடும்?

மநோமோகிநி:— பத்துநாளைக்கு முன்னிருந்ததற்கு இப்பொழுது எப்படி மந்திரிமக னிருக்கின்றானென்று பார்த்தீரா? இந்தவிடயமெல்லா மெனக்கு முன்னமே தெரியும்.

சுகசரீரன்:— *தாங்கள் தாம் எனக்குத் தெய்வம்! மற்றைப்படி, சிலநாளைக்கு முன் நன்றாய் வார்த்தை சொல்லிக்கொண்டிருந்த மந்திரிமகன் என்னமோ இப்பொழுது பைத்தியம் பிடித்தவன்போலப் பேசுகின்றான்!—

மநோமோகிநி:— பைத்தியமா? பெரும்பைத்தியமா?— உமக்கு இன்னும் என்னுடைய சத்திகளெல்லாம் நன்றாய்த்தெரியா! வைத்தியர் †அகோபல ரிருக்குமட்டும் நீர் எதற்கு மஞ்சவேண்டாம்!

மாகதம் வருகின்றாள்.

மாகதம்:—அம்மா! மகாராசாவவர்கள் சதுரங்க விலாசத்திலிருந்து புறப்பட்டுவிட்டார். இன்னுஞ் சிறிதுநேரத்திற்குள் இவ்விடம் வருவார்.

மநோமோகிநி:—சரி. அப்படியானால் நீர் போய்வாரும். சுகசரீரரே! நீர் இந்தவிடயமாக வொன்றுக்கும் பயப்படவேண்டாம். கலாவதி யும்முடைய கையில்வந்து விட்டாளென்று நினைத்துக்கொள்ளும். போம். நாழிகையாயிற்று. (மாகதத்தை நோக்கி) அடீ! மாகதம்! இவரைச் சிக்கிரம் புறக்கடைவழியாய் வெளியே கொண்டுவிடு. (சுகசரீரரை நோக்கி) சுகசரீரரே! நான் சொல்லியவற்றையெல்லாம் மனத்திலேயே வைத்துக்கொள்ளும். பத்திரம்!

---

* தாங்கள் தாம் எனக்குத் தெய்வம்! வேசையர் வீடு செல்வாரியல்பாய சொற்களுள் இதுவும் ஒன்று போலும்.

† அகோபலர் = அரண்மனை வைத்தியர்.

சுகசரீரன்:—(எழுந்து) ஆ! அப்படியே! மற்றைப்படி தங்கள் தயவு என்பேரிற் பரிபூரணமா யிருக்கவேண்டும்.

மனோமோகினி:—சரி. சரி. போம். போம்.

[சுகசரீரனும் மரகதமும் போகின்றார்கள்.

(தனக்குள்) மகாராசாவவர்கள் எதற்காகஇந்நேரத்தில் இங்கு வரவேண்டும்? ஏதோ அவர் இரண்டு மூன்று நாளாக ஒரு மாதிரியா யிருக்கின்றார். எதையோவொன்றைப்பற்றி நினைத்துக்கொண்டிருக்கின்றார் போலும்.—ஒருவேளை, அவரது அருமைமகள் கலாவதிக்கு வயது வந்துவிட்டதே! அவளுக்குத் தகுந்தவரனைச் சம்பாதிக்க வேண்டுமென்றுதானோ?—ஆ! ஆ!! அவளுக்கேற்றவரன் அந்தக்குமாரவேளொருவன்றான்! அதற் காட்சேபணையில்லை.—அப்படியிருக்க, சீ! சீ! என்ன அவசரப்பட்டோம்!—இந்தத் தரித்திரம் பிடித்த சுகசரீரனுக்கா அவ்வழகியை மணஞ்செய்து வைக்கிறது? அசாத்தியம்! அசாத்தியம்!! அப்படியே யொருவேளை சாத்தியமாயினும் அஃது அநியாயம்! அநியாயம்!! (பாடுகின்றாள்.)

மின்னனை யாளையிவ் வீணனுக் களித்தல்
பொன்னெழின் மானைப் புலியின் வாயினு
மருமையாய் வளர்த்த வொருபெருங்கி ளியைப்
பூனையின் வாயினுந் தானே பிடித்துத்
திணிப்பது போன்மென வெணப்படு மன்றோ? (18)

நாமும் என்ன பைத்தியக்காரத்தனமாய் அவருக்கு வாக்குத்தத்தஞ் செய்தோம்! கலாவதியோ மகாராச புத்திரி! இவரோ ஒரு *சமானியப்பிரபு! தாம் மகாராசாவுக்கு மிகவும் நெருங்கின பந்துவென்று தாமே வாய்ப் பறையறைந்துகொண்டு திரிகின்றார்! இன்னுமிவர் இராசபந்துவாயிருந்தும் இழிகுலச்செயல்களுந் துர்நடக்கைகளும் இவரிடங் குடிகொண்டிருக்கின்றன! கேட்டால், நீ தான் அவற்றிற்கெல்லாம் மூலகாரணமென்கின்றார்! இவருக்குக் கலாவதி யகப்படுகிற தென்னையோ குதிரைக் கொம்புதான்! நாம் நம்மாலியன்றமட்டும் † 'வாய்புளித்ததோ மாங்காய் புளித்ததோ' என்று சொல்லி வைப்போம்! அவருக்கு நல்லூழிருந்தால் நடக்கிறது. (பாடுகின்றாள்.)

[சயதுங்கன் மனோமோகினி பின்னே வந்து நிற்கின்றான்.

சயதுங்க ராச நிதியே சலியாத கற்ப தருவே
நயனுரு கஞ்ச நயனா நளிர்சேரு மென்ற னிறைவா
வுயர்வான வாகு கிரியா னுனைமேவ நின்று தமியேன்
மயலாகி நைத லறியா வருவாயென் சாமி துரையே. (19)

---

பாட்டு 18 போன்ம்: மகரக்குறுக்கம்.

*சமானிய = சாமானிய

† வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று பேசுதல்=ஒட்டாமற் பேசுதல்.

இஃது இப்பொருண்மைத்தாதலை வல்லார்வாய்க்கேட்டுணர்க.

(க) இராகம் — கேதாரகௌளம். தாளம் — ஆதி.

பல்லவி.

எங்கள் வீர ராச னின்றினி
திவ்வி டம்வரு வாய்கொலோ.

அநுபல்லவி.

துங்க னாஞ்சய துங்க மன்னனே
துரைசாமீ யுனையனை யாதுநா னேங்கினேன். (எங்கள்)

சரணம்.

சோழர் குலத்திற் றோன்றிய சுகுணா
சூரிய வம்சச் சுந்தர புருடா
யாழுங் குரலு மினிதிசைந் தாங்கு
யானும் நீயு மிருந்துமென் றடையோ. (எங்கள்)

கருவி மாமழை
புரையும் வண்கையாய்
மருவ வென்றனை
வருதி யோடியே. (20)

இளஞ்சிமி றிசைபாடக்
களமதன் கணைசாட
வளர்புய மலையானே
தளர்வது தமியேனே. (21)

சயதுங்கன்:— என்னருமைக் காமக்கிழத்தி! மனோமோகினீ! நீ தனியா யிவ்விடத்தி லென்னசெய்துகொண்டிருக்கின்றாய்?—[மௌனம்] என்ன? பேசாமலிருக்கின்றாய்? என்பேரி லேதாவது கோபமோ? என்முத்தே! (பாடுகின்றான்.)

ஓடி வந்தனை
னாடி யுன்றனைக்
கூடி யாடுவோ
மூட லின்றியே. (தழுவி முத்தமிடுகின்றான்.) (22)

மனோமோகினி:— (கோபித்தவள்போலச் சிறிது விலகிக்கொண்டு) ஆமாம்! என்னைக் 'காமக்கிழத்தி' யென்றீர்களே! 'என்னுயிர்க்காதலி' என்று சொல்லப்படாதோ? எப்படி யிருந்தாலும் நான், ஏழை தங்கள் மனைவி யாவேனா?— (முகத்தைத் திருப்பிக்கொள்கின்றாள்.)

சயதுங்கன்:— என்னருமைக் காதலீ! இவ்வற்ப காரியங்களுக் கெல்லாங் கோபித்துக் கொள்வார்களா? நீ யென் மனைவிக்குரிய கௌரவங்களெல் லாம் வகித்துக் கொண்டிருக்கும்போது உனக்கென்ன குறைவு?—

மனோமோகினி:— அஃதிருக்கட்டும். நீங்கள் என்னை நேசிப்பது உண்மையாயின், அந்நேசம் எவ்வளவென்று கூறுங்கள். கேட்போம்.

சயதுங்கன்:— இவ்வளவென்று வரையறுத்துக் கூறப்படும் நேசம் நேசமே யன்று.

மனோமோகினி:— தங்களுக்கு என்பாலுள்ள நேசத்திற் கோரெல்லை யான் குறிப்பிக்கின்றேன்! பார்க்கின்றீர்களா?

சயதுங்கன்:— அப்படியாயின் இன்னும் அநேக அண்டங்கள் படைக்குமாறு நீ நான்முகக்கடவுளை வேண்டிக்கோடல் வேண்டும்!

[மரகதம் வந்து ஒரு நிருப மரசனிடங் கொடுக்கின்றாள்.

சயதுங்கன்:— (வாங்கிக்கொண்டு) சரி, நீ சற்று அப்புறம் நில்!

[மரகதம் போகின்றாள்.

மனோமோகினி:— மகாகனம் பொருந்திய மகாமந்திரியார் மேதாநிதியவர்கள் மகாராசாவவர்களுக்கு நீவிர் இன்னின்னவாறே யொழுகவேண்டுமென்று வரம்பேற்படுத்தி யுத்தரவனுப்பிய நிருபமோ?—

சயதுங்கன்:— என்னன்பே! அஃதென்னை? அப்படிக் கூறுகின்றாய்! அவர் ஏதேனும் நிருபம் எழுதினால் அது நம்முடைய இராச்சியபாரம் இனிது நடக்கும் பொருட்டே தான்!—

மனோமோகினி:— தங்களுக்கென்ன? அவர்சொல்லுவது வேதவாக்கு! பூருவசன்மத்தி லென்ன தவஞ் செய்தாரோ மேதாநிதியார் தங்களைப்போன்ற இராச சேவகர் கிடைப்பதற்கு!—

சயதுங்கன்:— (தழுவிக்கொண்டு) என் கண்ணே! இன்னொருமுறையப்படிச் சொல்லற்க!—மற்றைப்படி, நம்முடைய குழந்தை கலாவதிக்கோ வயது பதினாறாய் விட்டது. நாம் சீக்கிரத்தினிற் றக்க வரனை விசாரித்து மணம் முடித்தல் வேண்டும்.

மனோமோகினி:—வரன் உள்ளூரிலேயே யகப்பட்டால் நல்லதன்றோ?—

சயதுங்கன்:—ஆம். நலந்தான். ஆயினும் நம்முடைய சாதி குலாசாரங்கட்கு ஒத்தவர்களாய்த் தேடப் புகுந்தால், வேறு இராச வமிசங்களிலேதான் பார்த்தல் வேண்டும்.

மனோமோகினி:—(தனக்குள்) அரசன் யோசனையைப் பார்த்தால் எட்டேணி வைத்தாலும் எட்டாது போலிருக்கின்றதே!—(அரசனைநோக்கி) இத்தனையெல்லாம் யோசனைசெய்வானேன்? நம்மிருவரிடத்தும் அன்புபூண்டொழுகும் உத்தமர் நமது சுகசரீரப் பிரபுவவர்களிருக்கின்றாரல்லரோ?—

சயதுங்கன்:—(தனக்குட் பாடுகின்றான்.)

இருந்திருந்,
தென்னை யோசனை யெடுத்தாய் பெண்ணே!
"பெண்ணறி வென்பது பெரும்பேதைமைத்" தெனப்
புகன்ற புலவர்தாம் பொய்போ வாரோ? (23)

சோமதத்தன் வருகின்றான்.

சோமதத்தன்:—மகாராசா! ஆத்தானமண்டபத்திற் பிரபுக்களனைவரும் வந்து காத்துக்கொண்டிருக்கின்றார்கள்.

சயதுங்கன்:—சரி, நீ போ. இதோவருகின்றோம்.

[சோமதத்தன் போகின்றான்.

என்கண்ணே!—மனோமோகினி! நீ யெனக்குக் கொஞ்சம் விடைகொடுக்க வேண்டும். நான்போய் வெகுசீக்கிரமாக் வருகின்றேன். அப்பொழுது நாமிதைக் குறித்துப் பேசிக்கொள்வோம். (போகின்றான்.

மனோமோகினி:—(தனக்குள்) ஏது! நாம் ஐயுற்றவண்ணமே யாய்விடும்போலிருக்கின்றது. முன்னரோ 'வேறுஇராச வமிசங்களிலே பார்க்கவேண்டு' மென்றார். இப்பொழுதோ உடனே யுத்தரஞ்சொல்லாமற் பெரிதும் யோசனை செய்தனர். அதற்கு நாமென்னசெய்யலாம்? சக்கசீரர் கொடுத்துவைத்தது அவ்வளவுதான்!—(மௌனம்) சீ! சீ! இருந்தாலும் நமக்கு இவ்வளவுதூரம் உதவிசெய்தவரை நாம் மறக்கக்கூடாது. அவர் பாவம் நம்மையே நம்பியிருக்கின்றார்! என்ன இருந்தாலும் நமக்கு அவர் பேரிலுள்ள அன்பு போகவில்லை!— (பாடுகின்றாள்.)

அடுத்திருப் பவரைக் கெடுத்தலா காதுமற்
றெடுத்தகா ரியத்தையும் விடுத்தலொண் ணதே. (24)

எல்லாவற்றிற்கும் அரசனிடம் இன்னும் இரண்டொரு முறை சொல்லிப் பார்ப்போம்! ஆனலாகின்றது! ஆகாமற்போனாற் போகின்றது.

[மனோமோகினி போகின்றாள்.

## இரண்டாங்களம்.

இடம்: மதுரையிற் பாண்டியனரண்மனையிற் சபாமண்டபம்.

காலம்: பிற்பகல்.

பாத்திரங்கள்: சுகேசன், ஆநந்தவல்லி.

(இருவருஞ் சிங்காதனத்தில் வீற்றிருக்கின்றனர்.)

சுகேசன்:—(தனக்குள்) அப்பொழுதே சொல்லி யனுப்பினமே! இன்னுமேன் நமது கண்மணி சிதாநந்தன் வந்திலன்?—யாம் எவ்வளவு சொல்லியும் அவன் மனந்திரும்பிற்றிலது போலும்! என்செய்வேம்? பன்னெடுநாளாய்த் தேச சஞ்சாரஞ் செய்தல் வேண்டுமென்று நம்மை விடாப்பிடியாய்க் கேட்கின்றனனே! எவ்வளவோ அவனது நட்பாளர்மாட்டுச் சொல்லி அவன்றனெண்ணத்தினைத் திருப்புவான் முயன்றேம். அணுவளவேனும் அவன் மனஞ் சலித்திலது! அவனை எப்போது பார்க்கினும் உலகசரித்திரங்களைப் படித்துக்கொண்டிருக்கின்றனன். அதன் பின்னர் அவற்றிற் கூறியாங்கே நடக்கவேண்டுமென்று முயலுகின்றனன். யாம் வேண்டாமென்றெவ்வளவு கூறினும் பலவகைக் காரணங்களை

யெடுத்துரைத்துப் போகவே வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றனன் ! யாம் இத்தனை நாளாய் அவனுக்கு விடைகொடா திருந்ததனால் எவ்வளவோ களிப்புடன் விளையாடிக்கொண் டிருப்பவன் இப்பொழுது சின்னாட்களாய் ஒருவருடனும் பேசுகின்றது மிலன்!—(பாடுகின்றான்.)

கரையறு கல்வி கற்றுங் காசினி யியற்கை யொன்றுந்
தெரிகில னாப்பஃ றேயஞ் செல்லுமா றுளங்க வன்று
மரைமலர் போன்மு கத்து மதியுறு களங்க மொப்ப
வுரைதரு வாட்ட மொன்றுற் றொளிகுறைந் திருக்கின்றானே. (25)

—(மௌனம்.)

அவனுக்கு யாம் எங்ஙனம் விடை கொடுப்பது?—தேச சஞ்சாரஞ் செய்வதன்கண் எவ்வளவோ அபாயங்களுளவே! நமக்கு இத்துணை யழகுங் குணமும் வாய்ந்த மகனொருவனிருப்பது எத்தனையோ வேற்றரசர்களுக்குப் பொறாமை! மேலும் சோணாட்டரசன் நமக்குச் சந்மவிரோதி! அவனது நாட்டகத்துப் புகின் நமது சிதாநந்தன் பிழைப்பதேது?—ஒன்றுந் தோன்ற வில்லையே!—(சுகேசன் சிங்காதநத்திற் சாய்கின்றான்.)

ஆநந்தவல்லி:—(திடுக்கிட் டருகில்வந்து) ஆ! பிராணநாதா! இஃதென்னை? இவ்வாறு வருந்துகின்றீர்கள்! தாங்கள் வேறெதனையோ வொன்றைப் பற்றி யோசனைசெய்து கொண்டிருக்கின்றீர்க ளென்றன்றோ யிதுகாறும் நினைத்துக் கொண்டிருந்தேன்! நமது குழந்தை சிதாநந்தன் தேசசஞ்சாரஞ் செய்யவேண்டு மென்று சொல்லிக் கொண்டிருந்தனனே! அது பற்றியோ இவ்வளவு கவற்சி? அதற் கென்ன? போகவேண்டா மென்றால் நின்று விடுகின்றான்! அவன் தங்களையே தெய்வமாக நினைத்துக் கொண்டிருக் கின்றானே! அவனோ தந்தைசொல்லைக்கடந்து நடப்பான்? விட்டு விடுங்கள் இந்தக் கவற்சியை!—

சுகேசன்:—(நிமிர்ந்துகொண்டு) பிராணசகி! கவற்சியென் னென்கின்றனையே! நமது சிதாநந்தன் தேச சஞ்சாரஞ் செய்யவே வேண்டுமென்று வலியுறுத்துகின்றனன்! அதுதான்! வேறென்னுளது? எவ்வளவு தடுத்துரைப்பினும் அவன் கேட்கிலன்! என்செய வல்லேன்? வேண்டாமென நின்று விடுவா னென்று வெகு எளிதாய்ச் சொல்லிவிட்டனையே! பலவித வுபாயங்களினாலும் அவனெண்ணத்தை மாற்றுவான் முயன்றேன். மேருமலைபோ லவனது மனம் உறுதியாகவே யிருக்கின்றது. யானும் பலமுறை அவனுக் கெதிரிலேயே தேசசஞ்சாரஞ் செய்வதனால் நேரிடும் இடையூறுகளை யெடுத்துக் காட்டினேன். ஒன்றேனும் அவனிடத்திற் பயன்பட்டிலது. இதுதானெனக்கு மனவருத்தத்தை விளைக்கின்றது. என்னவோ யான் சொல்லவேண்டியன வெல்லாஞ் சொல்லிப்பார்த்தேன். அவனொன்றற்கு மிணங்கிப்பேசிலன். நீயேனுஞ் சொல்லிப்பார். அவனையும் ஈண்டு வருமாறு சொல்லி யிருக்கின்றேன். என்னவோ நீ சொல்லும் வண்ணம் அவன் கேட்பானென்று யான் நினைக்கிலேன்.

ஆநந்தவல்லி:—பிராணநாதா! தங்களுக்குத் தெரியாததுமுண்டோ? எனக்கொன்றுந் தோன்றவில்லையே! நமது கண்மணி செல்வச் சிதாநந்தனை விட்டு ஒரு கணப்பொழுதேயாயினு மென்னாற் பிரிந்திருக்க முடியாதே! என்ன? உறுதியாய்ப் போகவேவேண்டுமென்று கூறுகின்றான்? சிதாநந்தனைத் தவிர்த்து நமக்கு வேறுயாவருளர்? எங்ஙனமோ நமதருமை மகனை யனுப்புவது? எவ்வளவோ தவம்புரிந்து அருமையா யோராண் மகவைப் பெற்றோம். ஏதோ அங்கயற்கணம்மை யருளினால் நமது கண்மணிக்கு யாதொரு குறைவுமில்லை. இப்படி யிருப்ப, அவனேன் தூரியதேசங்கட்குப் போதல்வேண்டும்? நமது ஒரே குழந்தை யருமந்த சிதாநந்தனை யனுப்பிவிட்டு எவ்வணமாற்றி யிருப்போம்?

சிதாநந்தனுஞ் சத்தியப்பிரியனும் வருகின்றார்கள்.

இதோ நம் சிதாநந்தனுஞ் சத்தியப்பிரியனும் வருகின்றார்கள். எப்படியாவது அவனுக்கு நற்புத்தி நவின்று நிறுத்தியே விடல்வேண்டும். என்னருமைச் செல்வமே! சிதாநந்தா! இப்படிவருதி!

சிதாநந்தன்:—(சுகேச னருகிற்சென்று) எந்தாய்! சரணம்!

(வணங்குகின்றான்)

சுகேசன்:—என்கண்ணே! சிதாநந்தா! இப்பாண்டிநாட்டின் சிங்காதநத்தின் கண் வீற்றிருந்து நீடூழிகாலஞ் செங்கோல் செலுத்துக!

சிதாநந்தன்:—(ஆநந்தவல்லி யருகிற்சென்று) அம்மா! நமஸ்காரம்!

(வணங்குகின்றான்.)

ஆநந்தவல்லி:—(தழுவிமுத்தமிட்டு) என் சிதாநந்தச் செல்வமே! நீ யின்புற்று இனிதுவாழ்க!—என் பிள்ளைக்கலி தீர்க்கவந்த பேரரசே! இப்படி யிருப்பாய்! (சத்தியப்பிரியனை நோக்கி) சத்தியப்பிரியா! அப்படி யுட்காருவாய்! நிற்பானேன்?

(சிதாநந்தன் தன்பெற்றோர்நடுவணிருத்தலும் சத்தியப்பிரியன் ஓராதனத் திருக்கின்றான்.)

சுகேசன்:— (சத்தியப்பிரியனிடம் மெதுவாய்) சத்தியப்பிரியா! என்னசமாசாரம்? சிதாநந்தன் மனமேதாவது திரும்பிற்றோ?

சத்தியப்பிரியன்:—மகாராஜா! எள்வள வியம்பியும் பயன்படவில்லை. யான் சொல்லுவனவற்றை யெல்லாம் நியாயவாதங்களான் மறுத்துத் தாம் அநேககாரணங்களை யெடுத்துக்காட்டி யென்மனத்தையுந் தம்பக்கந் திருப்பிக்கொள்கின்றனரே!—

சிதாநந்தன்:—என்னருமைத் தந்தையே! யான்போய் வருவதன்கண் என்ன தீங்குக ளிருக்கின்றன? தாங்களே னிவ்வாறெல்லாஞ் சிந்தாகுல மெய்தல்வேண்டும்? தங்களது சமானமற்ற புத்திக்கெட்டாதன என்னசொல்லப் போகின்றேன்?— (பாடுகின்றான்.)

தேசங்க டோறு நேசங்கொ டேகலாற்
பெறப்படு நற்பயன் சிறப்பொடு கேண்மின்.
புற்பனு டுகளின் பொற்புறு செவ்வியு
மியல்புந் திருத்தமு மியம்பருந் தொழில்களு
மேற்றமுந் தாழ்வு மாற்றருஞ் செல்வமுங்
குடிகளின் றன்மையுங் கோலின் செம்மையுங்
கடிமனை யியற்கையுங் காவலர் பண்புங்
கல்விச் சாலையின் கவின்பெறு மொழுங்கு
மல்வள ராவண வண்மையுந் தருமஞ்
செய்யு நேர்மையுந் தையலார் கோலமுங்
கழகத் தாடவர் பழகுபடை முறையும்
பிறமொழித் தோற்றமும் பிறவுமறிந் தவற்றிற்
கேற்ற வண்ண மினியதந் நாட்டையு
மாற்றிச் சீர்செய்தன் மற்றதன் பயனும்.
குடிகட் குற்றவை கோனுக் குற்றவை.
அடிகளே யதனை யறிதல் வேண்டுமே. (26)
அன்றியும்,
"வைய மின்புறின் மன்ன னின்புறும்
வெய்ய தொன்றுறிற் றானும் வெய்துறுஞ்
செய்ய கோலினாய் செப்ப லாவதன்
றைய தாரினா யருளின் வண்ணமே." (27)
"கோனிலை திரிந்திடிற் கோணிலை திரியுங்
கோணிலை திரிந்திடின் மாரிவறங் கூரு
மாரிவறங் கூரின் மன்னுயி ரில்லை
மன்னுயி ரெல்லா மண்ணாள் வேந்தன்
றன்னுயி ரென்னுந் தகுதியின் றாகும்." (28)
ஆதலின்,
எவருஞ் சுகமுற வினிதர சாள்வதே
யவனி யதிபர்க் கமைந்தநல் லறமாம்.
இச்சிறு நாட்டினை யிருந்திடி னுலகினை
யெச்சம யத்தோ வெளியனே னுணர்தல்?
இப்பரு வத்தே செப்பரு நாடெலா
மறியா விடிற்பின் னறியுமா றெவனோ?
காற்றுள போதே தூற்றிக் கோடல்
வேண்டுமென் றியாவரும் விளங்க வுரைப்பா
ராண்டகை மன்னவர்க் கரியே கேண்மினே. (29)

* கோலின் செம்மை = அரசாட்சியின் நேர்மை.
† அடிகள் ; பெரியோரைக் குறிப்பதோர் உயர்வு கருதிய சொல். ஈண்டு தந்தையைக் குறித்தது. "அடிகண் முன்னர்யானடி வீழ்ந்தேன்" சிலப்பதிகாரம்.
§ சூளாமணி. ‡ மணிமேகலை.

§ "ஊற்றுநீர்க் கூவ லுளுறையு மீனனார்
வேற்றுநாட் டகன்சுவை விடுத்தன் மேயினார்." (30)

எனப்பெரியாரும் அங்ஙனந் தேசசஞ்சாரஞ் செய்யாமையி னிழிவினைப் புலப்படுத்தி யிருக்கின்றனர். ஆகலிற் றந்தையே! தாங்கள் சுகமா யிருந்து இராச்சிய பரிபாலனஞ் செய்துவரும்போதே சிறியே னிவ்விள வயதிலேயே வெளிநாடு நகரங்களை யெல்லாம் பார்த்து ஆங்காங்குள்ள விசேடங்களை யறிந்து வாராவிடிற் பின்னர் யான் இராச்சியபாரம் பூண்டு அரசாட்சி செய்யும்போதோ பார்த்தலியலும்? இவற்றையெல் லாம் ஆலோசித்தே யான் தேசசஞ்சாரஞ் செய்தல்வேண்டு மென்பது.

சத்தியப்பிரியன்:—மகாராஜா! அவ்வாறு செல்வதிற் கேடொன்று மிராது போலும்! நமது இளவரசருக்குத் துணைவனாக யானுங் கூடவே போய் வருகின்றேன்.

சுகேசன்:—சத்தியப்பிரியா! நீ சொல்லுவ துண்மையே யாயினும் பலவிதத் துன்பங்க ளிருக்கின்றனவே! நமக்கு நேர் விரோதியா யிருப்பவன் சோ ணாட்டரசன் சயதுங்கன். அவனோ மகாசுத்தவீரன். மல்லயுத்தத்தில் வீமசேனனென்றே சொல்லலாம். அவனது நாட்டிற்குட் பாண்டி நாட்டுப் பறவையும் பறக்கப்படாது. அவனது உத்தரவின்றி அவன் தேசத்தினுட் பகைநாட்டா ரெவருஞ்செல்ல நேரிடுமாயின் அவன் அவர்களை மல்லயுத்தத்திற் கழைப்பான். அதுவுமன்றி அவனுக்கு வெகு நாளாய் நம்முடைய நாட்டின்மீதே கண். நமது சிதாநந்தன் தேச சஞ் சாரஞ் செய்வதை யவன் அறிந்தனனாயின் எவ்விதத்தினும் இவனைத் தொலைப்பதற்கு வழிபார்ப்பான். இவற்றை யெல்லாம் அறிந்திருந்தும் நீ சிதாநந்தனோடு சேர்ந்து கொண்டு அவன்போகும் வண்ணமே பேசுவ தழகன்று. எப்படியாயினுஞ் சிதாநந்தனை யிவ்விடத்திலேயே நிறுத் திவிடும் வழியைப்பார்:— (பாடுகின்றான்.)

விளங்குமறி வுற்றாய்க்கு விளம்புகிற்ப துண்டுகொலோ?
இளங்கன்று பயமறியா தென்றுரைத்த லுணர்கிலையோ? (31)

சிதாநந்தன்:—என்னருமைத் தந்தையே! நீங்களேன் இவ்வாறு கொன்னே கவற்சி யுறுகின்றீர்கள்? அரசமரபிற் பிறந்தவர்களும் பிறர்க்கஞ்சுவார் களோ? (பாடுகின்றான்.)

---

§ சீவகசிந்தாமணி.

பாட்டு 30 ஊறுகின்ற புனல்நிறைந்த கிணற்றினுள்வாழு மீன் போன்றார் பிற நாடுகளின் காட்சியாற் போதருமின்ப மிழந்தவராயினார். "கிணற் றுத்தவளைக்கு நாட்டு வளப்பமேன்" என்பதனையு நோக்குக.

* "தீங்கரும் பீன்ற திரள்கா லூளையலரி
தேங்கமழ் நாற்ற மிழந்தா அங்—கோங்கு
முயர்குடி யுட்பிறப்பி னென்னும் பெயர்பொறிக்கும்
பேராண்மை யில்லாக் கடை." (32)

மகாசுத்த வீரராகிய தங்களுக்குப் பிறந்த யானே இவ்வற்பனுய சோணு ட்டாசற்குப் பயப்படுவது? இவனைப்போ லாயிரம் அரசர்கள் வந்தபோ திலும் யுத்தத்தி லொருகாலும் பின்வாங்கேன்! இன்னணம் வேற்றரசர் கட் கஞ்சி நடப்பின் என்றுதான் நமது இராச்சியம் முன்னுக்கு வரும்?- மேலுங்காண்மின்! இதற்கு முன்னு மெத்துணையோ சோழராசர்கள் நமக்கு விரோதிகளாயிருந்திருக்கின்றனர்! † அவ்வக்காலங்களி லெல் லாம் நம் ஆலவாய்ப் பெருமான் பல்வேறுருக்கொண்டு மகாற்புதமான திருவிளையாடல்கள் செய்து நம்மைப்புரந்தருளி யிருக்கின்றார்! அது போலவே யிப்பொழுதுங் காத்தருளுவாரென்று நினைப்பதற்கு ஐயமு முண்டுகொல்? அன்றியும் பற்பல தேசங்களிற் சஞ்சரித்து ஆங்காங்கு ள்ள சுபாவங்களை யறிந்தவர்களலரோ தமது சிறிய இராச்சியங்களையுஞ் சீர்திருத்தி வித்தாரப்படுத்திப் பெரிய சக்கிரவர்த்திக ளாயினார்கள்? அங்ஙனமிருப்ப, யாமிச்சிற்றரசர்களுக்கு அஞ்சி நடப்போமாயின் எப் பொழுதும் அடிமையரசர்களாகவுங் குறுநிலமன்னர்களாகவுந்தா மிரு த்தல்வேண்டும்;—ஆதலின், எந்தாய்! ஒன்றுக்கும் நீங்கள் அஞ்சல்வேண் டாம் எதனையுங் குறித்துயோசித்தல் வேண்டாம். ஈசனருளா லொரு வகையிடருமெனக்கு நேரிடாது! ஆகவே, எனக்கு இப்பொழுதே தேச சஞ்சாரஞ் செய்ய வுத்தரந் தந்தருளுவீர்!— (பணிகின்றான்.)

சுகேசன்:—என்கண்ணே! சிதாநந்தா! நின்புத்திக்கும் வீரத்திற்கும் யான் நின்னை மெச்சுகின்றேன். நீ சக்கிரவர்த்தியாய் வருவதை யானென்று பார்க்கப் போகின்றேனோ? உன் சௌரியத்திற்குந் தைரியத்திற்கும் இம்மூவுலகங்களும் போதா!— எல்லாவற்றிற்கும் மந்திரி சந்மதிக்கு ஆளனுப்பி யிருக்கின்றேன். அவரும் வரட்டும்.

சந்மதி வருகின்றார்.

மந்திரியும் இதோ வந்துவிட்டார்! அவர் சொல்லுவனவற்றையுங் கேட்டு யோசித்து நடத்துவோம்.

---

* நாலடியார்.

பாட்டு 32 இனிய கரும்பினுதித்துந் திரண்ட தாளுடைத்தாயுங் குதிரையின் பிடர் மயிர்போல விரிந்து விளங்கியுங் கொழுத்தாடை யினியநறு நாற்ற மில்லாததாதல் போல், மேன்மேலு மோங்கி வளரு நற்குடிப் பிறந்து வைத்தும் ஒருவன்றன் சீர்த்தியினைச் செய்யுட்களிலும் சிலை களிலுந் தீட்டற்குக் கருவியாய மிக்க ஆண்டன்மை யில்லானாயின் அவன்றன் உயர்குடிப் பிறப்பினாற் போந்தபயன் யாதுகொல்?

**அவ்வக்காலங்கள்:**—சுந்தரேச பாதசேகர பாண்டியன், வரங்கிய சேகர பாண்டியன் முதலாயினோர் காலங்கள்.

சந்மதி:—மகாராஜா அவர்களுக்கு அடியேன் மந்திரி சந்மதி வந்தனம்! (இளவரசரை நோக்கி) இளவரசரே! தமக்கு என்றும் வெற்றியுண்டாகுக.

சுகேசன்:— வம்மின் சந்மதியாரே! இங்ஙன மிருமின். நமது குமாரன் சிதாநந்தன் தேச சஞ்சாரஞ் செய்தல்வேண்டுமென்று பிடிவாதஞ் செய்கின்றனனே! அதனைப்பற்றி நுந்தங் கருத்து யாதுகொல்?

சந்மதி:—ஆம். மகாராஜா! நமது இளவரசர் சிதாநந்தருக்கு இவ்வவா விருப்பது எனக்கு வெகுநாளாய்த் தெரியும். நேற்றை ஞான்றினும் அவர் என்னிடம் போந்து தங்கள்பாற் கழறித் தம்மையுந் தமது ஆன்மநேசர் சத்தியப்பிரியரையும் அனுப்புமாறு கேட்டனர். அங்ஙனம் அவரோ விரும்பும்போது நாம் தடுப்பது அநுசிதம்! அவரோ நல்ல கல்விமான்; சுத்தவீரர்; நீதிகளை யுணர்ந்தவர்; அறிவே யின்பமென்பவர். அவரறியாதது முண்டுகொலோ? மற்று அவரது ஆன்மநேசர் சத்தியப்பிரியரும் நம்மிளவரசருக்கு எவ்விதத்தினு மேற்ற தோழர். ஆகவே யாமிவ்விருவர்களையும் அனுப்புவதைக் குறித்து எள்ளளவும் யோசித்தல் வேண்டியதில்லை.

சுகேசன்:— அவ்வாறாயின் இவ்விருவரையுஞ் சோணாடுதவிர மற்றை நாடுகளுக்குத் செல்லுமாறு சொல்லுவோம். (சிதாநந்தனைநோக்கி) என்னருமைமகனே! சிதாநந்தா! நீ சோணாட்டுக்கு மாத்திரம் போகாமல் வேறு நாடுகளுக்குப்போய் அவற்றையெல்லாம் பார்த்தபிறகு கூடிய சீக்கிரத்திற் றிரும்பிவிடல் வேண்டும், இஃதொன்றுதான் யானுன்னைக் கேட்டுக்கொள்வது. மற்றைப்படி நீ தேச சஞ்சாரஞ் செய்வதி லெனக்கோராட்சேபனையுமில்லை.

சத்தியப்பிரியன்:—ஆ! அப்படியே செய்கின்றோம். தாங்கள் கூறியசொல்லை மீறி நடப்போமா?

சிதாநந்தன்:—(களிகூர்ந் தாநந்தவல்லியை நோக்கி) என்னையன்புடன் பெற்று வளர்த்த தாயே! தந்தையும் விடை கொடுத்தார்! இனித் தங்கள் திருவாக்கினால் யாங்களிருவருஞ் சௌக்கியமாய்த் தேச சஞ்சாரஞ் செய்து வர உத்தரவு கொடுத்தருளல் வேண்டும்.— (வணங்குகின்றான்.)

ஆநந்தவல்லி:—(தூக்கி முத்தமிட்டு) அப்பா! குழந்தாய்! சிதாநந்தா! உன் தந்தையார் சொல்லியதற்குமே லொன்றும் யான் சொல்லப் போகின்றதில்லை. ஆயினுமவர் சொன்னதை மறவாதே! சோணாட்டுக்குப் போகாதே! வழியிற் காடுகளிற் பலவிதத் தீயவிலங்குகளிருக்கும். அவற்றையெல்லாஞ் சாக்கிரதையாய்ப் பார்த்துப் பரிகரித்துப் போகவேண்டும். சோணாட்டுக்கு மாத்திரம் போகாதே! வெகு சீக்கிரத்தில் வந்து சேர்க.

**சிதாநந்தன்:**—என்னருமைத்தாயே! தாங்களெனைக்குறித்துங் கவற்சியுறல் வேண்டாம். என்னருமைநேசர் சத்தியப்பிரியருங் கூடவருகின்றார். யான் வெகு சாக்கிரதையாய்த் தேசசஞ்சாரஞ் செய்து விட்டு வந்து சேருவேன். (மீட்டும் வணங்குகின்றான்.)

**ஆநந்தவல்லி:**—(வாரியணைத்து முத்தமிட்டு) ஆ! என் கண்மணி! எப்படி யான் உன்னைப் பிரிந்திருப்பேன். சுகமாய்ப் போய் வருக. (சத்தியப் பிரியனை நோக்கி) சீக்கிரம் போய் வந்து விடுங்கள்.

**சத்தியப்பிரியன்:**—ஆ! அங்ஙனமே செய்கின்றோம்.

**சிதாநந்தன்:**—ஐயா! சந்மதியவர்களே! தங்கள் நன்மதியை யெதிர்பார்க்கின்றேன்.

**சந்மதி:**—இளவரசே!

*"தந்தைசொன் மிக்க மந்திர மில்லை." (33)

என்ற தமிழ் மூதாட்டியின் நல்லுரையை மறவாதீர்! இது தான் யான் சொல்வது.

**சிதாநந்தன்:**—அவ்வண்ணமே செய்கின்றேன்.

(சிதாநந்தன் தந்தைபாற்சென்று மீட்டும் வணங்குகின்றான். அவர் தழுவி முத்தமிடுகின்றார்.)

**சுகேசன்:**—நம் சொக்கலிங்கப் பெருமானுமக்குத் துணைபுரிவாராக. (சத்தியப் பிரியனை நோக்கி) சத்தியப்பிரியா! சிதாநந்தனை வெகு சாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள். நீதானவனுக் குற்றதுணைவன்.

**சத்தியப்பிரியன்:**—அப்படியே.

(சிதாநந்தனுஞ் சத்தியப்பிரியனும் யாவரையும் வணங்கிச் செல்லுகின்றனர்.)

முதலங்கம் முற்றிற்று.

* கொன்றைவேந்தன்.

# அங்கம்—௨.

## முதற்களம்.

இடம்: காஞ்சியிற் சோழனரண்மனை.
காலம்: பிற்பகல்.
பாத்திரங்கள்: சுகசரீரன், சோமதத்தன்.

சுகசரீரன்:—(தனக்குள்) இறைவனருளினலெல்லாம் முடிந்தன! இனிமேல் நமக்கென்னகுறை? நினைத்தனவெல்லாங் கைகூடிவிடும். ஆயினுந் தாமதஞ் செய்யக்கூடாது. இப்பொழுதே நமதெண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளவேண்டும். இதற்காகவன்றோ மனோமோகினிக்கும் மகாராசாவுக்குஞ் சிநேக முண்டாக்கிவைத்தோம். மகாராசாவும் மனோமோகினியின் வலையிலகப்பட்டிருக்கின்றார். எப்படியாயினும் அவளைக்கொண்டு கலாவதியை மணந்தாற்றான் நாம் நினைத்தபடி யிராச்சியத்தைப் பெறலாம்.—

(பாடுகின்றான்.)

சிலாதரன் மாநீ ழற்கட் சிவபிரா னருளி னாலே
நலாதவ குலங்க வின்ற நங்கையர் திலக மான
கலாவதி தன்னை நந்தங் காதலி யாகப் பெற்றா
லுலாவருஞ் சோழ ராச வுயர்பத நமதே யன்றோ? (34)

அவளும் நமக்கு எப்படியாவது கலாவதியை மணம்புரிவிப்பதாக வாக்குத் தத்தஞ் செய்திருக்கின்றனள். மகாராசாவும் மனோமோகினியின் வலையில் வீழ்ந்ததுமுதல் நம்மிடத்து அதிகமான பிரியம் பாராட்டி நடந்து வருகின்றார். எவ்வாறேனும் நமதெண்ணத்தை யித்தருணத்தில் முடித்து விடவேண்டும்.

குலாந்தகன் வருகின்றான்.

ஓகோ! நமது மந்திரியார் மேதாநிதியின் மகன் குலாந்தக னிதோவருகின்றான். இவன் என்னவோ சிலநாளாய் மகாராசாவின் அரண்மனைக்கு அடிக்கடி வருவதும் போவதுமா யிருக்கின்றான். நாம் அன்று கேள்விப்பட்டபடியே யொருவேளை யிவனும் நம்மைப்போலக் கலாவதியை மணந்துகொள்ள இச்சை கொண்டிருந்தாலு மிருக்கக்கூடும். (சோமதத்தனை நோக்கி) ஏ! சோமதத்தா! யான் சொன்னபடியே அம்மா அவர்களிடத்திலே சொல்லி வந்தனையா?

சோமதத்தன்:—தாங்கள் சொல்லுகிறதற்குந் தடையுண்டா? சாமீ! எல்லாம் அப்படியே செய்துவிட்டேன். மற்றைப்படி யென்னைப்பற்றிக் கொஞ்சம் அம்மா அவர்களிடத்திலே சொல்லி வைக்கவேண்டும். இந்தச் சமயத்திலே யென்னைக்கைசோரவிடக்கூடாது. எசமான்களே! நான் ஏழை! என்னைப்பார்த்துக்கொள்ள வேண்டும்.

---

பாட்டு 34 சிலாதரன் = சிவபிரான்; மலையை (வில்லாகத்) தரித்தவன். நலாதவ குலங்கவின்ற = நல்ல சூரிய குலத்திற் கழகு செய்யும்.

சுகசரீரன்:—அதற்கென்னேடா! என்தயவு இருக்கும்பொழுது உனக்கென்னேடா குறை?

சோமதத்தன்:—அதுதான் சாமி வேண்டியது.

குலாந்தகன்:—(சமீபத்தில்வந்து) ஏன் ஐயா சுகசரீரரே! நமது மகாராசா வெளியி லெங்கேயோ போகப்போகின்றாராமே. அஃதென்னை நிச்சயந் தானா? ஐயா! நீர் நமக்கு இவ்வளவு சிநேகராயிருந்து மொன்றுஞ் செய்கின்றதில்லையே!—

சுகசரீரன்:—என்னையா செய்யவில்லை? நமது சுபாவ முமக்கு இன்னுந் தெரியவில்லை. பார்த்தீரா? நம்முடைய மகாராசா சயதுங்கரவர்கள் விருப்பத்தின்படியே யெல்லாக் காரியங்களையும் வெகு எளிதாக முடித்துவிட்டேனே!

விகடவசநன் வருகின்றான்.

விகடவசநன்:—(புன்னகைசெய்துகொண்டு) எந்தக்காரியத்தை ஐயா? காவலனைக் கண்ணிழக்கும்படி செய்த காரியத்தையா?

சுகசரீரன்:—எந்தக்காரியத்தையையா?

விகடவசநன்:—அதுதான் ஐயா! அந்த (தலையை யாட்டிக்கொண்டு)—மகாராஜா அவர்கள் காரியத்தைத்தான்!

சுகசரீரன்:—எப்படி யெப்படி? கண்ணிழக்கச்செய்த காரியமா? அதென்னையா? யான் இராசத்துரோகியோ?

விகடவசநன்:—அதற்கு மையமுண்டோ? நீர்செய்த காரிய முமக்கே தெரியாவிடிற் பின்னர் யாவர்க்குத்தான் றெறியும்? காமக் கடல்வீழ்ந்தார் கண்ணிழந்தா ரல்லரோ?

குலாந்தகன்:—(தனக்குள்) இவனென்ன! நான் எப்பொழுது எங்கே யிரகசியம் பேசப்போனாலும் வந்துவிடுகின்றான்! (விகடவசநனை நோக்கி) இங்கே யார் ஐயா உம்மை வரச் சொன்னவர்?

விகடவசநன்:—எப்பொழுதையா அரண்மனைக்கு அதிகாரியாயினீர்?

குலாந்தகன்:—என்ன? யான் அரண்மனைக்கு அதிகாரியாக மாட்டேனென்று நினைத்தீரோ? அரண்மனைக்கு அதிகாரியுமாவேன்! அரசன் மகளையு மணப்பேன்! அரசனுமாவேன்!

சுகசரீரன்:—(தனக்குள்) ஓகோ! அந்த எண்ணமும் வைத்திருக்கின்றாயோ?—நாம் நினைத்தது சரியாய்விட்டது!—ஹும்! நமக்கு மநோமோகினியினுடைய தயவிருக்கிற வரைக்கும் இவன் கலாவதியை மணந்து கொள்வதைப் பார்ப்போம்.

விகடவசநன்:—குலாந்தகரே! இது நல்லயோசனை! கலாவதியு மிணங்குவாள். நீரும் மணப்பீர்!

**சோமதத்தன்:**—ஏன் சாமி! அவர்களுக்கென்ன? மந்திரி மகனுக்கு மகாராசா மகளைக் கட்டிக்கொடுக்க மாட்டாரா?

**குலாந்தகன்:**—(களிப்புடன்) ஹூம்! அப்படிச் சொல்லப்பா! நீ தானுண்மையை யறிந்தவன்! இவனுக்கென்ன தெரியும்?

**சுகசரீரன்:**—(தனக்குள்) சரிதான். மகாராசா ஒரு வேளை யவ்வாறு யோசனை செய்திருந்தாலுஞ் செய்திருப்பார். ஆயினும் அவ்ரின்னு மொருமுடி விற்கும் வந்திருக்கமாட்டார். அப்படி யவர் வருகிறதற்கு முன்னே நான் மநோமோகினியினிடஞ் சென்று கலாவதியைப் பெறுமாறு தக்க முயற்சி செய்யவேண்டும்.

**விகடவசநன்:**—(சுகசரீரனை யுற்றுநோக்கி) என்னையா சுகசரீரரே! உமக்குள்ளே யேதோ யோசனைசெய்து கொண்டிருக்கின்றீர் போலும்! உமக்குக் கலாவதியை மணந்து கொள்ள யோசனையில்லையா? நம் குலாந்தகர் யோசனை செய்து விட்டனரே! (சுகசரீரன் முகஞ்சிவக்கின்றான்.)

**குலாந்தகன்:**—ஹ! ஹ! ஹ! என்னையா விதூடகரே! பரிகாசம் பண்ணுகின்றீர்! பாவம்! இவருக்கு வயது நாற்பதாய் விட்டதே! மகாராசா இவருக்குப் பெண்ணைக்கொடுக்க இணங்குவாரா? அப்படியவர் தாமிணங்கினுலுங் கலாவதிதா னிணங்குவாளா? (சுகசரீரன் முகம் வெளுக்கின்றான்.)

**விகடவசநன்:**—ஐயா! குலாந்தகரே! நம்முடைய சுகசரீரர் முகஞ்சிவக்க வெளுக்க நாமிப்படிப் பெசுதல் நியாயமன்று.

**சுகசரீரன்:**—ஏடா! சோமதத்தா! கையிலென்ன? முத்து மாலையோ?

**சோமதத்தன்:**—ஆமாஞ்சாமி. அம்மா அவர்களிந்த முத்துமாலையை யெனக்கே கொடுத்து விட்டார்கள்.

**குலாந்தகன்:**—ஐயா! சுகசரீரரே! உமக்கு அம்மா அவர்களே தேனும்வெகுமதி யின்னுங் கொடுக்கவில்லையோ?

**விகடவசநன்:**—அதைத்தா னெதிர்பார்த்துக்கொண் டிருக்கின்றனர். அவ் வெகுமதி அவர்க்குக் கிடைத்துவிட்டதோ நம்முடைய குலாந்தகர்பாடு அந்தரந்தான்!

**சோமதத்தன்:**—பொழுதுபோகிறது. நான் போய்வருகிறேன் சாமீ!

**சுகசரீரன்:**—சரிதான். போ. (சோமதத்தன் போகின்றான்.)

**குலாந்தகன்:**—ஏனையா விதூடகரே! அவர்க்கு வெகுமதி கிடைத்தால் என் பாடெப்படி யந்தரமாகும்? கலாவதி யெனக்கு கிடைக்கமாட்டாளா? என்ன நான்தான் மந்திரிமகனுயிருக்கின்றேன்! வெகுபுத்திசாலி! மிகவும்அழகுடையவன்! எனக்கென்னையா குறைவு? நிச்சயமாய் கலாவதி யெனக்கே மனைவியாகப் போகின்றாள்! பாருமே!

**சுகசரீரன்:**—ஐயா! விதூடகரே! எனக்குக்கொஞ்சம் விடைகொடுக்கவேண்டும்.

**விகடவசநன்:**—நீவிர் நம்மை வினவியதென்னை? அதற்கியாம் என்னை விடை கொடுத்திலம்?

**சுகசரீரன்:**—யாமொன்று மும்மை வினவவில்லை. வீட்டிற்குப் போகவேண்டு மென்று தான் சொன்னேன்.

**விகடவசநன்:**—ஐயோ! பாவம்! இவ்வளவிளவயதிலேயோ? சீ! சீ! அப்படிச் சொல்லாதீர்! இன்னுங் கொஞ்சகாலமிருந்து கலாவதியின் சுகத்தையு மிந்தச் சரீரத்திற்குக் கொடுத்ததன் பிறகு போகலாம்!

(விகடவசநன் சுகசரீரனைப் பிடித்துக்கொண்டு அவன் வயிற்றைத் தடவுகின்றான்.)

**சுகசரீரன்:**—உம்மிடம் வந்தால் என்று மிப்படிப்ரசங்கந்தானே! இனித் தாமதிக்க மாட்டேன். அவசியம் போகவேண்டும். ஆத்தான மண்டபத்தில் யாவருங் காத்துக்கொண்டிருப்பார்கள். (சுகசரீரன் போகின்றான்.)

**குலாந்தகன்:**—ஏன்? விதூடகரே! கலாவதியின் சுகமென்றீரே! அஃதெப்படி யிவனுக்குக் கிடைக்கும்?

**விகடவசநன்:**—ஹா! ஹா! ஹா! இவ்வளவுதானா?—நீ யொரு பெரிய மூடன்! இந்தச் சுகசரீரனுக்குக் கிளிப்புலான்மீது பெரிதும் விருப்பமுண்டு. ஆகையினாலே தான் இவன் கலாவதியினுடைய 'சுகத்தையுந் தின்பா னென்றேன். இதை நீ யறிந்திலையே! நீதானா கலாவதியை மணந்து சுகிக்கப்போகின்றாய்! அவளிந்தமாதிரி யெவ்வளவோ இரண்டு மூன்று பொருள்படப் பேசுவாளே! அப்பொழுது நீ விழிக்கவேண்டி வருமே!

**குலாந்தகன்:**—அப்படியானால் யானதற்கென்ன செய்யலாம்? ஏன் விதூடகரே!

**விகடவசநன்:**—யானொன்று சொல்லுகின்றேன். அதனைக் கவனமாய்க்கேட்டுக் கொள். நீ யக்கலாவதியினிடஞ்சென்று அவளைவணங்கிச் சாதுரியமாகப் பேசக் கற்றுக்கொடுக்கும்படி வேண்டிக்கொள்! இதுசெய்தி, சுக சரீரனுக்குத் தெரியவேண்டாம்! தெரிந்தால் அவன் முன்னாக் கற்றுக் கொண்டு விடுவான். பார்த்துக்கொள்.

**குலாந்தகன்:**—ஐயா! விகடவசநரே! நீர் சொல்லிக்கொடுத்த யுத்திக்காக உமக்குக் கோடி நமஸ்காரம். யான் நீர் சொல்லியவண்ணமே செய்கின் றேன். யான் போகட்டுமா?

**விகடவசநன்:**—நமபுரத்திற்குத்தானே?

**குலாந்தகன்:**—எங்கே விதூடகரே?

**விகடவசநன்:**—நம்மபுரத்திற்குத்தானே யென்றேன்.

**குலாந்தகன்:**—ஆமாம். நமபுரத்திற்குத்தான்.

(குலாந்தகன் போகின்றான்.)

**விகடவசநன்:**—(தனக்குள்)ஐயோ!பாவமே! இத்தகையமூடரு முலகிலுளரோ? காதுகேளாக் கண்ணிலான் நாடகம் பார்க்க விரும்பியாங்கு இவனும்

மகாராஜாவின் மகளை மணக்க விரும்புகின்றனனே! கல்வியிற்சிறந்த கலாவதியோ இப்பேதையை மணப்பாள்? (பாடுகின்றான்.)

கலாவதிப்பேர்க் கன்னிகையைக் கைப்பிடித்துக் கொள்ளக்
குலாந்தகன்ற னெஞ்சிற் குறித்த—னிலாவுகொம்புத்
தேனைமுடஞ் சான்ற சிறுவன் பெறுகிற்பா
னானமதி யாலுனல்போ லும். (35)

நமக்கென்ன? போய் அவமானப்படட்டும். மகாராஜா வருமுன் ஆஸ்தானமண்டபம் போய்ச் சேரவேண்டும்.

(விகடவசநன் போகின்றான்.)

---

## இரண்டாங்களம்.

இடம்: காஞ்சியிற் சோழனரண்மனையிலாத்தாந மண்டபம்.
காலம்: பிற்பகல்.
பாத்திரங்கள்: மேதாநிதி, சுகசரீரன், குலாந்தகன், விகடவசநன், ஆத்தானிகர்கள், கனவான்கள், மற்றையோர்.

மேதாநிதி:—எடா! குலாந்தகா! என்னேடா வுன்செயலொன்றும் நன்றாயிருக்கவில்லையே! நீ தீயர்குழாத்து ளொருவனெனக் கேள்வியுறுகின்றேனே!

குலாந்தகன்:—யான் சுகசரீரரைத் தவிர்த்து வேறெவரோடுஞ் சேர்கின்றதில்லையே.

விகடவசநன்:—ஐயா! குலாந்தகரே! நுமக்கேற்ற நண்பர் சுகசரீரர்! அவருக்கேற்ற நண்பர் நீர்! ஆனால் அவர் சரீரத்திற்குள்ளே சுகமுண்டு. உம்முடைய சரீரத்திலோ அஃதில்லை.

மேதாநிதி:—ஐயா! விகடவசநரே! அவ்வீணனுக்கு என்ன வுரைத்து மென்? சுத்தப் பேதையாயிருக்கின்றான்! அவனோடென்ன? விட்டுத்தள்ளும்.

சுகசரீரன்:—ஏ! விகடவசநரே! நன்றாய்ச்சொன்னீர்! எனக்குள்ள சுகம் யாவருக்குளது? என் பெயரையே பாரும்மே!

விகடவசநன்:—ஐயா! சுகசரீரரே! நுமக்குப்பெயரிட்டவர் முன்பின் ஆலோசனை செய்தே வைத்திருக்கின்றனர்! நுந்தமக்கு எத்தனையோ * கொம்புகளிற் சுகம் அகப்பட்டிருக்கின்றன! இன்னு மகப்படும்! மற்றைப்படி மேதாநிதியாரே! இந்தச் சுகசரீரரைப்பற்றி யெனக்கு வெகு நாளாய்த் தெரியும். (பாடுகின்றான்.)

யார்க்குமிப் பெரியர் பார்க்கப பூனையைப்
போலிருந் தாலுஞ் சிலமார் சுகத்தை
நாடுகிற் பதினும் பிடுசால் பூசையைப்
போன்றவ ரென்றே யான்றோ ருரைப்பார்!

---

பாட்டு 35 கைப்பிடித்துக் கொள்ளல்=மணந்து கொள்ளல். "முடவனுக்குக் கொம்புத் தேன் கிட்டுமோ?" என்ற பழமொழியையுங் காண்க.

* கொம்புகளிற் சுகம்=மரக்கிளைகளிலுள்ள கிளிகள்; கொம்புகள் + இல் + சுகம்=இல்லுறை மகளிரின்பம்.

விண்வழி யானே விமல நற்குண
மணிவிளை யிழந்த மாயிருந் துயராற்
பிறனில் விழையா மயங்கி யுழல்பவர்!
மறனுர் தொழில்பல மாண்புறச் செய்தவர்!
அரைசற் குறவென் றுரைசெய் கிற்பவர்!
காமக் கணிகைய ரேமமன் றறியார்!
பூதரத் தினும்பெரும் புந்தி யுடையவர்!
மாதரார் பழிச்சுமன் மதனுறு வடிவினர்!
இவரை மணந்துறு மேந்திழைக் கெய்துந்
தவறரு மின்ப மன்றியுஞ் சாந்த
மொழியுந் தன்மைய ருத்தமச் செல்வரே! (36)

(யாவருங் கைகொட்டி யார்க்கின்றனர்.)

**மேதாநிதி:**—என்ன விகடவசநரே! இன்றைக் கிவ்வளவு தூர மிவரைப்பற்றி?

**விகடவசநன்:**—அப்படி யொன்றுமில்லை. நம்முடைய சுகசரீரப்பிரபு வவர்கள் தம்மைப்பற்றிக் கொஞ்சமிங்கே யிராஜ சதஸிலே பிரஸ்தாபிக்கும்படி கேட்டுக்கொண்டனர். என்கருதிக் கூறினரோ? யானறியேன். தாங்கள் முக்கிய மந்திரி யாயிருக்கின்றீர்கள். (மற்றைய ஆத்தானிகர்களை நோக்கி) தாங்களு மிராஜசதஸியர்கள். நீவிரே கேண்மின். அவர் கேட்டுக்கொண்டபடி அவரைப்பற்றி யெனக்குத் தெரிந்தவற்றைச் சிறிதேனும் மறையாமற் சொல்லி விட்டேன்!—ஐயா! சுகசரீரரே! யான் சொல்லியவற்றுளேதேனு மையமுண்டோ?(யாவரும் நகைக்கின்றார்கள்.)

**மேதாநிதி:**—என்ன? கவனித்துக் கேட்டீரோ சுகசரீரரே! நம் விதூடகர் நும்மைக்குறித்துக் கூறியவற்றை? ஒவ்வோரிடத்திலு மிருபொருள் வைத்திருக்கின்றனரே!

**விகடவசநன்:**—என்னையா தவறு? ஒரு பெரிய பிரபுவவர்களைப்பற்றிச் சொல்லும்போது ஒருபொருள்படக் கூறுவதென்று லதென்மனத்திற்குச் சாந்தமாயிருக்கவில்லை. ஆகையாற்று னிருபொருள்படப் பேசினேன்.

---

பாட்டு 36 விழையா = விழையாமல்; விழைந்து. மறன் = வீரம்; கொலை. ஏமமன்று = இன்பத்தைத் தரும் ஆடரங்கு; இன்பமல்லாமல். இப்பொருட்கு 'அன்றி' யென்பது 'அன்று' என "அன்றியின்றி யென்" என்னு நன்னூற் சூத்திரத்துள் உடம்பொடு புணர்த்தலாற் றிரிந்ததென்க. பூதரம் = மலை. பழிச்சல் = துதித்தல்; பழித்தல். மன் மதன் = காமன்; நிலைபெற்ற மதம். தவறருமின்பம் = தவருதவின்பம்; தவல் + தரும் + இன்பம் = கேடு பயக்கு மின்பம். சாந்த மொழியும் = சாந்தமாப்பேசும்; சாந்த நீங்கிய. உத்தமச்செல்வர் = உயர்ந்த செல்வர்; உவ்விடத்தேயுள்ள தமோ குணச்செல்வர்.

அன்றியு மிவர்தம் உள்ளும் புறமும் வேறுவேறா யிருக்கின்றனவென்று காட்டும்பொருட்டு மிங்ஙனங் கூறினேன்.

மேதாநிதி:—என்ன சுகசரீரரே! அவருமுமைத் தூஷிக்கின்றார்! நீர் சுகமாய்க் கேட்டுக்கொண்டிருக்கின்றீர்!

சுகசரீரன்:—அவராவது என்னைத் தூஷிக்கவாவது! அவர்தா மித்தனை நாழிகையாய் நம்மைப்பற்றி யெவ்வளவோ பிரதாபித் திருக்கின்றார். அப்படியிருக்க நீங்களென்னவோ இப்படிச் சொல்லுகின்றீர்களே!

விகடவசநன்:—ஐயா! சுகசரீரரே! நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள். நீர் தாம் நிஜந்தெரிந்தவர். உம்மைப்பற்றி யான் எவ்வளவு பெருங்கூற்றாய்ச்சிப் பிரலாபித் திருக்கின்றேன். அதனை யறியாமல் இவர்களென்னவோ சொல்லுகின்றார்கள்.

சுகசரீரன்:—உம்மை நம்பியிருந்ததற் கிதுதானோ நீர் செய்வது?

விகடவசநன்:—பின்னென்னையா செய்யவேண்டும்? கெட்டியாய்ப் பிடித்துக் கொள்ளட்டுமா?

(சுகசரீரனைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு அவனிருந்த வாதனத்தைப் பின்னே தள்ளி விடுகிறான். சுகசரீரன் அதையறியாது உட்காரப் போய்த் தவறி வீழவும் யாவரும் நகைக்கின்றார்கள்.)

சுகசரீரன்:—(தட்டித் தடுமாறிக்கொண்டு) ஐயா! இது நல்ல யோக்கியதை! இப்படி யொரு சிநேகரிருந்தால் நமக் கென்னகுறை?

(ஆதனத்தை யிழுத்துக்கொண்டு அதன் கணிருக்கின்றான்.)

விகடவசநன்:—தங்களுக் கென்னையாகுறை? மகாப்பிரபு! மகாராஜபந்து! யான் தங்கள் பக்க லிருந்துகொண்டு *சகுனி சுயோதனற் குதவிபுரிந் தாங்கு புரிகின்றேன். பயப்படாதீர்!

(நேபத்தியத்துள் தூரியம் முழங்குகின்றது.)

மேதாநிதி:—(செவிகொடுத்து) போதும்! போதும்!! நிறுத்து மின் பேச்சை! உள்ளே தூரிய கோஷங் கேட்கின்றது. மகாராசாவவர்கள் இவ்விடம் ஆத்தாந மண்டபத்திற்கு வருகின்றனர்போலும்!

(நேபத்தியத்துட் கவலை! கவலை! யென்றல்)

(யாவருமெழுந்து நிற்க, சயதுங்க மகாராசர் பரிவாரத்துடன் பிரவேசிக்கின்றனர்.)

யாவரும்:—வெல்க! வெல்க!! மன்னர் மன்னவ!

(சபைநடுவேட் சிங்காதநத்தின்மீது சயதுங்கன் வீற்றிருக்க இருபுறத்திலும் தாதியர் சாமரம்வீச மற்றவர்கள் தத்தம் மரியாதைக்குத் தக்கபடியிருக்கின்றார்கள்.)

சயதுங்கன்:—எமது நன்மையைச் சந்ததமும் நாடுஞ்சபை யோர்கள்! தங்களுடைய சுகத்தையும் நலத்தையுஞ் சற்று மெண்ணுமலெந்தமக்கு எக்காலத்தினும் நீதியை வழுவாதோதிய தங்களுக்குச் சமானரான மாந்தர் யாவருளர்? மற்றைப்படி நந்தம் முதன்மந்திரி மேதாநிதியாரது பெருமையை யெடுத்துரைக்க வெம்மாலாகுமோ?

மேதாநிதி:—மகாராசா! அடியேங்கள் செய்வன செய்யவேண்டிய கடமைகளே யன்றி வேறல்ல. (பாடுகின்றான்.)

---

* சகுனி சுயோதனற்குதவி புரிந்தாங்குபுரிதல்=அடுத்துக் கெடுத்தல்.

* "இனிய சொல்லின னீகைய னெண்ணினன்
வினையன் றூயன் விழுமியன் வென்றிய
னினைய நீதி நெறிகட வானெனி
னனைய மன்னற் கழிவு முண்டாங்கொலோ?" (37)

என்பதற்கேற்பத் தம்மைப்போன்ற அறக்கடலாகிய வாசர்களிருப்பின், எம்மைப்போன்ற மந்திரிகட் கென்னகுறை? மற்றைப்படி யின்று சபை கூட்டியதன் காரணமென்னையோ?

சயதுங்கன்:—எமதாரிய சபையோர்காள்! நுந்த முதவியாலெந்தம்வமிசத்திற் கேற்ப ஏதோ இதுகாறும் நமது முன்னோர் நடந்தவண்ணம் எம்மா லியன்ற மட்டும் முறைவழுவாமலும் நீதிதவறாமலும் இச்சோணாட்டைப் பரிபாலித்து வந்தனம். கலிங்கன்மீது வஞ்சிசூடிச்சென்று அவனை வென்று வாகை மிலைந்தனம். மற்றைப்படி யிப்பொழுது யாம் கருதியது தோன்றுளது.

மேதாநிதி:—இராசராசேந்திர! (பாடுகின்றான்.)

† "கண்ணெனப் படுவ மூன்று காவலன் கல்வி காமர்
விண்ணினைச் சூழ வோடும் வெய்ய னென்னும் பேர
வெண்ணினுட் டலைக்கண் வைத்த கண்ணொன் றில்லை யாயின்
மண்ணினுக் கிருளை நீக்கும் வகைபிறி தில்லை மன்னா." (38)

அது போலவே தாங்களும் நீதிக்கு அரசரென்றே யிதுவரையிலும் நிலைத்தீர்கள். இனியுமவ்வாறே நிலைக்கவேண்டும். அதற்குக் கடவுள் கிருபை புரிவாராக.—நங்கையர் சிரோமணி கலாவதியின் குணங்கடா மென்ன? சொல்லவேண்டுமோ? மற்றைப்படி யுரைத்திடலாமோ தங்கள் கருத்தினை?

சயதுங்கன்:—அடியேம் செய்தபாக்கிய மெல்லாந் தங்களநுக்கிரகமே! நெடு நாள்வரைக்கும் மக்களின்றி வருந்தினேம். ஏதோ ஏகாம்பரேசரருளாற் புத்திரனில்லாவிடினும் வனிதாரத்தினமான கலாவதியைப் புதல்வியா யடைந்தேம். மக்களில்லா வருத்தத்தையு மறந்தேம். பூண்டேம் மிச் சோழராச்சியாதிபத்தியம்! ஆண்டேம் அநேகவருட காலம்! கொண் டேம் திக்கெல்லாம் வெற்றி! கண்டேம் சகல சுகங்களும்! இவற்றை யெல்லாஞ் சொல்லுகிற்பதிலென்ன பயன்? எம்முடனே யிவ்வரசும் அற் றன்றோ போய்விடும்?

மேதாநிதி:—(பாடுகின்றான்.)

§ "மண்டிணிந்த நிலனு
நிலனேந்திய விசும்பும்

பாட்டு 38 காவலன், கல்வி, சூரியன் = என்ற மூன்று கண்ணினுள் முதலிலுள் கண்ணாகிய காவலனில்லையேல் மக்களுக்கு இடரொழிவுருணி தலரிது.

* கம்பராமாயணம். † சூளாமணி. § புறநானூறு

விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயுந்
தீமுரணிய நீரு மென்றாங்
கைம்பெரும் பூதத்தியற்கை போலப்
போற்றார்ப் பொறுத்தலுஞ் சூழ்ச்சிய தகலமும்
வலியுந் தெறலு மளியு முடை" யீர்! (39)

ஒழிமினிக்கவற்சி! தமது குலதீபமான நங்கை கலாவதி யிருப்ப, இஃ தென்னை யோசனை?

**சயதுங்கன்:**—எவ்வளவுதா னருமையாய் வளர்த்து வரினும் புத்திரிகள் புத்திரர்களாவார்களா? எத்தனை நாட்கடாம் பெண்கள் பெற்றோரிடத்திலே யிருப்பார்கள்? அவர்களும் வயதுவந்தவுடனே தக்கவரை மணந்து கணவனிடஞ் சேரவேண்டியவர்களல்லரோ? யாமோ எம்மருமைத் தேவியை யிழந்தோம்! ஆதலின் இனி மகனைப்பெறாவிடினும் மருமகனைப் பெறலாமென்று மெண்ணங்கொண்டோம். இனி நமது முன்னோர்கள் பரம்பரையா யாண்டுவந்த ராச்சியத்தை யாராளப்போகின்றனரோ? முழுமதி முகம்படைத்த நமது குழந்தை கலாவதியோ பதினாறு வயது நிரம்பி யுவதியாய் விளங்குகின்றனள். இவளுக்குத்தக்க வரனைத்தேடி மணம்புரிவிக்கவேண்டும். இதன்பொருட்டே யாமிச்சபை கூட்டியது.

**முதல்த்தானிகன்:**—மகாராசா! தமது குழந்தை கலாவதிக்குத் தகுந்த நாயகனைத் தேடவேண்டுமானால் எதாவது வேறு இராசகுலங்களிலேதான் பார்க்கவேண்டும்.

**சயதுங்கன்:**—எமது பிரிய சகசியர்காள்! அத்தன்மையானவர் யாவருளர்?
(பாடுகின்றான்.)

கலிங்கன் கர்வத்தால் மாண்டான்!
சேர னல்வினஞ் சேரான்!
கோசலன் கீழ்மைக் குலத்தான்!
மகதன் மகவிலாக் கிழவன்!
மராடன் மந்தப் புந்தியன்!
கன்னட னன்னடக் கையிலான்! மற்றுப்
பாண்டியன் மாண்டரு மரபினன். ஆயினுந்
தீரா விரோதி!
அவனுக் கொருமக னழகு புத்தி
யாதிய குணனெலா மொருங்கே யமைந்த
வுத்தமப் புருட னுளனென் றுணர்ந்தேம்.
பகைஞன் மகனெம் பரிவுள மருகனாந்
தகைமைய னவனென வெனமனங் கவலுமே. (40)

---

பாட்டு 39 முறை நிரனிறையாப் பொருள் கொள்க.

மேதாநிதி:—இராசசிகாமணீ! முன்னர் யானுரைத்தவண்ணமே பாண்டியன் பகைவனாயினும் அவன் மகனுக்கே நம் குலக்கொடி கலாவதியைக் கொடுத்த லெவ்விதத்தினுமுத்தமமென்று தோன்றுகிறது.

மற்றை யாவரும்:—அதுவே யுத்தமம்! அதுவே யுத்தமம்!!

சயதுங்கன்:—அஃதே யென்யோசனையும்! ஆயினும் நமது குழந்தை கலாவதியி னிஷ்டத்தையும் அநுசரித்துத்தான் ஒருமுடிக்கு வரவேண்டும். சரி. நேரமுமாய்விட்டது.

(சயதுங்கன் போதலும் யாவரும் போகின்றார்கள்.)

---

## மூன்றாங்களம்.

இடம்: காஞ்சியிற் கோட்டையைச் சார்ந்த வயந்தச் சோலை.
காலம்: மாலை.
பாத்திரங்கள்: சிதாநந்தன், சத்தியப்பிரியன்.

சத்தியப்பிரியன்:—அப்பா! சிதாநந்தா! நாம் மதுரையம்பதியை விட்டு புறப் பட்டு இற்றைக்குச் சற்றேறக்குறையப் பதினைந்து நாளாய்விட்டன,

சிதாநந்தன்:—அஃதெங்ஙனம்? நாம் சென்ற இருண்மதிப் பதினான்காநாள் திங்கட்கிழமை யன்றோ புறப்பட்டனம்? இன்று நிறையுவாவன்றோ?

சத்தியப்பிரியன்:—ஆம் மெய்யே! அற்றாயிற் பதினாறு நாளாயின. இன்றைக்குப் பதினேழாநாளாம்.

சிதாநந்தன்:—எந்நாடோ இது? சத்தியப்பிரியா! நீ யிதனை யறிவைகொல்?

சத்தியப்பிரியன்:—ஐயனே! சிதாநந்தா! இஃதென்னை? நாம் வழிபிழைத்து வந்துவிட்டனம் போலும்! நின்றந்தையார் எந்நாட்டிற்குப் போத லொழிக வென்றனரோ அந் நாட்டிற்கே முதற்கட் போந்தனமே!

சிதாநந்தன்:—என்னை? சோணாட்டிற்கோ வந்துவிட்டனமென்று நினைக் கின்றனை? அஃதெப்படி யிருத்தல்கூடும்?

சத்தியப்பிரியன்:—நண்பா! சோணாட்டின் றலைநகர்க்கே வந்துவிட்டனமென் றெண்ணுகின்றேன். இதோ இந்நகரத்தைப் பார்த்தியோ?

(பாடுகின்றான்.)

* கானமர் கூந்தல் வானர மகளி
ரிருந்து நாடொறும் விருந்தாட் டயரு
மாடங்க டோறு மாடுங் கொடிகளைக்
கண்டுதம் மினமென மஞ்ஞைக ளாலலுஞ்

---

* மயக்கவணி.

செண்டு வெளிகளிற் கொட்புற வுலவும்
பாய்மா தன்கடுப் பாய்மாந் தர்மருள
வுகைக்குநன் றன்புறந் தானே காணலாந்
தகைத்தா யோடலுந் தங்கிழல் கறுவிக்
கதங்கொள் களிற்றின மதங்கள் பொழிதலும்
படாருங் கோட்டைத் தடமுற் றந்துழும்
முரசமு முழங்கலும் பிரசப் பாணர்
களியாத் திரிதலுங் கன்னிய ரெல்லா
நளியார் மாடத்து நளிபந் தாடுத
லாடவ ரயனின் றகமகிழ் வுற்று
நாடிக் காணலு நல்லார் வடிக்கண்வே
லோடி யன்னவ ருரத்திற் றைத்தலும்
பாண்டியர் திலக! பரிவுடன் பாராய்!
காண்டகு நகரங் காஞ்சியே யன்றோ?
காஞ்சியா மகழி கவின்பெற வணிந்த
காஞ்சிச் செல்வி காமரு மணப்பெண்
போல விளங்கலைச் சால வுளந்தனிற்
கருதுவே மாயின் விருதும் வென்றியு
முருந்து முறுவலார் திருந்து போகமும்
பொருந்து நினக்கெனப் புகன்றது மானும்.
ஆயினு நன்ப கேண்மோ
போயவ ணிராயேற் புண்ணிய முனக்கே. (41)

---

பாட்டு 41. வரி 5-8. செண்டுவெளி = குதிரைகள் சுழன்று செல்லுமாறியற்றிய வையாளிவீதி. புறநானூற்றில் 174, 220-ஆம் பாட்டுக்களினுரையின்கண், முற்றம் மன்றம் என்ற வீரிடங்களினுஞ் செண்டு வெளியென் றுரையெழுதப்பட் டிருத்தலான் அது வெளியென்பதும், பெரிய புராணத்துக் குதிரைச்செண்டென்று கூறியதற்கேற்ப "வாளுளைப், புரவியிற் பொருவில்செண் டாடிப் போர்க்கலை, தெரிதலின்" எனக் கம்பராமாயணத்தினுங் கூறப்பட்டிருத்தலான் அவ்வெளி, செண்டுவெளி யென்பதும் வெளியாயின. "தீதில்வை யாளி வீதி திகழ்செண்டு வெளியே யென்ப, சாதியாம் புரவி வட்டந் திருமுற்றந் தானு மப்பேர்" என்று சூடாமணி நிகண்டு மிக்கூற்றினை வலியுறுத்து மாறறிக. அன்றியும், "பருமநின் றுகு மணி பால்சொரிவதாப் பகட்டி, னருவி மும்மதம் விலாழிநீ ராவடி மிதித்த, வுருவ வன்மர மிடிப்பதா நிலம்வலி யுறுப்பார், விரவி நின்றவச் சூழலொத் துளசெண்டு வெளிகள்" எனத் தணிகைப்புராண முடையார் கூறுதலையு முற்று நோக்குக. அற்றேற் செண்டு வெளியை வையாளி வெளி யென்றது, வையாளி வீதியென்ற தென்னையெனின், ஔபசாரிக நியாயம்பற்றி யவ்வாறறைந்ததென்க. செண்டு வெளிகளிற் குதிரை யேறிச் செல்வோர் தங்கள் முதுகுகளைத் தாங்களே பார்க்கலாம்படியாகக் குதிரைகள் விரைந்து செல்கின்றன என்பதாம்.

வரி 10-11. மும்முரசம் = மங்கலமுரசம், வெற்றிமுரசம், கொடை

வரி 19. காஞ்சி = எண்கோவை யுள்ள மாதரிடையணி. [முரசம்.

மாடங்களிற் புலியுருத் தீட்டிய கேதனங்கள் விளங்குகின்றன! அதோ பார்! அரண்மனை வாயிலி னுத்திமாலை யணிந்திருக்கின்றது! ஆகையா லிந்நகர் ஜயதுங்கனுளுங் காஞ்சி யென்பதிலையமில்லை. ஆதலினினிமேல் நாமிங்கிருப்பது தகுதியன்று. பொழுதும் போய்விடுகின்றது. சீக்கிரம் வேற்றிடஞ் செல்லுவோம். வருதி. நின்றந்தையார் சொல்லிற்கு முரண்படநடப்பது உசிதமன்று.

சிதாநந்தன்:—அப்பா சத்தியப்பிரியா! (பாடுகின்றான்.)

* "முன்வாயின் முகமெல்லா முத்தடுத்துத் தாமரை வெண்
 முளைகள் பாய்த்தி
மின்வாய மணிக்கலசம் பொற்செந்நெற் கதிர் சூட்டி
 விளங்க வைத்துப்
பொன்வாழை மரகதப்பைங் கமுகொடுதோ ரணம் வாயில்
 புணர நாட்டி
மன்வாயில் வளநகரார் மணிமாலை தொடர்ந்தொலிப்ப
 வகுத்தா ரன்றே." (42)

ஆகவே நமக்கு நன்மையு மங்களமும் விளையுமென்பதற்குத் தடையே யில்லை. அதுவுமன்றியேதோ நாம் நற்செயலா யிங்கு வந்துவிட்டனமே யன்றி வேறன்று. ஆதலின் வீணே திரும்பியேகாமல் இந்நாட்டினை யும் நன்குய்ப் பார்த்தபின்னர் மற்றைநாடுகட்குச் செல்லலாம். மேலும் நாம் க்ஷத்திரியர்களாயிருந்துகொண்டு பயந்து நடத்தல் நியாயமன்று. இன்னும் நந்தந்தையார் கூறிய தென்கருதி? போனல் ஏதேனும் நமக்குத் தீங்குவிளையுமென்றன்றோ? மற்றைப்படி நாம் நமக் குத் தீங்குவாராமற் காத்துக்கொள்ள முடியுமாயிற் சோணாட்டிற்குள் நாமேன் செல்லல் கூடாது?

சத்தியப்பிரியன்:—இளவரசே! நீ சொல்லுவதும் ஒக்குமாயினும் பிதுர்வாக்கிய பரிபாலநம் பண்ணவேண்டாமோ? யாமிவ்விரவு இங்குத்தங்குவோமேல் துன்பங்களேனிடக்கூடுமே? அன்றியும், (பாடுகின்றான்.)

§ "அரச னுவாத்தியான் றாய்தந்தை தம்மு
னிகரில் குரவ ரிவரிவரைத்
தேவரைப் போலத் தொழுதெழுக வென்பதே
யாவருங் கண்ட நெறி" (43)

என்ற ஆன்றோர் வாக்கை மறவற்க.

* சூளாமணி.

§ ஆசாரக்கோவை.

பாட்டு 43. சவலைவெண்பா.

சிதாநந்தன்:—அப்பா! சத்தியப்பிரியா! நீ கூறுமாறு நாம் பிதுர்வாக்கியபரிபாலநம் பண்ணல் வேண்டுமென்பதுதான் நமது முதற்கடமை.

(பாடுகின்றான்.)

† "அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்." (44)

என்று ஔவையார் மொழிந்தாங்கு தந்தையே நமக்குப் பிரத்தியட்சமான தெய்வம். பிதுர்வாக்கியத்தைப் பரிபாலிப்பதைப் பார்க்கினும், வேறு சிறந்த தருமமில்லை. ஆயினும் நம் பிதாசொன்ன சொற்களின் பதப்பொருளின்படியே நடத்தல் வேண்டுமென்பது கட்டாயமில்லை. பிதா சொல்லியவற்றின் உட்கருத்துக்கு ஆனிவாராமற் காக்கவேண்டியதுதான் நந்தங் கடப்பாடு. இதுதான் பிதுர்வாக்கிய பரிபாலந மென்பதன் கருத்தும். மேலும், (பாடுகின்றான்.)

மனமெனு மறிஞன் சொல்லு மந்திர மதியை யோம்பி
யுனக்கு நீ யுண்மை யோனு யொழுகுதன் மேன்மை யாகு
மெனவெழு பாரு முய்ந்தீ டேறவே யன்றே சொல்லாய்
சனற்குமா ரற்குரைத்தார் தக்கிணு மூர்த்தி தேவர். (45)

சத்தியப்பிரியன்:—அப்படியாயின் யானுனக்கு என் சொலவல்லேன்? எதற்கும் வேறு கருத்துண்டாக்கி விடுகின்றனை! நாமினி மற்றைப்பொழுதையும் யாண்டுக் கழிப்பது?

சிதாநந்தன்:—சத்தியப்பிரியா! இன்னுஞ் சூரியன் மறையச் சிறிது நாழிகையிருக்கின்றது. இதோ பார்த்தனையோ? நந்தந வநம்போ லோரழகான சோலை காணப்படுகின்றது. (பாடுகின்றான்.)

அவ்விடம் பாராய் நவ்வி குதிப்பதை!
செவ்வையா யிவ்விட மௌவன் மலர்தலாற்
கந்தஞ் செறிந்து மந்த மாருதம்
வீசுகின்றதை நேசனே யோராய்!
மாதவி வல்லி மண்டப மதனுட்
போதவிழ் மணங்கால் பூநிழற் கண்ணே
யருவி பொன்கொழித் தாடகப் பாறைமேன்
மருவி யதிர்குரன் மணிமுழ விசைப்ப
வண்டுந் தேனுங் கொண்டியாழ் முரல
வரிக்குயிற் பாணர் வாயிறைற் பாட
மருக்குழ லடன மாதரார் போல
விளமயி லொன்றுத னெழிலுறு கலாபங்
கொளவிரித் தாடக் குணிக்கருந் தொகைய
தருத்தலை யாட்ட மலர்கணீர் சொரிதலைக்

† கொன்றைவேந்தன்.

கருத்துடன் காணாய்! கமல வாவியி
னந்து தவழ்ந்து நளினமே லேறலை
யுந்து களிப்பொடு முற்றும் பாராய்!
மலிபுது மணமகள் பொலிவினை மானு
மிந்த வனப்புறு நந்தன வநமோ
வரைசு மாதரா ராடுறு வயந்த
விரைசெறி சோலைபோல் விளங்குகின்றதே! (46)

ஆதலினிவ் வாராமத்தினுள்ளே செல்வோம். வாராய்.

(இருவருஞ் சிறிது தூரம் செல்லுகின்றனர்.)

சத்தியப்பிரியன்:—அரசிளங் குமரனே! இப்பூம் பொழிலைப் பார்க்கப்பார்க்க வெகுரம்மியமா யிருக்கின்றது.

சிதாநந்தன்:—(உடல் சிலிர்த்துப் பாடுகின்றான்.)

என்னவாச் சரியம்! என்னவாச் சரியம்!!
உத்தம நேசனே! சத்தியப் பிரியா!
எனது வலக்க ணினிது துடித்தது!
அன்றியுங் கிள்ளைக ளன்புடன் பெடைதழீஇ
யென்றனை நோக்கி வாராய் வாரா
யென்று பேசி யின்புற் றிருப்பதற்
கேதுகா ரணமோ? யாது மறிகிலேன்?
கற்றறி பாங்கனே! கழறுாய்
முற்றுமா ராய்ந்தபின் முடிவிது வென்றே! (47)

பார்! சத்தியப்பிரியா! நாமோ நாடுவிட்டு நாடுவந்திருக்கின்றனம். சய துங்கசோழனோ நமக்குச் சன்மப் பகைஞன்! அங்ஙன மிருப்ப இத்துணைய நற்குறிகள் நிகழக் காரண மென்னை!—[மௌனம்] ஆயினும் என்னவோ பார்ப்போம். (பாடுகின்றான்.)

மாமதுரை யங்கயற்கண் மாதுமையின் கண்ணிறைந்த
தாமதுரை சாமீ தயாபரவென்—சோமமுடிச்
சுந்தரநின் றுளே துணை. (48)

இறைவன் செயலை யெவரறிவார்? (பாடுகின்றான்.)

---

பாட்டு 46. இதன்கட் சோலையில் நடநசபை யொன்று உவம வுருவகவணிகள் கொண்டு காட்டியிருத்தல்காண்க. மலிபுது மணமகள் பொலிவினை மானும் நந்தநவநம் = பலவாபரணங்கள் நிறைந்த புதுமணப் பெண்ணினது அழகினை யொக்கும் பூஞ்சோலை. "பொழிலின் மிக்கதனிற் புக்கான் மணமகளிர்போற் பொலிந்ததே" எனச் சிந்தாமணியினும், "ஒண்ணுதன் மகளி ரழகொடு மறுகும், விண்ணுயர்ந் தோங்கிய கடற்றவும்" எனப் பதிற்றுப்பத்தினுங் கூறியிருத்தல் காண்க.

(உ.) இராகம்—நவரோஸ். தாளம்—ஆதி.

பல்லவி.

எவரறிவார் எவரறிவார் எவரறிவார் சொல் எவரறிவார்.

அநுபல்லவி.

நவவடி வாயவன் நதிமதி மிலைந்தவன்
சிவபெரு மானவன் செயலினையே (எவரறிவார்)

சரணங்கள்.

இல்லா ததனையு மியற்றுவிப் பானவன்
வல்லா னவனருந் தொழிலினையே (எவரறிவார்)
சுயம்பிர காசவான் சுந்தர ரூபவா
னியம்ப வொணுவவ னிறைமையினை (எவரறிவார்)
நன்குணர் ஞானிக ளுயக ளுகிடு
மெண்குண வானவ னியல்பினையே (எவரறிவார்)

சத்தியப்பிரியன் :—(செவிசாய்த்து) நிறுத்து ! நிறுத்து !! ஏதோ பேச்சுக்குரற் கேட்கின்றது ! சுற்று மரங்களினிடை யொதுங்கி நிற்றி. கவனிப்போம்.

சிதாநந்தன் :—(பாட்டை நிறுத்திவிட்டுச் செவிகொடுத்து) ஆம் ஏதோ கோதையர் குரல்போலும் !

(சிறிது தூரஞ் சென்று பார்க்கின்றான்.)

ஓகோ ! யாரோ மூன்று மாதரார் அச் சம்பங்கிக்கொடி மண்டபத்தின் கீழ் நறுமலர் நிறைந்த வெண்சிலா வட்டத்தின்மீது எழுந்தருளியிருந்து என்னவோ பேசிக்கொள்ளுகின்றனர். ஆகா ! இவர்கள் என்ன வனப்புடையர் ! என்னவனப்புடையர் !!—சத்தியப்பிரியா ! நாம் சமீபஞ் சென்று அப்பனிநீர் மரங்களினிடையில் நின்று அவர்கள் பேசுவனவற்றைக் கேட்போம்.

(கலாவதி, வாசந்திகை, மாணிக்கமாலை யிம்மூவரும் வீற்றிருக்கின்றனர்.)

கலாவதி :—(பாடுகின்றாள்.)

தாயிலாப் பெண்ணெனச் சாற்றும் பழிக்கா
ளாயினேன். அன்றியு மறிவுறு மெந்தையோ
மனோரமோ கினியென்பாள் வயப்பட் டந்தோ
தினமு மாழ்கித் திரியா நின்றனர் !
இதுவு மென்றலை விதியோ ? இயம்பாய்
ஏகம் பத்துறை யெம்பெரு மானே ! (49)

மாணிக்கமாலை :—அம்மா ! கலாவதி ! நீ யெதற்கும் வருத்தப்படவேண்டாம். ஏகாம்பரேச ரெல்லாவற்றையு மினிமையாய் முடிப்பார் !

வாசந்திகை :—இவற்றிற்கெல்லாம் மூலகாரணமா யிருந்தவன் சுகசரீரன். இந்தப் பாதகனாலேதான் நமது மகாராஜாவும் அந்தக் கிராதகி மநோமோகினி வலைப்பட்டார். அவருக்கு நண்பனைப்போல நடித்து மெல்லக் காமக்கடலி லமிழ்த்தி விட்டான்.

சிதாநந்தன் :—(ஒற்றுக் கேட்டபின்) சத்தியப்பிரியா! கேட்டனையோ இவர்களுடைய பேச்சினை?

சத்தியப்பிரியன் :—ஆம். கேட்டேன்.

சிதாநந்தன் :—மற்றைப்படி நீ யிவர்களை யாவரென்று நினைக்கின்றனை? இவர்களுக்கு நடுவணிருப்பாள், (பாடுகின்றான்.)

* "மாலை யிடைபதித்து வெண்பளிங்கிற் செவ்வரத்த
விரேகை வாங்கிப்
பானீர வேல்வடிவு படத்திருத்தித் தாமரையுட்
பரித்தன்ன
தூநில வாளொடுங்கண் குழைமுகத்தி னுள்ளிலங்கத்
தோன்றுகின்ற
வாய்நில மணியையப்பா வெவ்வணங்கு" மலரணங்கோ
வலளோ? காணாய்! (50)

மலரும் மயிருந் தம்முள் மயங்கும்படி முடித்த இவள் கூந்தல் தோட்கட்டிலே தாழ்தொடை சிறிது குலைந்து வீழ, முழுமதி யினிய கதிர்களை விட்டாற்போல முகம் ஒளி பொருந்தி யுவ்விடத்தே யிருப்பாளிவள் யார்தான் கொல்லோ? இவ்வுலகின் கன்னி வல்லோர் பலர் ஒருங்கு கூடித் தத்தங் கைத்தொழிலைக்காட்டிச் சமைத்த ஒப்பில்லாத பாவையோ?—அன்றி, அயனாலே நல்லமகளிர்தம் உறுப்புக்கள் யாவும் ஒருங்கு கொண்டு ஒருவடிவாகப் பண்ணப்பட்டா ளொருத்தியோ? அன்றி, ஆடவர் மீதுள்ள வெறுப்பினாலே தன்னைக் கூற்றமென்று அறியாவண்ணம் மறைத்துப் பெண்ணுருக்கொடு போந்ததோர் பெருங்கூற்றமேயோ?—என்னுயிர்ப்பாங்கனே! இந்நிலையை யோர்ந்து பாராய்!

சத்தியப்பிரியன் :—இப்பெண்களின் மத்தியில், முத்துமாலையின் நடுநாயகம் போல விளங்கும் வனிதை யிந்காட்டரசன் ஜயதுங்கனுடைய மகளா யிருத்தல் வேண்டுமென்று நினைக்கின்றேன்.

சிதாநந்தன் :—என் பிரிய நேசனே! சத்தியப்பிரியா! இதற்குமையப்பாடோ? ஆகா! (பாடுகின்றான்.)

---

* குளாமணி.

பாட்டு 50. தாமரையை முகத்திற்கும், வெண்பளிங்கை வெள்விழிக்கும், செவ்வரத்த விரேகையைச் செவ்வரிக்கும், ஒப்பிட்டிருத்த லுணர்க.

தாமரையே நல்வதனந் தையலுக்குத் தாவுமிள
மாமரையே கண்ணிணைகள் வண்பவள மேயதரங்
காமனையும் வாட்டுகின்ற கட்டழகார் கன்னிகைசீர்க்
கோமகளிப் பெண்ணரசி கூந்தலினை யென்சொல்கேன்! (51)

சத்தியப்பிரியன் :—ஆம். சிதாநந்தா! இத்தன்மையான படைப்பினை யானெங்குங் கண்டிலேன். இம்மாதரசியின் வடிவம் அழகையுங் காந்தியையுமே யெடுத்து உருவாக்கினாற் போலுமுளது. இவளைச்சிருட்டித்த நான்முகக் கடவுளுங் கண்டு ஆச்சரியப்பட்டிருப்பானென நினைக்கின்றேன்! ஏனிவள் முகம் வாடி யிருக்கின்றது?

சிதாநந்தன் :—இவள்முகம் வாடியிருப்பதற்குக் காரண மின்னதென்று அவர்களது பேச்சினின்றும் வெளியாகின்றது. சயதுங்க ராசனுடைய தேவியா ரிறந்துவிட்டாரென்று முன்னமே நாம் கேள்விப்பட்டு மிருக்கின்றோம். அதுதானிவள் சோகத்திற்குக் காரணமென்று நினைக்கின்றேன்.

சத்தியப்பிரியன் :—அதுமாத்திரமா? இன்னும் வேறென்னவாயினு மிருக்க வேண்டும். ஏதோ மனோமோகினி யென்பவளாலும் சுகசரீரனென்பவனாலு மென்னவோ நேரிட்டனவென்று சொல்லிக்கொண்டார்களே.

சிதாநந்தன் :—ஆம். ஆம். அதுநிற்க. இவ்விதன வேளையினு மிவளழகை வருணிக்க முடியாதிருப்ப இவள் சந்தோஷக்காலையோ டிருப்புழி வருணிக்க யாவரான் முடியும்? ஆகா! ஏதோ பேசுகின்றனர். நில். நில். கேட்போம். [மௌனம்] என்னையோ பாடுகின்றாள்!

கலாவதி :—(பாடுகின்றாள்.)

கவற்சி யுற்றதென் காமரு நெஞ்சக
மிவற்றை யெல்லா மெடுத்தியம் பாதுநீ
சுந்தர மாகிய செந்தமிழ்ப் பாடலென்
றுன்ப மொழியுமா றன்புடன் சொல்வாய்
வாசமா மலர்க்குழல் வாசந்திகையே! (52)

சிதாநந்தன் :—ஆகா! நீ யென்னை யவ்வாறு கேட்கும் பாக்கியம் யானென்று பெறுவேனோ? (பாடுகின்றான்.)

காவன மென்னக் காணுறு கூந்தற் கவின்மானே
யேவன கண்ணின் னேரரு ளுஞ்செய் தெனையாளு
மாவன மாரும் வண்மலர் தம்மின் வளர்மேன்மைப்
பூவன மானும் பெண்மணி யன்பும் புரிவாயோ? (53)

வாசந்திகை :—(பாடுகின்றாள்.)

ஞாலமி சைத்தமியேன்
சீலமி லாமதவே
ளாவிட ரார்தமெமான்
பாலுரை பைங்கிளியே. (54)

---

பாட்டு 54. கின்னாவிடுதூது.

அனங்க னம்பு பாய்தலான்
மனங்க வன்று வார்கணீர்
தனங்கண் மீது பெய்ம்மெனு
வனங்கள் சொன்மி னன்பற்கே. (55)

கறையொன்றிய வேற்படைக் காவலனென்
னிறைதன்னிட மேகியெ னேக்கமெலா
மறைதந்துப ரந்திட ஞருயிலைரக்
குறையொன்றுமி லாக்கருங் கோகிலமே. (56)

தண்ணு லாவு தும்பை மாலை தான்ற ரித்த காவலர்
கண்ணி லாரென் றன்னை யேது காரணத்தி னேவவர்க்
கெண்ணம் வேறு முண்டு கொல்லென் றெய்த்து வந்தி யம்புவாய்
விண்ணு லாவு கின்ற நீல வண்ண மாரு மேகமே. (57)

காதம்ப மாலையனென் காதலன்றன் முர்பெறுவான்
காதம்பத் தாயினும்யான் கடிதினிற்போய் வருவலென்ற
காதம்ப மென்னையிரு காறுமிவ ன் வந்திலதோ
காதம்பங் குறுசிலைக்கைக் காமனும்போ தந்தனனே (58)

சிதாநந்தன் :—ஆகா! என்ன சொல்லட்டும்? இராகத்தை வெல்லுகின்றது பாட்டு!

கலாவதி :—ஏடி! மாணிக்கமாலாய்! அஃதென்னை பட்டாடையிற் சுருட்டி யிருப்பது?

மாணிக்கமாலை :— பல நாட்டரசர் படங்களையும் அரசிளங்குமரர் படங்களை யுஞ் சேர்த்து வைத்திருக்கின்றேன். அதுதான். வேறொன்றுமில்லை.

வாசந்திகை :—அவற்றை யெடுத்துக்கொடு. கலாவதியும் பார்க்கட்டும்.

(மாணிக்கமாலை கொடுக்கக் கலாவதி வாங்கிக்கொண்டு ஒவ்வொன்றாய்ப் பார்த்துக் கழித்துவிட்டுக் கடையிலொன்றை யூன்றி வெகுநேர முற்று நோக்குகின்றாள்.)

கலாவதி :—இம்மகாபுருடன் யார்! ஏ! மாணிக்கமாலாய்!

மாணிக்கமாலை :—(மற்றைப் படங்களைச் சுருட்டிக்கொண்டு) எம்மகாபுருடன்?—(படத்தை நோக்கி) இவன் நமக்குப் பகையரசன் குமாரனும்; பாண்டி நாட்டினனும்; கல்விக் கெல்லையாம்; கருணைக்கடலாம்; வீரர் சிங்கமாம்? வேந்தர் திலகமாம்; குணப்பெருங் குன்றமாம். அறிவேன்.

---

பாட்டு 55. அன்னவிடு தூது. இதனைப் 'பிரமாணிகை' விருத்தமென்பர் வடநூலார்.

,, 56. குயில்விடு தூது. இதனைத் 'தோடக' விருத்தமென்பர் வடநூலார்.

,, 57. மேகவிடு தூது. இதனைத் 'தூணகம்' என்பர் வடநூலார்.

,, 58. யமகம். காதம்பமாலை = கதம்பமாலை. கார்தம் + பத்து = பத்துக் காவதம். காதம்பம் = இனிதாகப்பாடும் அன்னம். காது + அம்பு + அங்கு + உறு = கொல்கணை பொருந்திய. அங்கு—அசை. இதுவும் அன்ன விடுதூது.

கலாவதி :—(உற்றுப்படத்தை மறுபடியும் பார்க்கின்றாள்.) (தனக்குள்) ஆகா! இஃதென்னை? எனக்கிம் மகாபுருடனுடைய படத்தினை நோக்குந்தொறு மொருவித குதூகல மென்னையறியாது உண்டாகின்றதே! இவன் படத்திலேயே யிவ்வளவழகுள்ளவனா யிருக்கும்போது இயற்கையிலெவ்வளவு அழகுள்ளவனோ? மாதர்கள் மணந்து கொண்டா லித்தன்மையான நாயகனையன்றோ மணந்துகொள்ளல் வேண்டும்? (வெளியாய்) இவனதழகிற் கேற்றவாறு இவனிடத்திற் கல்வியுங் குணனும் மாணிக்கமாலை கூறியாங்கே யிருக்குமாயிற் பொன்மலர் நாற்றமுண்டத்தாம்.

வாசந்திகை :—ஏ! கலாவதி! நீ நினைத்தவாறே யவனிடத்துக் கல்வி, சற்குணம், வீரம் முதலியயாவு மொருங்கே யமைந்துள்ளன. அதற்கொன்று மையமில்லை.

கலாவதி :—அற்றேல் மாரனும் வெள்குறும் மாவெழின்மன்னவ! உன்னைத் தலைவனாகப் பெறுபவள் பாக்கியமே பாக்கியம்! (தனக்குட் பாடுகின்றாள்.)

வென்றிவி ளங்கும் வேலுறு கையாய்!
குன்றுறழ் தோளாய் கோதறு செய்யாய்!
மன்றினி லெல்லா மாநுடர் முன்னு
மென்றனை மேய்நா னின்புறு கேனோ? (59)

(ந.) இராகம்—பரசு. தாளம்—ஏகம்.

பல்லவி.

வருவாய் மதிமுக மன்னனே யென்பால்

அநுபல்லவி.

மாரவேள் மானுமென் வரகுண கரனே (வருவாய்)

சரணங்கள்.

சுந்தர வீரனே சூரர்தஞ் சூரா
சுந்தர மின்னார் காதல்கொள் தீரா (வருவாய்)

கண்டன னுன்படங் காவல வாதேன்
கொண்டன னாசை கோவேயுன் மீதே (வருவாய்)

வித்தியா சாகரா வேட்கையுற் றேனே
புத்தியின் மையல் போக்கிடெம் மானே (வருவாய்)

(ச.) இராகம்—பியாகடை. தாளம்—ரூபகம்.

பல்லவி.

மன்னோநின் படங் கண்டு
மயங்கிக் காதல் கொண்டேன்.

பாட்டு 59. இதனை 'உருக்குமவதி' யென்பர் வடநூலார்.

அநுபல்லவி.

கொன்னே தனியாய் நொந்து
கோவே நெஞ்ச முளைந்து
கோகி லமு முனிந்து
கூவ மதனை நைந்து (மன்னே)

சரணம்.

நாதா நாமிருவரும் நலமுஞ் சுகமு மெய்திச்
சீதையி ராமன் போலுஞ் சிவனு மூமையும் போலும்
ராதா கிருஷ்ணன் போலும் ரதியு மதனும் போலும்
பாதார விந்தஞ் சேர்தல் பாவி யடைத லென்றோ? (மன்னே)

மாணிக்கமாலை :—(வாசந்திகையினிடத்தில் மறைவாய்) வாசந்திகே! நம்மு டைய கலாவதிக்கு அவன்மீது காதலுண்டு போலும். இதைக்குறித் துன்மனத்தி லென்ன தோன்றுகின்றன?

வாசந்திகை :—ஆகா! மன்மதனைப் பழிக்குமிப் பேரழகுவாய்ந்த இராச குமாரனைக் கண்டு எவள்தான் காதல் கொள்ளாள்? (பாடுகின்றாள்.)

(ரு.) இராகம்—சுருட்டி. தாளம்—ரூபகம்.

பல்லவி.

காதல் கொள்ளாளோ—எவடானுங்
காதல் கொள்ளாளோ?

அநுபல்லவி.

ஆத ரமின்றி நோக்கி னாலும்
ஆட வராசை நீக்கினாலும் (காதல்)

சரணங்கள்.

இந்து வைப்பழித் தெம்மைப் போக்கச்
செந்தா மரை முகத்தை நோக்கக் (காதல்)

பங்கய மினார் பதைத்து வேர்க்க
இங்கி தஞ்செயு நயனம் பார்க்கக் (காதல்)

சிதாநந்தன் :—இம்மாதரசியுங் காதல் கொள்ளத்தக்க மகா புருடன்யாரோ? ஆகா! இப்பெண்மணியைப் பெறுபவன் பேறேபேறு. (பாடுகின்றான்.)

துவளுமினல் போலுமிந்தக் கொடியிடைசேர் சுந்தரியா டேய மூக்கிற்
றவளநிற முத்தினணி யொன்றினிது தூங்கிடத்தன் றவளமூரற்
பவளவத ரத்தொளிகண் முறையேமே லுங்கீழும் பாய்தலானே
சிவனுநறு மாதுளநன் முத்தினையேயெனப்புகறல்சீரி தன்றோ? (60)

பாட்டு 60. நாசியினிடத்து நான்றன வணியினது முத்து முறுவ லொளியு மித ழொளியும் பெற்று மாதுளம்பழ விதையினை யொத்திருத்தல் காண்க.

வானி றத்த வயிர மணிச்சுட்டி
தான ணிந்தொளிர் தண்ணளி யொண்முகம்
வான கத்து வயங்குறு மீனெலா
மேனி ரல்வளை வெண்மதி மானுமே. (61)

கலாவதி :—(தனக்குள்) ஐயோ! மனமே! ஏனோ வீணெண்ணங் கொள்ளு கின்றனை? நீயாசைகொள்ளும் மகாபுருடன் கிடைப்பதரிது. (உடல் சிலிர்க்கின்றாள்.) எனது இடக்கண் ஏன் துடிக்கின்றது? மாரவேளும் முருகவேளும் நாணும் வடிவுடைய இச்சுந்தர புருடனை யடைபவளது புண்ணியமே புண்ணியம்! மன்மதனும், 'இவன்போலு முருவம் படைத்தே னில்லையே' யென்று ஏக்கங்கொண்டு அனல் வளர்த்து அதன் கண் வீழ்ந்து உடலிழந் ததனாலன்றோ 'அநங்க' னென்னும் பெயர் பெற்றான்! முருகனோ குறப்பெண்ணை மணந்து குலக்கேடிழைத்தான்! திருமாலோ உடல் கருகியழகிழந்தான்! ஆதலினால், ஏ! இராசகுமாரா! நின்றனக்குவமை நீயேயாகின்றனை! இத்தகைய பேரழகுங் கல்வியும் நற்குணமும் வாய்ந்த நின்னையடைதற்கு யானும் விரும்புகின்றேன். ஆசைக்கோரளவில்லை! யாமோ கொடுத்துவையாதவள்! இத்திப்பிய சுந்தரமூர்த்தியை யான் பெறுவதெங்கே? துர்லபம்! துர்லபம்!! இப் படத்திலாவது இம் மகாபுருடனைச் சிறிது தரிசித்துக் களிகூர்வேன்! (உற்றுநோக்கி) சித்திரத்திலு மென் அன்பனைக் காணவொட்டாமலென் கண்கள் நீர்சொரிந்து எனக்குத் தீங்கிழைக்கின்றனவே!

(கண்ணீர் சொரிந்து தனக்குட் பாடுகின்றாள்.)

என்மனங்கைக் கொண்ட னெதிரிருக்கு மன்னனைநான்
வன்மமுட னும்மையென் றன் வாளாக்கிப் போர்க்கழைக்கும்
வேளையென கண்காணீர் மித்திரபே தம்பூண்டக்
காளைதுணை யாகிமிகக் கண்ணீர் சொரிந்தெனக்குப்
பேரிடுக்கண் செய்தல் பிழையென் றறிந்தும்விழி
மீரிவினை யென்னோசொன் மின். (62)

சிதாநந்தன் :—(தனக்குள்) அந்தோ! யான் அப்படமாகவேனும் இருந்தே னில்லையே!—யானந்தப் படமாகமாத்திர மிருப்பேனாயின் இந்நாரியர் சிரோமணி யென்னைக் கைப்பிடித்துக் கொள்ளுவாளே!—ஓ! படமே! உன் அதிர்ஷ்டமே யதிர்ஷ்டம்!—ஓகோ! (பாடுகின்றான்.)

---

பாட்டு 61. வைரமணிபதித்துக் குயிற்றிய சுட்டி யென்னும் அணியினையணிந்து விளங்கும் முகம் (இராகுக்கோள் தன்னைப் பற்றவருவது கண்ட) நட்சத்திர கணங்களால் வளைந்து கொள்ளப்பட்ட மதியினை யொக்கும்,

பாட்டு 62. பஃறொடைவெண்பா. விழிகளை முன்னிலையாக்கிக் கூறியது. கற்பனை யை யுய்த்துணர்க.

சம்பக மாலாய் சாதக மானுங்
கொம்பனை யாளே கூர்விழி மாதே
வம்புறு மாரன் மாமலர் தைத்தே
வெம்புறு கேனோ வெம்புறு கேனோ? (63)

வாசந்திகை :—(மாணிக்கமாலையினிடம் மறைவாய்) ஏடி! மாணிக்கமாலாய்! நீ சொல்லுவதுபோல நமது தலைவி கலாவதி யிம்மகாபுருடன்மீது ஏதோ பெருங்காதல் கொண்டவள்போலவே யிருக்கின்றனள்! இதற் கென் செய வல்லோம்?

மாணிக்கமாலை :—(மறைவாய்) அவனோ நமது மகாராசாவுக்குப் பகைவன் குமாரன்! அவன்மேற் காதல்கொள்வதனாற் பயனென்ன?

வாசந்திகை :—(மறைவாய்) அப்படியன்று. நமது கலாவதிக்குத் தக்க தலைவ னிவனே!—(பாடுகின்றாள்.)

அன்னத் தனிப்பேடை யந்தா மரைத்தடமு
நன்னர் நளினமந்த ஞாயிறுமே
நாடுமன்றி மற்றெதனை நாடுகிற்கு நங்காய் நீ
கூடமின்று னெண்ணமது கூறு. (64)

மாணிக்கமாலை :—(மறைவாய்) ஆமாம். நமது மகாராசாவுக்கும் அவனுக்குக் கலாவதியைக் கொடுப்பதில் விருப்பந்தான். ஆயினு மவன் பகைவனா யிருக்கின்றனனே! ஆகையா லவனைப் பெறுவது அசாத்தியம். நா மிச்சமயத்தி லெப்படியாவது அவள் எண்ணத்தை மாற்றி விடுவதே நன்று! (கலாவதியை நோக்கி வெளியாய்) அம்மா! கலாவதி! பொழுது போய்விட்டதே! நாம் அரண்மனைக்குப் போகவேண்டாமா?—அப்படத் தினை யிங்கேகொடு. யான் பத்திரமாய் வைத்திருந்து உனக்கு வேண் டும்போது கொடுக்கின்றேன். (கைநீட்டுகின்றாள்.)

கலாவதி :—(தனக்குள்) ஆ! சுந்தரபுருடா! எப்பொழுது யானுன்னை நேரிற் காண்பேனோ? (படத்தை முத்தமிட்டுப் பாடுகின்றாள்.)

கையினிற் போந்தி ருந்த காமரு மணியே யென்ற
னையனே நின்னை நேரி லடியனே னென்று காண்பேன்
றுய்யனே யென்று காண்பேன் சுந்தரா வென்று காண்பேன்
செய்யனேயென்று காண்பேன் செல்வமே யென்று காண்பேன்? (65)

(மாணிக்கமாலையை நோக்கி) ஏடி யம்மா! மாணிக்கமாலாய்! இந்தப் படம் என்னிடத்திலேயே யிருக்கட்டுமே!

---

பாட்டு 63. இதனை 'சம்பகமாலை' யென்பர் வடநூலார்.

பாட்டு 64. சவலை வெண்பா. புனைவிலி புகழ்ச்சி யணி. கூடமின்று = மறைவின்றி. எண்ணமது: 'அது' பகுதிப்பொருள் விகுதி.

**மாணிக்கமாலை** :—நானே வைத்திருந்து உனக்கு வேண்டும்போதெல்லாங் கொடுக்கின்றேன். கொடு. (கைந்நீட்டுகின்றாள்.)

**கலாவதி** :—அங்ஙனமாயிற் சரி. (படத்தைக் கொடுக்கின்றாள்.)

**வாசந்திகை** :—ஏன்? கலாவதீ! நாம்போக நேரமாகவில்லையா?

**கலாவதி** :—ஆனாற் செல்லுவோம். (மூவரும் போகின்றார்கள்.)

(படம் நழுவிக் கீழே விழுகின்றது.)

**சிதாநந்தன்** :—(தனக்குட் பாடுகின்றான்.)

பொற்புள்ளி யிட்ட புதியபசும் பட்டாடை
பொற்புறவே தானுடுத்துப் பூமயில்போற் போமெழில்காண்
கற்பரசி யான கலாவதிப்பேர்க் காதலியென்
வற்பொருவு கொங்கைமட மான். (66)

(தனக்குள்) என்ன? போய்விட்டார்களா? மறைந்து விட்டதோ எனது நேத்திரானந்தம்? (வெளியாய்) அப்பா! நண்பனே! நான் அந்தப் பெண் மணியைப் பார்த்ததுமுதல் என்மனம் ஏதோ விகாரப்படுகின்றது! என் மனம் அவளிடத்திலேயே சென்றிருக்கின்றது! எனக்கொன்றுந் தோன்றவில்லையே! என்ன செய்யலாம்? எங்கே போகலாம்? (பாடுகின்றான்.)

இவ்விட மிருந்த தெவ்வர் தமது
மாதர் சிரோமணி மதனனு மாலுங்
காதல் கொள்ளுந் தன்மைய கன்னியைக்
கண்ட வுடனே சிந்தை கலங்கி
யுண்டெனு மறிவு மொழிந்து மலங்கினே
னிங்கிதற் கென்ன செய்குவல்? அந்தோ!
இங்கித மியம்பு மினிய நேசனே! (67)

**சத்தியப்பிரியன்** :—ஏ! சிதாநந்தா! (பாடுகின்றான்.)

தகையொழிந் திவ்வணம் பகைவர் கொம்பினுக்
கிச்சைப் படுத னச்சு மரக்கனி
நத்துதல் போலு மன்றியந் நாரியர்
சித்தந் தெளிந்தபின் செப்பருங் காதலுங்
கொண்ட செய்தியைக் குறிப்பா லுரைத்துளங்
கண்டு கோடலே காதல ரியல்பென. (68)

**சிதாநந்தன்** :—அப்பா! சத்தியப்பிரியா! (பாடுகின்றான்.)

ஒருகண மேனுந் தாழே னுயிரனை யாளெங் குற்று
மருவினு ளங்கி யாமும் போகுதும் வருதி நண்பா! (69)

---

பாட்டு 66. ஒரு விகற்ப வின்னிசை வெண்பா.

**சத்தியப்பிரியன்:**—ஆனால் அம்மாதரார் வீற்றிருந்த பிரமோதவனத்திற்கே போவோம். வா. இதோ அந்த மாதரசி தன் தோழிகளுடன் வீற்றிருந்த சம்பங்கிக் கொடிமண்டபமிருக்கின்றது! அதோபார்! (பாடுகின்றான்.)

வெள்ளியலர் போல மிளிருமலர் வண்டடைந்து
கொள்ளைகொளு முல்லைக் கொடிகளுள காண்கிறப்பாய்!
தெள்ளமிழ்த முங்கைப்பச் சீராய்த்தன் பேடணைத்துத்
துள்ளலிசை பாடுகுயிற் சூதமுள காண்கிறப்பாய்! (70)

இதோ இந்த லதாக்கிருகத்தின்மேற் பூத்திருந்த சம்பங்கி மலர்களும் மல்லிகை மலர்களும் வண்டுகள் வீழ்ந்து அலைத்ததனாற் காம்பற்றுக் கீழேயுதிர்ந்து அணைபோற்படிந்திருக்கின்றன! ஆகையா லிவ்விடத்தி லுட்கார்ந்து சுகமாயிருக்கலாம். வா.

(இருவருஞ்சென்று உட்காருகின்றார்கள்.)

**சிதாநந்தன்:**—என் பிரியநேசனே! யான் பிரமோத வனத்திற்குப் போய்த் தாபத்தைத் தணிக்கலாமென்று எண்ணினது எதிராறுநீந்திக் கரை சேரலாமென்று நினைத்ததுபோலாயிற்று! ஒருநாளும் கிடையாத பொருளின்மேல் ஆசைகொண்டு மனஞ்சலித்து அறிவுசோருகின்ற எனக்கு இவ்விடத்திலுள்ள பூங்கொடிகளையும் மலர்ச் செடிகளையும் பார்ப்பதனால் என்றைக்காவது சந்தோஷமுண்டாகுமா? பார்! இதற்குப் பிரமோத வனம் என்று பெயர் மாத்திரந்தானே யொழிய மற்றைப்படி யுண்மையி லெனக்குப் பிரமோதத்தைக் கொடுக்கும் சக்தி யிதற்கிருப்பதாகத் தோன்றவில்லை.—(பாடுகின்றான்.)

நாளரும்பி யாவையும் நன்றாய் மலர்ந்துமணக்
கோளுடைய முல்லைக் கொடிகளே யாயினுமென்?
தாளாள னென்னுந் தகையுடைய நட்பாளா!
வாளார் தளிர்பொதுளு மாமரங்க ளாயினுமென்? (71)

நங்கையர்சி காமணியை நல்லரசர் கொம்பினையென்
றுங்க மனக்கமலந் துன்னுந் திருமகளை
யிங்குக்கா ணாமையினா லெப்பொருளைப் பார்த்தாலு
மங்கதனைக் காண்கில்லேன்! அன்பனே! என்செய்கேன்? (72)

என் எண்ணம் நிறைவேறும்படியான வழி வேறேதேனு முண்டானாற் சொல்.

---

பாட்டு 72. அரசர் கொம்பு=ராஜபுத்திரி. 'அர்' போலியெனக் கொள்ளின் அரசங் கொம்பெனத் தொனித்தலுங் காண்க.

சத்தியப்பிரியன் :—சிதாநந்தா! நீகூறும் மாதோ யாரோ ஒருவனுடைய படத்தைக் கையில் வைத்துக்கொண்டன்றோ அதை யுற்றுநோக்கிநோக்கி யேக்கங்கொண்டு பெருமூச் செறிந்தனள்! அன்றியும் அவன்மேற் காதல் கொண்டவள் போலச் சில விரகக்குறிகள் காட்டினாள்! அப்படியிருக்க நீ யவள்மேற் காதல்கொண்டு பயனென்ன?

சிதாநந்தன் :—(பாடுகின்றான்.)

கரும்பே கனியே கமலா தனியே
கருத்தா டிருப்பாய் கவின்சேர் மணியே
சுரும்பேர் குழலாய் தொடியார் சாத்தாய்
சகமே மடவார் தொழுமா மதியே
விரும்பே னெனையும் விழைந்தே னுனையே
மிளிரும் சுடர்வேல் விழியாய் மனையின்
அரும்பேய் தனத்தா யறிவே யுருவா
மமலாய் மதனை வழிகோ வழிகோ! (73)

(கீழே விழுந்திருந்த சித்திரத்தைக் கையி லெடுத்துப் பார்க்கின்றான்.) (தனக்குள்) இஃதென்ன விசித்திரம்! என்ன விசித்திரம்!! (வெளியாய்) என்னருமை நேசனே!—(பாடுகின்றான்.)

இப்படித் திரும்பி யிப்படம் யாரதென்
றற்பு நீதான் சற்றே பார்த்தி! (74)

(மகிழ்வுடன் படத்தை நீட்டுகின்றான்.)

சத்தியப்பிரியன் :—(வியப்புடன் பாடுகின்றான்.)

இளவரச ரேநீ ரெல்லா விதத்தினு
முளவர் பாக்கிய முண்டோ வதற்கையம்? (75)

சிதாநந்தன் :—(படத்தை யுற்று நோக்குகின்றான்.) (தனக்குள்) என் படம் நின்னைக் கெப்படி வந்தது? என் கண்ணே! கலாவதி! நீ யென்னை நோக்கியோ காதல்கொண் டுள்ளமுடைந்தாய்? அப்பொழுதே யிது தெரியாமற் போயிற்றே! (பாடுகின்றான்.)

ஓடாத மானேமாற் றுரையாத செம்பொன்னே
யொளியா மின்னே
தேடாத திரவியமே தெவிட்டாத செந்தேனே
திங்கள் கண்டும்
வாடாத வாரிசமே யின்னுமொரு காலெதிர்நீ
வருகிற் பாயோ
நாடாத நவமணியே நான்செய்த மாதவமே
நளின மாதே! (76)

---

பாட்டு 73. மடவார் தொழுமாமதியே: "பிறை தொழுகென்றல்" என்ற அகப்பொருட்டுறை யுண்மையு முணர்க.

பாட்டு 76. பிறிதாராய்ச்சியணி.

கன்னலொடு கனிச்சாறுங் கலந்தனைய மொழியுஞ்சூழ்ந்
   தாமர் பொன்னே
மின்னமுதே யோமுக்கற் பகதருவி னெழிற்கொம்பே
   யென்பா லன்பு
மன்னுறுக லாவதியே மாமோகப் பூங்குயிலின்
   வடிவர் தன்னைக்
கன்னிகையென் னுளக்கிழியில் வரைகின்றே னுருகிநலங்
   கரைகின் றேனே! (77)

சத்தியப்பிரியன் :—அப்பா! சிதாநந்தா! நீ சொல்லுவதுண்மைதான்! அப் பெண்மணி யுனக்குக் கிடைப்பதரிதென்று யான் நினைக்கவில்லை! ஆயி னும் பொழுது போய்விட்டதே! ஆகையால் நாம் இப்பொழுது இந்நக ரில் ஒருவரு மறியாமல் எங்கேயாவது ஒருமூலையி லிருந்தாற்றானே பிழைக்கலாம்.

சிதானந்தன் :—எவ்விடஞ் செல்லுவோம்? என்னருமைக் கலாவதி யிருந்த இடத்தை விட்டுச் செல்லக் கால் எழவில்லையே! அவளழகைப் பார்க்கப் பதினாயிரங்கண்க ளிருந்தாலும் போதாவே! இனி நாம் எப்பொழுது அந்த மாதரசியைக் காண்போம்?—(மௌனம்.)

(ஓரசோகமரத்தைச் சுட்டிப் பாடுகின்றான்.)

திடத்தொடு செவ்வணி செறிந்து சேடியர்
கடித்திரப் பரத்தையர் காவல் புக்கபோன்
முடித்தலைச் சிவப்புற முளைக்கு மீர்ந்தளி
ரடித்தலத் தளித்ததிவ் வசோக மென்கொலோ? (78)

சத்தியப்பிரியன் :—சிதாநந்தா!—(பாடுகின்றான்.)

இலைத்தளி ரலவிவை யிவ்வ சோகமே
யுலைத்தகு வயவுநோ யொழிய வைத்தமே
கலைத்தனி யிடையினள் காமற் சீறடி
யலத்தகச் சுவடென வறிதி யண்ணலே. (79)

இது நிற்க. நீயே னிவ்வளவு தூரம் வருந்துகின்றனை? அந்தக் கலாவதி யும் உன்னெழிலைக் கண்டு மயங்கினவள்தானே! அவள் நிச்சயமா யுனக்கே கிடைப்பாள்! அதற்கு ஐயமில்லை! நாம் போகலாம். வா.

---

பாட்டு 78. செவ்வணியணிந்து பரத்தையர் சேரி புக்க சேடி போல முடியிசைச் செந்தளி ரீன்று மற்றை மரங்களினிடை நிற்கு மிவ்வசோகு தனதடி மிசையுந் தளிர்த்தது. இஃதென்னை யதிசயம்! என்பதாம். 'செவ் வணியணிந்து சேடியைவிடுத்தல்': அகப்பொருட்டுறை.

79. சூற்கொண்ட விவ்வசோகு தளிர்த்துப் பூக்குமாறு (தோகதஞ்செய்ய) உதைத்த கலாவதியினது அடியின்க ணூட்டப்பட்ட செம்பஞ்சுக் குழம்பினு னியன்ற சுவடென்க.

சிதாநந்தன் :—இஃதென்மேலுள்ள அன்பினாற் சொல்லுகின்ற பேச்சே தவிர வேறன்று! நீ அவள் அழகை நன்றாய்ப் பார்க்கவில்லை! பலவாறு சொல்லி யென்ன? இவ்வுலகிலவள் அழகுக்கு உவமையே யில்லை! அவளோ நமக்குக் கிடைப்பாள்?

சத்தியப்பிரியன் :—சிதாநந்தா! சமுத்திரத்தை விட்டுவிட்டு மகாநதி எங்குச் செல்லும்? விட்டுவிடு கவற்சியை!

சிதாநந்தன் :—ஆனால் நாம் எங்கே போகலாம்? [மௌனம்.]

(பாடுகின்றான்.)

காவார்ந்து தவங்கள்பல புரிந்தினிய மாதுளநற்
கனிகா ணீவிர்
பூவாகி யீண்டிருந்த மாதரசி யிதழ்வனப்பைப்
பொருந்தி யுங்கூ
ரேவாங்கண் வனிதைமுத்துக் கச்சணிந்த வெழிற்கொங்கை
யியைய கில்லா
தாவாநும் முத்தமகத் தடக்கிப்பின் றலைகுனிந்த
வமைதி யென்னே. (80)

சத்தியப்பிரியன் :—நாம் இந்த நகரத்து மந்திரியார் மேதாநிதியவர்கள் மிக நல்லவரெனக் கேள்விப்பட் டிருக்கின்றோம்! ஆனதனால் அவரிடஞ் சென்று நாம் பாண்டிநாட்டினின்றும்போந்த இரண்டு போர்வீரர் எனக்கூறி விடுதியிடம் பெறுவோம். அவரை நாம் இன்னாரெனக் கூறா திருக்குமாறும் வேண்டிக்கொள்வோம். வா. இனித் தாமதஞ் செய்யக் கூடாது.

சிதாநந்தன் :—என் இன்பக்கொடி கலாவதியின் இவ்வடிச்சுவடுகளைக் கண்ணி லொற்றியேனுங் களிகூர்வேன்! பிறகு நீ என்னவேண்டு மென்றாலுஞ் செய்துகொள். என்னைத் தனியே எவ்விடத்திலேனுங் கொண்டுபோய் என்னுயிர்த்தலைவி கலாவதியைக் குறித்து நினைக்கும்படி விட்டுவிடு.

சத்தியப்பிரியன் :—சரி. போவோம். வா.

சிதாநந்தன் :—ஏ! சம்பங்கி லதா மண்டபமே! என்னருமைக் காதலி கலாவதி வீற்றிருப்பதற்கு உதவிபுரிந்த உன்னைவிட்டு நீங்க மனம் வரவில்லையே;

(இருவரும் போகின்றார்கள்.)

## நான்காங்களம்.

இடம் : காஞ்சியிற் சுகசரீரன் வீடு.
காலம் : யாமம்.
பாத்திரங்கள் : சுகசரீரன், சோமதத்தன்.

---

பாட்டு 80. தற்குறிப்பணி. இதற்கு எதிர்நிலையணி யுறுப்பு. கற்பனையினையுஞ் சொற்பொருணயத்தினையு முய்த்துணர்க.

சுகசரீரன்:—வடா! சோமதத்தா! என்தயவு உனக்கு வேண்டுமா வேண்டாமா!

சோமதத்தன்:—என்னசாமி! அப்படிச் செல்லுகிறீர்கள்? தங்கள் தயவிற்காகத்தான் நான் காத்துக்கொண்டிருக்கிறேன். அப்படியிருக்க எசமான்களே தயவுவைக்கிறேனென்கையிலே யெவனும் வேண்டாமென்பானு?

சுகசரீரன்:—சரி. அப்படியானல் நானென்று சொல்லுகிறேன். கவனமாய்க் கேள். சமாசாரத்தை வெளியிலே விட்டாயோ உன்தலை போய்விடும்! என்ன?

சோமதத்தன்:—சாமி! எசமான்கள் சித்தம்! அதுக்காச்சேபனையில்லை.

சுகசரீரன்:—ஆனாற்கேள். வடா! நம்முடைய மகாராசாமகள் கலாவதியம்மாவவர்கள் இருக்கிறார்க ளல்லவா? (சோமதத்தன் தலையசைக்கின்றான்.) அந்த அம்மாவைத் தனியாய்க் கொஞ்சநேரமாவது எங்கேயாவது வரும்படி யேற்பாடு செய்யவேண்டும். அப்படிச் செய்தாயானல் நூறு வராகன் உனக்குத் தருகிறேன். என்ன? செய்கிறாயா?

சோமதத்தன்:—என்ன? எசமான்களே! நூறுவராகன் வருகிறதை யெவனும் விடுவானு?

சுகசரீரன்:—அப்படியானாற் சரி. நீ யெப்பொழுது அவளைக் கூட்டிவருவாய்?

சோமதத்தன்:—என்ன? சாமி! நீங்கள் பார்த்துக்கொண்டே யிருங்கள். நானிதோ நேரேபோய் அங்ஙனே அம்மா சமயம் பார்த்துக்கொண்டு அப்புறம் இங்ஙனேவந்து தெரிவிக்கிறேன். இப்போதெனக்குக் கொஞ்ச முத்தரவு கொடுங்கள்.

சுகசரீரன்:—வடா! நீபோகிற திருக்கட்டும். நீயெப்படியேடா அந்த அம்மாவைக் கூட்டிவருவாய்?

சோமதத்தன்:—அதுக்கு நானுச்சுச் சாமி! நீங்களதைப்பற்றிக் கவலைப்படவேண்டாம். இப்போ தென்னைக் கொஞ்சமனுப்பிவிடுங்கள்.

சுகசரீரன்:—ஆனல் நீபோ. சங்கதி வெளியேறிற்றோ உன் தலையை நம்பாதே!—நட்டுவநாகன் சமாசாரந் தெரியுமோ இல்லையோடா?

சோமதத்தன்:—என்ன? எசமான்களே! அது எனக்குத் தெரியாதா?—(தனக்குள்) இந்த மனிசன் நம்மை ராசகாரியமாய்ப் போகையிலே யெல்லாம் நடுவே பிடிச்சுக் கிட்டு இழவு கொடுக்கிறான். அப்பப்ப! இனியிந்த வழியாலே வரப்படாது. இவன் ராசாவுக்குச் சொந்தமானதனாலே நமக்கென்ன? இந்த மனோரமோகினியம்மா தயவு வச்சுக்கிட்டில்லே, இந்த மனிசன் முறுக்கிக்கிட்டுத் திரிகிறான்!—ஆத்தாடி! பொழுது போயிறிச்சே! (சோமதத்தன் போகின்றான்.)

சுகசரீரன் :—(தனக்குள்) இவன்மாத்திரம் நாம் சொன்ன காரியத்தைச் செய்து முடித்துவிட்டானால் நம்முடைய எண்ணமெல்லாம் முடிந்துவிட்டன வென்றே நம்பிவிடலாம். இவன் சொன்னதைப் பார்த்தால் நம் காரியத்தைக் கட்டாயமாய்ச் செய்வான் என்றுதான் தோன்றுகின்றது. பார்த்துக்கொள்வோம். (சுகசரீரன் போகின்றான்.)

இரண்டாம் அங்கம் முற்றிற்று.

---

## அங்கம்—ந.

---

### முதற்களம்.

இடம் : காஞ்சியிற் சோழனரண்மனையினந்தப்புரம்.
காலம் : பிற்பகல்.
பாத்திரங்கள் : மனோமோகினி, மரகதம், சிலதியர்.

மனோமோகினி :—மகாராசா எங்கே?

மரகதம் :—நான் அவர் * பட்டி மண்டபத்திலிருந்து வந்தது முதல் இன்னும் அவரைப் பார்க்கவில்லையே.

மனோமோகினி :—(சிலதியருள் ஒருத்தியை நோக்கி) மகாராசா எங்கிருக்கின்றனர், யாருடனிருக்கின்றனர், என்ன செய்துகொண்டிருக்கின்றனர் என்று பார்த்துவா. யான் உன்னை யனுப்பியதாகத் தெரியாமல் நீயாய் வந்ததாக அவர் அறிந்து கொள்ளுமாறு செய். அவர் வாட்டமுற்றிருந்தால் யான் களியாட்டயர்ந்து கொண்டிருக்கின்றேனென்றுசொல்; மகிழ்வுற்றிருந்தால் யான் அசௌக்கியமாயிருக்கின்றேனென்று தெரிவி. போ. சீக்கிரம்வா. (சிலதி போகின்றாள்.)

மரகதம் :—அம்மா! தாங்கள் மகாராசாவின் மீது கொண்ட காதலுக்குத் தக்கபடி அவரும் அவ்வாறே தங்கண்மீதுங் கொண்டிருக்கிறாரென்பதை வெளிப்படுத்துவதற்கேற்ற விதத்தினை இதுகாறுந் தாங்கள் நாடவில்லை.

மனோமோகினி :—அதற்கு யான் செய்யவேண்டியன என்ன செய்யவில்லை?

மரகதம் :—ஒவ்வொன்றிலும் அவர்க்கு இணங்கிப் பேசவேண்டும். எதிலும் அவர் கூறியதற்கு முரண்படக் கூறப்படாது.

மனோமோகினி :—நீ அறிவிலிபோலப் பேசுகின்றனை! அவரை யிழக்கும் விதமன்றோ கூறுகின்றனை!

---

* பட்டிமண்டபம்: கலை பயில் கழகம். "பன்னருங் கலைதெரி பட்டி மண்டபம்" எனக் கம்பராமாயணத்தும், "பட்டிமண்டபமேற்றினை யேற்றினை" யெனத்திருவாசகத்தும், "ஒட்டியசமயத்துறுபொருள் வாதிகள், பட்டிமண்டபத்துப் பாங்கறிந் தேறுமின்" என மணிமேகலையினுங்காண்க.

மரகதம் :—தங்களபிப்பிராயம் இவ்விடயத்தி லெவ்வாறிருந்த போதிலும் தாங்கள் சிறிது வாளாதிருக்கவேண்டுமென்றே யடியேன் விரும்புகின்றேன்: நாம் எதற்கு அடிக்கடி பயப்படுகின்ருேமோ அதனையே நாளாவட்டத்தில் வெறுக்குமாறும் நேரிடுகின்றது. இதோ மகாராசாவும் வந்துவிட்டார்.

சயதுங்கன் வருகின்ருன்.

மனோமோகினி :—ஏடி ! மரகதம் ! எனக்கு உடம்பும் செவ்வையில்லை ! மனமும் வருந்துகின்றது !

சயதுங்கன் :—என் கருத்தினை வெளியிட் டுரைக்கின்றதற்கு விசனமா யிருக்கின்றது.

மனோமோகினி:—மரகதம்! சீக்கிரம் என்னைப் பிடித்துக்கொண்டு செல். அல்லாக்கால் யான் விழுந்துவிடுவேன். இத்துன்பம் நீடித்திருக்க முடியாது; என்னியல்புக்கு மேற்பட்டதா யிருக்கின்றது.

சயதுங்கன்:—ஆ! என்னருமைத்தலைவி! —(பாடுகின்ருன்.)

திகழ்ந்தி லங்கு சிலதி மாதர்
புகழ்ந்து பேசு புரைபி றேவி
மகிழ்ந்து கூற வருதி யம்ம
நிகழ்ந்த தென்னை? நிகழ்ந்த தென்னை? (81)

மனோமோகினி:—என் செல்வமே! தாங்கள் சற்று விலகிநிற்க வேண்டும்.

சயதுங்கன்:—என்ன சமாசாரம்?

மனோமோகினி:—சில நல்ல சமாசார முண்டென்று அந்நோக்கத்தி னின்றும் அறிகின்றேன். மேதாநிதியார் என்ன சொல்லுகின்ருர்? அவ்வழி நீங்கள் போகலாம். அம்ம! அவர் என்னிடம் வருகிறதற்கு உத்தரவு கொடாதிருந்தாரில்லையே. இனிமேலாவது யான் தங்களை யென்வசப் படுத்திக்கொண்டேனென்று அவர் சொல்லாதிருக்கட்டும். தங்கள்மேல் எனக் கதிகாரமில்லை. அவருடையவர் தாங்கள்!

சயதுங்கன்:—ஈசனே யிதனை யினிதறிவான்!—

மனோமோகினி:—தெய்வமே! என்னை யிவ்வாறு பகைவர்களெதிரே காட்டிக் கொடுத்தனையே! ஆதியிலேயே யென்னைக் கெடுப்பதற் கேற்பட்டுளார் பலரென் றறிந்தேன்.

சயதுங்கன்:—மனோமோகினி!—

மனோமோகினி:—யான் தங்களை யென்னுண்மைத் தலைவராக நினைத்து ஏன் பெரிது மிடர்ப்படவேண்டும்?

சயதுங்கன்:—என்னின்னரசி!— (பாடுகின்ருன்.)

வனத்தகு தனத்துணைகொண் மாதே
மனத்தினில் வருத்துவதென் மானே
நினைத்துனை யடுத்தவெனை நீதான்
முனைத்தகை விடுத்தொருவ லாமோ? (82)

பாட்டு 82. வனத்தகு = அழகுபொருந்திய. முனைத்தகை = முன்னிருந்ததன்மை.

மனோமோகினி:—தாங்கள் தொடங்கும்போதே யேதோ பூசி மெழுக வருவதாகக் காணப்படுகின்றதே. ஏனிவ்வளவு மேற்பூச்சு? நேரே விடயத்தைத் தொடங்கலாமே. அஃது எவ்வளவு மனவருத்தத்தை யுண்டாக்கக் கூடியதாயினும் பொறுத்துக் கொள்ளுகின்றேன். தைரியமாய்ச் சொல்லுங்கள். பயப்படவேண்டாம்.

சயதுங்கன்:—என்னின்பக்குயிலே! யான் சொல்லப்புகுவதை யென்மீது கோபமின்றிக் கேட்பாய். காலவேறு பாட்டினால் நின்கருத்திற்கு மாறாகச் சபையோர்கள் தீர்மானித்தார்களாயினும், என்முழுமனமும் உன்னிடத்திலேயே யுள்ளது.

மனோமோகினி:—சபையி லென்னை தான் தீர்மானிக்கப் பட்டது? அதனை நேரே சொல்லி விடுங்களேன். பயப்படுவானேன்?

சயதுங்கன்:—யான் பயத்திற்காகச் சொல்லவில்லை. மற்றைப்படி மேதாநிதியார் நமது நேர்பகைஞனாகிய பாண்டியனது மகனுக்கே நமதுகுமாரி கலாவதியைக் கொடுக்க வேண்டுமென்று சொற்றனர். உடனே மற்றைய ஆத்தானிகர்களும் அவர் கூறியதையே வற்புறுத்தினார்கள். அதன் பிறகு அவர்கள் கூற்றிற்கு ஒருவாறு யானு முடன்பட்டேன்.

மனோமோகினி:—உடன்பட்டீர்களா? — நன்று! நன்று!! இராச சபையாவது யாட்டுமந்தைதான்!—எனக்கு ஆதியிலேயே தெரியுமே இத்த மேதாநிதியாரைப் பற்றி!

சயதுங்கன்:—அவரைப்பற்றி நீ யவ்வாறு கூறப்படாது. அவர் எத்தனையோ பலவிடயங்களையுங் குறித்து ஆலோசித்துத்தான் அவ்வண்ணந் தீர்மானித் திருக்கின்றனர்.

மனோமோகினி:—சரி, நீங்களே யப்படி நினைக்கின்றபோது அதையிங்கே யெளியேனிட முரைப்பானேன்?

சயதுங்கன்:—உன்கருத்தையும் அறிந்துகொள்ளலா மென்றுதான்.

மனோமோகினி:—தீர்மானித்த பின்னர் என்கருத் தெதன் பொருட்டு?—மற்றைப்படி தாங்கள் சபைக்குப் போகுமுன் என்னிடஞ் சொன்னதென்? இப்பொழுது நடந்ததென்?— இதுதானோ வென்மீதுள்ளவன்பு? எல்லாம் வாயளவு அன்புதான்!—பெண்ணே! மரகதம்! விரைவினில் வருவாய்! யான் அசௌக்கிய முறுகின்றேன். அரசர் மெய்யன்பு பாராட்டுகின்றன ராயின் யான் சௌக்கியமே!— (மரகதம் அணுகுகின்றாள்.)

சயதுங்கன்:—என் விலையுயர்ந்த மாணிக்கமே? சற்றே பொறுத்தி. நீ யென்னன்பினில் ஐயம் கொள்ளுமாறு யானென்ன செய்தேன்?

மனோமோகினி:—ஐயா! மகாராசா வவர்களே! யான் தங்களை வேண்டிக் கொள்ளுகின்றேன். நீங்கள் புறத்தே திரும்பிக் கமலாட்சி யம்மையைக் கருத்தினுன்னிக் கண்ணீர் வடிமின்! அப்புறம் உன்னை நினைந்தன்றே யான் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தேன் என்மின்!—

சயதுங்கன்:—நீயென் குருதிகொதிக்குமாறு செய்கின்றனை! இனி மேற் செல்லேல்!

மனோமோகினி:—சோழர்தலைவீர்! ஒருசொல். யான் தங்களைப் பிரிந்திருந்த ஒவ்வொருகணமும் ஒரு யுகமாய்த் தோன்றிற்று! தங்களுக்கோ என்னைப் பற்றிய ஞாபகத்தையே காண்கிலேன்.

சயதுங்கன்:—என்னன்பே! அப்படிச் சொல்லேல். இவ்வொரு விடயந்தவிர மற்றைய விடயங்களை யெல்லாம் உன்னிஷ்டப்படியே செய்கின்றேன்.

மனோமோகினி:—செய்கின்றீர்கள்! நிச்சயம்! உறுதிதானே?

சயதுங்கன்:—ஆம். அதற்குத் தடையொன்று மில்லை.

மனோமோகினி:—அப்படியானால் எனக்கொன்று செய்யுமாறு உத்தரவு கொடுத்தருளுவீர்.

சயதுங்கன்:—வேண்டுவதென்? சொல்லுதி விரைவில்.

மனோமோகினி:—யான் தங்கள் புதல்வி கலாவதியினிடத்தில் இவ்விடயத்தைக் குறித்து உசாவி அவள் கருத்தையறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

சயதுங்கன்:—ஓ! அது மிகவும் உத்தமமான காரியம்! அப்படியே செய்.

மனோமோகினி:—சரி, மரகதம்! நீ சென்று நம் பெண்மணி கலாவதியை யிவ்விடம் அழைத்துக் கொண்டுவா. (மரகதம் போகின்றாள்.

(அரசனைநோக்கி) நாம் சிறிது துயில்கொளப் போவமோ?

சயதுங்கன்:—அப்படியே. (இருவரும் போகின்றார்கள்.

---

## இரண்டாங்களம்.

இடம்: காஞ்சியிற் சோழனரண்மனையி னந்தப்புரம்.
காலம்: பிற்பகல்.
பாத்திரங்கள்: மனோமோகினி, மரகதம், சிலதியர்.

மனோமோகினி:—அடி! மரகதம்! என்ன! நீ அவளிடத்திலே சொன்னாயோ இல்லையோ? —இதைப்போய்ச் சொல்லிவிட்டு வருகிறதற்கு இவ்வளவு தாமதமென்ன?

மரகதம்:—என்ன ? அம்மா! இப்படிசசொல்லுகிறீர்கள்! நீங்களும் அரண்மனைக்கு வந்து மூன்று மாசமாயினவே! என்றைக்காவது நான் தங்களுடைய கட்டளையை மீறி நடந்ததுண்டா? என்னவோ? வழியிலே நம்முடைய சுகசரீரர் என்னைப் பிடித்துக்கொண்டு விடமாட்டேனென்று வம்பு பண்ணினார். அதுதான். வேறென்ன?

மனோமோகினி:—நீ யிதுவரைக்கும் அப்படி நடந்ததில்லை. அவள் இவ்வளவு நேரமாயும் ஏன் வரவில்லை யென்பதற்காகத்தான் கேட்டேன். மற்றைப்படி நீ அந்தமனிதன் சுகசரீரனிடத்திலே மனோமோகினியம்மாவுடைய காரியமாய்ப் போகிறேனென்று சொல்லியிருந்தால் உன்னை யுடனே விட்டுவிடுவானே?

*கலாவதி வருகின்றாள்.*

மரகதம்:—அதோ கலாவதி யம்மையவர்களும் வந்துவிட்டார்கள்!

மனோமோகினி:—சரி. மரகதம்! நீ போய் ஆப்புறமிரு. நான் கூப்பிட்டபோது வரலாம். (மரகதம் போகின்றாள்.

கலாவதி:—என்னை யிப்பொழுது என்னத்திற்காக வரவழைத்தீர்கள்? ஏதேனும் விசேடமுண்டோ? எனக்கேற்க அப்படி யொன்றுமிருப்பதாகத் தோன்ற வில்லையே!

மனோமோகினி:—எல்லாவிசேடமு மிருப்பதாக இனிமேல் உனக்குத்தெரியும். மற்றைப்படி அதென்னேடி யம்மா! கலாவதி! நானும் வந்து மூன்றுமாசமாயினவே! அதற்குள்ளே நீ நான்குதரமோ என்னவோ என்னிடத்திற்கு வந்திருக்கின்றாய்! அவையும் நான் சொல்லிச் சொல்லி யனுப்பினபிற்பாடு! என்ன இருந்தாலும் நீ இப்படி யிருக்கப்படாது.

கலாவதி:—பின்னே யெப்படியிருக்கவேண்டும்? நான் அதிகமாய் இங்கே வாராததனு லென்ன? நீங்கள் என்னிடத்திற்கு எத்தனைதரம் வந்தீர்களோ அத்தனைதரம் யானும் இங்கே வந்திருக்கின்றேன்!

மனோமோகினி:—சரி. அவை யெல்லாமிருக்கட்டும். உங்கள் தகப்பனர் என்னிடத்திலே சொன்னர். உனக்குக் கல்யாணம் பண்ணவேண்டுமாம். அதற்காக என்னிடத்திலே வந்து என்னேடுகூட ஆலோசனை செய்துகொண்டிருந்தார். அப்பொழுது எல்லாவற்றிற்கும் உன்னுடைய மனத்தையுங் கேட்டுத்தான் செய்யவேண்டுமென்று சொன்னேன். அதற்கும் அவர் ஆகட்டும் என்று ஒத்துக்கொண்டார்! அதைக்குறித்துக் கேட்கத்தான் நான் உன்னை இப்பொழுது இங்கே தருவித்தேன்!

கலாவதி:—நல்லகாரியஞ் செய்தீர்கள்!

மனோமோகினி:—மற்றைப்படி இந்தவிடயத்தில் உன்னுடைய இஷ்டமென்ன? சொல்வாய்.

கலாவதி:—யான் இப்பொழுது ஒன்றுஞ் சொல்லக்கூடிய நிலைமையிலில்லை! அப்படி யேதாவது இருந்தால் யான் நேரே யென்தந்தையாரிடத்திலே சொல்லுகின்றேன்.

மனோமோகினி:—நீயொரு பெண்ணுகையினலே ஒருவேளை உன் தகப்பனரிடத்திலே உன்னுடைய அபீஷ்டங்களையெல்லாம் அவ்வளவு தாராளமாய்ச் சொல்லிக்கொள்ளக்கொஞ்சம் லஜ்ஜையாயிருக்குமென்று நினைத்துச் சொன்னேன்! உனக்கு என்னிடத்திற்சொல்ல இஷ்டமிருந்தாற் சொல்லுவாய்.

கலாவதி :—*தாயில்லாப் பெண்கள் லஜ்ஜைப்பட்டால் தீருமோ ? தங்களுடைய இஷ்டகஷ்ட நிஷ்டூரங்களைத் தங்கள் தகப்பனாரிடத்திலேதான் சொல்லிக் கொள்ளவேண்டும். பிறரிடங்களிலே சொன்னால் அவர்கள் அநுதாபப் படுவார்களோ ?* (*பாடுகின்றாள்.*)

*பெற்றவரே தாம்பெற்ற வருமை தன்னைப்*
*பெரிதுமறி வார்கள்பிற ரறிகிற் பாரோ ?*
*மற்றுதிரக் கலப்பிலர்தாஞ் சிறிதுந் தேரார்*
*மாண்மனோமோ கினியம்மே வழுத்து வாயே!* (83)

மனோமோகினி :—*எப்படியிருந்தாலும் நாங்கள் அநுதாபப்படுவமா ? அம்மா ! உங்கள் தகப்பனார் மாத்திரம் என்னவோ அநுதாபப்படுவேன் என்ற நம்பிக்கை கொண்டுதான் என்னை உன்னிடத்திற்கேட்கச் சொன்னார் ! மற்றைப்படி நானாய் உன்னைக் கேட்கவில்லை !*

கலாவதி :—*அதுதான் நான் அப்பொழுதே சொல்லிவிட்டேனே ! மீட்டும் மீட்டுங் கேட்பானேன் ? ‘பாடிப்பாடிக்குற்றினாலும் பதரிலே யரிசி யில்லை’ என்னும் பழமொழி தங்களுக்குத் தெரியாததன்றே !*

மனோமோகினி :—(*கோபங்கொண்டு*) *ஏது ! நானுங்கொஞ்சம் இடங்கொடுத் துப் பேசினால் அதிகமாய்த் தலைகீழாய் விழுகின்றனையே ! இப்பொழுது உனக்குச் சுகசரீரருக்கு வாழ்க்கைப்பட இஷ்டமா இஷ்டமில்லையா ?*

கலாவதி :—(*பெரு மூச்செறிந்து விம்மி*) *அம்மா ! கமலாட்சி ! நீ இறந்த தன்பயனை இன்றுதான் அறிந்தேன் ! இன்றுதான் அறிந்தேன் !! என்னை இத்தனை துன்பங்களையும் இவ்விடமிருந்து அநுபவிக்கும்படி விட்டு விட்டனையே !*

(*இரங்கிப்பாடுகின்றாள்.*)

*கண்ணனைய தாயே கமலாட்சி யென்னைவிட்டு*
*விண்ணுலக நீதனியாய் மேவுதலு நேரேயோ ?* (84)
*விண்புகுந்த தாயேநன் மெல்லியலே யென்னெஞ்சம்*
*புண்பட்டு வாடிப் புலம்புகின்றேன் காணாயோ ?* (85)
*அன்றுதம யந்தி யரவின்வாய்ப் பட்டாற்போ*
*லின்று தமியனே னிவ்வரவின் வாய்ப்பட்டேன்*
*கொன்று தொலைக்கிற்பான் கொற்றவனே வாராயோ?* (86)
*சாதுவெனு மந்திரியார் தாமே வலியுறுத்த*
*மூதுரைகே ளாதுமனோ மோகினியைப் பற்றியவென்*
*றாதையே மீண்டுவந்து சற்றேனுங் காப்பாயோ ?* (87)
*ஆகம் பலமருவு மன்பில் பொதுமாதர்*
*மோகம் பிடித்தெந்தை மூதறிவெ லாமிழந்தா*
*ரேகப்பத் தெம்மானே யென்னைவந்து காவாயோ ?* (88)

கள்ளத் தனமாய்க் களையொன்று மேவியெங்கள்
கொள்ளும் புகழார் குலப்பயிர்க்குக் கேடிழைக்கு
நள்ளார் தமக்கேற நல்லார் தமக்கரனே
யுள்ளத் திருக்கு மொருபெரிய கோமானே
மெள்ளவெளிப் போந்ததனை வில்லுழவ நீக்காயோ ? (89)

மினைநேரு கின்ற விடையாரு மென்றன்
விமலாய்நி னுதன் விழையு
மனோமோகி நிக்க ணிகைதான்வி ரித்த
வலையிற்கி டந்து கதறி
யுனையேநி னைந்து மனநானி னைந்து
முருகாவு டைந்து தனியா
யனையேநி னைச மகளாயி ருந்த
வடியேன்வ ருந்த லழகோ ? (90)

(கூ) இராகம் - இந்துஸ்தானி காபி.
தாளம் - அடதாளசாப்பு.

பல்லவி.

இவள்கைச் சிக்கி வருந்த லாமோ
இயம்பிடுவாய் - சகதீசா

அநுபல்லவி.

பவநாசா என்மனம் வாடுதலைப்
பார்த்தே யென்னைக்காவாயோ நான் (இவள்கைச்)

சரணம்.

மதியை மானைச் சிரத்துங் கரத்தும்
வைத்துக் கொண்ட வள்ள லேநற்
சதியுந் தாள மூந்தவ முரு
தாண்டவஞ் செய்யுஞ் சங்கர னேநான் (இவள்கைச்)

மனோமோகினி :—அடி ! என்ன நீலித்தனம் ! என்ன நீலித்தனம் !! இவ்வளவு பொய்யழுகையும் நீ எங்கிருந்தேடி கற்றுக்கொண்டாய் ? "வஞ்சகத் திற்குப் பொதுமாதர்" என்று பரம்பரையாய் வழங்கிவந்த வசனமும் இன்றோடு பொய்யாய்ப் போய்விட்டதே !—யான் என்ன உன்னை அடித்தேனா ? வைதேனா ?

---

பாட்டு 89. களை = மனோமோகினி. இஃதொரோவோரடி மிக்கு வந்த கொச்சக வொருபோகு.

„ 90. இதனை 'மணிமாலம்' என்பர்வடநூலார்.

கலாவதி:—உன்கொடூரமொழி யொன்றே போதுமே! நீ இனி அடிக்கவும் வையவும் வேண்டுமா? இவையெல்லாம் உன் குரூரமொழி ஒன்றிற்கு ஈடாகுமா? என்னை ராசபுத்திரி யென்று சிறிதேனும் யோசியாது நீ ஒரு பேதைக் கணிகை என்னை அதட்டினையே! அப்பொழுது மாத்திரம் என் தந்தையார் என் பக்கத்திலே இருந்திருந்தால் உனக்குத் தக்கபடி செய்திருப்பேன்! நீ யென்னைச் சுத்தவீரர் சயதுங்கர் மகளென்று நினைத்தாயல்லையே? இனி மற்றைப்படி உன் அறிவின்மையை யென்னென்றுரைப்பேன்!! என்னைக் கோமகளெனக்குறியாது அடாதவார்த்தைகளெல்லாஞ் சொல்லியதேயன்றி என்னைக்கேவலம் துர்க்குணமே யோருருவெடுத்தனைய மூடசிகாமணிக்கு மணமாலையிடும்படி கூறியதன் புத்திசாலித்தனத்தைக் குறித்து யான் யாதுசொல்லப்போகின்றேன்! நீதானோ என் தந்தையார் சயதுங்கருக்கு மனைவியாகி 'மகாராணியார்' என்னும் பட்டம் பெறத்தக்கவள்?

மனோமோகினி:—சீ! சீ!! நிறுத்து அவ்வளவோடே! அதிகமாக மிஞ்சாதே!— நீ யென்னைப்பழித்தது மாத்திரமன்று; உன்னைப்பெற்று இதுகாறும் வளர்த்துவந்த தந்தையார்க்கு உதவிசெய்த மகாப்பிரபுவும் உங்களுக்கு நெருங்கிய பந்துவுமாகிய சுகசரீரரையும் பழித்தாய்! நீ யாரைப்பழித்தாயோ அந்தச் சுகசரீரருக்கே உன்னை மாலையிடும்படி செய்கின்றேன் பார்!—

கலாவதி:—அது சகதீசனாலும் முடியாதகாரியம்! அப்படியிருக்க, அஃதொரு சாமானியப் பொதுமகளாலேயோ முடியப்போகின்றது? அதைத்தான் பார்க்கவேண்டும்! ஈசனே! "தர்மமே சயம்" "சத்தியமே நித்தியம்" என்னும் மகாவாக்கியங்களின் உண்மையை இந்தவிடயத்திலே தான் அறியவேண்டும்! இனி யொருவிநாடியேனும் இவ்விடமிருக்கப்படாது! இவளோ பழிக்கும் கொலைக்கும் பயப்படாத பாதகி!

[கலாவதி போகின்றாள்.

மனோமோகினி:—நான் இந்த அதிகப்பிரசங்கியை நம்முடைய சுகசரீரரோடு மணம் புணர்த்தாவிடின், யான் மனோமோகினியல்லள்!—என்ன ஆச்சரியமாயிருக்கின்றது! இந்த அநாதைச் சிறுமி என்ன அதிகாரமாய்ப் பேசுகின்றாள்!—ஏடி, கலாவதி! என்னையரசன் மனைபாட்டியாக வெண்ணாது ஒரு பேதைக் கணிகையென்று சொன்னாய்?

* கோவை வசப்படுத்திக் கொண்டமனோ மோகினியின்
றாவை யறுத்தபின்னர் நன்குனக்குச் சொல்லுகிற்பாள்
பாவையவள் வல்லமையைப் பார். (91)

---

பாட்டு 91. முதற்பொருளுக்கு 'மனோமோகினி'யை யெழுவாயாக்கிச் 'சொல்லுகிற்பா' ளைப் பயனிலையாக்கிப் 'பாவையை' விளியாக்குக, இரண்டாம் பொருளுக்கு 'மனோமோகினி' யை விளியாக்கிப் 'பாவை' யை யெழுவாயாக்கிச் 'சொல்லுகிற்பா'ளைப் பயனிலையாக்குக,

* இதனை யுற்றுநோக்கவிருபொருள் பயக்கும்

இன்னும் அதுமாத்திரமா? நீ சுகசரீரன் கைவசப்பட்ட பிறகு அந்தப் பிரபுவினிடஞ் சொல்லி உன்னை என்ன பாடெல்லாம் படுத்திவைக்கிறே னென்று பார்! என்னை விரோதித்துக்கொண்ட மட்டும் இனிமேல் தப்பு கிறதா? ஊஊம்! அப்படியா சங்கதி?—எப்பேர்ப்பட்ட கன்மனத்தையுங் கரைத்துவிட்டேன்! அப்பேர்ப்பட்டவள் இந்த அற்ப ஸ்திரீயின் மனத்தை யென் வசப்படுத்தாவிடில் என்ன பிரயோசனம்? இதைத்தான் ஒரு கைபார்க்கவேண்டும்! [மனோமோகினி போகின்றாள்.

---

## மூன்றாங்களம்.

இடம்: காஞ்சியின் மந்திரியார் வீடு.

காலம்: இரவு.

பாத்திரங்கள்: சிதாநந்தன், சத்தியப்பிரியன்.

**சிதாநந்தன்:**—அப்பா! சத்தியப்பிரியா! இந்நாட்டு மந்திரியார் மேதாநிதி யவர்கள் எவ்வளவு நல்ல மனிதராயிருக்கின்றார்! பார்! நாம் இருவரும் பகையரசனாகிய பாண்டியனது நாட்டுப் போர்வீரரென்று சொல்லியும் வெகு அன்புடன் நம்மை யுபசரித்தார்! நம்மை யிவ்வரசனிடத்துக் காட் டிக்கொடுப்பதில்லையெனவும் வாக்களித்தார்! ஆகா! இவருக்குப் பொது வாய் மனிதர்கள்மேலிருக்கும் பிரீதி மிகவும் அதிகமென்றே தோன்று கின்றது? இன்னும் மகா ஞானமுடையவர்! குணமுடையவர்! வாய்மை யாளர்! இத்தகைய அறிஞர் பெருமானார் இந்தச் சயதுங்கராசனை எப் படி ஆபத்துக்காகாத அன்பில்லாப் பொதுமாது மனோமோகினியி னுடைய வலையில் விழும்படி விட்டார்? எனக்கென்னவோ இது காதிற் பட்டது முதல் இறும்பூது விளைத்துக்கொண்டே யிருக்கின்றது.

**சத்தியப்பிரியன்:**—இங்குச் சுகசரீரனென்று ஒருபாவி யிருக்கின்றானாம். அவன்தான் இவ்வரசனை அவளுடைய காமவலையினகப்பட வைத்து விட்டனனாம்.

**சிதாநந்தன்:**—ஆமாம். நாமிருவரும் அன்று பூஞ்சோலையிற்கூடப் பேசிக் கொண்டிருந்தோமே யிதைப்பற்றி!

குலாந்தகனும் மரகதமும் வருகின்றார்கள்.

அதோ மந்திரியார் குமாரர் யாரோ ஒரு மாதோடும் வருகின்றார். நாம் சற்று விலகிநிற்போம். (இருவருமொளித்துக் கொள்கின்றனர்.)

**குலாந்தகன்:**—அடி! மரகதம்! யான் தான் சொல்கின்றேனே! அந்தப்படி நீ செய். அதற்குத் தக்கபடி நான் உனக்கு மரியாதை செய்கின்றேன். அதைக்குறித்து நீ யோசியாதே! என்ன? (முகஞ்சாய்த்து மரகதத்தை நோக்குகின்றான்.)

**மரகதம்:**—தாங்கள் சொல்லியபடி நான் எப்படியாவது நாளைச் சாயங்காலம் கலாவதியை வசந்தச் சோலையிற் சம்பங்கிக்கொடிமண்டபத்திற் கருகிற் கொண்டுவந்து விட்டுவிடுகிறேன். அதற்குத் தடையொன்றுமில்லை. மற்றைப்படி நான் தங்களுடைய உதவியைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றேன்.

**குலாந்தகன்:**—இப்பொழுது நீ அவளைக்கொண்டுவருகின்றேனென்று வாக்குத் தத்தஞ்செய்ததற்காக இதோ இந்த மோதிரத்தை வைத்துக்கொள். இனி நீ அவளைக்கூட்டிக் கொணர்ந்துவிட்டபிறகு நிரம்பவெகுமதி கொடுக்கின்றேன். அதைப்பற்றி யோசியாதே! என்ன! ஆகட்டுமா?

**மரகதம்:**—ஆகட்டும்.

[மரகதம் மோதிரத்தை வாங்கிக்கொண்டு போகின்றாள்.

**குலாந்தகன்:**—நாம் இப்பொழுது வெகுமதி கொடுத்திருப்பதனாலே இவள் கட்டாயமாய்க் கலாவதியைச் சோலைக்குக் கூட்டிக்கொண்டுதான் வரவேண்டும். பார்த்துக்கொள்வோம். [குலாந்தகன் போகின்றான்.

**சிதாநந்தன்:**—ஐயோ! பாவி! கொடிய குலாந்தகா! அப்பொழுதே உன்னுயிரை யென்வாளிற்கு இரையாக்கியிருப்பேனே! ஆகா! உன்னை மந்திரிமகனென்றன்றோ விடுத்தேன்? பரமசாதுவான அவருடைய பேரைக் கெடுக்கவோ நீ யிவருக்குப் புத்திரனுதித்தனை? ஆகா? என்ன தந்திரம்! என்னயோசனை! இவ்வளவுங் கவனித்துக் கேட்டனையோ? சத்தியப்பிரியா! இத்தகைய மாபாதகர்களைக் கொன்றாற்றானென்னை? பாவமுண்டென்று நினைக்கின்றனை? ஒரு நாளுமில்லை.

**சத்தியப்பிரியன்:**—அப்பா! சிதாநந்தா! பதறாதே! எந்தக் காரியத்திலும் அமைதிவேண்டும். (பாடுகின்றான்.)

அமைதி யற்ற காரிய மனைத்துஞ்
சமையா வென்றே சாற்றினர் புலவர். (92)

ஆதலால் நீ இந்த அற்பர்கள் யோசனைக்காக வருத்தப்படுவானேன்? (பாடுகின்றான்.)

* "நெறியி னீங்கியோர் நீரல கூறினு
மறியா மையென் றறிதல் வேண்டும்" (93)

அவையெல்லாம் நமக்கு மிகவும் நல்லனவே. மேலும் நீ கலாவதியைக் காணுகிறதற்கு அஃதொரு நல்லசமய மாயிற்றே! அப்படியிருக்க மனவருத்தப்படுதல் சிறிதும் நியாயமில்லை.

**சிதாநந்தன்:**—என்ன! சத்தியப்பிரியா! நீ இப்படிச்சொல்லுகின்றனை? இந்தக் கொடியபாவி என் அருமைக்கலாவதியைக் கெடுக்கப்பார்க்கின்றான்! இவன் கெடுக்கப்போகிற செய்தி தெரிந்திருந்தும் இவனை யொன்றுஞ் செய்யப்படா தென்கின்றனையே! ஏது கலியுக யுதிட்டிரன் நீதானோ?

---

* சிலப்பதிகாரம்.

சத்தியப்பிரியன்:—என்ன? சிதாநந்தா! (பாடுகின்றான்.)

† "பொற்கலத் தூட்டிப் புறந்தரினு நாய்பிற
ரெச்சிற் கிமையாது பார்த்திருக்கு - மச்சீர்
பெருமை யுடைத்தாக் கொளினுங் கீழ் செய்யுங்
கருமங்கள் வேறு படும்." (94)

என்பதையுணர்ந்த நீகூட இவ்வாறு பேசுகின்றனை! உனக்குத் தெரியாத தொன்றுமில்லையே! அப்படி யிருக்க உனக்கிஃதேன் தெரியவில்லை? — நாமிருவரும் அவர்கள் வருகின்றதற்குச் சிறிதுநேரம் முன்னரே வயந்தச் சோலைக்குப்போய்க் காத்துக்கொண்டிருந்து குலாந்தகனால் உன்னுயிர்க் கலாவதிக்கு ஒருவிதக்கேடும் உறுவண்ணம் நாம் ஏன் தடுத்தல் கூடாது?

சிதாநந்தன்:—ஆ! அப்படியே செய்வோம். (தனக்குள்) அப்பொழுது என்னருமைக் கலாவதிக்கிள்ளையுடன் கொஞ்சி விளையாடி நெஞ்சம் ஆறுவேன்!

சத்தியப்பிரியன்:—மற்றைப்படி நாம் நித்திரைசெய்யும் நாழிகையாயிற்று. இனிமேற்றூங்கவேண்டும், நாம்போவோம் வா.—[மௌனம்] என்ன? சிதாநந்தா! நீ யிப்பொழுது வருகின்றனையோ இல்லையோ?

சிதாநந்தன்:—அப்பா! சத்தியப்பிரியா! எனக்குத் தூக்கமேவரவில்லை. நீ வேண்டுமென்றாற் போய்த்தூங்கு. எனக்குத்தூக்கம் வந்தவுடனே வருகின்றேன்.

[சத்தியப்பிரியன் போகின்றான்.

(சிதாநந்தன் உலாவிக்கொண்டே பாடுகின்றான்.]

அம்புலியே நின்னை மிடுகுறியென் றேபலரு
மறையா நிற்பச்
செம்பவள வாயாரைத் தோயார்கா ரணக்குறியாச்
செப்பா நின்று
ரும்பருலா மம்புல்வி யாதலினு மென்றுனகட்
டொருமான் கண்டு

பாட்டு. 94. சீர் = ஈண்டுஉவமவுருபு. இலக்கணவிளக்க முடையார் தமது, அணியியல் 23-ஆம் சூத்திரத்துட் இன்னனபிறவும்' என்றதன்கணடக்கிக்கொள்ளுமாறு கூறியிச் செய்யுளையேயதற்குதாரணமாகவுங் காட்டுதல் காண்க.

† நாலடியார்.

மம்பரத்தி னம்புலியென் றறியாம னின்கைப்பட்
டயர்கின் றேனே! (95)

[மௌனம்]

கலைமதிநீ கலாவதியின் முகத்திற் கொப்பாய்க்
கருதிநின்று கலைமதியாங் காரணத்தா
லலையுநினை யானவிய லறிந்த நூலோ
ரப்பெயர்கொண் டுறுதினமு மழைக்கிற் பாரோ! (96)

[மௌனம்.]

கற்றடு கலைக ளடைந்தும் பே ரிடத்தைக்
கான்டக வடுக்தும்வின் மதியே
நற்றமி ழினர்நின் னுடற்குறை நாடி
நாரியர் முகத்திற்கொப் புரையாப்
பற்றெறியிற் சினவி மாழ்குறீஇப் பொறுமை
பிடர்பிடித் துந்தலா னன்றோ
மற்றொரு பாவ மறிகிலம் புயத்தை
வாட்டுநின் றன்மையிது நன்றே! (97)

[மௌனம்.]

இரவிதன்னொளி மிகவுமெய்திநன்
கிலகுகின்றத னினியசோமநின்
கரவுநின்விட துணருமோர்ந்தனன்
கனியுமன்பொடு கனவிநாடொறும்

---

பாட்டு 95. 96, 97. சந்திரோபாலம்பநம்.

,, 95. பிரிநிலை நவிற்சியணி. இதனை 'நிருத்தி' யணியென்பர் வடநூலார். அம்புலி = நீர் உடையவன்.

,, 96. கலைமதி = கலைகளையுடைய சந்திரன்; கலைந்தமதியை யுடையவன்; வினைத்தொகை நிலைக்களத்துப்பிறந்த அன்மொழித் தொகை. பிரிநிலைநவிற்சியணி.

,, 97. ஆதியிற் றமிழ்ப்புலவர் மாதரார் முகத்திற்கு, சந்திரனே! நின்னையும், தாமரையையும் உவமைகூறிப் போந்தபின்னர், நின்பாற் குறை நிகழக்கண்டு அன்னோர்நின்னை உவமை கூறுதலொழிந்து தாமரையையே உவமைகூறினாராக, அதுகண்டு பொறாமை மேற்கொண்டு நீ ஒரு பாவமு மறியாத தாமரையை வாட்டுவான்புக்கனை யிஃதென் கொலோ? நீ யடைந்தகலைகள் என்னையின? நீ பெரியோரை யடுத்த தனாற் போந்தபயன் யாதுகொல்? என்பதாம்.—ஈண்டுப் பெரியோரை யடுத்தல் சிவபெருமான் முடிக்கட் டங்குதலாம். தற்குறிப்பணி.

விரவுகாதலி யெனமொழிந்திடும்
விமலபத்மினி தனையிழுத்தனை
பரவுகன்னியர் நினையிகழ்ந்தனர்
பழியுமுற்றனை யொழிகதீயனே! (98)

[மௌனம்.]

பூமியினை நாளும் புரிந்துவலம் வந்துமிக
நேமமுட னேகடலி னீர்குடைந்துந் - தாமமுறத்
தான்மித் திரனொருநாட் சார்ந்தடைந்துந் தக்கைகற்குந்
தேன்மொழியா ணெற்றித் திலகம்போற் - கூன்மருவுந்
தேகங் களங்கஞ் செறிந்துமிணை யாகாம
லோகோ வொளித்திடுத லுத்தமமென்-றேகம்பத்
தீசர்சடைக் காடுற் றெழிலுகங் கண்டங்கோ
நாசமுற்றே மென்று நடுநடுங்கித்-தேசிழந்து
வேற்றுருவங் கொள்ள விழைந்துதவ வெண்ணிறமேய்க்
கூற்றுவனைத் தப்பிக் குறுகியுட-லேற்றமணி
வைரவுரு வேய்ந்து வதிந்தாலும் யானறிவேன்
கைரவத்தின் காதலனீ காண். (99)

[மௌனம்]

கனின்வலையி லென்னகப்புட் கொடுதனது மனத்தூறுதன்
கண் விடுத்த
புனிதிகைக் காஞ்சிநகர்க் கோமகடன் கருங்கூந்தல்
புரைபு யல்காள்
சனிதிகழுஞ் சந்திரன்முன் மதனனுக்குத் துணையாயென்
சடலந் தன்னைத்
தவிராது காய்கவினுற் றண்பனிநீர் துளிக்கிற்பீர்
தயைமீக் கூர்ந்தே. (100)

[மௌனம்.]

---

பாட்டு 98. 99, சந்திரோபாலம்பநம்.

,, 98. ஐய! சோம! நீவிடப்பயலாந் தன்மையையும் வஞ்சகனாந் தன்மையையும் அறிந்தேன். நீ சூரியன்பால் ஒளிபெற்று அவன்றன் அன்புடைய காதலியாகிய பரிசுத்தமான பதுமினியை (தாமரையாகிய மகளிரை) நின்றன் கிரணக்கையாற் பற்றி யிழுத்தனை, அவள் நின்கைகளைப் புறத்தே தள்ளி இதழ்க்கதவம் மூடிக்கொண்டனள். அதுகண்ட கன்னிப்பெண்கள் நின்னை வணங்குதலொழிந்து இகழவுந் தலைப்பட்டனர். நீ பழியுமெய்தினை. ஆதலால் தீயநீ யென் முன்னர் நில்லாதொழிக என்பதாம். தற்குறிப்பணி. கற்பனைக்கேற்பக் கன்னிப்பெண்கள் பிறைதொழும் வழக்க மிக்காலத் தொழிந்தமையு முணர்க.

,, 99. தற்குறிப்பணி, இதற்கு எதிர்நிலை யணியுறுப்பு. மித்திரன் = சூரியன்.

,, 100. எதிர் நிலையணி. இதற்குருவக முறுப்பாம். கருத்துடையணி.

ஐயோ! கலாவதி! யான் உன்னோடுகூடி விளையாடும் பாக்கியம் பெற்றுளேனோ? ஏ! கலாவதீ! நீயே யென்னுயிர்! நீயே யென்னறிவின் பிரகாசம்! நீ யென்பக்கலிராவிடில் யான்காணு மொளியும் ஒளியா? யான் அடையும் இன்பமும் இன்பமா? யான் கேட்கும் கானமுங் கானமா?

[மௌனம்.]

ஓ! கலாவதி! நீ யென்னைக்குறித்தோ விரகதாபமடைந்தாய்! என்மீது காதல்கொண்ட உத்தமி கலாவதிக்கோ கேடு நினைந்தான் பாவி குலாந்தகன்! (பாடுகிறான்)

ஆக லாவதின்றெதென் றறைந்தன
ருக லாவதி யேநினக் கன்னவ
னன்ன பாதக னலைந்துருவனை
முன்னை யான்விரைந் தோடிப் புரக்கிற்பேன். (101)

மூன்றும் அங்கம் முற்றிற்று.

---

# அங்கம்—ச.

---

## முதற்களம்.

இடம்: காஞ்சியில் வயந்தச்சோலை.
காலம்: பிற்பகல்.
பாத்திரம்: குலாந்தகன்.

குலாந்தகன்:—(தனக்குள்) நமது விகடவசநர் அன்றைக்குச் சொல்லிக் கொடுத்த யுத்திக்குத்தான் நமது அப்பா வைதனர்! இன்றைக்கு அவர் சொல்லிக்கொடுத்த இவ்யுத்திக்கு என்ன சொல்லப்போகின்றார்? பார்ப்போம். இஃதென்னை! தினமும் வருகின்ற நேரமாயும் ஏன் கலாவதி வந்திலள்? ஒருவேளை அம்மரகதம் பொய்க்காயினும் நம்மிடத்திற் சொல்லிவிட்டுச் சும்மா இருந்துவிட்டனளோ? சீ! சீ! அங்ஙனமிருப்பாளா? நாம் ஒருமோதிரம் அவட்குப் பரிசு கொடுத்திருக்கின்றோம். இன்னுமவளைக் கூட்டிக்கொண்டுவந்து விடுகிறவிடயத்தில் அதிக மரியாதை செய்வதாகவுஞ் சொல்லியிருக்கின்றோம். அப்படியிருப்பதனாலவள் சும்மா இருக்கமாட்டாள்.

சிதாநந்தனுஞ் சத்தியப்பிரியனும் வருகின்றார்கள்.

அதோ அந்த மதுரைவீரர்களிருவரும் வருகின்றார்களே! இங்கே யெதன் பொருட்டு அவர்கள் வரவேண்டும்? ஒரு வேளை நமது தகப்பனார் அவர்களை யிவ்விடமனுப்பி நம்மை யழைத்துவரச் சொன்னாரோ? அப்படியிருந்தாலு மிருக்கக்கூடும். எல்லாவற்றிற்கும் அவர்களைக் கேட்போம். சமீபத்தில் வரட்டும்.

சிதாநந்தன்:—ஏ! சத்தியப்பிரியா! பார்த்தனேயோ? நாம் எவ்வளவு சீக்கிரமாகப் புறப்பட்டு வரல்வேண்டுமென்று முயற்சி செய்தும் நமக்கு முன்னே குலாந்தகன் வந்துவிட்டனனே! இவனல்லனோ காரியத்திற் கண்ணாயிருப்பவன்!

குலாந்தகன்:—ஏனையா! உம்மிருவரையு மெங்கள் தகப்பனார் மேதாநிதியவர்களிவ்விடமனுப்பி யென்னையழைத்து வரும்படி சொன்னாரோ? அல்லாமற் போனால் நீங்களிவ்விடத்திற்கு எதற்காக வந்தீர்கள்? சீக்கிரஞ் சொல்லுங்கள். ஐயா! உங்களுக்குக் கோடிபுண்ணியமுண்டு! என் தகப்பனாரென்னை யெங்கும் போகக்கூடாதென்று சொல்லியிருக்கின்றனர்! அப்படியிருக்கயானவருக்குத் தெரியாம லோடிவந்துவிட்டேன்! அதற்காக அவரென்னவாவது என்னைக் கோபித்துக் கொண்டனரோ?—கொஞ்சஞ் சொல்லுங்களையா!—உங்களை நமஸ்காரம் பண்ணுகின்றேன்.

(சத்தியப்பிரியனை வணங்குகின்றான்)

சத்தியப்பிரியன்:—என்னஐயா? பைத்தியக்கார மனுஷராயிருக்கின்றீர்! எழுந்திரும்! எழுந்திரும்!! என்ன? உமக்குப் புத்திசித்தி யிருக்கின்றதா இல்லையா?

குலாந்தகன்:—என்னஐயா? அன்றைக்குக் கலாவதி யென்னை யெறிந்து விழுந்ததுபோல இன்றைக்கு நீரும் வைகின்றீரே!

சிதாநந்தன்:—அன்றைக்கவர் புத்தியில்லாமலா கலாவதியைத் தாளில் வணங்கினார்! என்னவோ அவரும்மை வணங்கிக் கேட்கின்றார். அவர் கேட்கின்றதற்குத்தான் விடை பகருமே!

குலாந்தகன்:—அதுதான் ஐயா நான்கேட்கிறது. எங்களப்பா என்னைக் காணவில்லையென்று வைதனரோ?

சத்தியப்பிரியன்:—இல்லை. இல்லை. உம்மை வையவில்லை.

குலாந்தகன்:—அப்படியானாலுங்களிருவருக்கும் இங்கென்ன வேலை? நீங்கள் வீட்டிற்குப்போங்கள்!

சத்தியப்பிரியன்:—நாங்கள் ஏனையா வீட்டிற்குப் போதல்வேண்டும்? இங்கேயிருந்தாலென்ன? நீர் மாத்திர மிருக்கின்றபோது நாங்களிங்கே யிருக்கப்படாது?

குலாந்தகன்:—இஃதிராசபுத்திரி கலாவதி தன்றோழிமாரோடு கூடிவிளையாடும் வசந்தச்சோலையாயிற்றே! இதனுள்ளே அன்னியர்கள் பிரவேசிக்கக்கூடாதே! அப்படியிருக்க நீங்கள் வந்ததுமன்றிச் சீக்கிரம் போகவுமாட்டோமென்கின்றீர்களே! அரசன் மகள் கலாவதி வருஞ் சமயமாயிற்றே!

சிதாநந்தன்:—போமையா போம். உமக்கேதாவது வேலையிருந்தாற் போய்ப் பாரும். நாங்களிவ்விடம் விட்டு இப்போதைக்குப் போகமாட்டோம்.

குலாந்தகன்:—பின்னே நீங்க ளெப்பொழுதுதான் ஐயா போவீர்கள்?

சிதாநந்தன்:—யாங்கள் செல்ல வெகுநேர மாகுமையா!

சத்தியப்பிரியன்:—அஃதிருக்கட்டும். இவர்மாத்திரங் கலாவதி வரும்போதிருக்கலாமோ? அதைக் கேளப்பா!

குலாந்தகன்:—யான் மந்திரியார் குமாரனுகையினலே யிருக்கலாம். நீங்களெல்லாம் அன்னியர்களோ?

சத்தியப்பிரியன்:—என்? யாங்களும் மந்திரியார் விருந்தாளிகள் தாமே!

குலாந்தகன்:—சரி. நீங்களிப்போது போகப் போகின்றீர்களா இல்லையா?

சிதாநந்தன்:—அதுதான் யானப்போதே சொன்னேனே! யாங்களிப்போது போகப் போகின்றதில்லை.

குலாந்தகன்:—அடேயப்பா! நீங்கள் போகாமற்போனுல் நான் போய்விடுகின்றேன்! நீங்களிவ்விடமிருந்து அவதைப் படுங்கள்! எனக்கென்ன?

சிதாநந்தன்:—உமக்கொன்றுமில்லை. நீர் சுகமாய்ப் போய் வாரும்.

குலாந்தகன்:—(தனக்குள்) நீர் இங்கே சம்பங்கிக்கொடி மண்டபத்திலேயிருந்து விட்டதனுலே கலாவதி யிவ்விடத்திற்கே வருவாளென்று நினைத்தீரோ? நம்முடைய மாகதம் நாம் இவ்விடத்தில்லாதிருப்பதைத் தெரிந்தவுடனே எங்கே நம்முடைய குலாந்தகர் எங்கே நம்முடைய குலாந்தகர் என்று தேடிக்கொண்டுவந்து நாம் இருக்குமிடத்திற் கலாவதியைக் கொண்டுவந்து விடாமற் போகிருளா? பார்த்துக்கொள்வோம்.

(குலாந்தகன் போகின்றான்.)

சிதாநந்தன்:—அப்பா! சத்தியப்பிரியா! இத்தகைய மூடனை யானெங்கும் கண்டதில்லை.

சத்தியப்பிரியன்:—மூடனுயிருந்தாலும் எவ்வளவு தந்திரமப்பா! ஆச்சரியமாயிருக்கின்றதே!

சிதாநந்தன்:—எனக்குத் தோன்றுகின்ற மட்டில் இஃதவனது சொந்தயுத்தியாயிருக்கமாட்டாது. யாராவது சொல்லித்தான் இவ னின்னணஞ் செய்திருத்தல்வேண்டும். அன்றி இவனுக்கிவ்வளவு தந்திரமாவ திருக்கவாவது! அஃதிருக்கட்டும். சத்தியப்பிரியா! யாம் நேற்றிவ்விடத்திற் கண்டெடுத்த அப்பட மெங்கே?

சத்தியப்பிரியன்:—உன்னிடத்திலே தானே கொடுத்தேன்! நாம் சோலைக்கு வரும்போதுகூட உன்னிடத்திற் கண்டேனே!

சிதாநந்தன்:—ஆமாம். எங்கு வைத்திருக்கின்றேன்? (உடைகளிற்றேடுகின்றான்.) அம்ம! இதோ இருக்கின்றது. இது நிற்க. சத்தியப்பிரியா! நீ சென்று இந்தக் குலாந்தகன் அவ்விடம் போயினனே! அங்கே யென்னசெய்கின்றன னென்று பார்த்துக்கொண்டு அவ்விடமே யிரு. யா னிவ்விட மிருக்கின்றேன். மற்று அவ்விடத்தி லேதேனும் விபரீதம் நடக்குமாயினுடனே யென்னை யழைத்தி!

சத்தியப்பிரியன்:—இளவரசே! உன்னைவிட்டுச் சிறிது நேரமும் பிரியாத யான் இப்பொழுது உன்னைத் தனியேவிட்டுப் போதல்வேண்டுமே! எவ்வணம் பிரிந்து நிற்பேன்? இது பகையரசன் நகராயிற்றே!

சிதாநந்தன்:—என்ன? யோசனை செய்கின்றனை? அதனாலொன்றும் கேடில்லை. நீ கடிதிற் செல்லுதி! யான் வேறெங்கும் போவேனல்லேன். ஈண்டே யிருக்கின்றேன்! பயப்படாதே! போய்வருகின்றனையா? தாமதியாமற் போ. [சத்தியப்பிரியன்போகின்றான்.

(சிதாநந்தன் சிறிதுநேரம் மௌனமாயிருந்து அதன்பின் உலாவுகின்றான்.)

(தனக்குள்) கலாவதியோ இது காறும் வந்திலள்! ஆ! என் கண்மணியே! எப்பொழுது வந்து சேருவாய்? ஏ! மாணிக்கவிளக்கே! எப்பொழுதென் மயக்க விருளை யொழிப்பாய்?

(ஒரு பாதிரிமர நீழலின்கண், வீற்றிருக்கின்றான். சிறிதுநேரம் மௌனமாயிருந்தபின்னர்ப் பாடிக்கொண்டே யப்பாட்டை மணலி லெழுதுகின்றான்.)

இன்னிசைத் தேன்மழை பெய்யு மகதியே யென்றனுள
மென்னும் பொழிலினி லாடுங் கலாபியே யிற்றெனை யான்
பன்ன முடியா வுவதிகையே நன்மணப் பாதிரியே
சொன்ன விலைவயிற்றி னுப்பனுற் றூயெதிர்தோன்றுதியே. (102)

(மணலிற் சாய்ந்துகொள்ளுகின்றான்.)

ஐயோ! யான் நேற்றிரவு முழுதுங் கண்விழித் துறங்கா திருந்தமையினாலே யென்னை நித்திரை மயக்குகின்றதே! இதற்கென்செய்வது? ஆகா! யானுறங்கும்போது நீ வருகிற்பாயேல் நீ வந்ததை யா னெவ்விதமறிவேன்?— நின்னை யானிப்பொழுது காணத் தவறினேனாயின் என்னுயிர் நிற்குமோ? [மௌனம்.] யானிப்பொழுது சிறிது உறங்கிப்பின் என்றன் கட்டழகியாகிய கலாவதி தன்றோழிமாரோடு வரும்போது நிகழுமவடன் காற்சிலம்பொலிகேட்டு விழித்துக் கொள்வேன்! (பாடுகின்றான்.)

முருகு கமழு முல்லை மொய்யரும் பென்னு மூரற்
பருகு சுவைய தாகும் பாணிதழ் மின்ன டைக்குப்
பெருகு மிணைய தாகப் பேசுவல் வாழ்க வீண்டுக்
குருகி ரரிவை போர்தாற் கூவுமின் னன்பு கூர்ந்தே. (103)

[மௌனம்.]

சீ! சீ!! என்னைமடமை யிவ்வண்ணம்! என்னருமைத்தலைவி கலாவதியைக்காணாது தூங்குவேனோ?—

(எழுகின்றான்; உலாவுகின்றான்; மரங்களின் பட்டைகளினும் இலைகளினும் 'கலாவதி' 'கலாவதி' யென்றெழுதுகின்றான்; அதன்பின் பாடுகின்றான்.)

---

பாட்டு. 102. இது நடுவெழுத்தலங்காரம். நடுவெழுத்துக்களெல்லாம் பாட்டிலே தடித்த வெழுத்துக்களாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன. மகதி: நாரதன்கையாழ், கலாபி = மயில், சொன்னவிலைவயிற்றி னுப்பனுற்றாள் = கலாவதி.

பாட்டு. 103. இதனை 'மாலினி' விருத்தமென்பர் வடநூலார். எதிர்நிரனிறை. பாண் = தேன்.

அன்றென் படங்கொண் டகங்குழைந்த மாதரள்
மன்றலே யீங்கு வருமே லவள்வாயி
னின்றெழுந் தீங்கிளவி கேளாமோ நெஞ்சே!
நன்றுதன் காத னவின்றிடுமத் தையலாள்
மன்றலே யீங்கு வருமே லவள்வாயி
னின்றெழுந் தீங்கிளவி கேளாமோ நெஞ்சே!
என்றன் மனத்தை யெடுத்தினிது சென்றவள்
மன்றலே யீங்கு வருமே லவள்வாயி
னின்றெழுந் தீங்கிளவி கேளாமோ நெஞ்சே! (104)

[மௌனம்.]

(மறுபடியும் வீற்றிருந்து பாடுகின்றான்.)

இதயமென் கோயிலி லிருக்குந் தேவியே
யதைவிடுத் திட்டுவே றகலு கிற்றியேன்
மதனெனும் பகைவன்றான் வந்த ழிப்பனு
னிதழுநீ யாயிடை நிலைத்தல் வேண்டுமே. (105)

[மௌனம்.]

(மீட்டும் மணையிற் சாய்ந்துகொண்டு பாடுகின்றாள்.)

சுந்தர மாமயி லனையாய்!
சிந்துர வாணுத லினளே!
கந்தர நற்குழ லுடையாய்!
வந்தெனை யாளலு முளதோ? (106)

[மௌனம்.]

சூரிய காந்தமென் போதே!
சுடரேய் மெய்யாய் சுதாகரீ வாராய்!
காரிசை பூங்குழன் மாதே!
கனியே வாராய் கலாவதீ வாராய்! (107)

ஏ! கலாவதீ! நீ—

(சிதானந்தன் படத்தைக் கரத்திற் பிடித்தவாக்கிலே தூக்கமயக்கத்தா லயர்ந்து விழுகின்றான்.)

[கலாவதியும் மரகதமும் வருகின்றார்கள்.

**கலாவதீ:**—ஏடி! மரகதம்! என்னேடி யென்றோழிமார்களு ளொருவரையுங் காண்கிலேன்? நீ யென்னை முன்னழைத்துக்கொண்டு வந்துவிட் டனையே!

**மரகதம்:**—அம்மா! நானிதோ அவர்களைப்பார்த்துக்கொண்டு உழுந்துருளும் பொழுதிற்குள்ளே திரும்பி வருகிறேன். அவர்களொருவேளை நீங்கள்

---

பாட்டு. 104. இஃதொருபொருண்மேல் மூன்றடுக்கிவந்த ஆசிரியத்தாழிசை.

பாட்டு. 105. உருவகவணி.

பாட்டு. 107. இதனை 'சூரியை' விருத்தமென்பர் வடநூலார்.

இதுவரைக்கும் வாவில்லையே யென்று அப்பக்கமாகப் போயிருந்தாலும் போயிருக்கக்கூடும்.

கலாவதி:—ஆனாற்சரி. பார்த்துக்கொண்டு சீக்கிரமாய் வா.—

(மாரகதம் போகின்றாள்.)

சிவபெருமானே! நின்னருட்செயல் நன்றாயிருந்தது! என்னை யிவ்வண்ணம் வருந்தும்படிசெய்வதும் உனது திருவிளையாடல்களிலொன்றோ? எனக்குற்றதுணை நீயேயென்று நம்பியிருக்கின்றேனே! நீ சோதித்தற்கு ஏழையாகிய யானிலக்காகுவேனோ? கிருபைவள்ளால்! உனது திருவுளமெவ்விதமிருக்கின்றதோ? யானறியேன்!— தந்தையாரோ மனோமோகினியினது மாயவலையினகப்பட்டுத் தம்வயிற் பிறந்த தாயற்ற பெண்ணாகிய வென்னை மூன்றுமாத காலமாக வொருசிறிதுங் கவனியாது மறந்திருக்கின்றனர்! வேசைக்குக் காசின்மேலாசை யென்றறிந்திலர்! தாசி மோகக்கடலினில் வீழ்ந்து அறிவெனும் மாலுமி யற்ற மாக்கலம்போற் றத்தளிக்கின்றனர்! இதற்கென் செய்வது? மனோமோகினியோ மான் வடிவம் பூண்ட வல்லியமாயிருக்கின்றனள்! எனக்குப்பலவித நன்மைகள் செய்பவள்போல மிகவும் நடித்து மெள்ளப்பாழ்ங்கிணற்றிற் றள்ளி விட்டுத் தான் பட்டமகிஷியாகவும் பார்க்கின்றனள்! யானோ இவ்விருவருக்கு மிடையிலிருந்து இருமருங்கும் புடைபடு மத்தளம்போலத் தவிக்கின்றேன்! இவையெல்லாம் ஒருபுறமிருக்க, யானந்த மகாநுபாவனுடைய படத்தைப்பார்த்ததுமுதல் ஊணுறக்கமின்றி யுன்மத்தம் பிடித்தவளாயினேன்! அந்தப்புருடனைப்பற்றியே யெனக்கெண்ணம் நிகழ்கின்றது! என்மனத்தையு மென்னிடத்திற் காண்கிலேன்! என்செய்வேன் (பாடுகின்றாள்.)

நளிந நயந நல்லா டனைக்காவெனுக்
களினை மிகவு மாந்திக் கருத்தின்புடைத்
தெளிவு சிறிது மின்றித் திரிந்தாடுரு
தளியி ரெனது கோனை யழைஇவம்மினோ! (108)

[மௌனம்.]

அந்தோ! யானடையும் வருத்த மொருவிதத்தா லெழுந்ததா?—பாவி மன்மதன் ஒருபக்கம் மலர்க்கணை தொடுத்தெய்கின்றனன்! மற்றொரு பக்கம் மாங்குயில் கூவுகின்றது! மந்தமாருதம் இனிமையாய் வீசுவது போற் றோன்றி யென்னைவருத்துகின்றது! சந்திரனும் பகைவனாயினன்! இத்துணைப்பகைஞர்களால் யானெய்தும் வருத்த மிவ்வளவினதென்று சொல்லமுடியுமோ? அன்றியுமதோ தன் காதலனை விளிக்கின்றது!— (பாடுகின்றாள்.)

---

பாட்டு. 108. வண்டுவிடுதூது. இதனைச் 'சந்திரிகை' யென்பர் வடநூலார். வண்டுகாள்! கள்ளைக்குடித்துத் திரியாது என்றலைவன்பாற்சென்று "நின் றலைவியைக்காத்தி" யென்றுரைத்து அவனை யழைத்து வம்மின் என்பதாம்.

அரும்புமாலைவேளையில் லிலங்குமிழ்ந் துவாடியே
கரும்பெனக்கனன் றிலே கவன்றாற்றுகாரணம்
பிரிந்துபோன்காதலன் பிழைத்திலோவதான்றெனிற்
கரும்புவில்லிமதன் விடுங் கணைக்கிலக்கமாதலோ? [மௌனம்.] (109)

(திரும்பிப் பார்க்கின்றாள்.) ஆ! அவ்விடத்தில் யார் படுத்துறங்குவோன்?- மனிதனோ? இயக்கனோ? அன்றிச் செவ்வேளோ?— (அருகிற்சென்று பார்க்கின்றாள்.) யான் படத்திற் பார்த்தவண்ணமே காணப்படுகின்றனனே! இஃதென்னை யாச்சரியம்! — அப்படமுடையான் யாரோ இராசபுத்திரனென்றும் அவன் பகைவனென்றுஞ் சொற்றனளே! அற்றேல் அவன் ஈண்டு எவ்வணம் வந்து சேர்ந்தனன்?— உருவெளித் தோற்றமேயோ? இவன் பகைவனாயிருப்பின் இங்குவருவானேன்?— ஆகா! இஃதென்னை அதிசயத்திலும் அதிசயமாயிருக்கின்றதே! யான் மாணிக்கமாலையிடமிருந்து வாங்கிப்பார்த்த படமுமிச்சுந்தர புருடன் கையகத்துளதே!—இவ்வீரனே யிப்படத்தின்கண் எழுதப்பெற்றவனாயிருத்தல்வேண்டும்!

(படத்தைக்கையிலெடுத்துக்கொள்ளுகின்றாள்).

இப்படத்திற்கும் இந்தமாரனும் நாணும் வடிவுடையானுக்கும் ஆடையாபரணாதி வித்தியாசங்களைத் தவிர்த்து வேறொன்றுமில்லை. இவனே யான் விரும்பிமயங்கிய அரசிளங்குமாரன்! அதற் காட்சேபனையில்லை. (படத்தினையவன் கரத்திலிருந்தவாறே வைத்துவிடுகின்றாள்.) ஆ! ஏதோ பேசுகின்றார்!

சிதாநந்தன்:—(கனவின்கண்ணே பேசுகின்றான்.) என் காதற்கிளியே! கலாவதி!

கலாவதி:—ஆகா! "என்காதற்கிளியே! கலாவதி!" நன்றாய்ச்சொன்னாய்!

(பாடுகின்றாள்.)

*"ஓர்த்த திசைக்கும் பறைபோனின் னெஞ்சத்து
வேட்டதே கண்டாய் கனா." (110)

யானிவரை விரும்பினைவதுபோலவே யிவருமென்னை விரும்பினைகின்றனரோ? எனது செவிகள்தாம் பொய்கூறுகின்றனவோ? உண்மையோ? (பாடுகின்றாள்.)

குன்றொத்திடு வாகு கொண்டமா
லென்றன் னுருயி ரின்ப வள்ளரு
ளின்றிங்குற லாயி னுனதாற்
றென்றற் றேருது தீய சேறியால்! (111)

பாட்டு 109. இதனைப் 'பஞ்சசாமரம்' என்பர் வடநூலார்.
பாட்டு 111. இதனை 'வைதாளீயம்' என்பர் வடநூலார்.
*கலித்தொகை.

என் ஆனந்தவள்ளலே! என்னைச் சற்றே கண்விழித்துப்பாராயோ?—
இவரெப்பொழுது எழுந்திருப்பாரோ? எல்லாவற்றிற்கும் என் அன்பன்
செவிவாயாற் பருகுமாறு கீதாமிர்தம் பொழிவேன்! (பாடுகின்றாள்.)

தலையெலா நிறைந்தென் மனமெனுங் குமுதங்
    கவினின்பத் தேனினைத் துளித்து
மலர்தரப் பகைவர் நெஞ்செனுங் கமலம்
    வாடுபு குவிதரத் தோன்று
மவிபிர காச மதியமே யெழுந்து
    மாரனால் வருத்துயர் நிசியைத்
தொலைதரச் செய்தே யென்னையாண் டருள்வாய்
    தோமிலாக் காமர்நா யகனே! [மௌனம்] (112)

வார மாறு கின்ற காட்சி வண்மையோய்
வீர ராச வித்தை கற்ற வேந்தனே
மாரி போற்க ணீர்பொ ழிந்து வாடியே
நாரி யான்வ ருந்தல் காணெ ணாதனே (113)

(எ) இராகம் — சங்கராபரணம். தாளம் — சாப்பு.

பல்லவி.

கண்விழித்துப் பாராயோ—ஒருகாலிவ்வேழையைக்
கண்விழித்துப் பாராயோ.

அநுபல்லவி.

கண்ணுற்கண்டமுதலா
யெண்ணம்வேறில்லைநம்பு
வண்ணமதன்னிதமும்
புண்செய்கிறானெனவம்பு (கண்).

சரணம்.

நீலக் குயிலுங் கூவப்
பாலுங் கசந்த கன்னல்
கோல வலைக மூன்று
சால வருந்து மென்னைக் [மௌனம்] (கண்)

செய்யா யினியகலஞ் சேராசர் சீராளா
கையா லெனைத்தழீஇக் காதலியே யென்றழைத்த
லையா தகையேய்ந் தழகார்ந்தா யென்றைக்கே
நையாநிற் கின்றே னனி. [மௌனம்] (114)

---

பாட்டு. 112. உருவகவணி.

பாட்டு. 113. இதனைச் 'சேணி' என்பர் வடநூலார்.

பாட்டு. 114. இது நிரோட்டகம்,

இப்பாடலானது: இந்நூலாசிரியர், ராஜராஜ பாஸ்கரசேதுபதி அவர்களுக்கு இந்நூலை யுரிமையுரை செய்வதற்காக ராமநாதபுரம் சென்ற காலத்து, சேதுபதியவர்கள், ஒரு நிரோட்டகம் ஒன்று இந்நூலில் சேர்க்குமாறு சொல்ல அவர் உடனே எழுதி அச்சபையிலேயே வாசித்துக்காண்பித்ததாகத் தெரியவருகிறது.

வலைய மணிந்தே வளர்தோளாய்
கலகம் விளைக்குங் கழையார்குஞ்
சிலையை வளைத்துச் சிறியேனை
மலைய வெழுந்தான் மதவேளே! [மௌனம்] (115)

மலாரும் புயத்தாய் வருந்துற் றெனுவி
நிலாதின் றுமாரன் னிமிர்ந்தே வளைத்துக்
கொலாதென் றனோடுங் குமாரா குலாவிச்
சலாபஞ் செயாயோ சலாபஞ் செயாயோ? [மௌனம்] (116)

ஆ! அதோவிழிக்கின்றார். யான் சற்று ஒளித்திருப்பேன்.

(கலாவதி யொளித்துக்கொள்ளுகின்றாள்.)

சிதாநந்தன்:—(கண்விழித்து) யானிவ்விடத்து ஏதோ இனியகுரலுடன் பாடிய சோகரசகானங் கேட்டேனே! என்ன அதிசயம்! ஒருவரையுங் காண்கின்றிலேன். இதுவும் யானிப்பொழுது என்னருமைக் கலாவதியுடன் மருவுவதாகக்கண்டகனவு போன்றதோ? ஐயோ! ஏனோ வீணில்விழித்தேன்? இன்னுமந்த இன்பக்கனவெனக்கு வாராதோ? அந்தோ! செவிகாள்! நீவிரன்றோ ஏதோ பாடல்கேட்டதாக நினைத்துக்கொண்டு என்கண்களை விழிக்குமாறு தூண்டினீர்! நீவிரிருவிருமாகச் சேர்ந்து எனக்குத் துன்பத்தை விளைத்தீர்! யான் மெய்யெனக்கருதிய இன்பத்தினையும் பொய்யாக்கினீர்!—ஓகோ! கலாவதீ!—(பாடுகின்றான்.)

வாயாற்குமுதத்தை வாட்டுங்கலை மாதே
யோயாதுனை நாளு முள்ளந்தனி லெண்ணித்
தோயாதிட றுற்றேன் றோகாய்மணி மாலை
வேயும்பெரு மாட்டீ மீன்போல்விழி யாளே! [மௌனம்] (117)

இராக நலமார்ந் தினிக்கு மொழியாய்
சராக விழியாய் சகோர மனையாய்
பராக மலரும் படீர முமுறு
மராக மெயினை யழுங்கு மனமே! [மௌனம்] (118)

பாட்டு. 116. இதனைப் ‘புஜங்கப்பிரயாதம்’ என்பர் வடநூலார்.
பாட்டு. 117. இதனை ‘மணிமாலை’ என்பர் வடநூலார். இப்பெயரு மிப்பாட்டி லிருத்தல் காண்க.
பக்கம். 118. இதனைச் ‘சலோத்ததகதி’ என்பர் வடநூலார்.

கண்ணிணை யிடுகா கவுட்டிணை சுரியா
வண்ணவெண் முறுவல் வறிதினிற் றெரித்த
னண்ணிய நகையாய் நலமுற வருவாய்
புண்ணியப் பொருள்சேர் பொலங்கெழு கொடியே! (119)

(அ) இராகம்-கீரவாணி. தாளம்-சாப்பு.

பல்லவி.

சுரலோகமோகநமந்தகாசமாதே.

அநுபல்லவி.

விரகதாபமாகி யையோ நானைந்தேன் (சுர)

சரணங்கள்.

மநோகரியே பொய்யான கனவினான்
மதிநா னழிந்தேனே - அம்ம
விரகதாபமாகி யையோ நானைந்தேன் (சுர)

குணகரியே கோதையர் சிரோமணி
குறியா வழிந்தேனே - அம்ம
விரகதாபமாகி யையோ நானைந்தேன் (சுர)

மாரனம்பு தைக்க வருங்காம நோயுற்றேன்
வாரமுறு மாதேநீ வாய்மருந்து தாராயோ? (120)

காதன் மலர்ந்திலங்கும் கற்பகத்தன் பூங்கொம்பே
நீதவியே லென்றுருசொன் னேரில்வந்து பேசாயோ? (121)

கண்ணே கலாவதியே காமனென்னை வாட்டுகின்றான்
பெண்ணே யினிநான் பிழைப்பென் பிழைப்பேனே! (122)

(கலாவதியினுருவு வெளிப்பட்டுத் தோன்றுகின்றது)

என்னையாட்கொண்டதேவீ! கலாவதி! நீதானா இங்கிருந்து பாடி நின்றுன்பங்களையெல்லாந் தெரிவித்தனை? என்னின்னமுதே! நீ தவிக்கயான் பார்த்துக்கொண்டிருப்பேனோ?—உன் மதுரவசநங்கேட்டு ஆனந்தமடைவதுமுண்டோவென் றுருகினேன்! உள்ளமுடைந்தேன்! என்னுயிரே!

---

பாட்டு. 119. புன்னகையி னிலக்கண மிதன்கட் காண்க. "கண்ணிணை யிடுகல் செல்லா, கவுட்டிணை சுரித்தல் செல்லா, வண்ணவெண்பற்க டோற்று வறிதன்றி நகைமி காது"—விநாயக புராணம். புண்ணியப் பொருள்களாவன அட்டமங்கலமுமாம்.

பாட்டு. 120. முன்னடியில் 'நோய்' என்றதற்கேற்பப் பின்னடியில் அமுதம் 'மருந்து' எனப்பட்டது.

பாட்டு. 121. காதலை மலராக்கூறி யிருத்தல்காண்க.

உன்னைக்கண்டவுடனே யான் சூரியனைக்கண்ட தாமரைபோன் மன மலர்ந்தேன்! என்னன்பே! நீயென் படத்தினைக் கையில்வைத்துக் கொண்டு காதல்வசனங்கள் கூறியபோது என்புயங்கள் கொண்ட பூரிப்பை யென்னென்பேன்! உன்னையான் றனியாய்க் காணப்பெற்றது மென் பாக்கியமே! (பாடுகின்றான்.)

அழகனைத்துந் திரண்டனைய வுருவங்கொண்ட
    வானந்தப் பூங்கொடியே யடியேன் முன்னர்க்
குழலிசையும் யாழிசையும் வென்ற தன்றிக்
    குயிறுணைப் பற்பலபாண் மிழற்றா நின்று
தழலாகு மென்னுடலந் தரிக்கு மாறு
    தயைபுரிந்த கண்மணியே தமியேற் சேர்ந்து
கழைமதனன் புறங்கொடுப்பக் கருணை செய்வாய்
    கலாவதியென் னுயிர்தளிர்த்த காமர் கொம்பே! (123)

காதலீ தேவ கலவ மயிலேயென்
மாதராய் மாலா லதிமோக னேனினே
காவாத போழ்தின்மாக் காமனும் வன்னெஞ்ச
னேவா வனேகமல ரெய்ம். [மௌனம்] (124)

(அவ்வுருவெளிவாளாதிருந்தமைகண்டு பாடுகின்றான்.)

* "ஆய்தூவி யனமென வணிமயிற் பெடையெனத்
தூதுணம் புறவெனத் துதைந்தநின் னெழினல
மாதர்கொண் மானோக்கின் மடநல்லாய் நிற்கண்டார்ப்
பேதுறூஉ மென்பதை யறிதியோ வறியாயோ?" மௌனம்] (125)

(அஃதொன்றும் பேசாமைகண்டு பாடுகின்றான்.)

வாரார் கொங்கை மாதே கேளாய்
சேரா நின்றேன் றோகாய் நிற்கண்
டோரார் மானே யென்றே டோர்சொற்
போரார் தேவீ பேசாய்! பேசாய்!! [மௌனம்] (126)

(அதுதனக்கருளாமைகண்டு மனமுளைந்து பாடுகின்றான்.)

---

பாட்டு. 124. இது நான்காரைக் சக்கிரபந்தம். இதனை யுபதேச முறையாற் சித்திரத்தில் வரைந்து அதன் குறட்டிற் 'கலாவதி' யென்று போதருதல் காண்க. 'எய்யும்' எனற்பாலது 'எய்ம்' என்றாயது "செய்யுமெனெச்சவீற்றுயிர்மெய்" என்ற நன்னூற்சூத்திரவிதியா னென்க.

பாட்டு. 125. கலித்தொகை. தூதுணம் புறவென—சிறுபருக்கைக் கற்களை யுணவெனக் கொள்ளும் அழகிய புறாவைப் போல பேதுறூஉம்—பேதுறுக்கும்: வருத்தும்.

பாட்டு. 126. இதனை 'வித்துயுந்மாலை' யென்பர் வடநூலார்.

போதினிற் றேவன் படைப்பதற் குன்னைப புரிந்ததவம்
யாதென நோக்கி யயிர்த்து மயங்கின னேந்திழையே
வாது செயாம லுவந்தெனைக் கூடின் மனமகிழ்வேன்
காதன் மிகுந்து கசிந்தன னைந்து கலாவதியே! [மௌனம்] (127)

(அஃதனுத்துணையுந் தன்மீ திரக்கமுறாமைகண்டு
நீடுநினைந்திரங்கிப் பாடுகின்றான்.)

ஆலால மன்னவிழி யாலுங்க ளாபிகழி
யார்வந்த ழைத்தமொழிசேர்
மேலான செங்கமல மீதாரு கின்றநல
மேவுற்ற ஞானபலமே
நீலாய வம்புமத னீக்கேகு மாறமுத
நித்தந்த ருங்குமுதமே
மாலாகு மென்னையொலி வண்டார்க ரங்கள்புலி
மான்போட ணைக்குவைகொலோ? (128)

(மெய்தொட்டுப்பயின்று ஆண்டொன்றுமின்மையின் வெள்குகின்றான்.)

ஆகா! இஃதென்னை? விந்தையாயிருக்கின்றதே! யானிதுகாறுங் கலாவதியி னுருவெளித்தோற்றத்தையோ கண்டு இவ்வாறுமயங்கினேன்! நன்று! நன்று!! (சிதாநந்தன் நாற்புறமுஞ் சுற்றிப்பார்க்கின்றான்).

ஆ! அதோ அந்தச்சம்பகவிருட்சத்தினருகே என்னருமைக் காதலி கலாவதி யிருக்கின்றனள்!

[அவளருகில்விரைந்து செல்லுகின்றான்.]

என்னுயிர்த் தலைவி! கலாவதி! யானிவ்வணம் ஒருதலைக்காமத்தால் வருந்தாநிற்பதைப் பார்த்திருந்தும் வாளாதிருப்பது நீதியாகுமோ?—

(கலாவதியை மெய்தொட்டுப் பயிறலுங் கலாவதி சிறிது விலகிக்கொள்ளுகின்றாள்.)

கலாவதி:—என்னுள்ளங் கவர்ந்த வுத்தமக்குரிசிலே! நீ யங்ஙனம் நினைக்கப படாது!

சிதாநந்தன்:—ஓகோ! உணர்ந்தேன்! உணர்ந்தேன்!! (பாடுகின்றான்)

*"காதலார் திறத்துக் காத லாக்கிய காத லாரை
யேதிலார் போல நோக்கி னிருமடங் காக வெய்தும்
போதுலாஞ்சிலையி னான்றன் பொருகணைக் கிலக்கஞ்செய்யு
மாதலாற் காமநோய்க்கோ ரருமருந் தில்லையன்றே." (129)

என்ற பெரியோர்கள் வாக்கின்படி செய்தனையோ? என் கண்ணே!—

(தழுவி முத்தமிடப்போதலுங் கலாவதி வெட்கத்தினாற் சிறிது
முகந்திருப்பிக் கொள்ளுகின்றாள்.)

---

பாட்டு. 128. இதனை "அசுவதாடி" விருத்த மென்பர் வடநூலார்.

* சூளாமணி.

கலாவதி:—என்னரசே! எனது நிலைமையை நீ சிறிது அறிந்தருளல் வேண்டும்.

(சிதாநந்தன் கைநெகிழ்த்து நிற்கின்றான்.)

ஏ! இராசகுமாரா! நின்னைப்போலவே யானும் நின்மீது காதல் கொண்டு வருந்தினேன். அவ்வருத்தங்களெல்லா மின்றொடொழியுமாறு கடவுள் திருவருள் செய்தனர்! நீ யென்னுருவெளித்தோற்றத்தைக் கண்டு வருந்துங்காலத்தில் என்னுடல் பதறினதைப்பற்றி யானென்ன சொல்லட்டும்!—ஐயோ! என்னுருவெளிசெய்த பாக்கியம் யான் செய்யவில்லையே யென்றேங்கினேன். உடனே நீயுமென்னை நோக்கித் திரும்பினை. அப்பொழுதென் மனத்தினிலுதித்த மகிழ்ச்சி அளவிட்டுரைக்க முடியாது!—

சிதாநந்தன்:— (பாடுகின்றான்.)

கேதார மன்ன கிளர்பேரெழின் மாத ராயென்
காதார நல்ல கவிமாரிபெய் கன்னி காய்நீ
பாதார விந்த நனிநொந்துப தைப்ப நின்றெற்
காதார மான வறிவேயெனை வாட்டலாமோ? (130)

(இருவருஞ் சிலாவட்டத் திருக்கின்றனர்)

உன்னைப் பெறுமெனக் கென்னை யோகுறை?
நன்னயஞ் சான்ற கன்னிய ரரசியே!
காதல் சான்ற மாதரார் மணியே!
உலகெனும் பொழிலி னிலகுறு சோழத்
தேங்கமழ் மாவளர் பூங்குயிற் பேடே! (131)

(கலாவதியை மடிமீதிருத்திக் கொள்கின்றான்.)

சடைப்பெருமான் றனையெய்து மெய்யிழந்த தனிவேளே
தகைசேர் நின்றன்
படைத்தலரும் படைக்கலங்க டம்முடனே நின்னுடைய
பரிவு பூண்ட
படைத்தலைவி யாகுமெழிற் கலாவதியென் கையினகப்
பட்ட தோர்ந்தும்
விடுத்திட்டுத் தலைமறைவாய்த் திரிதன்மத ராசவென்னை
வீரங் கொல்லோ? (132)

---

பாட்டு. 130. இதனை "வசந்ததிலகம்" என்பர் வடநூலார்.

பாட்டு. 131. உலகத்தையே யொரு சோலையாகவும், சோணாட்டையே யொரு மாமரமாகவும், கலாவதியையே யதன்கணுள்ள வொரு குயிற் பேடாகவும் கூறியிருத்தல் காண்க.

பாட்டு. 132. இது மந்மதோபாலம்பநம். இதன்கணுள்ள சொற்பொருணயங் களை உய்த்துணர்க.

செய்ய தாமரை சேர்ந்துறை மாதராள்
சிறப்பி னிற்பெற்ற சீரிய மாரநீ
கையி னேந்துங் கடுங்கணை யாகிய
காமர் நீலங் கலாவதி யின்விழிக்
கைய கோதொலை வார்ந்துநி லாமலே
யாரிருட்பிழம் போடுற வாடியென்
றைய னுயகி தாழ்குழற் காட்டினிற்
றவம்பு ரிந்துத யங்குதல் காண்டியால். (133)
விதவிதமாய்க் கருப்புவிலின் மலர்க்கணைக ளொடுத்தென்னை
விரைந்து வாட்டு
மதவிடனு மொருபகைவன் மறைந்தனனீ யென்றுணையாய்
வதித லானே. (134)
* "பான னெடுங்க ணிவை யேபகழியா
வேனி லுடைவேந்தன் வென்றிக்கு நோற்றனே!
யானு மளியற்றே னித்துணையோர் காலமுந்
தேனார் நறுமேனி தீண்டுதற்கே நோற்றேனே!" (135)
துன்பமெலா மறவெறிந்தேன் றோகையர்சி ரோமணியே
தூய நின்ற
னன்புமதி கண்டுபொங்கு மாநந்த சாகரத்தி
னாழ்ந்திட் டேனே! (136)
*"காதலால் வந்தென் கவான்மே விருப்பினு
மேதிலார் போலு மிமைப்பி னிமையாதே
போதுலாம் வாண்முகமே நோக்கிப் பொலிவேனேன்
மாதரா ளுணும்யான் வாழுமா றேதேனே!" [மௌனம்] (137)

பாட்டு. 133. இதுவும் மந்மதோபாலம்பநம். கட்டளைக்கலிப்பா. மன்மதனே நினது கணைகளு ளெல்லாம் மிகவும் கொடிதாகிய நீலம், கலாவதியின் கண்ணிற்கு இணையாகாது தோற்று எதிர்நிற்கவுமஞ்சிப் பகற் போழ்து வெளிப்படாது இரவிற் றலைகாட்டிப் பன்னெடு நாளொழுகியு மமையாது அக்கண்களை வெல்லுமாறு காட்டினிற் றவஞ்செய்யவுன்னி அக்கண்களாற் காண்டலரிய அவளது கூந்தற் காடே தக்கதென்று கருதி அதன்கண்ணேயே தவம் புரிந்து வருந்துகிற்பதைக் காண்பாயாக என்பதாம். கலாவதி அப்போது நீலஞ்சூடிக் கொண்டிருந்தன ளாதலி னிவ்வாறு கற்பனை செய்யப் பட்டது.

பாட்டு. 136. உருவகவணி.

பாட்டு. 137. அன்புடன் போந்து என்றுடைமீதிருந்தன ளேனும் அவளை யானிமைத்து நோக்குவேனேல் அவள் வேற்று மாதர் போலுகின்றாள்; இமையாது அவண்முகமே நோக்குவேனேல் அவள் நாண முறுகின்றாள்! அம்மவோ! யான் இதற்கென்செய்வது? என்பதாம்.

* சூளாமணி.

(௬) இராகம்-மலயமாருதம். தாளம்-ஆதி.

பல்லவி

இன்பமெய்தினே னென்ற னுள்ளமலை
ரேகி நின்றனா யென்கலாவதியே.

அநுபல்லவி.

துன்பமேது மில்லேன் தோகை சுந்தரியென்
சோக நீக்க வுற்ற சோதி ரூப தேவி (இன்ப)

சரணம்.

என்னையாளுகின்ற வேமமேனிமானே
யென்னபாக்யஞ்செய்தே னெய்தவுன்னையானே
நன்னராடுமஞ்ஞாய் ஞானமேவுமாதே
ஞாலமெங்கும்வாச நன்குவிசும்போதே (இன்ப)

கலாவதி:—என் ஆநந்தபுருடனே! நீ யிவ்விடத்துவந்த வாறென்னே? எல்லாவற்றையும் உள்ளபடி யெனக்குச் சாங்கோபாங்கமாகக் கூறல்வேண்டும்.

சிதாநந்தன்:—என்னுயிரமுதே! கலாவதி! யான் பாண்டிய தேசாதிபதி சுகேசன் மகன். என் பெயர் சிதாநந்தன். யாங்க ளுன்றந்தையார் சயதுங்கருக்குச் சன்மப் பகைஞர். யானிவ்வூரிலிங்க னிருப்பது தந்தையார்க்குத் தெரியாது. யானிப்பொழுது உங்கள் நாட்டு மந்திரியார் சற்குணமே வடிவெடுத்து வந்தாற் போன்றவர் சத்தியவாக்கில் அரிச்சந்திர மகாராசனென்று சொல்லத்தகும் மேதாநிதியாரவர்கள் கிருகத்திற் றங்கியிருக்கின்றேன்!—

கலாவதி:—என்னருமைச் சிதாநந்தவள்ளலே! நீ யாதுகாரணமாகப் புறப்பட்டு வந்தனை? எப்பொழுது வந்தனை?

சிதாநந்தன்:—என்னிதய தாமரையிலிருக்கும் அன்னமே! யான் பலநாடுகளையும் பார்த்து ஆனந்திக்குமாறும், பிறநாடுகளின் சீர்திருத்தங்களைத் தெரிந்துகொண்டு அவற்றை யெங்கள் பாண்டிநாட்டினு மேற்படுத்துமாறு முன்னித் தேசசஞ்சாரமாக வென்ற னன்மனோசார் சத்தியப்பிரியருடன் புறப்படும்போது எந்தையார் சோணாட்டிற்குப் போதலொழிகவென்றனராயினும், யானேதோ தற்செயலாய் இந்நகர்க்கு வந்துவிட்டேன். அதன்பின்னர் யான் திரும்பிச் செல்லாமல் என் னவாமேலீட்டினும், சுத்தவீரச் செருக்கினும் மிக்கசத்தி னுள்ளேயே போந்தேன்! போந்து இவ்வயந்தச் சோலையிற் சிறிது தங்கினேன்! தங்கலும் நீ யுன்றோழிமாரோடு போந்தனை. போதர யா னொளித்து நின்றேன். நீ யுனக்கு நேரிட்ட இடுக்கண்களைப்பற்றிச் சொல்லியபின் வாசந்திகை யென்பாள் பாடினள். அதன்பின் மாணிக்கமாலை யென்பாள் கொடுக்க நீ பல படங்களையும் பார்த்துக் கழித்துவிட்டுக் கடையி லொருபடத்தைக்

கரத்தினிலேந்திக்கொண்டு சில விரகவசனங்கள் கூறினேன்:—பின்னரஃதியா வர் படமோவென்றையுற்றேன். உடனே, (பாடுகின்றான்.)

முத்தமீன்றமிவண் டிங்களைப்புரை வேர்வரும்புமு கத்தினும்
வித்தையேயுரு வம்மெடுத்தவி ருப்பிவந்தனை யாயினை
மத்தகோகில மேநலார்கள்வ ழுத்துகின்றநன் மாதராய்
சித்தமெய்தினை திட்டிவாயிலின் மூலமாகியென் செல்வியே! (138)

அதன்பின்ன ரென்னிடத்தில் என்மனத்தை யான்காணேன்! என்செய் வேன்! நீ சென்றபிறகு நீ யிருந்த விடத்தில் நின்னடிச் சுவடுகளை யெல் லாங் கண்ணி லொற்றியொற்றிக் காமுற்றுக் கருத்தழிந்தேன்! அவ் வேளையில் இப்படம் என்கையில் அகப்பட்டு என்னைச் சிறிது மகிழ்வித் தது போலக்காட்டி யென்னை முன்னினும் அதிகமான துன்பத்திற் காளா க்கிவிட்டது!—

கலாவதி:—(சிறிதுநேரம் வியப்பினுன் மௌனமாயிருந்து) என்னுயிர்க் காதல னே! நானிப்போதிங்குவருவேனென்றெப்படி யுனக்குத் தெரியும்?

சிதாநந்தன்:—ஐயோ! கலாவதி! அதையுனக்கி யானெப்படிச் சொல்லுவேன்! இந்தப்பாவி குலாந்தகனிருக்கின்றானே! அவனும் மரகதமென்னு மொரு பணிப்பெண்ணும் நேற்றிரவு பேசிக்கொண்டார்கள்! உன்னை யவ ளெப் படியாவது தனியா யிந்தவசந்தச்சோலைக்குக் கூட்டிக்கொண்டு வந்து விடல்வேண்டுமென்றும், அதற்குக் கைம்மாறாக இந்தப்பாவி யேதாவது அவளுக்கு மரியாதை செய்கின்றேனென்றும் அவ்விருவரும் பேசிக் கொண்டதை யானொளித்திருந்து கேட்டேன்!—

கலாவதி:—தெய்வமே! இஃதென்ன விபரீதம்! என்னுடைய தோழியரைத் தவிர்த்து அரண்மனையு ளெவரையும் நம்புதற்கிடமில்லையே! ஏடி! பாவி! மரகதம்! என்ன பொய்யடி புகன்றாய்? இந்தப்பாதகர்கள் செய்வனவற் றை யெல்லாம் வித்தாரமாக வென்றந்தையாரிடத்திலுரைப்பேன். அவற் றிற்குத் தக்கபடி அவரே நியாயஞ் செய்வார். அங்ஙன மவர் செய்யாமற் போவாரேல் இறைவனே கதி!

சிதாநந்தன்:—என்னின்பக் கண்மணியே! கலாவதி!—அதைக் குறித்து நீ யோசித்தல் வேண்டாம். யானும் நீயும் வேறோ? உனக்கு நேரிடுவன எனக்கும் நேரிடுவனவேயாம். (பாடுகின்றான்)

---

பாட்டு. 138. இதனை 'மத்தகோகிலம்' என்பர் வடநூலார். இப்பெயரிதன் கண் ணும் வருதல் காண்க. வேர்வை யரும்பியமுகம் முத்தீன்ற மதி யினை யொக்கும். மதியினிடத்து முத்துப் பிறக்கு மென்பதைத் "தந்தி வராக மருப்பிப்பி பூகந் தமழுகதலி, நந்து சலஞ்சல மீன் றலை கொக்கு நளினமின்னார், கந்தரஞ் சாலி கழைகன்ன லாவின் பல் கட்செவிகா, ரிந்து வுடும்பு கராமுத்த மீனு மிருபதுமே" என்ற இரத்தினச் சுருக்கச் செய்யுளானு முணர்க. திட்டிவாயில்= கண்ணுறியவாயில்; காந்துசெல்லுஞ் சிறுவழி.

மருவமர் கூந்தன் மாதே மாணெழி லீயு நானு
முருவத்தாலிருவ ராகி யுள்ளத்தா லொருவ ராவேம். (139)

இதோ கவனித்துப் பார்!— (பாடுகின்றான்.)

*"மணவாய மல்லிகையின் மதுநனைந்து வன்கனிகள்
மதர்ப்ப வீசி
யிணர்வாய வனமுல்லை யிதழ்வாரி யிளந்திங்கட்
கதிர்கா லூன்றித்
துணைவாய சுரும்பிரங்க வாவிந்த வனத்துதிர்ந்த
துகளுஞ் சீத்துத்
திணைவாய கருங்குவளை திளைத்தசைக்குந் தென்றலுமொன்
றுடைத்தே மாலை." (140)

(குலாந்தகன் காந்து வருகின்றான்.)

இத்தகைய மாலைக்காலத் துன்னைத் தழுவி முத்தமிட்டு (தழுவி முத்த மிடுகின்றான்.) இதோ யான் கொடுக்கு மிம்மோதிரத்தை யென்னைப் போலவே பாவித்து உன்னைவிட்டு ஒரு நாளும் நீங்காது வைத்திருத்தல் வேண்டும்.

(இருவரும் மோதிரம் மாற்றிக்கொண்டு மறுபடியும் முத்தமிடுகின்றனர்.)

(குலாந்தகன் ஒளித்திருந்து பார்க்கின்றான்).

குலாந்தகன்:—(தனக்குள்) ஆகா! இந்தப்பாண்டியநாட்டு வீரனன்றோ நமது கலாவதியை யடித்துக்கொண்டு போகப் பார்க்கின்றனன்! ஒருவர்க்கொருவர் முத்தமிடுகின்றனர்! சரிதான்! சரிதான்!!—அப்படியா சங்கதி? நான் இதோ இப்பொழுதே போய் இதைக்குறித்து மகாராசாவவர்களிடந் தெரிவிக்கின்றேன். [குலாந்தகன் போகின்றான்.

கலாவதி:—ஆ! அவ்வாறே செய்கிற்பேன். அதற்கையமில்லை. என்னுயிர் நாதனே! இன்று பிற்பகலொரு விடயம் நிகழ்ந்தது. அதனை நின்பாலுரையாது யார்பாலுரைக்கப் போகின்றேன்? (பாடுகின்றாள்.)

கூவிள நற்கனி போலுற விம்மு
தனத்துணை கொண்டு குதூகலமா
யாவியை யாடவர் தம்மிட நின்று
பிரித்திடு மாற்றல் படைத்தவளாய்ப்
பாவமெ லாமொரு பேருரு வெய்துபு
பாரை விடாது புகுந்தலையான்
மாவடு நேர்விழி யாண்மகிழ் மோகினி
மாமயல் செய்தரு மானினியே. (141)

---

பாட்டு 139. இதனாற் கலாவதி யற்றைஞான்று மருவுஞ் சூடிக்கொண் டிருந்தாளெனல் பெறப்படும்.

பாட்டு 141. இதனை 'மானினி' யென்பர் வடநூலார்.

* சூளாமணி.

அவளென் றந்தையார் மனத்தைத் தன் கைவசப்படுத்திக்கொண்டு அவரைத் தன்மனம்போன வாறெல்லாம் சூத்திரப்பாவைபோ லாட்டு கிற்பாள். அவள் தன்னை யென் றந்தையாரோடு சேர்ப்பித்த சுகசரீரனுந் துர்க்குணி யொருவனை யான் மணந்துகொள்ளுமா றென்னை யதட்டிப் பேசினள்.—

சிதாநந்தன் :—அங்ஙனமா செய்தனள் ?— (பாடுகின்றான்.)

தாதவிழ் மாமலர் தாம்புனை வாசக்
கோதைந லஞ்செறி கோமள வல்லீ
மூதைய வன்மனொ மோகினி நாமப்
பாதகி சென்னி பறந்திடு மின்னே. (142)

இதோ இந்தவாளினு லந்த மூண்டை கண்டத்தைக் கண்டங் கண்ட மாய்த் துண்டஞ்செய்கின்றேன்! பார்!

(வாளையோச்சி யெழுகின்றான்.)

கலாவதி :—(சிதாநந்தனைப் பிடித்துக்கொண்டு) விக்கிரமப்பிய வேந்தர் சிங்கமே! நாம் அவசரப்படவேண்டாம்! அவளது துர்க்குணங்களுக்கு அவளைக் கடவுளே தண்டிப்பார்! (பாடுகின்றாள்.)

என்னை யொருபொரு ளென்ன மதியினி
லென்றும் விழைதரு மேந்தலே
மன்னி யினிதுபொ றுத்தி யொருதர
மந்த நகைசெய்ம்ம ணாளனே
பன்னு மதிமுடி கொள்ளு பசுபதி
யென்ற பரனுறு கூடலின்
மன்னர் குலதில கம்மென் மகிமைய
வின்ப வடிவுடை வள்ளலே! (143)

சிதாநந்தன் :—இத்தகைய பாதகியை நாமென்ன செய்தாற்றுந் தகா?

கலாவதி :—(திரும்பிப்பார்த்து) என் றோழிமா ரிருவரும் அதோ அந்த அசோகவிருட்சத்தினருகே வருகின்றனர். என்னரசே! எனக்குக் கொஞ்சம் உத்தரவு கொடுத்தருளல் வேண்டும்.— (இருவருந் தழுவி முத்தமிடுகின்றனர்.)

[சிதாநந்தன் போகின்றான்.

வாசந்திகையும் மாணிக்கமாலையும் வருகின்றார்கள்.

வாசந்திகை :—ஏடி! மாணிக்கமாலாய்! அதோ பார்த்தனையோ நங் கலாவதி! (பாடுகின்றாள்.)

---

பாட்டு. 142. இதனைத் 'தோதகம்' என்பர் வடநூலார்.

பாட்டு. 143. இதனைப் 'பிரகிருதிச்சதந்தம்' என்பர் வடநூலார்.

துனித குஞ்சிலை கொண்ட வீரனே
டினிய முத்தமே யிட்டு மாதரா
டணிமை யாயுநீ இச் சம்ம தங்கொடே
நனித பூரீ இயினு னன்று நன்றுகாண் ! (144)

(கலாவதி யருகினில்வந்து) ஏடியம்மா! கலாவதி! நீயேது இன்றைக் கில்லளவு சீக்கிரம் புறப்பட்டு விட்டது?

மாணிக்கமாலை:—அதற்கென்ன? அவள் பொழுது போகாமையினாலே வந் திருக்கக்கூடும். அஃதிருக்கட்டும். வாசந்திகே! நமது கலாவதி வதனத்தை யுற்று நோக்கினையோ? இரண்டு திங்களா யில்லாதிருந்த இன்பக் களை யின்றைக்கிருக்கின்றது!

வாசந்திகை:—ஆமாம் (கலாவதியை நோக்கி) அம்மா! கலாவதி! நீ யிப்பொழு தேதாவது பாடவேண்டும். நீ முன்னொரு ஞான்று "யான் இன்புற் றிருப்புழி யென்னைப் பாடுமாறுகேள். மற்றைப்போ தொன்றுங் கேளாதே!" என்று சொல்லியிருக்கின்றனை. அதனை ஞாபகஞ்செய்து கொள். (பாடுகின்றாள்.)

போதக்க ளாகின்ற போதுற்ற பொன்னே
மாகட்ட முற்றேன்வ ருத்தாதி யென்று
தாகட்டு மென்றேம காநந்த மேவிப்
பாகட்ட சொல்லோடு பாடாய்ம டந்தாய்! (145)

கலாவதி:—ஆகட்டும். நீ விரும்பியவாறே பாடுகின்றேன். (பாடுகின்றாள்.)

(௰) இராகம் - கமாஸ். தாளம்-ரூபகம்.

பல்லவி.

இவ்வயக்கவநத்தியல்லை
யினிதிருந்துகாண்மினே.

அநுபல்லவி.

நவ்வி நன்கு தாவு மாங்கே
நல்ல மஞ்ஞை யாடு மீங்கே (இவ்)

சரணங்கள்.

மலைய நின்று மணநி றைந்து மாருதம்வீசக்
குலையாயுது மலர்மாவினிற் கூவுங் கோகிலம் (இவ்)

---

பாட்டு. 144. இதனைச் 'சம்மதம்' என்பர் வடநூலார். இப்பெயரிதன்கண்ணும் வருதல் காண்க.

பாட்டு. 145. 'போது' மலராயின் 'ஆகின்ற' என்பதனைப் 'பொன்'னேடுகூட்டுக; காலமாயின் நேரே கூட்டிக்கொள்க. மாகட்டம்=மகாகஷ்டம்= மிக்கதுன்பம்.

மனம கிழ்ச்சி மிகவு மெய்தி வாட்ட நீங்குவாய்
பனிமாமல ருறுஞாழலிற் பாடும் பூவையே  (இவ்)

எங்கே வாசந்திகே! நீ சிறிது பாடு கேட்போம்.

வாசந்திகை:—ஆ! அங்ஙனமே பாடுகின்றேன். கேட்பாய். (பாடுகின்றாள்.)

(மக) இராகம்-எதுகுலகாம்போதி. தாளம்-ரூபகம்.

வாசந்தச் சோலையில் வந்திடு நேசனென்
மனதை மலர்த்துமடி - அம்மா
மனதை மலர்த்து மடி.
சுந்தர வீர னிடஞ்சொல வேயென்றன்
றுன்ப மொழிந்ததடி - அம்மா
துன்ப மொழிந்ததடி.
மாரவேள் போலுமென் வள்ள லிணைய
மகிழ்ச்சி யடைந்தேனடி - அம்மா
மகிழ்ச்சி யடைந்தேனடி.
ஆருயிர் காதலனென் னன்பனைக் கண்டிட
வானந்தம் வந்ததடி - அம்மா
வானந்தம் வந்ததடி.
கூடற் பதியானைக் கூடிக் களிக்கக்
குறையொன்று மில்லையடி - அம்மா
குறையொன்று மில்லையடி.

ஏ! கலாவதி! யான் பாடினது போதுமா? திருத்திதானு?

கலாவதி:—ஏடியம்மா! வாசந்திகே! யானென்ன சொல்லப் போகின்றேன்!
(பாடுகின்றாள்.)

* "திங்களங் கொழுநனைச் சேர்ந்து தாரகை
யங்கொளி முகிழ்நகை யரும்பு மாதலான்
மங்கல மணமகன் மணந்த போதலா
லெங்குள திளையவர்க் கிளமை யின்பமே?"  (146)

ஆதலால், நீ மின்னுங் கொஞ்சம்பாடினுலுங்கேட்டுஆனந்திப்பேன்.

வாசந்திகை:—சரி. இப்போதைக்கு இதுபோதும். மற்று,

மாணிக்கமாலை:—(புன்னகை செய்து கொண்டு) நாம்புஷ்ப வநத்திற்குட் சென்று மலர்பறித்து மாலைதொடுத்து நம்முடைய கலாவதி தனதுஅரிய நாயகனுக்கு அணியும்படி அவள்கையிற் கொடுப்போம். வா.

வாசந்திகை:—(சிரித்துக்கொண்டு) ஆ! அப்படியே போகலாம். வா. அதோ பார்! (பாடுகின்றாள்.)

---

* சூளாமணி.

*ஆண்டுறுபல் வானையொரு வாமலினி தாகச்*
*சேண்டடவு கந்திமிசை செம்மையினு லாவுங்*
*காண்டகுக லாவதியெ ழிற்குமரி காணுய்*
*மாண்டகுணி மாவநம யூரநிகர் மாதே!* (147)

[*யாவரும் போகின்றனர்.*

## இரண்டாங்களம்.

*இடம்:* *காஞ்சியில் மந்திரியார் வீடு.*
*காலம்:* *இரவு.*
*பாத்திரங்கள்:* *குலாந்தகன், விகடவசநன்.*

குலாந்தகன்:—*ஐயா! விகடவசநரே! நீரிது வரைக்கும் எனக்குச் சொல்லிக் கொடுத்த யுத்திகளுக்கு உமக்கு எதுதான் கொடுக்கப்படாது? மற்றிதற் கென்ன செய்யலாம்? அந்தப்பயல் மதுரையிலிருந்து வந்தவன் கலாவதியைக் கொண்டுபோய் விடுவான் போலிருக்கின்றதே!*

விகடவசநன்:—*ஏடா! சத்தம் போடாதே! இச்சமாசார மவன் காதில் விழப் போகிறது!*

குலாந்தகன்:—(*பதறியோடித் திரும்பி வருகின்றான்.*) *இன்னும் வரவில்லையே ஐயா!*

விகடவசநன்:—*வாராமற் போனால் நலந்தான். இருந்தாலு மெல்லாவற்றிற் கும் நீ மெதுவாய்ப் பேசு. இரைச்சற் போடாதே!*

குலாந்தகன்:—*ஏனையா எங்கள் வீட்டிலே யானிரைச்சற் போட்டா லென்ன? எங்களப்பாதா னின்னும் அரண்மனையிலிருந்து வரவில்லையே!*

விகடவசநன்:—*சரி. நீ இரையாமலிருக்கின்றனையா? அல்லாமற் போனால் யான் போகட்டுமா?*

குலாந்தகன்:—*ஐயா! ஐயா! இனிமேல் நான் இரையவில்லை! இரையவில்லை!! இரைந்தாலென்னைப் பத்தடியடியும்.*

விகடவசநன்:—*அப்படியானாற் சரி.—*

குலாந்தகன்:—*ஹ! ஹ! ஹ! ஹ! ஹ! ஹ!*

(*குடல் தெறிக்கச் சிரிக்கின்றான்.*)

விகடவசநன்:—*என்னேடா?*

குலாந்தகன்:—*ஹ! ஹ! ஹ! ஹ! ஹ! ஹ! ஹ! ஹ!*

(*மீட்டுஞ் சிரிக்கின்றான்.*)

---

*பாட்டு.* 147. இதனை 'வநமயூரம்' என்பர் வடநூலார். இப்பெயரிதன்கண்ணும் வருதல்காண்க. காண்டகு = அழகுபொருந்திய. 'காண் = அழகு' என்பர் அடியார்க்கு நல்லாரும்.

விகடவசநன்:—என்னேடா, பைத்தியமே? சொல்லாய்.

குலாந்தகன்:—ஹ! ஹ! ஹ! ஹ! ஹ! ஹ! ஹ!

(மறுபடியுஞ் சிரிக்கின்றான்.)

விகடவசநன்:—அப்படியானால் யான் போகிறேன்!

(எழுந்திருக்கின்றான்.)

குலாந்தகன்:—ஐயா! ஐயா!! ஐயா!!! ஐயா!!!!

(விகடவசநனைப் பிடித்துக்கொள்கின்றான்.)

விகடவசநன்:—பின்னை யேடா இப்படிச் சிரித்தனை?

குலாந்தகன்:—ஹ! ஹ! ஹ! ஹ! ஹ! ஹ! ஹ! ஹ!

(மறுபடியுஞ் சிரிக்கின்றான்.)

விகடவசநன்;—மறுபடியும் சிரிக்கின்றனையா?

குலாந்தகன்:—இல்லை. இல்லை.—ஒரு யுக்தி! ஒரு யுக்தி!!

விகடவசநன்:—என்ன யுக்தியேடா?

குலாந்தகன்:—என்ன? விகடவசநரே! இந்த மதுரைவீரனிருக்கின்றனனே இவனப்படியே நம்முடைய கலாவதியை யடித்துக்கொண்டு வந்தாலு மவளை யெங்கே வைப்பான்? நம்முடைய வீட்டிலேதானே வைக்க வேண்டும். அப்போது பார்த்துக்கொள்வேன்!

விகடவசநன்:—ஐயோ! முழுமகனே! உன்னறியாமையை யென்னென்று சொல்லுவேன்!

குலாந்தகன்:—என்னையா! நான் அல்லாமற்போனு லனைமகனே? நான் முழுமகன்றான்!

விகடவசநன்:—சரி. நீ முழுமகனே! அதற்காட்சேபமில்லை, மற்று, அவர்கள் வயந்தச்சோலையை விட்டுப் போகமாட்டோ மென்று சொன்னதனாலேயென்?

குலாந்தகன்:—அதுதான் நான் போய்விட்டேன்.

விகடவசநன்—ஏடா! முண்டமே!

குலாந்தகன்:—ஆமாம். நான் முண்டந்தான்! எவ்வளவு தடித்திருக்கின்றேன்! பாருமே!

விகடவசநன்;—அடே! கொஞ்சம் பேசாமலிரடா!

குலாந்தகன்:—யானென்ன ஊமையோ பேசாமலிருக்கின்றதற்கு?

விகடவசநன்:—நீ யூமையனல்லை! பெருவாயன்றான்! மற்று,

குலாந்தகன்:—அப்படிச்சொல்லும்! என்வாயைப் பார்த்தீரா? ஆ அ! எவ்வளவு பெரிது!

(வாயைப்பிளந்து காட்டுகின்றான்.)

விகடவசநன்:—இப்படியெல்லாம் நடுவிலே பேசிக்கொண் டிருந்தனையோ வுனக்கொன்றுஞ் சொல்லிக்கொடுக்கவே மாட்டேன்!

குலாந்தகன்:—இல்லை. இல்லை. இனிமேற் பேசவில்லை.
(கவுளிலடித்துக்கொண்டு கைகட்டி வாய்புதைத்துக் கொள்ளுகின்றான்.)

விகடவசநன்:—சரி. போனது போகட்டும். இனிமேலாவது யான் சொல்லுகின்றதைக்கேட்டு அதன்படிநட! என்ன? (குலாந்தகன் பேசாதிருக்கின்றான்.) பின்னையான் போகிறேன்! (எழுகின்றான்.)

குலாந்தகன்:—(முன்னேவந்து விகடவசநன் கையைக் கெட்டியாய்ப்பிடித்துக் கொண்டு) ஐயா! ஐயா!! இந்தத் தரங்கொஞ்சம் பொறுங்கள். போக வேண்டாம். இனிமேற் பேசுகின்றேன்! இனிமேற் பேசுகின்றேன்!!

விகடவசநன்:—ஆயின் யான் சொல்லுமாறு நீ செய்கின்றனையா?

குலாந்தகன்:—இதுகாறும் நீங்கள் சொன்னவற்றைத் தவிர்த்துப் பின்னை யார் சொல்லியவாறு யான் கேட்டேன்! எங்கள்தந்தையார் சொன்னபடி கூட யான் கேட்பதில்லையே!

விகடவசநன்:—நீதான் கெட்டிக்காரன்! பிள்ளைகளிருந்தாலுன்னைப்போலவே யிருக்கவேண்டும்! இனியுங்கள் வீட்டில் வந்திருக்கும் அம்மதுரை வீரன்றானே கலாவதியை முத்தமிட்டனனென்கின்றனை?

குலாந்தகன்:—ஆமாம். அவன்றானையா! அவன்றான்!

விகடவசநன்:—அதற்கொரு யுக்திசொல்லுகின்றேன்! அந்தப்படி செய். ஆகட்டுமா?

குலாந்தகன்:—ஆகட்டும். அந்தப்படியே செய்கின்றேன்.

விகடவசநன்:—நீ சொல்லுகின்றதைப் பார்த்தாற் கலாவதி அவனிடத்திலேயே யன்புள்ளாள்போலத் தோன்றுகின்றது. ஆகையினாலே நீ மெதுவாய் அந்த மதுரையினின்றும் போந்துள்ள வீரனதுடையை யெவருமறியாமலெடுத்துக்கொண்டுவிடு! அவ்வாறெடுத்துக்கொண்ட பின்னர் அதனையுடுத்துக்கொண்டு கலாவதியிடஞ் செல்லுகிற்பாயேல், அவள் தான் விரும்பிய வீரன் நீதான் என்று உன்னைத்தழுவி முத்தமிடுவாள். அப்பொழுதெல்லாஞ் சரியாய்ப்போம். ஆனாலப்படிச் செய்கையில் நீ பேசப்படாது! பேசினையோ உன்குரலினாலுன்னைக் குலாந்தகனெனத் தெரிந்துகொள்வாள்!

குலாந்தகன்;—ஆ! நீர் சொல்லியபடியே யிப்பொழுதே யவனுடையைத் திருடிக்கொள்ளுகின்றேன்!

விகடவசநன்:—அதனோடுகூட இன்னொன்றிருக்கின்றது!

குலாந்தகன்:—என்ன? என்ன?

விகடவசநன்:—நீ பாட்டுக் கற்றுக்கொள்ள வேண்டாமா?

குலாந்தகன்;—ஹா! ஹா! ஹா! (எழும்பிக் குதித்துக்கொண்டு) அதுதான் விதூடகரே மிகவு முக்கியம்! அஃதில்லாமற் போனாலுபயோகமில்லை.

விகடவசநன்:—அப்படியானல் யாரொரு பாட்டு நல்லதாயுனக்கென்று வைத்திருந்து அன்றைக்குச் சொல்லிக் கொடுத்தேனே! அதை யெங்கே சொல்லுவாய்! கேட்பேன்.

குலாந்தகன்:—ஹ! ஹ! ஹ! (எழும்பிக் குதித்து) இதோ! இதோ!! (பாடத் தொடங்குகின்றான்.)

இயம்பிடக் கேளாய்—என்றன் சத்தி

விகடவசநன்:—ஏடா! நீ யந்தக் கலாவதியைத் தவிர்த்து வேறு யாரிடத்திலு மப்பாட்டைச் சொல்லக்கூடாது.

குலாந்தகன்:—இல்லை. இல்லை. (பாடுகின்றான்.)

இயம்பிடக் கேளாய்—என்றன் சத்தி

விகடவசநன்:—ஏடா! சரியாய்ச் சொல்லவேண்டும். இல்லாவிட்டால் யான் கேட்கவே மாட்டேன்.

குலாந்தகன்:—ஒரு பிழையுமின்றி மிகவுஞ் செவ்வையாய்ச் சொல்லுகின்றேன். கேளும். பாடுகின்றேன்.

(பாடுகின்றான்.)

இயம்பிடக் கேளாய்—என்றன் சத்தி

விகடவசநன்:—அடே! இரடா! நீ யிந்தக் கலாவதியினிடஞ் சொல்லும்போது அதிக பயபக்தியோடு சொல்லவேண்டும். காட்டுத்தனமாய்ச் சொல்லப்படாது! தெரியுமோ?

குலாந்தகன்:—தெரியும். தெரியும். (பாடுகின்றான்.)

(௰௨) இராகம்-நாதநாமக்கிரியை. தாளம்-சாப்பு.

பல்லவி.

இயம்பிடக் கேளாய்—என்றன் சத்தி
யியம்பிடக் கேளாய்.

அநுபல்லவி.

நயம்படப் பேசிடு நாரியர் கண்ணேயென்
ஞான நிரம்பிய நங்கையே பெண்ணேநன் (கியம்பிடக்)

சரணங்கள்.

ஒருபடி சுண்ட லொருவாய் விழுங்குவேன்
அருங்கலை தேரா தறிவு மழுங்குவேன்
சுரிகுழ லின்பாற்போய் சொல்ல விணங்குவேன்
மருமலர் மானுநின் றாளை வணங்குவேன் (இயம்பிடக்)
தந்தைமே தாநிதி சாற்றிடு நன்னல
மெந்தத் தினத்திலுங் கேளாத மன்னன்யான்

சொந்தமாம் புந்தியுஞ் சொல்லிக் கொடுத்திடும்
புந்தியு மில்லாத புல்ல னடுத்துவர் (இயம்பிடக்)

எத்தகை யோரையு மதியா திருப்பவன்
சுத்தநன் மாதரைத் தோயும் விருப்பவன்
குத்திரங் கொண்டவன் குருவை யிகழ்பவன்
நித்தமு நின்னை நினைந்து மகிழ்பவன் (இயம்பிடக்)

விகடவசநன்:—வெகு நன்றாயிருக்கின்றது! வெகுநன்றாயிருக்கின்றது!! இத்தகைய அதியற்புதசக்தியுடையானை யானெங்குங்கண்டிலேன். மற்றைப் படி யின்னொருவிருத்தமொன்று சொல்லிக்கொடுத்தேனே! அஃதெங்கே?

குலாந்தகன்:—இதோ பாடுகின்றேன். கேண்மின். (பாடுகின்றான்.)

வென்றி முனையுமு முங்கிய வேல்கொடு
வீரர் தலையிழந் தாலும்வி டேனவர்
துன்று மடிகளை யேனும்வ ருந்திநற்
றூய சயவிரு தாக்கொணர் வேன்மிக
மன்று தனிலெவர் தம்மையும் வையுவல்
வாயில் வருகிற வண்ணமெ லாமினி
யென்றன் குணநலன் யாருறு வாருரை
யிந்த மகிதல மாதுட வர்க்குளே. (148)

விகடவசநன்:—ஏடா! எங்கே கலாவதிபெயர்? அதைவிட்டு விட்டனையே!

குலாந்தகன்:— (கவுளிலடித்துக்கொண்டு) இல்லை, இல்லை. 'இன்பமுடைய கலாவதி நங்கையே' 'இன்பமுடைய கலாவதி நங்கையே!' எத்தனைதரம் நீர்சொல்லிக்கொடுத்தாலு மறந்துமறந்து போகின்றது. 'இன்பமுடைய கலாவதி நங்கையே!' இனிமேல் விடமாட்டேன்! இனிமேல்விடமாட்டேன்!!

விகடவசநன்:—மிகவும் விநோதம்! மிகவும் விநோதம்!! நீ மகாசுத்த வீரன்! மகாசுத்தவீரன்!!

குலாந்தகன்:—என் விகடவசநரே! யான்நேரேதானே பாடினேன்?—மற்று நீர் சொல்லியபடியே திருடிக்கொள்ளுகின்றேன்.

விகடவசநன்:—சரி. அப்படியேசெய்! யான்போய் வருகின்றேன்.

(விகடவசநன் போகின்றான்.)

குலாந்தகன்:—போய்வாரும். போய்வாரும்.

(குலாந்தகனும் போகின்றான்.)

---

பாட்டு. 148. இதனை 'சங்கிருதிச்சந்தம்' என்பர் வடநூலார்.

## மூன்றாங்களம்.

இடம் : காஞ்சியிற் சுகசரீரன்வீடு.
காலம் : இரவு.
பாத்திரம் : சுகசரீரன்.

சுகசரீரன்:—(தனக்குள்) மனோமோகினி நம்மிடத்துப்பிரிய முள்ளாளே! அவர் நம்விடயத்தைக்குறித்து மகாராசாவவர்களிடம் பேசுகிறதற்குந் தடையில்லை.—அந்தப்பயல் சோமதத்தனே நம்மிடத்திற் கலாவதியினுடைய சமயம் பார்த்துச் சந்திப்பதற்கேற்பாடு செய்கின்றேனென்று சொல்லிப் போனவன்றான்! அப்புறமவனிது வரையிலும் வரக்கண்டிலேன். அதன் பின் ஆளனுப்பிக்கேட்டால், இன்னுஞ் சமயம்வாய்க்கவில்லை இன்னுஞ் சமயம் வாய்க்கவில்லை யென்கின்றான்! ஒருவேளை, அந்தப்பயல் குலாந்தகனிடத்தி லேதேனும் வாங்கிக்கொண்டு ஒன்றுஞ்செய்யாம லிருக்கின்றனனோ?— ஆம்! அப்படியிருப்பினுமிருக்கும். அன்றைக்குக் கூட அரண்மனையிலிருக்கும்போது அவனப்படித்தானே பேசினன். ஏடா! பயலே! சோமதத்தா! நீயக்குலாந்தகப்பயலுக்கா வுதவிபுரியப்பார்க்கின்றனை?—இரு, இரு. நானேச்சொல்லுகின்றேனுனக்கு வழி!—யாவனோ வருகின்றான். யாரங்கே?

சோமதத்தன் வருகின்றான்.

சோமதத்தன்:—நான்தான் சாமி! சோமதத்தன்.

சுகசரீரன்:—என்னேடா! காரியமென்னே காயோபழமோ?

சோமதத்தன்:—சாமி! ஒரு சமாசாரம்.— இந்தக் குலாந்தக எசமான் வீட்டிலே நம்ம மகாராசா எதிரி பாண்டியன் ஊரிலிருந்து இரண்டு வீரர்கள் வந்திருக்கிறார்களாம். அவர்களிலே யொருத்தன் நம்ம மகாராசா மகள் கலாவதியம்மாவை முத்தமிட்டிட்டானும். அதைப் பார்த்துக்கொண்டிருந்த குலாந்தக எசமான் இன்றைக்கு அரண்மனையிலே நம்ம மகாராசா அவர்களிடத்திலே தெரியப்படுத்தினர். அது என் காதிலே விழுந்தவுடனே யிங்கே யெசமான்களிடத்திலே தெரியப்படுத்தவேண்டுமென்று ஓடி வந்தேன்!

சுகசரீரன்:—அதற்கு மகாராசா என்ன சொன்னர்!—

சோமதத்தன்:—நாளைக்குச் சாமி! அவர்களை யரண்மனைக்குக் கொண்டுவரச் சொல்லி மந்திரியார் மேதாநிதியவர்களுக்கு உத்தரவனுப்பியிருக்கிறார்.—

சுகசரீரன்:—அப்படியா?—அஃதிருக்கட்டும். இந்தச் சங்கதி யென்னுயிற்று?

சோமதத்தன்:—என்ன சாமி! இப்படிச் சொல்லுகிறீர்கள்? சமயம் அகப்பட்டாற் சும்மா இருப்பேனு?

சுகசரீரன்:—சரி. சரி. நீ போய் வா. மற்றுக் காரியத்திலே மாத்திரங் கண்ணுயிருப்பாய்.

சோமதத்தன்:—ஆ! சாமி! (நடந்துகொண்டே தனக்குட் பாடுகின்றான்).

ராசா மகளை யிவனுங் கட்ட
ஆசை வச்சான்! ஐயோ! பாவம்!
மோசஞ் செய்ய முன்னே சொன்னேன்
தோச மின்டே சும்மா விட்டேன். (149)

தோண்டிப் போட்ட நுங்குக் கண்ணி
காண்டு கத்துங் கழுதைப் பாட்டு
வேண்ட மட்டும் பாடிக்கிட்டு
நாண்டிக் குலுக்கி நடந்துக் கிட்டே. (150)

ஏச்சுக்கிட்டுத் திரியு முண்டை
பேச்சுக் கேட்டுக் கெட்டுப் போனான்
சீச்சீச் சீச்சீ! இந்தப் பாவி
பேச்சை யின்னிக் கேக்கமாட்டேன். (151)

[சோமதத்தன் போகின்றான்.

சுகசரீரன்:—எனக்கு மந்திரியார் மகன் குலாந்தகன்றான் ஒரே திரியென்று நினைத்திருந்தேன்! பாண்டிய நாட்டிலிருந்து ஒரு பகைவன் முளைத்தனனே! இஃதென்னே? நான் எந்தக் காரியஞ் செய்யத் தொடங்கினாலு மதற் கிடையூறுகளொன்றன்மே லொன்றாய் வந்துகொண்டிருக்கின்றன!
(பாடுகின்றான்.)

* "ஆகுஞ் சமயத்தார்க் காள்வினையும் வேண்டாவாம்
போகும் பொறியார் புரிவும் பயமின்றே
யேகன் மலைநாட வென்செய்தாங் கென்பெறினு
மாகாதார்க் காகுவ தில்." (152)

என்பது என் விடயத்தி லுண்மையாகவே யிருக்கின்றது! சீ! சீ!! யானிந்த மாதிரி யெல்லாம் யோசித்துக் கொண்டிருந்தா லொருநாளும்

---

பாட்டு 149. கட்ட: மணந்துகொள்ள. வச்சான் = வைத்தான். தோஷமின்டே = தோஷமென்றே.

பாட்டு 150. "நுங்குசூன் றிட்டன்ன கண்ணீர்மை கண்டொழுகுவேன்" என்றார் நாலடியாரினும். காண்டு = கா என்று. கழுதை = கழுதை. வேண்ட: வேண்டின. பாடிக்கிட்டு = பாடிக்கொண்டு. நாண்டி = நாணி.

பாட்டு 151. ஏச்சுக்கிட்டு = ஏய்த்துக்கொண்டு. இன்னிக்கேக்க = இனிக்கேட்க 149, 150, 151 இம்மூன்றுங் கொடுந்தமிழ்ப்பாக்களாம்.

பாட்டு 152. போகும் பொறியார் புரிவும் பயமின்றே: நுண்ணிய விடயங்களினும் நுழைந்து செல்லும் அறிவுடையோர் அவரொடு முரணிச் செய்யுஞ் செயலும் பயனின்றாய் விடும் என்க. இனிப்போகூழினர் செயலும் பயனின்றா மென்பாருமுளர். * பழமொழி.

காரியங் கைகூடாது. ஆதலால், ஏ! சுகசரீரா! நீ யொன்றுக்கும் பயப் படாதே! உன் காரியத்தை நடத்து!—இவ்விருவர்களையுந் தொலைத் தாற்றா னுனக்கு நல்லது! அல்லாக்கா லுன்காரியம் நிறைவேற மாட் டாது!—எப்படி யிருப்பினும் முதலிற் குலாந்தகனைத் தொலைத்து விடு தல் மேலானது!—அஃதெனக் கெவ்வளவோ வெளிதான காரியம்!—(மௌனம்) சீ! சீ!! யானெதற்காக வீணே குலாந்தகனைக் கொல்ல வேண்டும்? அவனைப் பற்றித்தான் மகாராசா சுத்த மூடனென்று எண் ணங்கொண்டிருக்கின்றனரே!—இருந்தாலு மவனைத் தொலைக்கத்தான் வேண்டும்! யானெவ்வளவு இளைஞனாயிருக்கின்றேன்! என்னைக் கிழவ னென்கின்றான்! யான் கலாவதியைப்போலப் பத்து மனைவியரை மணந்து கொண்டு வைத்தாளச் சக்தியுள்ளவனாயிருக்கின்றேன்! அத்தன்மைய வெனக்கு நாற்பது வயதானதனாலே யென்னை குறைவு? நாற்பதிற்றிரட் டியாயினாற்றா னென்னை குறைவு?—ஆகா! இவ்வளவும் யானந்தப்பயல் குலாந்தகனிடம் முன்னொரு நாட் சொன்னதனாலே யல்லவா நேரிட் டன! யானென்னை மூடத்தனஞ் செய்தேன்! இன்னும் யானவனிடத் திற் சொல்லி யிருக்கின்ற பல இரகசியங்களையும் வெளியிட்டுவிடுவானா யிற் கேடுகள் மேன்மேலுங் கிளைக்குமே!—அதற்கென்செய்வது?—(மௌனம்) இனிபொரு கணமேனும் யோசனைசெய்யக்கூடாது. அந்தக் குலாந்தகப்பயலை யெப்படியாவது கொன்றே தீர்க்கவேண்டும்! இதுகாறு மென்னை விரோதித்துக் கொண்டவரு ளொருவனாவது உயிர் தப்பினதில்லை! என்னோடு மாறுபட்டு என்னைக் காணாது மனோமோ கினி வீட்டிற்குச் சென்று கொண்டிருந்த,

கானப் பிரியனை வானுல கனுப்பினேன்!
விரூபா அக்கனை விண்ணுல கேற்றினேன்!
குரூப ராமனைக் குத்திக் கொன்றனென்!
கமலநாதனைச் சமன் விருந்தாக்கினேன்!
நட்டுவர் தலைவ னுகனை மாளிகை
கட்டிக் கொடுத்த குட்டிச் செட்டியை
மர்த்தனஞ் செய்து மறலிபால் விடுத்தேன்! (153)

அப்படி யிருக்க, எனக்குப் பகைவனாய்வந்த வக்குலாந்தகப்பயலைக் கொல்லாமல் விடுவேனோ?—அவனைக் கொன்றாலன்றி யென்னெண்ணஞ் சித்தியாது! பார்த்துக்கொள்வேன்!

[சுகசரீரன் போகின்றான்.

—(o)—

## நான்காங்களம்.

இடம்: சோழனரண்மனையி லாத்தாந மண்டபம்.
காலம்: பிற்பகல்.
பாத்திரங்கள்: விகடவசநன், குலாந்தகன்.

விகடவசநன்:—ஏடா! குலாந்தகா! மகாராஜா வுன்னைக் கேட்டா லென்னேடா சொல்வாய்?

குலாந்தகன்:—அவன்றா னந்த மதுரைவீரன் கலாவதியை முத்தமிட்டானென் பேன்!

விகடவசநன்:—சீ! சீ!! அங்ஙனஞ் சொல்லவை யேற்காரியங் கெட்டுப்போகும். ஏனெனில் நீயவன் உடையைத் தரித்துக்கொண்டு கலாவதியினிடஞ் சென்ற போதினு முன்னை யம்மதுரைவீரனென்று அவள் நினைக்க மாட்டாள்!

குலாந்தகன்:—ஆமாமாம். இப்பொழுதுதான் றெரிந்தது!!—சிறைச்சாலையி லிருக்கிறவ னிங்கெங்கே வந்தானென்று நினைப்பாள்! ஆகையினாலே முத்தமிடவில்லை யென்பேன்! முத்தமிடவில்லை யென்பேன்!!

விகடவசநன்:—இஃதென்னை! இவன் எங்களப்பன் குதிரிற்குளில்லை யென் பான்போலும்! (குலாந்தகனை நோக்கி) அடே! நீ யிதைக் குறித்தொன் றுஞ் சொல்லாதே! எங்கள் வீட்டில் மதுரையினின்றும் போந்தவர் இருவருளரென்று மாத்திரஞ் சொல். அதற்கப்புறம் ஒன்றுஞ் சொல் லாதே! முத்தமிட்ட சங்கதியைப் பற்றிய பேச்சையே யெடாதே!

குலாந்தகன்:—இல்லை. இல்லை. எடுக்கவில்லை.—ஆனாலும் அந்தப் பயல் முத்தமிட்டானே! அதை விட்டுவிடலாமா?—

விகடவசநன்:—சரி. உனக்குக் கலாவதி வேண்டுமா வேண்டாமா?

குலாந்தகன்:—வேண்டும்! வேண்டும்!! வேண்டும்!!!

விகடவசநன்:—அப்படியாயி னவர்க ளிருவரும் முத்தமிட்ட சமாசாரத் தையே யெடுக்கக்கூடாது!

குலாந்தகன்:—இல்லை. இல்லை.

*சயதுங்கனு மேதாநிதியு மற்றைய ஆத்தானிகரும் வருகின்றார்கள்.*

*(அவர்கள் தத்தம் நிலைமைக்கேற்றபடி யிருக்கின்றனர்.)*

சயதுங்கன்:—என்ன மேதாநிதியாரே! அவர்களை யின்னும் வரவில்லை?

மேதாநிதி:—அதற்காகத்தான் நம்முடைய சுகசரீரர் போயிருக்கின்றனர்! இதோ வந்துவிடுவார்கள்!

சயதுங்கன் :—என்ன * விகடவசநரே! மௌனமா யிருக்கின்றீர்? உமக் கென்ன? உடம்பு செவ்வையில்லையோ? ஏதோ ஒருமாதிரியா யிருக் கின்றீரே!

விகடவசநன் :—விகடனிடத்திலே வசனமேது?—என்னைத்தான் சரீரமற்றவ னென்கின்றீர்களே! பின்னை யுடம்பு செவ்வை யில்லையோ வென்று கேட்பானேன்? உடம்பு செவ்வை யில்லைதான்!

சயதுங்கன் :—அப்படியாயின் நீர் அநங்கனோ?

விகடவசநன் :—இல்லை. அவனுக்கும் மேலானவனே! அவன் சிவபிரா னென்று பாராது மலர்க்கணைகளை யெய்து உடலிழந்தான்! யான் மகா ராஜாவென்று பாராது சொல்லம்புகளை யெய்துகொண்டு சும்மா இருக் கின்றேன். (யாவரும் நகைக்கின்றனர்).

சிதாநந்தனுஞ் சத்தியப்பிரியனுஞ் சுகசரீரனும் வருகின்றனர்.

சிதாநந்தன் :—(பாடுகின்றான்).

வந்தனம் வந்தனஞ் சோழ மன்னவ!
எந்தமை யழைத்த காரிய மியாதோ? (154)

(சிரஞ் சிறிது குனிகின்றான்.)

சயதுங்கன் :—வம்மின். இப்படி யிருமின். நீவிரிருவிரு மெமது பகையரச னாகிய பாண்டியனது நாட்டுப் போர்வீரரென நமது மந்திரியார் சொல் லத் தேர்ந்தனம். எமது நாட்டினு ளெமதுபகை நாட்டாரெவரும் வரக் கூடாதென்று நாடெலாம் பறைசாற்றியிருப்ப, நீவிரிருவீரும் அவ்வுத் தரவினைக்கடந்து வந்துவிட்டீர்களாயினு மெமது மந்திரியார் மேதாநிதி யவர்கள் நும்மிருவரையுங் குறித்து மிகவுமுயர்வாகச் சொல்லுதலினாலே நும்மிருவர் குற்றத்தையும் பொறுக்கின்றனம்!

சுகசரீரன் :—(ஆச்சரியத்துடன்) பொறுக்கின்றனம்! பொறுக்கவே கூடாது! மகாராசா! இவர்கள் மிகப்பொல்லாதவர்கள்! பாண்டி நாட்டாரெலாம் பரமதுட்டர்கள்!

சிதாநந்தன் :—(சுகசரீரனை வெகுண்டு நோக்கி) என்சொனாய்? தீயோய்! எம்மை யின்னார் இத்தகையரென் றறிகிலாது இவ்வாறு தூஷித்த வுன்றன் சிர த்தை வீரபத்திரக் கடவுள் சிவபெருமானைப் பழித்த தக்கன் றலையைக் கொய்தாங்கு கொய்கின்றேன்! பார்!

(வாளையோச்சி யெழுதலுஞ் சுகசரீரன் எழுந்தோடி மந்திரியார் பின்புறம் பயந்து நிற்கின்றனன்.)

---

* 'விகட' என்றதன்கணுள்ள ககாரத்தை முதற்காரம் போல வலித்து உச் சரியாது மூன்றாங் ககாரம்போல மெலித்து உச்சரிக்கின்றனன். அதுபற்றிப் பொருள் வேறுபடல் காண்க.

விகடவசநன்:—ஐயா! ஐயா!! இவர் சுகசரீரர்! இவரின்னும் பலமாதர் சுகங்களை யெதிர்பார்த்துக்கொண் டிருக்கின்றனர்! இப்போ தென்னவுஞ் செய்து வையாதிர்!—

(சிதாநந்தனைப் பிடித்துக்கொள்கின்றான்.)

சிதாநந்தன்:—விடுமின். அப்பயனுக்குச் செய்கின்றேம்வழி!—

சத்தியப்பிரியன்:—என்னப்பா? நீயிவ்வாறு செய்வது நியாயமன்று. விடு. விடு.— (பாடுகின்றான்)

* "கறுத்தாற்றித் தம்மைக் கடியசெய் தாரைப்
பொறுத்தாற்றிச் சேறல் புகழால்" (155)

ஆகலின் யாரேனு மொருபேதை யென்னவாவது சொன்னால் அவற்றிற்கெல்லாம் மகா புத்திமானாகிய நீ கோபங் கோடலாகுமோ—

(பாடுகின்றான்.)

* "ஆய்ந்த வறிவின ரல்லாதார் பல்லுரைக்குக்
காய்ந்தெதிர் சொல்லுபவோ கற்றறிந்தார்" (156)

(சிதாநந்தன் கோபந்தணிகின்றனன்.)

மேதாநிதி:—வ! சுகசரீரரே! இன்றைக் கும்மைப்பிடித்த புண்ணியமேதோ இருந்து பிழைத்தீர்! போம்!

சுகசரீரன்:—எனக்குப் பயமாயிருக்கின்றது! யானிங்கேதானிருப்பேன்!

முதலாத்தானிகன்:—சரி. அதற்கென்ன? இங்கேயே யிருமே.

சயதுங்கன்:—(சுகசரீரனைநோக்கி) என்ன சுகசரீரரே! இன்றைக்கு நீர் பைத்தியம்பிடித்தவர்போலு மாரம்பித்தீர்!

சுகசரீரன்:—யானப்படி யென்னசொன்னேன்? மகாராசா! "பொல்லாதவர்கள்" என்றுதானே சொன்னேன்! அதற்காக என்னைக் கொல்லத் தொடங்கி விடுகிறதா?

சயதுங்கன்:—சரி. சரி. நீர் பேசாதிரும் (திரும்பிச் சிதாநந்தனை நோக்கி) அதுநிற்க. நுமது செய்கை மிகவும் நன்று! நீவிர் நமது சுகசரீரப் பிரபுவவர்கள் ஏதோ சொல்லிவிட்டனரென்று அவர்மீது கோபமூண்டு அவரைக் கொல்லுதற்கெழுந்தீர்! மகாராசாவவர்க ளிருக்கின்றனரே யென்று சிறிதேனும் யோசித்தீரல்லீர்! இஃதொரு புறமிருக்க இன்னும் நீரெமது குமாரத்தி கலாவதியைப் பெறுவதற்கு இஷ்டமாயின் அங்கிசான்றாய்ப் பெறுதலை விடுத்துக் களவுவழியாய்ப் பெறுவான் கருதியடாத காரியஞ் செய்தீரென்று நமது மந்திரியார் குமாரர் குலாந்தகர் சொல்லுகின்றனரே. அதுமெய்தானோ?—

(விகடவசநன் குலாந்தகனை யெழுப்பிவிடுகின்றனன்.)

---

* பழமொழி.

குலாந்தகன் :—இல்லை. இல்லை. மகாராசா! அவரடாதகாரிய மொன்றுஞ் செய்யவில்லை!—

(யாவரும் நகைக்கின்றனர்.)

விகடவசநன்:—ஐய கனவான்களே! நகையாதீர்! நகைத்தீர்களோ நமது குலாந்தகர் உண்மையையுரைத்து விடுவார்! பார்த்துக் கொள்ளுங்கள்.

சயதுங்கன்:—என்ன குலாந்தகரே! நேற்றொன்று சொன்னீர்! இன்றைக் கொன்று சொல்லுகின்றீரே!

குலாந்தகன்:—ஆமாம். மகாராசா! நேற்றுச் சொன்னது மெய்! இன்று சொன்னது பொய்!

விகடவசநன்:—அடே! யென்னையா குழறுகின்றீர்?

குலாந்தகன்,—ஐயா! விகடவசநரே! கொஞ்சம் பொறும்! இதோ சரியாய்ச் சொல்லி விடுகின்றேன்.—(சயதுங்கனை நோக்கி) மகாராசா! நேற்றுச் சொன்னது மெய்! இன்று சொன்னது பொய்!

விகடவசநன்:—திரும்பவுங் குழறுகின்றீரே!

சயதுங்கன்:—இஃதென்னை குலாந்தகரே!

குலாந்தகன்:—ஆமாம். இன்றைக்குச் சொன்னதுதான் மகாராசா மெய்!

சயதுங்கன்:—சரி. சரி. வெகு நன்றாயிருக்கின்றது! இஃதெப்படி யிருப்பினு மிருக்கட்டும். ஏ! பாண்டியவீரர்காள்! இதனுண்மை யிப்படியிருப்ப, நீ விரிருவிரு மெமது நாட்டினு ளெமது அநுமதியன்றிப் போந்தமையி னானும், சுகசரீரரை நீவிர் கொல்லுதற்கெழுந்தமையினானு மெம்மொடு மற்போர் புரியவேண்டும். அதன்கண், நீவிர் தோற்றுப்போவீர்களாயின் தோற்றதற் கடையாளமாக நீவி ருமது சிகைகளை யிழக்கவேண்டிவரும். மற்றைப்படி வெல்வீர்களாயின் நும்மை யெமதுநாட்டுச் சேனாதிபதி யாக்கி விடுகின்றேம். அப்படிச்செய்ய வுமக்கு விருப்பமில்லையாயின், இப்பொழுதே யெமதுநாட்டினைவிட்டகலவேண்டும். அதுவு மெமது மந்திரியார் மேதாநிதியாருக்காகச் செய்கின்றேம்! இவ்விரண்டினி னுமக் கெது செய்யச் சம்மதம்?

சத்தியப்பிரியன் :—யாங்கள் சிறிதுயோசனைசெய்த பின்னர்ச் சொல்லுகின் றோம்.

சிதாநந்தன் :—அற்றன்று. இதற் காலோசனையென்?—

(பாடுகின்றான்.)

மல்லயுத்த மாவீர வள்ளால் சயதுங்க
வல்லவனே வண்சோழ மன்னவனே—சொல்லுதும்யா
மெப்பொழுது போர்நிகழு மென்றிருப்பே மாதலினா
னிப்பொழுதுஞ் சன்னத்த மே. (157)

ஆதலிற் சமூகத்தி னுத்தரவினைத்தா னெதிர்பார்க்கின்றேம்!—

சயதுங்கன் :—(கம்பீரத்துடன்) அப்படியாயின் நாளை மாலைப் பாலியாற்றிற்கும் வேகவதியாற்றிற்கும் நடுவணுள்ள வெளியிடத்திற்குத் தவறாது வந்து சேர்மின். அவ்விடத்தில் யாம் யுத்தஞ் செய்வோம்!

சிதாநந்தன்:—ஆ! அங்ஙனமே! அதற்கொரு தடையுமில்லை.

சயதுங்கன் :—அப்படியாயின் நீங்களிப்போது போகலாம்.

[சிதாநந்தனுஞ் சத்தியப்பிரியனும் போகின்றனர்.

என்ன மேதாநிதியாரே! இவ்விருவரும் நல்ல தைரியசாலிகளா யிருக்கின்றனர்! யாம் 'மல்லயுத்த மகாவீர சயதுங்க சோழர்' எனப் பட்டம் படைத்திருக்கின்றனம், அத்தகைய சீர்த்திவாய்ந்த நம்மைக்கண்டும் அஞ்சாது வெகுதைரியமாக யுத்தஞ் செய்வோமென் றொத்துக்கொண்டனரே! என்னவோ? பார்ப்போம்.

மேதாநிதி :—அவர்கள் இதில்மாத்திரமன்று; சகலசாஸ்திரங்களினும் வல்லுநர்! அவர்களது கல்விக்கேற்றபடி அன்பு, ஒழுக்கம், புத்தி, அழகு எல்லா மவர்களிடத்திற் குடிகொண்டிருக்கின்றன! அத்துணைச் சிறப்புடையோர் தங்களோடு யுத்தஞ்செய்து தோற்பாரேல் அஃததிசயமே யன்றித் தங்களை யவர்கள் வெல்வாரே லஃததிசயமே யன்று.

சுகசரீரன் :—அப்படியா நினைக்கின்றீர்கள்? நம்முடைய மகாராசாவுக்குமுன்னரவர்கள் கொதுகுக ளல்லவோ? அவர்களிருவருஞ் சிகைபிழந்த பின்னரன்றோ சொல்லப்போகின்றேன்!—

விகடவசநன் :—(தனக்குள்) அவர்கள் கொதுகுகளோ அல்லது நம்முடைய மகாராஜாதான் கொதுகோ என்பது நாளை மாலைத்தானே தெரியும்!

சயதுங்கன் :—என்ன? விகடவசநரே! நீருமக்குள்ளே ஏதோ பேசிக்கொண்டிருக்கின்றீர் போலுந் தோன்றுகின்றதே!

விகடவசநன் :—அப்படி யொன்றுமில்லை. நம்முடைய சுகசரீரரது புத்திசாலித்தனத்திற்காகச் சந்தோஷப்பட்டு, ஏதோ அவருக்குப் பலமாய்ப் பிடித்திருக்கின்ற தென்றேன்! அதுதான். மகாராஜா!

சயதுங்கன் :—என்ன பிடித்திருக்கின்றது? பைத்தியந்தான்! வேறென்னை?

(சயதுங்கனொழலும் யாவரு மெழுகின்றனர்,)

என்மந்திரியாரே! நீங்களே னுமதுகுமாரன் குலாந்தகனைப் பற்றிக் கவனியா திருக்கின்றீர்? நீவிரிப்படி யிருக்கக்கூடாது! முன்னிருந்த தைக்காட்டினு மிப்போது அதிகமாயிருக்கின்றதுபோலத் தோன்றுகின்றதே!

(சயதுங்கன் நடக்கின்றான்.)

[குலாந்தகன் மெதுவாய்ப்போய்விடுகின்றான்.

மேதாநிதி:—நமதரண்மனை வைத்தியர் அகோபலர்தாம் பார்க்கின்றனர். எங்கும் வெளியேபோகா திருப்பிற் சீக்கிரஞ் சௌக்கியமாகு மென்கின்றனர்! அவனைத்தான் கவனிக்கிறவழியா யில்லை!—

சயதுங்கன்:— நாம் சொல்லுகின்றே மவனுக்கு. எங்கே? அவனெங்கே காண்கிலம்!

முதலாத்தானிகன்:— அவரப்பொழுதே போய்விட்டனரே !—

விகடவசநன்:— இவற்றிலெல்லா மவர் புத்திசாலிதாம்!

சயதுங்கன்:— ஐயா ! மேதாநிதியாரே ! நீங்களவனை நம்மிடத்திற் கனுப்புமின்.

மேதாநிதி:— ஆ! அப்படியே செய்கின்றேன் !—

[யாவரும் போகின்றனர்.

---

## ஐந்தாங்களம்.

இடம்: காஞ்சியிற் சோழனரண்மனையினந்தப்புரம்.

காலம்: பிற்பகல்.

பாத்திரங்கள்: சுகசரீரன், மனோமோகினி.

சுசகரீரன்:— அம்மா! யான் மந்திரிமகன் குலாந்தகனுக்கன்றோ பயந்திருந்தேன்! இப்பொழு தவனிலும் பெரியபகைவனொருவன் முளைத்திருக்கின்றனன். அவனுங் கலாவதியுங் காதல்கொண்டு ஒருவர்க் கொருவர் முத்தமிட்டுக் கொள்ளுகின்றனராம்.

மனோமோகினி:— அஃதுண்மைதானென்று தெரிகின்றது. யானும் நீர்சொன்ன மாதிரியாகவே கேள்விப்பட்டேன்! நம்ம மாகதம் வந்து மந்திரிமகன் குலாந்தகன் அவர்களிருவருமப்படிச் செய்ததைப் பார்த்ததாக மகாராசா வவர்களிடஞ் சொன்னனென்று சொன்னாள்! சிறிதுநேரத்திற் கெல்லா மரசரு மென்னிட மிதைப்பற்றிக் கூறினர்.

சுகசரீரன்:— அதனாலே யேதாவது நமக்குக் கேடுண்டாகுமோ? ஏனம்மா?

மனோமோகினி:— இவையெல்லாம் அற்பகாரியமென்று விட்டுத் தள்ளாம லென்னவெல்லாமோ யோசித்துக்கொண்டிருக்கின்றீரே! அவளென்ன வேண்டுமென்றாலுஞ் செய்துகொள்ளட்டும். நீரேன் பயப்படுகின்றீர்? உமக்கென்ன? எப்படியாவது உம்முடைய காரியம் முடிகின்றது. யானவளை யெப்படியாவது சரிப்படுத்திவிடுகின்றேன். இந்தக்காரியத்திற்கோ இவ்வளவுயோசனை?

சுகசரீரன்:— நீங்க ளெப்படியாவது சரிப்படுத்திவிடுவீர்கள். அதற்காட்சேப மொன்றுமில்லை.— [மௌனம்] இருந்தாலும் அம்மதுரைவீரனையுங் குலாந்தகனையுந் தொலைத்துவிட்டால் அதுமிகவும் நல்லதென்று நினைக்கின்றேன்!

மனோமோகினி:— சீ! சீ!! அஃதாகுமா? மகாபாவமன்றோ? என்னமுழுகிப் போகின்றனவென்று இவ்வாறு தூர்க்கிருத்தியஞ் செய்வதற் கெண்ணங் கொள்ளுகின்றீர்! வேண்டாம்! வேண்டாம்!!—

**சுகசரீரன்:**— வேண்டாமென்று ளாகிறதா ? இக்காரியங்களிலெல்லாம் பாவ புண்ணியம் பார்த்து முடியாது! என்னவோ முரட்டடியாயடிக்க வேண்டுவதுதான். அம்மா!

**மனோமோகினி:**— அஃதென்னே ? என்னைக்கேளாதீர்! இவை யெல்லாமும்ம பாடு, யானிவ்விடயங்களைப் பற்றிப் பேசவுமெனக்கு நாவெழாது ; எனக்குத் தெரியவுந் தெரியாது ! உமதிஷ்டம். எப்படியாவது செய்யும் !—

**சுகசரீரன்:**— அப்படிச் சொல்லப்படாதம்மா ! அம்மதுரைவீரனைத் தொலைத்தால் மகாராசாவுக்குக்கூடக் கொஞ்சம் சந்தோஷமாயிருக்கும். ஏனென்றால் அவன் நம்ம மகாராசாவோடுகூடக் கொஞ்சமேனு மரியாதையில்லாமல் மல்லயுத்தஞ் செய்கிறேனென்று மிகவு மகங்காரமாய்க் கூறினன் ! என்னையுஞ் சபாமண்டபத்திலே வாளோச்சிக் கொல்லவந்தான் ! நல்லவேளை விகடவசநரிருந்து காப்பாற்றினர் ! இல்லாவிட்டா லென்னைக் குத்திக்கொன்றேயிருப்பான் !— ஆகையினாலே அவனைத்தான் முதலிற் கொல்லப்போகின்றேன் !—

**மனோமோகினி:**— மகாராசாவோடுகூட மற்போர்புரியும் வன்மைவாய்ந்த பிரபலவீரனை நீவிரோ கொல்லப்போகின்றீர் ? ஏனையா வீண் மனோராச்சியமெல்லாம் பண்ணுகின்றீர் ? உம்மாலே யந்தக்காரியஞ் செய்து முடிப்பதற்குக் கூடாது. வேண்டாய்! வேண்டாம்!! இப்பொழுதே சொன்னேன் ! கொல்லப்போய்க் கொலையுண்டுவாராதீர் !— அவ்வெண்ணத்தை விட்டுவிடும் ! விட்டுவிடும் !! இவையெல்லாம் நம்மாலாகாத காரியங்கள் ! பார்த்துக்கொள்ளும் !

**சுகசரீரன்:**— யானவனுக் கெதிரேபோய்க் கொல்லுவேனென்று நினைத்தீர்களோ ?— யானொளித்துக்கொண்டிருந்து சமயம்பார்த்துக் குத்திவிடுகின்றேன் !

**மனோமோகினி:**— சொல்ல வேண்டியதில்லை யுமது வீரத்தனம் ! அப்படிச்செய்தாற்றான் உம்மைக்காட்டிலும் பெரிய சுத்தவீரர் இவ்வுலகிலில்லை யென்பார்கள். போம் ஐயா போம் ! கீரைத்தண்டு பிடுங்க ஏலேலப்பாட்டோ?— இப்பேதைக் கலாவதியை யடைவதற்குக் கொலையுஞ்செய்யவேண்டுமா?— யான் முடித்துவைக்கின்றேன். நீர் பேசாதிருமையா !—(பாடுகின்றாள்.)

*"மாதவர் நோன்பு மடவார் கற்புங்
காவலன் காவ லன்றித் தங்கா." (158)

என்பது நீரறியாத தன்றே.

**சுகசரீரன்:**— ஆமாம். தாங்களவனைப் பலவந்தமாய் எனக்கு மணஞ்செய்து வைத்தாலு மவளோடு யானெப்பொழுதும் இன்புற்றிருக்கக் கூடுமோ ? ஆதலாற்றானவர்களைத் தொலைக்கவேண்டு மென்கின்றேன்.

* மணிமேகலை.

மனோமோகினி:— அடேயென்னையா! ஒருபுருடனை மணந்துகொண்ட பின்னர் மறுபுருடனை மனத்திலெண்ணவுங் கூடுமோ? அப்படியிருக்க மறுபுருடனை மணந்துகொண்டாலதனினு மிழிந்ததுண்டோ? அப்பொழுது கற்பழிந்து போகாதோ? அப்படிப்பட்டவ ளென்னைப்போல விலைமகளாகவே யிருப்பாள்!—

சுகசரீரன்— இந்தக்காலத்திலே கற்பாவது கிற்பாவது! எல்லாம் பிறருக்குத் தெரியாதிருந்தாற் கற்புத்தான்!

மனோமோகினி:— சீ! சீ!! அப்படிச் சொல்லாதீர்!— மற்றைப்படி அதனுலென்ன விப்போது?

சுகசரீரன்:— அதுதான் நானவர்களைத் தொலைக்கவேண்டுமென்கின்றேனே!—

மரகதம் வருகின்றாள்.

மரகதம்:— அம்மா! மகாராசா வவர்கள் வருகின்றார்!—

மனோமோகினி:— அப்படியானுற் சுகசரீரரே! நீருத்தரவு பெற்றுக்கொள்ளும்!— வேண்டாமென்றாலும் உமக்கு மனவருத்தம். இஷ்டமெப்படியோ அப்படிச்செய்யும். போம்.

சுகசரீரன்:—(தனக்குள்) பிறரைத் துணைவேண்டினு லிப்படித்தான் முடிகின்றது. ஆகையால், (பாடுகின்றான்.)

* "எமக்குத் துணையாவர்வேண்டுமென் றெண்ணித்
தமக்குத் துணையாவார் தாந்தெரிதல் வேண்டா
பிறர்க்குப் பிறர்செய்வ துண்டோமற் றில்லை
தமக்கு மருத்துவர் தாம்." (159)

[சுகசரீரன் போகின்றான்.

மனோமோகினி:—(தனக்குள்) பயித்தியக்கார மனிதன்! இவன் அரசனுறவினனும்! இவனே அரசன் மருகனுவான்? என்ன அசாத்திய யோசனையெல்லாம் யோசிக்கின்றான்! இவையெல்லாங் கைகூடுமோ? மூலையிலொளித்துக்கொண்டிருந்து கொல்வேனென்கின்றான்! அவனிவனைப் போலெத்தனையோ மடங்கு சாமர்த்தியமுடையனு யிருப்பான்! ஒருவேளை அம்மதுரைவீரனை வெல்லவேண்டுமென்று லேதாவது தந்திரத்தினுலே வெல்லவேண்டுமேயன்றி வேறெதனுலும் முடியாது! இவையெல்லாந் தெரிந்து கொள்ளாமல் என்னவோ பைத்தியம் பிடித்தவன் போலக் குழறுகின்றான்! காமத்துக்குக் கண்ணேது?—

சயதுங்கன் வருகின்றான்.

(மனோமோகினி யெழுகின்றாள்.)

* பழமொழி.

சயதுங்கன்:—எம்மின்பத்தையலே! மனோமோகினீ! என்ன? உன்முகமொளி மழுங்கியிருக்கின்றது! அதைப்பார்க்கும்போது நீயேதோ சிந்தனை செய்துகொண் டிருந்தனைபோலுங் காணப்படுகின்றதே!

மனோமோகினி:—என்னரசர்க்கரசே! எனக்கென்ன மனவருத்த மிருக்கின்றன? ஒன்றுமில்லை!—ஆனாலின்றைக்கு அந்த மதுரைவீரன் றங்களை யொருபொருட்டாக எண்ணாமல் மிகவு மலட்சியமாய்த் தங்களோடு மல்லயுத்தஞ் செய்வதாக ஒத்துக்கொண்டா னென்பதைக் கேள்வியுற்றது முதலென் மனமேதோ சஞ்சலப்படுகின்றது!—

சயதுங்கன்:—இதற்காகவோ நீ சஞ்சலப்படுகின்றனை?—இதற்குச் சஞ்சலமும் வேண்டுமோ? விட்டுவிடு! சுத்தவீரர் சயதுங்கரைச் சேர்ந்துஞ் சஞ்சலமா?—என் செல்வமே! மனோமோகினீ! எல்லாமீசன் கற்பித்த வாறே முடியும்!— (பாடுகின்றான்.)

ஆதியி லீசன்று னமைத்த வாறன்றி
யேதும்வே றாகியீண் டியலற் பாலதோ
மூதறி வுடையவென் முத்த வாணகைக்
காதலி யேயெந்தங் காம வல்லியே!— (160)

மனோமோகினி:—இருந்தாலும் நாம் நம்மாலான முயற்சி செய்யவேண்டாமோ?—

சயதுங்கன்:— யாமென்ன முயற்சிசெய்ய வேண்டுமென்கின்றனை!—

மனோமோகினி:— என்னவோ தங்களுக்குத் தெரியாதனயா னென்னசொல்லப் போகின்றேன்?—

சயதுங்கன்:— ஏதோ இன்றைக்கு ஆச்சரியமாய்த்தா னிருக்கின்றது!—அந்த மழவிளங்குமரன் அறைகூவிப் போனதுமுதல் எமது மனமுங் கொஞ்சம் நடுங்கத்தான் நடுங்குகின்றது!—

மனோமோகினி:— (பாடுகின்றாள்.)

(கரு) இராகம் - ரீதிகௌளை. தாளம் - ஏகம்.

பல்லவி.

என்னிறையே யிதுவென் னதிசய
மெல்லாரையும் வென்ற வீரனே.

அநுபல்லவி.

மன்னர் மன்ன னீயே மதிமாழ் குறினே
மற்றை மாந்த ரென்ன மாபாடு படார்? (என்னி)

சரணம்.

வித்தை கற்றவென் வேந்த னேகுல
மேன்மை வாய்ந்து மிளிர்மற்போர் வல்லனே

சுத்த வீர ரேறே துணையர் யடியேன்
றுன்னி நிற்புழியுந் துன்பமுண்டு கொலோ? (என்னி)

என் மனத்தி லென்னையோ வொன்று படுகின்றது!— அதனைச் சொல்லு கின்றேன். கேளுங்கள். என்னிடத்தி லொரு மருந்திருக்கின்றது. அதிற் சிறிதுட்கொண்டால் உடனே யது தன்னை யுட்கொண்டவ ரறிவை மயக்கிவிடும்!—

சயதுங்கன்:—அதைப்பற்றி யிப்போதென்ன?—

மனோமோகினி:—அதையந்த மதுரைவீரனுக்குக் கொடுத்துட்கொள்ளச் செய்ய லாமென்றுதான் பார்க்கின்றேன்!—

சயதுங்கன்:—அதை யெப்படி நீயவர்களுக்குக் கொடுப்பாய்?

மனோமோகினி:—இதுதானோ ஒரு பெரிதான காரியம்! அதை வெகு எளி தாய் முடிக்கலாமே!—

சயதுங்கன்:—எப்படி முடிப்பாய்?—

மனோமோகினி:—யானொரு மகாருஷியைப்போல வேடம் புனைந்து கொண்டு அவர்கள் யுத்தரங்கத்திற்கு வருமுன் அவர்கள் வரும்வழியி லுட்கார்ந் திருப்பேன்!—அவர்கள் மிகவும் பக்தியுடையராயிருக்கின்றனர்!—ஆத லாலவர்கள் என்னை வணங்காமற் போகமாட்டார்கள்! ஆகவே யவர்கள் என்னிடம்வந்து வணங்கினவுடனே யவர்களை யாசீர்வாதம்பண்ணி யிந்த மருந்துப்பெட்டியை யவர்களிடங்கொடுத்து "நீங்கள் யுத்தவீரர்கள் போற்காணப் படுகின்றதனாலே யுத்தத்திற்குப் போகிறதற்குமுன் இதனை யுட்கொள்வீர்களாயின் யாவரையுஞ் சயித்துவிடலாம்" என்பேன்! அப் படியே யவர்களும் வாங்கிக்கொள்ளுவார்கள்! இதற்காட்சேபமே யில்லை!

சயதுங்கன்:—அப்படியே யவர்கள் வாங்கிக்கொண்ட பின்னரு மென்னைச் சயித்து விடுவார்களாயின்?—

மனோமோகினி:— என்னை யிவ்வூரைவிட்டுத் துரத்திவிடுகின்றது!—

சயதுங்கன்:— எல்லாவற்றிற்கும் நாளைப்பார்ப்பமே யுனதுத்தியின்பயனை!— (பாடுகின்றான்.)

ஒருமாவிற் பெருமானே யுனையன்றிக் கதியில்லை
திருமாலுந் தேடரிய செழுஞ்சோதித் தன்குன்றே
யிருமானைத் தலையுடலி னிருத்தியதே யன்றியினு
மொருமானைக் கரத்தினிலே யுகந்தேந்து முத்தமனே! (161)

[இருவரும் போகின்றனர்.

## நான்காம் அங்கம் முற்றிற்று.

---

பாட்டு 161:—ஒருமாவிற் பெருமான்—ஏகாம்பரேசன். கங்கையைச் சிரத்தினும் உமையைப் புரத்தினுங் கொண்டமையின் "இரு மானைத் தலையுட லினிருத்திய" தென்றும்.

# அங்கம்—ரு.

## முதற்களம்.

இடம் : வயந்தச்சோலை.

காலம் : காலை.

பாத்திரங்கள்: சிதாநந்தன், கலாவதி.

சிதாநந்தன்:— என்னருமைச் சுந்தரவல்லீ !— (முத்தமிட்டு) நீ யேன் மன வருத்தப்படுகின்றனை ? (பாடுகின்றான்)

ஏடு துற்ற வேலயி லெற்கே
மாடு சான்றதென் மாமணி ரங்கத்
தாடு வானரு டாலுள காறுங்
கூடு திங்கெனை கூறுதி மஞ்ஞாய் ! (162)

யான் நினது தந்தையாரோடு போர்புரிந்து தோற்பேனென் றெண்ணினையோ ?—

கலாவதி:— என்னுயிர்த் தலைவனே ! மாவீரவழுதியர்குல திலகமாகிய நின்னைக்கண்டவர்களே சுத்தவீரர்களாவார்களாயின், நின்னையே நாயகனாகப் பெற்றயான் எவ்வளவு மனவுறுதியுள்ளவளா யிருக்கவேண்டுமென்பதை நீயே யுணர்ந்துகொள். யான்மனவருத்தப் படுவதற்குக் காரணம் நீ தோற்பாயென்பதன்று ; மற்றென் றந்தையார்க்கு மற்போரினிற் கைகா லொடிதற்கேடுவாராதிருக்க வேண்டுமே யென்பதுதான் ! மற்றைப்படி வேறன்று !

சிதாநந்தன்:— என்னன்பே ! அமுதே ! ஆருயிரே ! என்னையவ்வளவிரக்க மிலானென்றெண்ணினையோ ? நின்றந்தையார் சயதுங்கரெனது மாமனா ரல்லரோ? இவ்விடயத்தில் நீ விரும்பியவண்ணமே செய்கின்றேன் ! நீயவருடன்போர் செய்தல்வேண்டாமென்றாலும் நின்றுவிடுகின்றேன்:—

(பாடுகின்றான்.)

---

பாட்டு 162:—இதனை 'மணிரங்க மென்பார் வடநூலார். இப்பெயரிதன் கண்ணும் வருதல் காண்க. ஏடு துற்றவயில்— பகைவருடலம் பொருந்திய வேலென்றுதல், பகைவருடலங்களைக் கொன்று குவித்த வேலென்றுதலுரைக்க. ஏடு—உடல். உயிர்கள் பிறவிதோறுமெடுத்தலின் ஏடென்றது. நாலாயிரப் பிரபந்த வியாக்கியாதாவு மிவ்வாறே கூறுதல் காண்க. "ஏடுதுற்ற வடிவேலான்" என்றார் கம்பரும். மணிரங்கம்—இரத்தினசபை. கூடுதிங்கெனை—அடையக் கடவதாய தீங்கு யாதுகொல்?

சுந்தரக லாவதியென் றாயசுகு மாரீ
கந்தரமெ னுங்குழலி காமரச வல்லீ
பந்திணைகி கர்த்திடப யோதரியி யம்பா
யிந்துவத னேயெனவி யற்றிடுதல் வேண்டும்? (163)

கலாவதி:— எனையாளுந்தலைவனே! (பாடுகின்றாள்.)

கமலந் தனிற்பெரிய கண்களுறு வானே
குமரன் றனைப்பொருவு கோதில்குண வானே
விமலம் பொருந்தியவென் வீரர்பெரு மானே
சமரஞ் செயற்கெவனச் சாற்றுநளும் யானே? (164)

சுத்தவீரனாகிய நின்னைமற்போர்புரிய வேண்டாமென்பவள் அறிவிலியே யல்லளோ? அப்படிச் சொல்வேனாயின் யான் சிதாநந்தர்தலைவி யென்பதற்கும் சயதுங்கர் மகளென்பதற்கும் உரியவளல்லேன்!— மற்று நீங்களிருவரும் போர்புரியவேண்டியது இன்றுமாலையன்றோ? இடமெவணேற்பட்டுளது?

சிதாநந்தன்:—ஆமாம். இன்றுமாலைதான்! போர்புரியுமிடமென்னையோ பாலிக்கும் வேகவதிக்கும் நடுவணுள்ள யாற்றிடைக்குறையாம்! போர்முடிந்ததும் இவ்விடத்தில் நின்னைச்சந்திப்பேன்! தவறாது வந்திருப்பாயென்றே யெண்ணுகின்றேன்!

கலாவதி:— ஆ! அவ்வணமே யிவ்விடம் வந்திருக்கின்றேன். தவறுவேனோ? (பாடுகின்றாள்.)

(கச) இராகம்—பியாக். தாளம்—ரூபகம்.

என்றன் கோவே யீண்டு நின்னை யினிதிற் காண்பனால்
வென்ற பின்ன ரோடி வாராய் வெற்றி வேந்தனே!
கோம கனே நாமி ரண்டு பேருங் கூடியே
யேம முற்றி ருத்தற் கென்னை யோசொல் தாமதம்?
என்னின்பவள்ளலே! இனிநாயிப்படி யிருப்பது நியாயமன்றே!

(பாடுகின்றாள்.)

(கரு) இராகம்—நாட்டைக்குறிஞ்சி. தாளம்—சாப்பு.

பல்லவி.

மன்னவர்க்கு மன்னனே வளர்புய மந்தரனே
மதிகுலத்தில் வயங்குவய சுந்தரனே

---

பாட்டு 163:—இதனை 'இந்து வதனை' யென்பர் வடநூலார். இப்பெயரிதன் கண்ணும் வருதல் காண்க.

164. இதனை 'கவகந்திகி' யென்பர் வடநூலார். இதன் கண்ணே யிறுதி யெதுகையுமொன்றி வரல் காண்க.

அநுபல்லவி.

இன்னு மேனோ விவ்வா றுண்மை
யென்னை யாளு மெழிற்கு மாரனே (மன்ன)

சரணங்கள்.

கமலநற் கண்ணினாய் காவலர் கோவே
காரிகை விழிவண்டு கண்டுணும் பூவே
விமலவான் மாக்களுண் மென்பய னாவே
வித்தக வென்னுள மேவிய தேவே (மன்ன)
அகிலமெ லாமர சாளுமென் னாதா
அடியாளுன் றுணைவியா யார்தலோன் னாதா
சகலமு மேகற்ற தண்ணளி நீதா
தாமத மென்கொலோ தாமரைப் பாதா (மன்ன)

அண்ணா லேயென்னை யாளு மிறைவனே
யற்பு தப்பர மானந்த வள்ளலே
வண்ண மார்மணி வாசகர் பாசுரம்
வாசிப் போர்மனந் தம்மை வசீகரம்
பண்ணல் போலிது காறும் பழகிய
பாவி யேனெஞ்சம் பைந்தொடி யாழியா
வென்று முன்றையுங் கொள்ளைகொண் டேகினா
யிருவ ரும்மினி யின்புற் றிருப்பமே. (165)

சிதாநந்தன்:— ஆம். ஆம். அப்படியேயிருக்கலாம். அதற்குத் தடை யொன்று மில்லை. யானென் மாமனார் சயதுங்கனை வென்று வைரென்னைத் தமது நாட்டுச் சேநாதிபதி யாக்குவதாகச் சொல்லியிருக்கின்றனர்! அவ்வாறே யான் போரில் வெற்றியடைந்து சேநாதிபதியாக மாட்டேனோ? அன்றி யும், (பாடுகின்றான்.)

* "யாயும் யாயும் யாரா கியரோ
வெந்தையு நுந்தையு மெம்முறைக் கேளிர்
யானு நீயு மெவ்வழி யறிந்துஞ்
செம்புலப் பெய்ந்நீர் போல
வன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே." (166)

---

பாட்டு 165. மணிவாசகர் பாசுரம்: திருவாசகம்.

166. அறிந்தும்—அறிந்தோம். செந்நிலத்தின்கட் பெய்தநீர் தானுஞ் செம்மையெய்தி யிரண்டு மொன்றுதல்போல நம்மிருவர் நெஞ்சமுங் கலந்தன வென்க. "புலத்தலிற் புத்தேளுண்டோ நிலத்தொடு நீரியைந் தன்னாரகத்து."—திருக்குறள்.

இவ்வாறு நம்மிருவரையுந் தலைப்பெய்து கடைக்கூட்டிய இறைவன் நம்மைப் பிரிக்கவுந் திருப்பனோ?

கலாவதி:—அஃதொருநாளுமில்லை. அதுநிற்க. எந்தையார் என் பிரிய நாயகனை யிராசகுமாரனென் றெண்ணாது ஒரு சாமானிய வீரனென்று நினைத்தனர்போலும்! அல்லாக்கால் வேறுமாதிரி சொல்லியிருப்பார்!

சிதாநந்தன்:—என் காதலே யுருவாய்ப்போந்த கலாவதீ! (முத்தமிட்டு) வேறென்னை மாதிரி சொல்லி யிருப்பார்? 'என்மகள் கலாவதியைக் கைக்கொள்' என்று சொல்லி யிருப்பாரோ?—(கலாவதி புன்னகை செய்தலுஞ் சிதாநந்தன் கலாவதியைத் தழுவிக்கொண்டு) அதோபார்! உன்னடைக்குத் தோற்ற ஓதிமங்க ளெல்லா முன்னைக்கண்டு ஓடி யொளிக்கின்றன! (பாடுகின்றான்.)

அஞ்சங்கா ணீவிரென்ற னன்புறுக லாவதியிற்
கஞ்சமெனக் கூறியுமென் னஞ்சுகின்றீர்-கிஞ்சித்தே
யன்னநடை யாலவளை யாதலினுன் வெட்கமுற்றவ்
வன்னப்பேர் பெற்றுமெனு மவ்வார்த்தை-மன்னு
மூலக முழுவதுமே யுந்தமைப்பார்த் தெள்ள
விலகி வனந்தனிலே மேவி-யிலகும்
பதுமா தநத்திருந்து பாரினில்யோ கஞ்செய்
வதுமாந்தர் கண்டுமோ ளங்கா—ளிதுவேண்டா
மென்னுமுரை யுன்ன மெனச்சொற்ற தாலுங்கட்
குன்னப்பேர் வைத்துவிட்டா ரோ? (167)

விகடவசநன் வருகின்றான்.

விகடவசநன்:— அதற்கையமில்லை! அதற்கையமில்லை!

கலாவதி:— ஐயா! விகடவசநரே! இங்கேயந்தச் சோலையிலேது வந்தது? அத்திப்பூ இன்றுதான் பூத்ததுபோலும்!

விகடவசநன்:— அத்திப்பூவா? கற்பகதருவிற் படர்ந்த காமவல்லிக் கொடியன்றோ பூத்தது!— அஃதப்படியிருக்க. இங்கே யிவர்களிடத்திலே யானொருவேலையாய் வந்தேன்!

சிதாநந்தன்:— உம்மிடத்தி லேதையாவேல்? 'வேலை' யென்கின்றீரே! நீவிர் யாவர் முருகவேளோ?

---

பாட்டு 167. இதன் கண்ணே யன்னப்பறவையின் பெயர்களிற் பல பிரிநிலை நவிற்சியிணி பற்றிக் கூறியிருத்தல் காண்க. பெற்றும்= பெற்றோம். வனம்=சலம்; காடு. பதுமாதநம்= தாமரையாகிய இருப்பிடம்; யோகஞ் செய்தற்குரியவெண்வகையாதனங்களு ளொன்று.

விகடவசநன்:— இல்லை. இல்லை. யானவர்க்கு மூத்தனன்! அது நிற்க. நம்முடைய குலாந்தகரிங்கே வந்தனரோ?

கலாவதி:— விகடவசநரே! அவனிங்கு வரவில்லையே! நீரிதற்காகத்தானோ வந்தீர்? வேறேதாவது காரியமுண்டோ?

விகடவசநன்:— வேறொன்று மில்லையம்மா! இனித் தங்களருகிலிருக்கின்ற ராஜகுலராஜவீரர் தங்களைக்கண்டு காதல்கொள்ளுதற்கு முன்னமேயே யிரண்டு அழகிய மாதரார் மீது நேசமுற்று அவர்களை மணந்துகொண்டிருக்கின்றனர்! அதுதவிர இன்னு மிருவரை மணந்துகொள்ளவும் போகின்றனர்! அவ்வா றிருக்கத் தாங்க ளிவர்மீது காதல்கொண்டு இவரை மணந்துகொள்வதிற் பயனென்ன?

கலாவதி:— என தானந்தவள்ளலே! (பெருமூச்செறிந்து விம்மி) இவர் கூறுவதுண்மைதானோ?

சிதாநந்தன்:— (தனக்குள்) இவன் யாவன் இல்லாத வீண்வம்பெல்லா மிழுத்துவிடுவான்போலும்! என்ன? விகடவசநரே! உமக்கேதாவது பைத்தியமுண்டோ?

விகடவசநன்:— எனக்குப் பைத்தியமில்லையையா! நுமக்குத்தான் சிறிது சித்தப்பிரமை யுண்டுபோலும் காணப்படுகின்றது! ஏனெனில் நீவிரிரண்டு ஸ்திரிகளைக் கல்யாணஞ் செய்துகொண்டது மன்றிப் பொய்யுஞ் சொல்லுகின்றீரே! யானிக்கமாதிரி பொய்சொல்லுஞ் சுத்தவீரர்களை வேறெங்குங் கண்டிலேன்! இஃதென்னே! ஆச்சரியமா யிருக்கின்றதே!

கலாவதி:— என்னுயிர்க் குரிசிலே! எங்கள் விதூகட ரிதுகாறும் பொய் சொன்னவ ரல்லரே! (பெருமூச்செறிகின்றாள்.)

சிதாநந்தன்:— என்னை யாட்கொண்டதேவி! அவர் விதூடகரென்பதையும் விகடவசந ரென்பதையு மறந்து விட்டு இவ்வா றென்மீது கோபங் கொள்ளலாமோ?

(பாடுகின்றான்.)

*"ஏதப்பா டெண்ணிப் புரிசை வியலுள்ளோர்
கள்வரைக் காணாது கண்டேமென் பார்போலச்
சேய்நின்று செய்யாத சொல்லிச் சினவுவின்
ஞாணை கடக்கிற்பார் யார்." (168)

பாட்டு 168. கோட்டை காவலாளர் கள்வரால் வருங்குற்றத்தை நீக்கக்கருதி அவரைக்காணாதபோதும் கண்டேம் கண்டேமென்று கூறுதல் போல, நீவிலகிநின்று யான்செய்யாதனவற்றைச் செய்தேனென்று சொல்லிக்கோபியாதே. யானின் ஆணைவழி யொழுகலன்றி யதனைக்கடக்கவும் வல்லலேனோ? என்பதாம். * கலித்தொகை.

சதுர வசந மாருந் தையலே யென்ற னன்பே
மதுர முடைய வென்மா மாலினீ செய்ய மானே
யதர மினிய நல்லா ளந்தமேய் தேற லானே
யிதர மகளிர் மேலெற் கெண்ணமே யில்லை யில்லை. (169)

(கசு) இராகம் - தேசிகத்தோடி. தாளம் - ஆதி.

பல்லவி.

தேனி னின்ப நல்கு வாணியென்
றேவி யான கலாவதீ.

சரணம்.

கான மாரி பெய்த வூற்றவென்
காள மாமுகி லாகுவாய்
மானி னீமகிழ் கூர்தி வேறே
மாத ரானை நினைத்திலேன் (தேனி)

(விகடவசநனை நோக்கி) என்ன? விகடவசநனே! இப்படிச் செய்வதுமக்குத் தகுதியன்று!

விகடவசநன்:— என்ன அம்மா! இவரிரண்டு பெண்டிரை விவாகஞ்செய்துகொண்டதென்னையோ வுண்மைதான்! அந்தப் பெண்டி ரின்னின்னவரென்று வேண்டுமென்றுஞ் சொல்லுகின்றேன்!— ஏனையா நீவிர் நாமகளையும் வெற்றித்திருவையு முன்னமே மணந்துகொண்டிலீரோ?

(யாவரும் நகைக்கின்றனர்)

சிதாநந்தன்:— நன்று! நன்று!! மிகவும் நன்று!!!

(பாடுகின்றான்.)

இடையுறு தனத்தபே ரிளம்பெட் சேர்தலின்
மடந்தையர் தாளுதை மாட்சித் தாதல்போன்
மடமைசா லரசிகர் மகிழ்வின் மாண்புதே
ரடலிர சிகரம ராற்ற நன்றரோ. (170)

கலாவதி:— இதுவுமொரு விநோதமே!

---

பாட்டு 169. இதனை 'மாலினி' யென்பர் வடநூலார். இப்பெயரிதன் கண்ணும் வருதல் காண்க.

170. இடையளவுந் தாழ்ந்த தனபாரங்களையுடைய பேரிளம்பெண் முயக்கத்தினும் மடந்தைப் பருவத்து மாதரார் தாளுதை சிறப்புடைத் தாமாறுபோற் சொற்பொருள் உணரமாட்டாத அரசிகரோடு ஆனந்தப் படுவதினுஞ் சொற்பொருளுணர வல்ல இரசிகரோடு செய்யும் போர் மிகவும் நன்றென்க.

விகடவசநன்:— அம்மா! இப்பொழு திவர்பாடிய பாடலினாலே தங்களுக்கு இவர் பேரிளம்பெண்முயக்கமும் மடந்தையர் தாளுதையும் பெற்றவர் என்று தோன்றவில்லையா? பாருங்கள். இவர்பாவே யென்கூற்றை வலி யுறுத்துகின்றது!

கலாவதி:— சரி. சரி. நமக்குப்போக நேரமாயிற்று.

விகடவசநன்:— (பாடுகின்றான்.)

*"பரிவுற் றுற்பய னின்றியும் பாவைமார்
முரிவுற் றார்களின் மூர்ச்சனை செய்பவால்." (171)

என்னு முண்மையினை நீவிரின்னு முணர்ந்திலிரோ?

சிதாநந்தன்:— ஐயரே! இதவு முணர்ந்தேன்! நீவிரென் மாட் டன்புடையீ ரென்பது முணர்ந்தேன்!

விகடவசநன்:—அற்றேல் யாம் போய் வருதும்!

(விகடவசநன் போகின்றான்.

சிதாநந்தன்:—நல்ல விதூடகன்! மற்று, (பாடுகின்றான்.)

மற்போர்க் கண்ணின் றுதையை வென்றே மகிழ்வெய்தி
யெற்பா டின்முன் னீண்டுறு வேன்மெல் லெழிலாரும்
வற்போல் கொங்கை மத்தம யூரத் தியலாளே
கற்பார் பாவாய் காசினி யின்மேற் கலைமானே! (172)

நீயென்னைவந் தின்று மாலையிங்குக் காண்பாய்!

கலாவதி:—ஆ! அங்ஙனமே!

சிதாநந்தன்:—என் பிரிய தேவீ! (பாடுகின்றான்.)

கலாவதீ
நிலாமணிச்
சிலாதலத்
துலாவுவாம். (173)

வருதி. [யாவரும் போகின்றனர்.

---

பாட்டு 171. பாவைமார் அன்புற்றால் ஒரு பயனுமில்லாதிருப்பவும் விருத்தமுற் றார் போல மூர்ச்சை கொள்வார்கள் என்பதாம். * சீவகசிந்தாமணி

,, 172. இதனை 'மத்தமயூரம்' என்பர் வடநூலார். இப்பெயரிதன் கண்ணும் வருதல் காண்க.

,, 173. நிலாமணிச் சிலாதலம் = சந்திரகாந்தக் கற்களாலியன்றவிடம்.

## இரண்டாங்களம்.

இடம்: வயந்தச்சோலையில் வாவிக்கரை.
காலம்: பிற்பகல்.
பாத்திரம்: மனோமோகினி.

(மனோமோகினி யிருடிவேடம் பூண்டு பதுமாதநத்திருக்கின்றாள்.)

மனோமோகினி:—(தனக்குள்) யான் நினைத்தகாரியம் நிச்சயமாய்க் கைகூடும். அதற்குச் சந்தேகமே யில்லை! யானிவ்வேடந் தரித்தபின் என்னை நிலைக் கண்ணாடியிற் பார்த்தேன்! சாக்ஷாத் மகாருஷி யாகவே தோன்றினேன்! ஆகையா லப்பாண்டியவீர ரிருவரு மென்னை மகாருஷி யென்றே நினைப் பார்கள்! ஆயினு மொருவேளை யென்னுடைய குரலினாலே யென்னை யின்னளென்று அவ்வீரர்களறிந்து கொள்வார்களாயின் என்ன செய் வேன்? இவ்வளவு செய்ததும் வீணாகவன்றோ போய்விடும்! (மௌனம்) என்ன? மனோமோகினீ! நீயே பயப்படுகின்றனை! உன்னாலாகாத காரியமு முலகிலுண்டோ?—அவர்க ளென்னை நிச்சயமாய் மகாருஷி யென்றே யெண்ணுவார்கள். அப்பொழுது யானிம்மருந்தைக் கொடுத்து அவர் களை வஞ்சிப்பேன்! இதுமட்டும் யான் விரும்பியவண்ணம் முடிய வேண் டியதுதான்! அப்புறஞ் சயதுங்கராச னெனதடிமையே யென்பது திண் ணம்!—(திரும்புகின்றாள்) ஆகா! அதோ அவ்வீர ரிருவரும் யுத்தசந்நத் தராய் வருகின்றனர்! யானினிமேற் சிறிது வேதாந்தமாய்ப் பேசவே ண்டும்! த்வம் ஸந்மயோஸி! சிவோகம்! சிவோகம்!! த்வம் சிந்மயோஸி! சிவோகம் ! சிவோகம் !! த்வம் ஆநந்தமயோஸி! சிவோகம்! சிவோகம்!! த்வம் ஸச்சிந்மயோஸி! சிவோகம்! சிவோகம்!! த்வம் சிதாநந்தமயோஸி! சிவோகம்! சிவோகம்!!

சிதாநந்தனுஞ் சத்தியப்பிரியனும் வருகின்றார்கள்.

(சிதாநந்தன் றனதுடை காணப்படாமையினாலும் அஃதிருந்தழிக் குலாந் தகனதுடை வைக்கப்பட்டிருந்தமையினாலும் அவனதுடையைத் தரித்துக் கொண்டு போர்க்கோலம் பூண்டிருக்கின்றான்.)

---

வரி 22. த்வம் சிதாநந்த மயோஸி = நீ சிதாநந்தமயனாகிறாய். இவ்வாறு மனோமோகினி கூறியது அவன் பெயர் தெரிந்தன்று. மற்று, அவள் 'சச்சிதாநந்தம்' என்னுஞ் சொற்றொடரைச் 'சத்' 'சித்' 'ஆனந்தம்' என மூன்று சொற்களாய்ப் பகுத்துக்கொண்டு ஒவ்வொன்றாகவும் இவ்விரண்டாகவும் எடுத்து உறழ்ந்து 'மயோஸி' என்பதனோடு 'த்வம்' என்பதனை முன்னே பெய்துரைத்தனள். அது காகதாலிய மாய் அவனுக்கும் பொருந்திற்று. இனி வேதாந்த பரமாக நோக் குழி 'த்வம்' ஆன்மாவையும், ஏனையன அதனிலக்கணத்தையு முணர்த்துமாறறிக.

சிதாநந்தன்:—அப்பா! சத்தியப்பிரியா! அவ்விடத்தொரு மகாருஷி யிருக்கின்றனர்! பார்த்தனைகொல்?—

சத்தியப்பிரியன்:—ஆமாம். அவரின்றுதா னிங்கு வந்துளர் போலும். நேற்று நாம் இவ்விடம் வந்தனமே! அப்பொழுதிவரைக் கண்டிலமே!—

சிதாநந்தன்:—ஏதோ தலயாத்திரையாய்ப் போகின்றனர் போலும்! ஆகையினாலே தான் இக்கச்சியம்பதி மூதூரேழனு ளொன்றாதல்பற்றி யிங்கே தங்கியிருக்கின்றனர்.

சத்தியப்பிரியன்:—நாமிருவரும் அவர் சந்நிதிக்கட் சென்று அவர் தம் ஆசிகளையும் பெற்றுக்கொண்டு யுத்தரங்கத்திற்குச் செல்வோம்.

(இருவருமிருடியை யணுகுகின்றனர்.)

சிதாநந்தன்:—(இருடியைவணங்கிப் பாடுகின்றான்.)

ஆரரு ளுருவாய்ப் போந்த வற்புத குரவீர் ஞான
வாரிதி யனையீர் நுந்த மன்னுறு கருணை நோக்காற்
காரறக் கூந்தற் செவ்வாய்க் கலாவதி தனையென் வாழ்க்கைச்
சீருறு துணைவி யாகச் சேர்ந்திடச் செய்தி ரன்றே. (174)

(இருடியார் தலையசைக்கின்றார்.)

ஓ! முனிபுங்கவரே! யாங்க ளென்னபுண்ணியஞ் செய்தனமோ? தங்களைத் தரிசிக்கும் பாக்கியமடைந்தேம். தங்களது கிருபாகடாட்ச மனுவளவேனு மெம்மீதுளதே லுலகங்காத்து உயிரோம்புதற்குத்தடையேயில்லை.

(இருடியார் மீட்டுந் தலையசைக்கின்றார்.)

மனோமோகினி:—த்வம் சிதாநந்தமயோஸி! சிவோகம்! சிவோகம்!!—

சத்தியப்பிரியன்:—(இருடியைவணங்கிப் பாடுகின்றான்.)

குணக்குறி யொன்று மில்லாக் கோமளத் தலைவ னாரை
யணங்கினை யணுகா வண்ண மகற்றிய மணாளை யாண்டு
மிணங்கிடு மறிவே யென்று மிலகிடும் பொருளை நின்னை
வணங்கிடு முகத்தா னாயே னென்னையே வணங்கி னேனே. (175)

மனோமோகினி:—(இருவரையும் நோக்கி) மைந்தர்காள்! நீவிரிருவருஞ் சிறந்த வீரர்கள் போலக் காணப்படுகின்றீர்களே! நும்மிருவக்கு மிறைவன் றிருவருள் புரிவாராக.—சிவோகம்! சிவோகம்!!

சிதாநந்தன்:—அடிகாள்! அடியனேன் இவ்வூர் அரசன் சயதுங்க சோழனோடு மல்லயுத்தஞ் செய்வான் கருதிப் புறப்பட்டுப் போகின்றேன். அதன்கண் எளியேனுக்கு வெற்றி கிடைக்குமாறு ஆசீர்வதிக்கும்படி வேண்டுகின்றேன்.

---

பாட்டு 175. இப்பாடலினானே சத்தியப்பிரியன் 'பரமகேவலாத்வைதி' யென்பது தெள்ளிதிற் றுணியப்படும்.

மநோமோகினி:—ஆமாம். இந்த தேசத்துராஜன் தானே மல்யுத்தத்தில் மகா வீரனென்று மனப்பால் குடித்துச் செருக்கித்திரிகின்றன னென்று கேள்வி. அவனை நீங்கள் வெல்லவேண்டுமாயின் இதோ இந்தப்பெட்டியில் அமிர்தகுளிகை யிருக்கின்றது. இதை நீங்கள் போர்தொடங்குதற்குச் சிறிது முன்னரே யுட்கொள்வீர்களாயி லுங்களுக்கு விசேஷ சக்தி யுண்டாகும்! அப்பொழுதிவ்வூ ரரசனை மிகவுமெளிதாய் வென்றுவிடலாம்.—சிவோகம்! சிவோகம்!!

(மநோமோகினி மருந்துப்பெட்டியைக் கொடுக்க இருவரும் வணக்கத்துடன் வாங்கிக் கொள்கின்றனர்.)

ஆனாலிதனை யுட்கொள்ள மாத்திரம் மறந்து விடாதீர் !—சிவோகம்!—சிவோகம்!!

சிதாநந்தன்:—ஆ! அங்ஙனமே செய்கின்றேம்.

சத்தியப்பிரியன்:—அதுநிற்க. தாங்கள் செய்த விவ்வுதவிக்கு என்ன கைம்மாறு செய்யப் போகின்றேம்!—ஆகா! என்ன வறிவின்மை! என்னவறிவின்மை!!—

மநோமோகினி:—என்ன! என்ன!!—(முகம் நிறமாறுகின்றது.) சிவோகம்! சிவோகம்!!

சத்தியப்பிரியன்:—இவனு மவனு மொருவனு யிருக்கும்போது இவன் அவனுக்குக் கைம்மாறு செய்வதாக நினைத்த அறிவின்மையைக் குறித்தே யிவன் மனமுளைகின்றனன்!—

மநோமோகினி:—இதுதானே? வேறொன்று மில்லையே! சரி சரி. எனக்குக் காலமாயிற்று. நீங்கள் போங்கள்!—சிவோகம்! சிவோகம்!!—(முகத்தைத் திருப்பிக்கொள்கின்றாள்.)

[இருவரும் போகின்றார்கள்.

நாம் நினைத்தபடியே காரியம் முடிந்தது! ஆகா ! இவர்களது கம்பீரத் தோற்றத்தைக் கண்டாற் காலனும் பயப்படுவானே! பீமசேனனும் பின் வாங்குவானே! இவ்விருவரி லொருவன் மிக்க அழகுடையவன்! இவனைக்கண்டா விரதியும் அநங்கனை வெறுப்பாள்! சசியும் ஆயிரங்கண்ணனை யொறுப்பாள்! கமலையுக் கரியனைத் துறப்பாள்! வாணியும் அரைவனை மறப்பாள்!—ஆகா? இவனைப்பார்த்தவுடனே யாவர் மனத்தையும் மோகிக்கச் செய்யு மெனது மனமே கலங்குமாயின் மற்றவரைப்பற்றி யென்னசொல்லட்டும்? இவன்றன் வனப்பின் மயங்கியேயன்றோ கலாவதி யிவனை வயந்தச்சோலையிற் றழுவி முத்தமிட்டனள்!—ஏடீ! கலாவதீ! உனக்கேற்ற நாயக னெங்கிருந்தேடீ யகப்பட்டனன்? (பாடுகின்றாள்.)

---

வரி 28—29: கருத்தடையணி பற்றி யவ்வவர்கள் தத்தந் தலைவரை வெறுத்தற்கு மொறுத்தற்குந் துறத்தற்கு மறத்தற்குங் காரணங் குறிக்கப்பட்டிருத்தல் காண்க.

ஏதில ரற்ற வெறுதுயிர்க்
காதலன் பெற்ற கலாவதி
பூதல முற்றும் புகழ்ந்தவ
ளுதா முற்ற வுனன்பனே. (176)

உனக் கெவ்விதத்திலுந் தக்க நாயகன் அவனே!—அப்படி யிருக்க யான் பலவற்றை வீணே யோசித்துப் பயனென்ன? இந்தப்பாதகன் சுகசரீர னுக்கோ வுன்னைக் கொடுப்பது? அப்படிச் சொன்னவாயை யுடனே கழுவவேண்டும்!—ஆகா! அந்தவீர னென்னருகில் வந்து என்னைவணங்கிப் பாடித் தான் கலாவதியை மணந்து கொள்வதற்கு யானருள் புரியும்படி யென்னை வேண்டிக்கொண்டபோது என் மனமிளகியதை யென்னென்று சொல்வேன்!—அவன் விருப்பத்தின்படி அவன்றான் கலாவதியை மணந்துகொள்ளட்டுமே!—[மௌனம்] அப்படியாயின் நமது பதவியு மதிகார மும் போய்விடுமே! —சீ! சீ!! இஃதென்னையோசனை!—நாமெடுத்த காரியத்தைத் தவறவிடலாமோ?—விடக்கூடாது! விடக்கூடாது!! அந்தக் கலாவதி நம்மையன்று எவ்வளவு அலட்சியமாய்ப் பேசினள்! அன்னை விட்டுவிடுகின்றதோ?—[மௌனம்] அந்தவீரர்களை நினைக்கும்போதெல்லா மென்மனம் நடுக்குகின்றதே!—இத்தகைய சூரர்களை நம்மரசர் சயதுங்கர் எங்கே வெல்லப்போகின்றனர்?— [மௌனம்] இருக்கட்டும். எல்லாவற்றிற்கும் யாமும் மருந்து கொடுத்திருக்கின்றனமே! இவர்கள் பத்தி சிரத்தையோடு மருந்துவாங்கிக் கொண்டதைத் கருதினுற் கட்டாய முட்கொள்வார்களென்றே தோன்று கின்றது!—அப்படியே யவர்கள் உட்கொள்வார்களாயின் வெற்றி நம் சயதுங்கருடையதேயாம். அதற்காட்சேப மொன்று மில்லை!

[மனோமோகினி போகின்றாள்.

---

## மூன்றாங்களம்.

இடம்: காஞ்சியிற் சோழ னரண்மனையிற் கலாவதியின் கன்னிமாடம்.

காலம்: பிற்பகல்.

பாத்திரம்: கலாவதி.

கலாவதி:—(தனக்குள்) இனிமேல்வரும் மல்லயுத்தத்திலென்னின்பச்செம்மல் சிதாநந்தன் சயிப்பானே அன்றி யெந்தையார் வெல்லுவாரோ? என் றந்தையாரோ எத்தனையோ பகையரசர்களை வென்று வாகைவந்தார் மிலைந்து 'மல்லயுத்தமாவீரர்' என்று வெற்றிக்கொடி பறக்கவிட்டிருக்கின்

றனர்! எனது பிராண நாதனே முருகவேளேயென் றெவ்விதத்தினுஞ் சொல்லத்தக்கவன்! இவர்க ளிருவருள் யாவர் வெல்லுவாரோ? தெரிகிலேனே!—ஏ! சகதீசா! நீயென் மனத்தை யின்னணங் கவற்றுகிறபது நின்ற னருட்டன்மைக்கேற்குமேயோ?—ஓ! ஆயிரம்பெயருடை யண்ணலே! நீ கருணாகரப்பெயரின னல்லையோ?—ஏ! சதாசிவா! நின்னைப் பஞ்சகிருத்திய பதியெனப் பகருதல் பொய்யோ? அநுக்கிரக சத்தியென் பது நின்பாற் சிறிது மின்று கொல்?–(பாடுகின்றாள்.)

ஒளியாகி யுலகாகி யுயிராகி நிற்குமூனே
யளியாருங் கோமானென் றுகமங்க ளறைந்திடுமே
யளியாருங் கோமானென் றுகமங்க ளறைந்துமெனைக்
களியாரச் செய்கிற்பான் கருதாம லிருப்பதெனே! (177)

(மௌனம்.)

ஐயோ! பாவி! மனோமோகினீ! துர்க்குணமே குடிகொண்ட சுகசரீரனை யோ யான் மணப்பது? அந்தோ! என் றந்தையாரே! சயதுங்கவீரரே! என்னை யிவ்விடர்க் கடலினின்றுங் கரை யேற்றீரோ?—ஏ! கருணாநிதே! என் றந்தையார்க்கு நீ நல்லறிவுச்சுடர் கொளுத்தாயோ?—[மௌனம்] ஓ! சிதாநந்தச் சிங்கமே! நீ வெற்றி பெற்ற வுடனே சிறிது பொழுதுந் தாமதியாது வருவாய்!—ஓ! காமாட்சியம்மே! நீ யென்னருமைத் தலைவன் வெற்றியடையுமாறு கருணை புரிவாய்!—என்னருமைத் தாயே! கமலாட்சீ! கற்புக்கரசியே! யானும் நினக்குத் தக்க புதல்வியென்று பேரெடுக்குமாறு என்னிறைவன் சிதாநந்தன் சயங்கொள்ளும்வண்ணந் திருவுளஞ்செய்வாய்!–ஐயோ! யா னென்னை பேதைமையால் நின்னை வேண்டினேன்! பதிவிரதாசிரோமணியாகிய நீ நினது நாயகர் என்ன தவறு செய்யினும் அவற்றைப் பாராட்டாது அவரது நன்மையையே நாடுபவளாயினையே! உன்னிடத்தில் யான் முறையிட்டுப் பயனென்ன? நீ யொரு நாளேனும் நினது காதலர் கனவில்வந்து அவர்க்குப் புத்தி புகட்டினையல்லையே! ஓ! இடர்களையிறைவா! திக்கற்றார் துணைவா! நீதா னென்னைக் காப்பாற்றல்வேண்டும்!–(பாடுகின்றாள்.)

தத்தாங் தக்கத திங்கிணத் தொமெனவே
    தன்னேரி லாவெள்ளிமன்
றத்தா டுற்றிவ மண்ணலே நினதுதா
    ளன்பிற்று திக்கின்றனென்
கத்தா வென்றனை யாளுறுந் தலைமகன்
    காதற்சி தாநந்தனென்
பத்தா வென்றிவ னுற்றிடப் புரிகுவாய்
    பண்போடு மாதேவனே! (178)

---

பாட்டு. 177. தகாமையணி.
,, 178. இதனைச் 'சார்த்தூல விக்கிரீடிதம்' என்பர் வடநூலார்.

விந்தையொ டெழிலும் வீரமொ டருளு
மிளிர்சிதா நந்தநா யகனென்
றந்தையை யினிமே னிகழ்ந்திடு மற்போர்
தனில்வெல்லு மாறருள் புரிவாய்
மந்தைமேய் கண்ண னலரிதேன் காணு
வள்ளலா யிருப்பினு மெளியேன்
சிந்தையுங் கோயில் கொண்டதே வாதி
தேவனே சிவபெரு மானே! (179)

(மௌனம்)

ஓகோ! நேர மதிகமாய் விட்டதோ? இனித் தாமதியேன். என் ஆநந்த நாயக னுஞ்ஞாபித்தவண்ணம் யான் மிகவிரைவாய் வயந்தச் சோலைக்குச் சேறல்வேண்டுமே! அதுவு மன்றித் தூர்க்கையம்மை கோட்டத்திற்கும் போதல் வேண்டுமே! அப்படியிருக்க இன்னு மென் றோழியர்வந்திலரே! என்ன செய்வேன்?—(சிறிது நேரம் மௌனம்.)

வாசந்திகையு மாணிக்கமாலையும் வருகின்றனர்.

மாணிக்கமாலை:—ஏ! வாசந்திகே! யான் கூறினபடியே நீ நடந்திருப்பாயானா லிவ்வளவு மட்டும் விளைந்திராது. எனக்கென்னோ இப்போ தெப்படி முடியுமோவென்ற அச்சமும் மனக்கலக்கமும் நீ யெவ்வளவு வலியுறுத்திக் கூறினு மிருந்து கொண்டே யிருக்கின்றன.

கலாவதி:—என்ன? என்ன?

வாசந்திகை:—ஒன்றுமில்லை. அவளென்னோ தான்வழக்கமாய்க் கூறுவது போலச் சில புகன்றனள். அம்மட்டே.

மாணிக்கமாலை:—என்ன இருந்தாலுந் தலைவன்மீதுள்ள நேசம் அவ்வளவு பெரிதேயோ?

கலாவதி:—ஏ! மாணிக்கமாலாய்! (பாடுகின்றாள்.)

*"நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே" (180)

வாசந்திகை:—அம்மா! கலாவதீ!—(பாடுகின்றாள்.)

---

*குறுந்தொகை.

*" தீங்கனி யிரமொடு வேம்பு மனைச்செரீஇ
வாங்குமருப் பியாழொடு பல்லியங் கறங்கப்
பையப் பெயர்த்து மையிழு திழுகி
ஐயவி சிதறி யாம்ப லூதி
யிசைமணி யெறிந்து காஞ்சி பாடி
நெடு"ங்கோட் டத்தி"ற் கடிநறை புகைஇக்
காக்க வம்மோ காதல"ஞ் செல்வி! (181)

தாமதஞ் செய்யேல்! கோட்டத்திற் பூசாரிவந்து அப்பொழுதே முதற் காத்துக்கொண் டிருக்கின்றனனே!

**கலாவதி:**—அற்றேற் செல்வோம் வாரீர்!

(யாவரும் போகின்றனர்.)

---

## நான்காங்களம்.

இடம்: வயந்தச்சோலை யினொருசார்.
காலம்: மாலை.
பாத்திரம்: சுகசரீரன்.

(சுகசரீரன் போர்க்கோலம் பூண்டுலாவுகின்றனன்.)

**சுகசரீரன்:**—இந்தவழியாய்த்தான் அந்த மதுரைவீர ரிருவரும் வரவேண்டும். பார்த்துக்கொள்வோம். நாமவ்விருவரையு மின்று கொல்லத்தவறினாற் பின்பு ஒருநாளுங் கொல்ல முடியாது! அப்புறங் கலாவதி நமக்குக் கிடைப்பது மரிது!—(மௌனம்) கலாவதிக்கோ நம்மை மணந்து கொள்ள விருப்பமில்லை. அப்படி யிருக்க நாமவண்மீதிலாசை கொள்ளுவானேன்?—சீ! சீ!! அவளல்லாமற் போனா லிச்சோழராச்சியம் நமக்கெப்படிக் கிடைக்கும்? அவளை மணந்து கொண்டாற்றானே நாம் மகாராசாவாதல்கூடும். ஆகையா லந்தக் கலாவதியை யெப்படியாவது மணந்துகொள்ள வேண்டும். இவ்விடயத்தில் நம்முடைய மனோமோகினி கூறியதே சரியானவழி! அவளைப் பலவந்தப் படுத்தியாவது வஞ்சகஞ் செய்தாவது மணம்புரிந்துகொள்ள வேண்டும். அப்படிச் செய்தற்கு அவளை முத்தமிட்ட அந்தப் பயலை வேலைசாய்க்கவேண்டும்! அவனை யெமலோகத்திற் கனுப்பாவிடில் நம்மெண்ணஞ் சித்தியாது!—(மௌனம்) அப்படியே நாமிவர்களைக் கொன்று கலாவதியை மணந்து இராச்சியாதிகாரம் பெற்ற பிறகு மனோமோகினியை நாடப்படாது. அப்படிச் செய்தாற் கலாவதிக்குக் கோபம்வரும். அந்த மனோமோகினிக்குத் தான் பட்டமகிஷி யாகவேண்டுமென்னு மெண்ண மிருந்தா லென்ன செய்கிறது?—(மௌனம்) அதற்கு மொருயுக்தி யிருக்கின்றது! அப்பொழுது

---

பாட்டு 181, ஆம்பல்-இசைக்குழல்; ஊதிடு கொம்புமாம், காஞ்சி-ஒருவகைப்பண்,

மகாராசாவையும் மனோமோகினியையும் வேலைதீர்த்துவிட்டாற் போகிறது! ஆகையா லிவைகளெல்லாவற்றிற்கும் மூல காரணமாக அந்த மதுரைவீரனை முதன் முதலிற் றொலைக்கவேண்டும்! மற்ற யோசனைகளை யப்புறம் பார்த்துக்கொள்வோம்.—சுவாமீ! இந்தக் காரியத்தின்மட்டு முதவிசெய்வீராயினும்மை யொருநாளும் மறவேன்!—ஏகாம்பரேசா! யான் மகாராசாவான பிறகு பலவிதமான திருப்பணிகளுஞ் செய்விக்கின்றேன்! நீ யென்காரியங்களை மாத்திரங் கைகூடும்படி செய்!—

(பாடுகின்றான்.)

ஆசையுடன் யான்பால் லபிடேகஞ் செய்கிற்பே
னீசரனை நீயனவென் றெண்ணாதே நாய்விற்ற
காசு குரைக்குமோ காண். (182)

(திரும்பிப்பார்த்து) ஆகா! என்னதிர்ஷ்டத்தை யென்னென்று சொல்லுவேன்!—அதோ தனியாய் வருகின்றான் கலாவதியை யடித்துக்கொண்டு போகப் பார்த்த மதுரை வீரன்!—சுவாமீ! 'வரதாாசர்' என்ற பெயருமக்கேதகும்;—இதோ வந்துவிட்டான்! யான் கொஞ்சம் பதுங்கி நிற்பேன்!

குலாந்தகன் வருகின்றான்.

(அவன் சிதாநந்தனது உடையைத் தரித்துக்கொண்டுஞ் சிதாநந்தனைப் போல வேடம்பூண்டு மிருக்கின்றான்.)

குலாந்தகன்:—ஏ! கலாவதீ!

சுகசரீரன்:—(ஈட்டியை யோங்கிக்கொண்டு) கலாவதியா? கலாவதியை நீயா சுகிப்பவன்?

(குலாந்தகனைக் குத்துதலு மவன் கீழேவிழுகின்றான்.)

குலாந்தகன்:—ஐயோ! அப்பா! என்னை யிந்தப்பாவி சுகசரீரன் குத்திவிட்டான்! இனியான் பிழையேன்! பிழையேன்!!

(மூர்ச்சை யாகின்றான்.)

சுகசரீரன்:—இரண்டு பகைவர்களில் முக்கியமான வொருவன் றொலைந்தான்!—ஏடா! மதுரைவீரா! நீயா கலாவதியைத் திருட்டுத்தனமாய் முத்தமிட்டவன்? 'காத்திருந்தவன் மனைவியை நேற்றுவந்தவன் கொண்டுபோனான்' என்றதுபோல யான்மனைவியாய்க் கொள்ளும்படி யெண்ணிக் காத்திருந்த கலாவதியை நேற்றுவந்த நீயோ கொண்டுபோகப் பார்த்தவன்? அதுவு மல்லாமல் நீயென்னை யிராச சதசிலே கொல்லுதற் கெழுந்தாயல்லையோ? அதற்குத் தக்கபடி நீ தண்டிக்கப்பட்டனை! அதோ மாதவிக்கொடி படர்ந்த வேங்கை விருட்சத்தினருகே யாரோ இருவர் வருகின்றனர்! அவர்களி லொருவன் குலாந்தகன்! அவர்க ளென்னைப் பார்த்து விட்டார்களோ? எதற்கும் யாெனாளித்துக் கொள்வேன்!

(ஒளித்துக்கொள்ளுகின்றான்.)

பாட்டு 182. உலக வழக்கு நவிற்சியணி.

சிதாநந்தனும் சத்தியப்பிரியனும் வருகின்றார்கள்.

சிதாநந்தன்:—அப்பா! சத்தியப்பிரியா! யாரோ இவ்விடத்திற் பெரிய குரலிட்டழுதார்! ஈதென்னை விந்தை! ஒருவரையுங் காண்கிலேன்!

சத்தியப்பிரியன்:—ஏ! சிதாநந்தச் செம்மலே! இப்படிச் சற்றே திரும்புதி!

(சிதாநந்தன் திரும்பிப் பார்க்கின்றான்.)

அதோ ஒருவன் ஈட்டியுங் கையுமாய் அந்தச் சம்பக மரத்தருகே மறைகின்றனன்! பார்த்தனையா?

சிதாநந்தன்:—ஆமாம். நாமிருவரு மவனைக் கவனியாதவர்போ லிருந்து அவனென்ன செய்கின்றன னென்று பார்ப்போம்!

சத்தியப்பிரியன்:—இதோ அவன் நம்மை நோக்கியே வருகின்றனன்!

சுகசரீரன்:—எடா! பாவி! குலாந்தகா! நீ யெங்கிருந்தேடா வந்தனை? கலாவதி வருவாளென்று வந்தனையோ?

(ஈட்டியாற்குத்த வோங்குகின்றான்.)

சிதாநந்தன்:—(விலகிக்கொண்டு) ஏ! பேதாய்! நீ யென்கையினு லுயிரிழக்கவோ வந்தனை?

(சுகசரீரனைக் குத்துதலு மவன் கீழே விழுகின்றான்; மருந்துப் பெட்டியுங் கைநழுவிக் கீழே விழுகின்றது.)

சுகசரீரன்:—ஐயையோ! மோசம்போனேனே! ஐயோ! தெய்வமே! இப்படித் துன்மரணமாய்ப் போகும்படி யென் றலையி லெழுதிவிட்டனையே!

(சுகசரீர னிறக்கின்றான்.)

சத்தியப்பிரியன்:—அப்பா! சிதாநந்தா! இவன்று னரண்மனையி லரசன் முன்னர் நம்மைப் பொல்லாதவர்களென்று தூஷித்தவன்! அரசனை மனோமோகினி வசப்படுத்தினவன்!

சிதாநந்தன்:—அவ னப்பொழுதே யரண்மனையி லுயிர்துறக்கவேண்டியவன்! ஏதோ அவனைப் பிடித்த நல்லவேளை விகடவசநனும் நீயு மிருந்து தடுத்தீர்கள்! எல்லாவற்றிற்கும் அவன்றானோ இவன்? நன்றாய்ப்பார்!

சத்தியப்பிரியன்:—ஆமாம். அவனே! அதற் கையமில்லை!

சிதாநந்தன்:—அங்ஙன மாயிற் பாவமன்று அவன் சாகவேண்டியவன்றானே!

சத்தியப்பிரியன்:—ஆயினு மென்னை தைரியமப்பா! இதனையோசிக்கும்போது ஒருவேளை யரசனதேவலா லிவனிவ்வாறு செய்யவந்திருப்பினு மிருக்கும்!

சிதாநந்தன்:—என்ன? சத்தியப்பிரியா! நீ கூட இவ்வாறு நினைத்தனை! நன்று! நன்று!! 'மகாசுத்தவீர' னென்று பேர்பெற்றவனுக்கு இத்தன்மையான இழிதொழிற் சிந்தனையு முண்டாகுமோ? மற்றிவனை யரண்மனையில்

யான் கொல்லுதற் கெழுந்தமை காரணமாக இவன் யான் போகும்வழியி லொளித்திருந்து என்னை யெளிதாய்க் கொல்லலாமென்று வந்தவனே!

சத்தியப்பிரியன்:—ஆமாமாம். மெய்தான். இதுதான் காரணம்! ஆதற்கைய மில்லை. இனி, (பாடுகின்றான்.)

*“தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை.” (183)

என்ற தேவர் வாக்கிற்கு மாறாக நீ யிவனைக் கொன்றது நியாயமேயோ?

சிதாநந்தன்:—நீ கூறிய பொய்யா மொழி துறவிகளாயினோர்க்கு விதித்ததேயன்றி நம்மனோர்க்கு விதித்ததன்று. அன்றியும், (பாடுகின்றான்.)

கோறலுங் கொல்லாமை யேயாகுங் குற்றமிலா
வீறு விளைக்கு மெனின் (184)

என்ற விடயம் நீ யுணராததன்றே!

சத்தியப்பிரியன்:—நீ கூறுவது வாய்மையே. மற்று நாம் யுத்தாங்கத்திற்குப் போக நேரமாக வில்லையோ?

சிதாநந்தன்:—ஆமாம்.

(இருவரும் போகின்றனர்.)

---

## ஐந்தாங்களம்.

இடம். காஞ்சியி னரண்மனைக்கணித்த காளிகோட்டம்.

காலம்: பிற்பகல்.

பாத்திரங்கள்: கலாவதி, வாசந்திகை, மாணிக்கமாலை, பூசாரி.

கலாவதி:—ஏடா! பூசாரி! ஏன் தாமதஞ் செய்கின்றனை? விரைவினிற் பூசையை நடாத்தித் துர்க்காபரமேசுவரியைப் பிரத்தியட்சமாகு மாறுசெய்.

பூசாரி:—ஆகட்டும் அப்படியே. தாயே! நான் தங்களுக்காகத்தா னிதுவரைக்குங் காத்துக்கொண்டிருந்தேன் அம்மா!—

வாசந்திகை:—சரி. சரி. காரியத்தை நடத்து.

(பூசாரி பூசைசெய்யத் தொடங்குகின்றான்.)

மாணிக்கமாலை:—ஏன்? கலாவதி! காளியம்மை பிரத்தியட்சமானாற் பயமா யிருக்குமே!—

கலாவதி:—அப்படி யவ்வளவு அதிகபயமா யிருக்குமென்று எனக்குத் தோன்றவில்லை!

வாச்ந்திகை:—அவையெல்லா மிதோ தெரிந்துபோகும்.

கலாவதி;—சரி. நாம் பூசையைக் கவனிப்போம்.

---

* திருக்குறள்.

பூசாரி:—(காளியை நோக்கிப் பிரார்த்தித்துக்கொண்டு நிற்கின்றாள்.) அம்மா! தாயே! பராசக்தி! லோகரட்சகி! அகிலநாயகி! அதருவண பத்திரகாளீ நீ பிரத்தியட்சமாகி வரவேண்டுமம்மா !—(கலாவதியைநோக்கி) அம்மா! அம்பிகை வெளிப்படுகிற சமயமாயிற்று. நீங்கள் கொஞ்சங்கூடப் பயப் படா திருக்கவேண்டும்.

கலாவதி:—இல்லை! இல்லை!! பயப்படவில்லை!—

(துதித்துப்பாடுகின்றாள்.)

தேவிசகந் மாமோகினி தேசோமய ரூபீ
யாவேறா ளாதம்மொடு மாடித்திக ழும்மே
பாவேய்புகழ்ப் பாவாயிறை பாலுற்றொளிர் நாரீ
காவேய்குழற் காளியெமைக் கண்பார்த்தருள் புரியே. (185)

*"செய்யதிரு மேனியொரு பாதிகரி தாகத்
தெய்வமுத லாயகளை யெய்தசிலை மாரன்
கையின்மலர் பாதமலர் மீதுமணு காதங்
கன்னிதன் மலர்க்கழல்கள் சென்னிமிசை வைப்பாம்." (186)

அரிபிரமர் புனலாட்டக் கங்கைதலை யிருப்பமதி
யமுத மூற்ற
வந்தமில்சீர் நால்வர்தமிழ்ப் பாமழையா னனைப்பவுடை
யணிதற் கின்றி
நரிபரியாக் கியவனெலாம் வலசித்தன் வைத்தியநன்
னாத னன்றி
ஞானபண்டி தன்றாதை யெனப்பெற்று நன்மருந்து
நாங்கொ ளாமேற்
புரைபடுநம் மேன்மையென வனற்கண்ணைக் கனல்கொண்டும்
புரந டுக்கம்
புல்லளவு மமையாது பித்தனென வெளிப்போந்து
பொதுமன் றத்துத்
திரிபுறக்கூத் தாடுசெயல் கண்டுதன மொற்றியநோய்
தீர்த்த வெந்தந்
திரிபுரசுந் தரியம்மே நின்னடிப்போ தெப்போதுஞ்
சிந்திப் பேமே. (187)

---

பாட்டு. 185 இதனை 'மதநார்த்தை' யென்பர் வடநூலார். * கலிங்கத்துப் பரணி.

,, 187. அரபிரமர் அபிடேகஞ் செய்தலானும் கங்கை சிரத்தின்க ணிருத் தலானுஞ் சந்திரன் சென்னி மீதிருந்து அமுத மூற்றலானுஞ் சம்பந்தர் அப்பர் சுந்தரர் மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் செந் தமிழ்த் தேவார திருவாசக மழைபொழிதலானுங் குளிர் மிகுந்த

(கஎ) இராகம்—கேதாரம். தாளம்—ரூபகம்.

பல்லவி.

விரைவினிலருள் செய்தி யம்ம
மீன லோசனீ யெற்கு

அநுபல்லவி.

விரைசெறிந்து மிளிருங் கூந்தற்
றிரையினமுத தேவி வருதி (விரைவினி)

சரணம்

கையினிற் கிளியினை யுடையாய்
காண்பரி தாகின்ற விடையாய்
துய்யவெஞ் சூலநற் படையாய்
சுந்தர வாழைமென் றொடையாய் (விரைவினி)

(கைகூப்பி நிற்கின்றுள்.)

பூசாரி:—(காளியை நோக்கிப் பிரார்த்திக்கின்றான்) ஏ! இராச ராசேசுரி! திரிபுரசுந்தரீ! மகாதுர்க்கே! இவர்கள் உன்னிடத்தில் ஒருவரங் கேட்குமாறு வந்திருக்கின்றனர். ஆகையினாலே நீ சீக்கிர மிவர்களுக்குப் பிரத்தியட்சமாகி யிவர்கள் விருப்பத்தைப் பூர்த்திசெய்யவேண்டும்!—

(பாடுகின்றான்.)

உலகெலாம் புரக்கு முக்கமி! வாராய்
பலவினை யாடல்செய் பாவையே! வாராய்
அரனொ டாடுறு மம்மையே! வாராய்
பரம காரணப் பைந்தொடி! வாராய்
பின்னற் படுகுழற் கன்னிகை! வாராய்

---

பாட்டு 187. போது, அணிதற்கு ஆடை யின்றி உடனடுக்கங்கொண்ட வெம்பெருமான், அதனை நீக்குவான் கருதி, "யாமோ நரிபரியாக்கினேம் எல்லாம் வல்ல சித்தராயினேம் வைத்திய நாதப் பெயர் பெற்றுளேம்; அன்றியும் நந்தக்குமாரனோ ஞான பண்டிதனெனப் பெயர் பெற்றுளான்; ஆகவே யாம் நல்ல மருந்துண்டு இவ்வுடனடுக்கத்தை யொழியாதிருப்பே மேல் நந்தம் மேன்மை புரைபடும்" எனக் கடைப்பிடித்து நுதலினிடத்து அனற் கண்ணும் கையினிற் கனலுமெடுத்துக் கொண்டனனாயினும், அவ்வுடனடுக்க மணுவளவுந் தணியாமையானே, பித்தனென வெளியே யோடிப் பொதுவம்பலத்திற் பலர் நகைக்கக் கூத்தாடுஞ் செயலைக்கண்டு இஃதென்னேயென மனம் புழுங்கித் தனது தனபாரங்களாகிய ஒற்றனமொற்றிச் சூடுறுத்தி அவனுட னடுக்கந் தீர்த்த எமது அம்மையாகிய திரிபுர சுந்தரியே! நின்னடித்தாமரையை யெக்காலத்துஞ் சிந்தை செய்கின்றேம். தற்குறிப்பணி இது பன்னிரு சீர்க்கழிநெடிலடியாசிய விருத்தம்.

சிங்க மூர்ந்திடுஞ் செல்வியே! வாராய்
சங்க மணிந்திடுந் தையலே! வாராய்
மேதி யரக்கனைக் காதிக் கொன்றவென்
மாதர் திலகசு மங்கலே! வாராய்
அகில மெல்லாந் தன்மய மாகிய
செகதீ சுரியே! சீக்கிரம் வாராய். (188)

(காளி பூசாரியின்மீது வெளிப்படுகின்றாள்.)

காளி:—(உரத்தகுரலுடன் பாடுகின்றாள்.)

பயப்படல் வேண்டாம்! பயப்படல் வேண்டாம்!!
நயப்படு மொழியுறு நங்கையே! கேளாய்.
உன்றன் மனத்தி னுளவருத் தமெலாம்
நன்றுணர்ந் திட்டோம். நங்கோ மகளே!
அவற்றை யெல்லா மகற்றிடிப் பொழுதே!
இனிமே னடக்குமல் விரும்போ ரதனி
லுனது நாயக னுந்தை வென்று
வாகை சூடி வருவான். மாதே!
உந்தையு முன்றன் சிந்தை கலங்கிய
மன்னனு மடையார் வருத்த மென்றும்.
இன்னுங் கேளா யெழிலுறு கன்னியே!
நல்லோ ரெல்லாம் நாளும் பல்குவர்.
அல்லோ ரெல்லா மடியோ டழிவர்.
நப்ப ணுதியி னுட்டிய வாறே
யிப்ப ருலகினி லினிமையாய் முடியும்.
இப்பே ருண்மையை யெப்பொழு தினிலும்
மறவா திருப்பாய் மறவாள் விழியே! (189)

(காளி மலை யேறுகின்றாள்.)

[யாவருஞ் சிறிதுநேரம் மௌனம்.]

பூசாரி:—தாயே! தங்களுபகாரத்தைத்தான் அடியேன் எதிர்பார்க்கின்றேன்.—
(வணங்கிக் கைநீட்டுகின்றான்.)

கலாவதி:—(நவமணிமாலை யொன்றையெடுத்து) நீ யிந்த நவமணிமாலையைப் பெற்றுக்கொள்.

(கலாவதிகொடுக்கப் பூசாரி வாங்கிக்கொள்ளுகின்றான்.)

ஏன்? வாசந்திகே! மாணிக்கமாலே! இனி நாம்போகலாமே.

[யாவரும் போகின்றனர்.

## ஐந்தாம் அங்கம் முற்றிற்று.

---

பாட்டு. 188. மேதி அரக்கன்—மகிடாசுரன்.

,, 189. வரி. 7. இவ்வடியினை யுற்றுநோக்க இருபொருள் பயக்கும். 'உனது நாயகன் உந்தையை வென்று' என்றும், உனது நாயகனை உந்தை வென்று' என்றும் இருபொருள் பயக்குமாறறிக.

# அங்கம்—௬.

## முதற்களம்.

இடம்: பாலிக்கும் வேகவதிக்கு மிடையிலுள்ள யாற்றிடைக்குறை.

காலம்: மாலை.

பாத்திரங்கள்: மேதாநிதி, விகடவசநன், ஆத்தானிகர்கள், கன்வான்கள், மற்றையோர்.

மேதாநிதி:—இன்றிம் மல்ல யுத்த மெப்படி முடியுமோ? தெரியவில்லை. அந்த மதுரையிலிருந்து வந்த வீரனும் நம்முடைய மகாராஜாவு மொவ்வொரு விதத்திலுஞ் சமமானவர்களே!

முதலாத்தானிகன்:—எனக்குத் தோன்றுகிற மட்டில் நம்முடைய மகாராஜரே செயிப்பாரென்று நினைக்கின்றேன். ஏனென்றால் இவரெத்தனையோ கணக்கற்ற வீரர்களோடு மற்போர் செய்து அவர்களை யெல்லா மொருநொடியில் வென்றிருக்கின்றனர்!

விகடவசநன்:—ஐயா! கொஞ்சந் திருவாயை மூடிக்கொண்டிரும்மின்!

(பாடுகின்றான்.)

* "வகுக்கான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது." (190)

என்ற விடயத்தை யுணர்ந்திருந்துந் தாங்களிவ்வாறு கூறுகின்றீர்களே? மற்றைப்படி நான் நம்ம மகாராஜா அவர்கள் அங்கச்சேதம் வராமல் யுத்தஞ்செய்ய வேண்டுமேயென் றேக்கங்கொண் டிருக்கின்றேன்!

முதலாத்தானிகன்:—அங்கச்சேதம் யாருக்கு? நம்ம மகாராசாவுக்கா அந்த மதுரை வீரனுக்கா?

விகடவசநன்:—ஓ! நம்ம மகாராஜாவுக்குத்தான்! அதற்குத் தடையென்னை? அவருக்குக் கிடையாமற் பின்னை யாருக்குக் கிடைக்கும் அங்கத்தேசம்?

முதலாத்தானிகன்:—நான் அங்கத்தேசமா கேட்டேன்? அங்கச்சேத மன்றோ கேட்டேன்!

விகடவசநன்:—உமக்கென்ன பைத்தியம் பிடித்திருக்கின்றதா? நீ ரேனையா அங்கச்சேதங் கேட்கின்றீர்?

முதலாத்தானிகன்:—யா னெனக்கா கேட்டேன்?

விகடவசநன்:—பின்னை யாருக்கு?

---

பாட்டு:—190. இறைவன் விதித்த ஆணையின் வண்ணமே யன்றி வேறெவ்வாற்றானு மெதனையு மெத்தகையோர்க்குந் துய்த்தலரி தென்பதாம்.

முதலாத்தானிகன்:—மகாராசாவும் மதுரைவீரனும் யுத்தஞ் செய்யப் போகிறார்களே! இவ்விருவரில் யாருக்கு அங்கச்சேத மென்றேன்! அப்படியிருக்க நீரென்ன மெல்லாமோ பேசுகின்றீரே!

விகடவசநன்:—நீர் நல்ல மகாநுபாவர்தாம் ஐயா! எழுந்தருளுங்கள். தாங்களிருந்த விடத்திற்கு வேறேயாள் வைப்போம்! மகாராசா வருகின்றசமயமாயிற்று. இப்போது யாருக்கு வெற்றி கிடைக்குமென் றுகேளாசிப்பதை விடுத்துவிட்டு யாருக்கு அங்கச்சேதம் வருமென்று கேட்கின்றீரே! உம்முடைய புத்தி யுலக்கைக் கொழுந்துங் குந்தாணி வேருமா யிருக்கின்றதே!

(முதலாத்தானிகரை கைதொட் டேர்க்கின்றான்.)

மேதாநிதி:—ஐயா! விகடவசநரே! அவரோடென்ன? உம்முடைய வம்பிற் கெல்லா மேற்றவரோ அவர்?

விகடவசநன்:—ஐயா! மேதாநிதியாரவர்களே! நீங்கள்தாம் பாருங்களேன்! மகாராஜா வவர்களுக்கு அங்கச்சேதம் வருமாவென்று கேட்கலாமா. அப்படிக் கேட்பது மகாபாவமன்றோ?

மேதாநிதி:—சரி. சரி. விகடவசநரே! மகாராசாவவர்கள் வருகிற சமயமாயிற்று? கொஞ்சம் பேச்சை நிறுத்தவேண்டும்! அதோ சோமதத்தனும் வருகிறான்!

சோமதத்தன் வருகின்றான்.

சோமதத்தன்:— (மேதாநிதியாரை நோக்கி) எசமான்களே! மகாராசா வவர்கள் இதோ வந்து விட்டார்கள்.

நேபத்தியத்துட் காளமுஞ் சங்கமு மொலிக்கப் போர்க்கோலம் பூண்டு சயதுங்கன் மநோமோகினியோடும் பரிவாரங்களோடும் வருகின்றான்.

யாவரும்:—(எழுந்து நின்று) வெல்க நின்கழல்! வெல்க நின்கழல்!! வேந்தர் சிங்கமே!

(அரசன் கையமைத்தலும் யாவரும் வீற்றிருக்கின்றார்கள்; அரசன் தன்னிரு புறத்திலும் பணிப்பெண்கள் வெண்சாமரம் வீசச் சிங்காதநத்தில் வீற்றிருக்கின்றான்.)

சயதுங்கன்:—(மறைவாய்) ஏ! பிரியதேவி! போனகாரியம் பலித்ததோ வன்றோ?

மநோமோகினி:—மநோமோகினி யெடுத்தகாரியங்களி லெதுதவறிற்று? சொல்லுங்கள். கேட்போம்.

சயதுங்கன்:—எல்லாம் சயித்த பிற்பாடன்றோ சொல்லவேண்டும்? (மேதாநிதியாரை நோக்கி) என்ன? மேதாநிதியாரே! நம்முடைய சுகசரீர மிவ்வளவு நேரமாயும் வரக்காணோம்!

மநோமோகிநி:—ஏதோ காரியமாய்ப் போனூர். இதோ வந்து விடுவார்.

விகடவசநன்:—மகாராஜா! அவர் யுத்தஞ்செய்பவரைப் போன்று,—(மநோமோகிநி யுருத்து நோக்குகின்றுள்.) அங்கே மகாராணியார் உத்தரவாய் விட்டது சொல்லவேண்டாமென்று! (மநோமோகிநி திரும்பிக்கொள்ளுகின்றுள்.)

சயதுங்கன்:—சொல்லுமையா சொல்லும். பாதகமில்லை.

விகடவசநன்:—இல்லை! மகாராஜா! கொஞ்சம் பயமாயிருக்கின்றது!—(மநோமோகிநி தனக்குள் உங்கரிக்கின்றுள்.) அதோ பார்த்தீர்களா? மகாராஜா?

சயதுங்கன்:—சரி. சரி. சொல்லும். பயப்படாதீர். நாமிருக்கின்றோம்!

(புன்னகை செய்கின்றுன்.)

விகடவசநன்:—அப்படிச் சொல்லுங்கள்! மகாராஜா! இதோசொல்லுகின்றேன். போர்க்கோலம் பூண்டு வயந்தச்சோலையி லேதோ அவசரமான காரியமென்று வெகுவிரைவாய்ப் போனூர்! நாலைந்து நாழிகைக்குமுன் பார்த்தேன்! அதுநிற்க. நம்முடைய குலாந்தக ரெங்கே காணும்?

மநோமோகிநி:—(தனக்குள்) இந்த விகடவசநப் பார்ப்பானுக்கு என்ன சொல்லியுந் தெரியவில்லை! நம்மை யடிக்கடி யிந்த மாதிரி சபைகளி லிழுத்து விடுகின்றுன்! இவனை யெப்படியாவது நம்ம வசப்படுத்தலாமென்று பார்த்தாலும் முடியவில்லை! என்னபணங் கொடுத்தாலும் வாங்கமாட்டேனென்கின்றுன்! மிகவு முண்மை யுள்ளவன்போலக் காணப்படுகின்றுன்! இவனை யிந்தமாதிரி விட்டிருந்தா லேதாவது வம்புகளிழுத்து விட்டுக் கொண்டேயிருப்பான்! இவனை யெப்படியாவது தொலைக்கும்வழி நாடவேண்டும்!

விகடவசநன்:—நம்ம மகாராணியா ரிந்த விகடவசநனை யென்ன பண்ணலாமென்று யோசிக்கின்றுர்கள்! எல்லாவற்றிற்கும் நம்ம மகாராஜா இருக்கின்றுர் நமக்கு! அதுகிடக்க, நான் கேட்டதை மறந்துவிட்டீர்களே! ஏன் மேதாநிதியாரே!

சிதாநந்தனுஞ் சத்தியப்பிரியனும் வருகின்றுர்கள்.

மேதாநிதி:—அந்தப் பேதை யெங்கே தொலைந்தானே? அதோ அந்த ஆலவாய் வீரர்களும் வந்து விட்டார்கள். இனித் தாமதிப்பானேன்?

சிதாநந்தசத்தியப்பிரியர்:—(பாடுகின்றுர்கள்.)

முச்சுடரு முக்கண்ணு முழுதுலகு மொருங்கீன்ற
பச்சைமயில் காதலியாப் பற்றினனைப் பதம்பணியுங்
கச்சிநகர்க் காவலனை கழல்புனையும் வேல்வேந்தே
யிச்சையுடன் வந்தனங்கள் யாமளித்தும் பெற்றிடுவாய், (191

சயதுங்கன்:—வந்தனம்! வந்தனம்!! வம்மின்! வம்மின்!!.

(சயதுங்க னெழுகின்றுன்.

யாவரும்:—ஜய ஜய விஜயீபவ!—

(யாவருங் கைகொட்டி யார்க்கின்றனர்.)

(சயதுங்கனுஞ் சிதானந்தனு மிறைவனை வணங்குகின்றனர். அதன்பின் சிதானந்தன் மருந்துப்பெட்டியைத் தன்னுடைகளிற் றேடி யகப்படாமை யினாற் கடவுளைத் தியானிக்கின்றான்.)

சத்தியப்பிரியன்:—ஏன் தாமதித்தல் வேண்டும்? மேதாநிதியாரவர்களே! போர் தொடங்கலாமே!

மேதாநிதி:—ஆ! அப்படியே செய்வோம்! (சிதானந்தனை நோக்கி)என்ன? மதுரையம்பதி மகாவீரரே! சன்னத்தந்தானே?—

சிதானந்தன்:—யானெப்பொழுதுஞ் சன்னத்தமே!

மேதாநிதி:—ஆனாற்சரி.

விகடவசநன்:—(சிதானந்தனிடம் ஓடிவந்து காதோடு உரக்கச் சொல்லுகின்றான்.) எங்கள் மகாராஜாவைக் கொஞ்சங்கண்பார்த்துக்கொள்ளுமையா!—

(சிதானந்தன் நகைக்கின்றான். அதன்பின் இருவரும் மற்போர் புரியத் தொடங்குகின்றனர்.)
[மற்போர் நிகழ்கின்றது.]

[யாவரும் சிறிதுநேரம் மௌனம்.]

மேதாநிதி:—ஆகாகா! அந்தக் கூடலம்பதிக் குமரன் விழுந்து விடுவான் போலும்!—

(சயதுங்கன் மேலுஞ் சிதானந்தன் கீழுமா யிருக்கின்றனர்; அரசனைச் சேர்ந்த யாவரும் கைகொட்டி யார்க்கின்றனர்.)

மனோமோகினி:—ஆகாகா! நம்மரசர் சயதுங்கர் விழுந்துவிடுவார்போ லிருக்கின்றதே!—

[யாவருஞ் சிறிதுநேரம் மௌனம்.]

(சயதுங்கன் தோற்று விழுகின்றான்.)

யாவரும்:—ஆகாகாகா!—

(கோலாகலமெழ யாவருமரசனைச் சென்றெடுக்கின்றனர்.)

சயதுங்கன்:—(எழுந்து சிதானந்தனை நோக்கி) 'மல்லயுத்தமகாவீர சயதுங்கர்' எனப் பெயர்பெற்ற வென்மீதும் வெற்றிகொண்ட வீரர்பெரும! நீயும் நின்நேசனு மெம்மை யரண்மனையில் வந்து காண்பீர்!—

சிதானந்தன்:—ஆ! இதோ வருகின்றேம்!—

(மனோமோகினியொழிய மற்றையாவரும் போகின்றனர்.)

மனோமோகினி:—ஐயோ! தெய்வமே! என்முயற்சிகளெல்லாம் வீணாகப் போய்விட்டனவே! வார்த்தைகளெல்லாம் பொய்யாயினவே!—யானை தன்றலையிலேயே மண்ணைவாரிப் போட்டுக் கொள்வதுபோல யானெனக்கே

கேடிழைத்துக்கொண்டேனே! யான் சொல்லியபடியே யரசனென்னை யிவ்வூரைவிட்டுத் துரத்திவிடுவானோ?—ஐயோ! சுகசரீரனே! நீரிந்த விரனைத் தொலைத்துவிடுகிறேனென்று போனீரே! உம்மாலுந் தொலைக்க முடியவில்லையோ?—அந்தோ! அரசனென்னைப் பொய்சொலி யென்றே சானோ?—என்னை யாச்சரியமா யிருக்கின்றது! நம்முடைய வைத்தியர் அகோபலர் மருந்து கொடுத்து மிவன் வென்றனனாயின் இவனது வன்மையின்னு மெவ்வளவு அபரிமிதமோ!—[மௌனம்] சீ! சீ!! நாமேன் வருத்தப்படவேண்டும்? நமக்கிந்த ராசனைப்போல எத்தனையோ சய துங்காரசர்களகப்படுவார்கள்! நமக்கென்னகுறைவு? இனித்தாமதமின்றிப் போவோம்!—

[மனோமோகினி போகின்றான்.

## இரண்டாங்களம்.

இடம்: வயந்தச்சோலை.

காலம்: மாலை.

பாத்திரம்: கலாவதி.

கலாவதி:—(உலாவிக்கொண்டு தனக்குள்) என்பெருமான் விரும்பிய வண்ணம் வயந்தச்சோலையிற் குறியிடத்திற்கு வந்து விட்டேன்:—இப்பொழுதெல்லாம் யாற்றிடைக்குறையில் யுத்தம் நடந்துகொண்டிருக்கும். என்னிறைவன் யுத்தம்முடிந்து இவ்விடம் வருகிறவரைக்கும் சிறிது நேரம் உலாவி வயந்தச்சோலையி னெழிலைப் பார்த்துக்கொண்டு வருவேன்.—(சிறிது தூரம் நடந்து சென்று உடல்சிலிர்க்கின்றாள்.) இதுவன்றோ வென் ஆநந்தநாயகன் யான் பேசிய வற்றையெல்லா மொளித்திருந்து கேட்டவிடம்! ஆகையாலன்றோ என்னுடம்பின்கண் ஒருவித இன்ப வுணர்ச்சி யெழுகின்றது!—[மௌனம்.] இம்மரத்தின் மலர்கள் பார்வைக்கு மிகவும் ரம்மியமா யிருத்தலிற் சிலபூப்பறித்துத் தொடுத்து எனது சுகவள்ளல் சிதாநந்தனுக்குக் கொடுப்பேன்.—(மலர் கொய்கின்றாள்.) இஃதென்ன விந்தை! இம் மாகந்தமரம் யான் மலர் கொய்யுமாறு தொட்டவுடனே யதிகமாக மலர்கின்றதே! ஈசனே! நின் சிருட்டி மகிமை யென்னே!—[மௌனம்.]— (பாடுகின்றாள்.)

கட்கினிமை யுற்ற கவின்வகுளங் காணுந்தம்
புட்பங்க டம்மையென்றன் புண்ணியற்குத் தாரீரோ! (192)

(மலர்கொய்கின்றாள்.)

புன்னாக நன்மரமே பொற்புடைய குங்குமமே
யென்னாசைக் கோமானுக் கின்பமலர் தாரீரோ! (193)

(மலர்கொய்கின்றாள்.)

மன்னுபனி நீரே வளர்பாரி சாதமே
யென்னுயிர்நேர் மன்னற் கினியமலர் தாரீரோ! (194)

(மலர்கொய்கின்றாள்.)

என்றனுடனிறத்தையெய்தியதிச் சம்பகப்பூ
வென்று நினைத்துதிக்கு மேந்தல் களிகூரத்
துன்றுமன்றற் சம்பகங்கா ளேமலர் தாரீரோ! (195)

(மலர்கொய்கின்றாள்.)

வீசுமிளந் தென்றல்வளர் மென்பொழிற்க ணுற்றிலங்கும்
வாச மிகுபவள மல்லிகைகா ளென்னருமை
நேசத் தலைவனுக்கு நீவிர்மலர் தாரீரோ! (196)

(மலர்கொய்கின்றாள்.)

தள்ளரிய முல்லைகளே சம்பங்கிப் பூக்கொடியே
கள்ளவிழு மாதவியே காதலன்சி தாநந்த
வள்ள றனக்கணிய வண்மலர்நீர் தாரீரோ! (197)

(மலர்கொய்கின்றாள்.)

அதோ அவ்விடத்தில் யந்திரவாவியின் றண்ணீர்பாய்ந்து மல்லிகை முல்லை முதலிய பூச்செடிகள் நறுமணம் வீசும் நல்லரும்பேந்தி யின்பக் காட்சி யினிது கொடுப்பது தனக்குத் தண்ணீருதவிசெய்த தாமரைவாவி கண்டு ஆநந்திக்கு மாறுபோலும்!—[மௌனம்] ஆகா! நிலைத்திணைப் பொருள்களிலும் பிரதியுபகாரச் சிந்தையிருத்த லென்னையாச்சரியம்! என்னையாச்சரியம்!—(வாவியருகில்நின்று) ஆகா! என்ன இனிமையாக இளந்தென்றல் வீசுகின்றது!—இவ்விடத்திலன்றே யெனது சிதாநந்தத் தலைவனைத் தழுவி முத்தமிட் டின்புறுதல் வேண்டும்!— [மௌனம்] ஓகோ! ஒக்கும்! ஒக்கும்!! வாயுபகவானும் நமது வசந்தச்சோலையின் வனப்பைக் காண்பதற்காகவந்து உலாவுகின்றனர் போலும்.—[மௌனம்] இக்கருமணற் றரையிற் புன்னை மலர்கள் வீழ்ந்திருத்தலையும் வாவியி னுள்ளே வெண்டாமரை மலர்ந்திருத்தலையும் உற்று நோக்கினால் நீலநிற முடைய வானத்தில் மதி நட்சத்திர கணங்களோடு தோன்றி விளங்குதல் போலும்! — [மௌனம்] இந்நேரம் என்னிறைவன் சிதாநந்தன் மல்ல யுத்தத்தில் எந்தையைவென்று திரும்புவானோ?—[மௌனம்] ஓ! அசோக மரமே! எங்கள் பாததீட்சை பெற்று மலருகின்ற நீ, யானும் மனக்கவலை மாற்றி அசோக மடையுமாறு செய்வாயோ? — (உலாவுகின்றாள்.) வேங்கை மரத்திற் படர்ந்தேறும் மாதவியே! நீ நின்காதலனைத் தழுவி யிருத்தல்போல யானு மென்னுயிர்க்காதலன் சிதாநந்தனை அங்கி சான்றாய் மணந்து தழுவிக் கோடலென்றைக்கோ! ஓ! வேங்கைமரமே! நீ நின் பொன்வாய் மலர்ந்து எனது மணநாளுரைக்கின்றனையோ! அப்படியாயின் யான் செய்த பாக்கியமே பாக்கியம்! — [மௌனம்] —

---

பாட்டு:—195. மண நிறைந்த சம்பக மரங்காள்! நுந்தம் மலர்கள் உன்றனுடலினது நிறத்தினை அடைந்திருக்கின்றன வென்று நும்மைத் துதித்த எனது தலைவனாகிய சிதாநந்தன் களிகூரும் வண்ணம் நீவிர் உமது பரிசுத்த மாகிய மலர்களைத் தாரீரோ? என்பதாம். எதிர் நிலையணி.

(உடல் சிலிர்க்கின்றாள்.) இஃதென்னை! இருந்திருந்தாற்போல எனது வலக்கண் துடிக்கின்றதே! — ஐயோ! 'வலக்கண் துடித்தா லலக்கணுண் டாகும்' என்பார்களே! — (நாற் புறமுஞ் சுற்றிப் பார்க்கின்றாள்.) ஆகா! அவ்விடத்தில் யாரோ ஒருவன் — ஆடவன் — படுத்துறங்கு வதுபோற் காணப்படுகின்றதே! — சமீபத்திற் போய்ப் பார்ப்பேன்.— [மௌனம்] இஃதென்னை! சுகசரீரன் போலிருக்கின்றதே! சுகசரீரன் றானோ? நன்றாய்ப் பார்ப்பேன். ஆமாம். சுகசரீரன்றான்! என்னை யதிசயம்! என்னையதிசயம்!! இவ்விடம் அவனுடம்பினின்று முதிர மோடியிருக்கின்றதே! — ஆகா! சுவாசத்தைக் காண்கிலேனே! இறந்து விட்டனன் போலவே தோன்றுகின்றது! — ஏடா! சுகசரீரா! நீ செய்த பாவச் செயல்களுக்கு இவ்வாறு துன்மரணமாய்ப் போனதே மேன்மை யானது! — புலாலுண்ணும் பிரட்டனாகிய சுகசரீரனிவன்றானோ? என் றந்தையார் சயதுங்கவீரரை மனோமோகினி வயப்படுத்திய சுகசரீரனு மிவன்றானோ? துர்க்குணமெல்லா மோருருவெடுத்த சுகசரீரனு மிவன் றானோ? கலாவதியைக் கைக்கொள முயன்ற சுகசரீரனு மிவன்றானோ? ஈசனே! ஏகாம்பரேசனே! 'கெடுவான் கேடு நினைப்பான்' என்ற பழ மொழியின் :பொருளை யின்று தான் அநுபவத்தி னுணர்ந்தேன்! ஏ! காலகாலனே! நினது துட்ட நிக்கிரகஞ்செய்யுந் தன்மையை யென்னென் பேன்! என்னென்பேன்!! — [மௌனம்] ஆ! அவ்விடம் யார்? — என் னுயிர்த் தலைவன் சிதாநந்தனோ? — (ஓடிச்சென்று பார்க்கின்றாள்.) ஆமாம். அவன்றான்! அவன்றான்!! — (மேலுங்கீழும் பார்க்கின்றாள்.) ஐயோ! சிதாநந்தா! சிதாநந்தா!! உன்னுடலிற் குத்துக்காயம் பட்டிருக்கின்றதே! நீ போர்க்கோலம் பூண்டு போகுங்காலத்தி லெந்தப் பாவியேனு மொளித் திருந்து உன்னைக் குத்தினனோ? அன்னண மொளித்திருந்து குத்தினும் அதனை விலக்கிக்கொள்ளும் ஆற்றல் உன்னிடத்தி லில்லாமலோ போயி ற்று! ஆகா! இவ்விடத்திலு மொரு குத்துக் குத்தியிருக்கின்றதே! — (அழுதுகொண்டு) என்னிறைவனை நாலைந்து பேர் சேர்ந்து குத்தினர் களோ? ஆயிரமக்க ளொருங்கு கூடி மேல்வரினும் அஞ்சாத நீ சாமானி யமான நாலைந்து வீரர்க்கோ வுடைந்தாய்! என்ன புதுமை! என்ன புதுமை!! — ஒன்றும் நம்பக்கூடியதா யிருக்க வில்லையே!—சிவபெரு மானே! என்னுயிர்க் காதலன்மீது நின்னுடைய திருவருட் பிரோக மிவ்வாறிருந்ததோ! — என்னருமை நாயகனே! சிதாநந்தா! குத்துண்ட மையான் மூர்ச்சித்தனையோ? — (மீட்டு முற்று நோக்கிப் பெருமூச் செறிந்து அழுதுகொண்டு) ஓகோ! என்னுயிர்க்குரிசில் சிதாநந்த னிறந் தனனோ! — (தரையில் வீழ்கின்றாள்.) — ஓ! சிதாநந்தா! இஃதோ நின்விதி! இஃதோ நின்விதி!! — ஈசனே! என் செய்வேன்! என் செய் வேன்!! — (மேல் வீழ்ந்து) என்னின்ப வள்ளலே! உயிர் துறந்தனையோ?

(பாடுகின்றாள்.)

மருவலரை யச்சுறுத்தும் வரைமார் பெங்கே
மணிக்கவச மணிந்ததிற லுடல மெங்கே
யுருமினமும் வெருவுமட்ட காச மெங்கே
யுயர்ந்தநெடுங் குந்தமெங்கே யுடைவா ளெங்கே
பொருதடக்கைச் சிலையெங்கே செவ்வே லெங்கே
போர்முகத்தி னெவர்தமக்கும் புறங்கொடாத
பருவயிரத் தோளெங்கே பரிசை யெங்கே
பயிரவியே நீயெனக்குக் காட்டாய்! காட்டாய்!! (198)

ஓ! சிதாநந்தா! சுத்தவீர சிதாநந்தா! நீயோ உயிர் துறப்பது? ஐயோ! உன்னை யான் யாமோர் முறையான் மணந்ததே யன்றிக் கனவிலொன்று யும் மணந்து சுகவாரியில் திளைத்தாடாமென் றிருந்தேனே? அவ்வளவும் மநோராச்சியமாய் விட்டனவே! — நீ யுயிர் துறந்தபின்னர் யானொன்றும் வேண்டேன்! — (இரங்கிப் பாடுகின்றாள்.)

மழுஞா யிற்றி னெழிலேய்க்கும் வண்கோங் கைக்குங் குமக்குழம்பான்
மெழுகப் பெற்று மணியார மின்னிக் கிடந்த வரைமார்பத்
தொழுகு முதிரச் சேறாடி யுருமே றனைய யாருயிர்நீ
வழுவி யிழந்த வகையென்னே மாயங் கொல்லோ வடிவேலோய்? (199).

வாளார் வனச மலர்க்கரத்தாய் வாகை மாலை வயங்கெழிற்றோட்
காளா யெனகண் ணிணைவிளக்குங் கதிரே ஞானக் கலைமதியே
மாளா நின்றென் மனம்வருந்த வைத்தாய் சுருணை மன்னவர்தஞ்
சூளா மணியே சிதாநந்தத்தோன்று லிஃதென் சூழ்ச்சிகொலோ? (200)

---

பக்கம். 143 வரி 13—16—தற்குறிப்பணி.
,, 143 வரி 16—17—வேற்றுப்பொருள்வைப்பணி.
,, 143 வரி 21—22—தற்குறிப்பணி.
,, 143 வரி 23—26—உவமையணி. இக்கருத்து ஆசிரிய வசனமாக்கொண்டது.
,, 143 வரி 32—33—வேங்கை பூத்தால் அது மணவினை செய்யுங் காலத்தைக் குறிக்குமென்பது தொல்லாசிரியர் துணிபு. இதனை 'வரையுநா ளுணர்த்தல்' என்னு மகப்பொருட் டுறையானு முணர்க.

பாட்டு. 198—தலைவனை யிழந்த தலைவி அவனிறந்து கிடக்குங் களம்புக்குப் பைரவியாகிய பத்திரகாளியை நோக்கி யிவ்வாறு கூறும் மரபினைக் கலிங்கத்துப்பரணியிற் களம்பாடிய பகுதியிற் பதின்மூன்றாஞ் செய்யுளிற் காண்க.

பாட்டு. 199—'ஏய்க்கும்' என்பதனை 'மணியாரம்' என்பதனோடு கூட்டுக. உவமையணி.

,, 200—கண்ணிணை விளக்குங்கதிர்—இரவி. சூளாமணி: சிரோரத்தினம்; தேவமணி யிரண்டனு ளொன்றுமாம்.

பொன்னிற் செய்த வமளியின்மேற் பூவி னியன்ற வணைமேவி
யன்னோ வெளியே னடிவருட வமரு மஞ்சத் திருத்தலன்றி
மன்னு மிந்த வயந்தவனம் வந்து வன்பூ வணையின்மறிந்
தென்னோ வொன்று மிசையாம லிருந்தா யென்னையாள் கோமானே? (201)

காண்டற் கரிய நினதுபடங் கையிற் கொண்டு நினைமணப்பான்
வேண்டி நின்ற வெனதிதய மினிரு மீனை நினதழகு
மாண்ட முகத்து மிகக்கறுத்து வளர்ந்து விளங்கு மீசையெனுந்
தூண்டிற் பொன்னிற் படுத்திழுத்த தூய நேய மீனவவோ! (202)

விந்தா சலமும் வெருவியுரு வீந்த தெனலாம் படியுயரு
மைந்தார் புயத்து வழுதியர்த மன்னே நறிய பொன்னலர்வேப்
பந்தா ரகலத் தடல்சான்ற வைய னேசெந் நாப்புலவர்
சிந்தா மணியே சிதாநந்தச் சிம்பு ளேயென் செல்வாவோ! (203)

தூப்பண் பாடுஞ் சுரும்பரென்மை தோய்ந்த விழிபெண் வண்டெனவென்
மீப்பாய் தனும்பா னினைவிரித்து விலகி யோடத் தாள்கன்றிச்
சேப்ப வவற்றை யுடன்போந்து சிறந்த நினது கையிற்பிடித்து
மாப்ப வளநேர் வாயிலொற்றி மடிமேற் கொண்ட மணாளாவோ! (204)

பூவர் சோலை மணிவயந்தப் பொலிவார் கொடிசேர் பந்தரின்யா
மேவும் போழ்து சிலம்பொலிப்ப விரைந்து போந்த வோதிமத்தை
யாவ லோடென் னடைகற்பா னடைந்த தென்று புகழ்ந்துரைத்த
பாவ லாள தமியேன்பாற் பரிவு கூர்ந்த விறைவாவோ! (205)

---

பாட்டு. 201—வன்பூ=தரை. தகாவமயணி.

,, 202—இதன்கண்ணே கலாவதியினது இதயத்தை மீனாகவுஞ் சிதாநந்தனது மீசையினை அம்மீனைக் கோடற்குக் கொண்ட தூண்டிற் பொன்னாகவுஞ் சிதாநந்தனையே செம்படவனாகவு முருவகஞ் செய்திருத்தல் காண்க. மீனவன்: பாண்டியன், செம்படவன். "கண்ணின் வலைகலந்து வீசினபோதுள்ள மீனிழந்தார்." — திருக்கோவையார்.

பாட்டு. 203—சிந்தாமணி: விருப்பத்தைத்தரு மிரத்தினம்; தேவமணி யிரண்டனு ளொன்று. சிம்புள்: சிங்கத்தின் வைரியாய சரபமென்னு மெண்காற் பறவை.

பாட்டு. 204—மயக்கவணி. கையிற் பிடித்து: ஐகாரக் குறுக்கம்.

,, 205—தற்குறிப்பணி. இதற்கு மயக்கவணி யுறுப்பு. பூவர்சோலை: பூஞ்சோலை; அர்: கட்டுரைச் சுவைபடவந்ததோ ரசை. "பூவர்சோலை புகுவலென் றெண்ணினான்." எனச் சிந்தாமணியிற் பதுமையாரிலம்பகத்து 163-ஆம் செய்யுளிற் காண்க. ஆண்டுப் 'பூவர்,' அர்-பகுதிப்பொருள் விகுதி யென்றனர் நச்சினார்க்கினியர். இனி 'அர்' போலி யென்பாரு முண்டு. சிலம்பொலியும் அன்னப் புள்ளொலியு மொக்கு மாதலிற் "சிலம்பொலிப்ப விரைந்து போந்தவோதி

நெய்தற் பூவைத் தார்புனைத நெடுந்தோட் கண்வேள் சிலையெழுத
ரெய்யிற் குழம்பா லெனதனமே றாய மீனக் கொடிவரைதல்
கையில் வில்லைத் தொழில்கோடல் கண்ணிற் கரிய மைதீட்டல்
செய்தல் வல்ல சிதாநந்தச் செம்மா லென்றன் றலைவரோ! (206)

வயிரத் தோடு மணிக்குழையும் வளர்மா முத்த மாலைகளுஞ்
செயிர்தீர் தகரக் குழலுமெழில் சேர்ந்த நுதலுந் திருத்திநனி
பயிற லுற்ற கரமுடையாய் பைஞ்செந் தமிழ்தேர் பாவாண
கயிலை காணச் சென்றனையோ கருத்தியா னழிதல் காண்கிலையோ? (207)

பெண்ணாய்ப் பிறப்பா ருடவரும் பெரிது விரும்பும் பேரழகு
நண்ணு மெனது பெருமானே நவையில் பாண்டிக் குலதிலகா
மண்ணும் விண்ணு மொருங்காளு மன்னே யருமை மணாளவென்றன்
கண்ணே யனைய காதலனே கையற் றயர்ந்தேன் காணுதியோ! (208)

[மௌனம்.]

ஐயோ சிதாநந்தா வாருயிர்நீ போக்கியது
மெய்யோ விளம்பாஅய் வீரர் சிகாமணியே! (209)

ஆநந்த நாயகனே யன்புருக்கொண் மன்மதனே
யேனிந்த வூனெடுத்தே னின்பமறும் பாதகியேன்! (210)

தாதகியே பாதிரியே சம்பகமே மாதவியே
பாதகியேன் வாழ்வெல்லாம் பாழாகி விட்டனவே! (211)

இன்ப மிழந்தெளியே னேக்கவலை யிற்பட்டுத்
துன்ப முழத்தலையென் றோழியரே காணீரோ! (212)

மாண்டான் சிதாநந்த மாவீர னென்றபினர்
வேண்டேன்யான் வேண்டேனிப் புன்பிறவி வேண்டேனே. (213)

(அயர்ந்து விழுகின்றாள்.)

---

மம்'' என்னப்பட்டது. ''மென்சிறை யனமென மிழற்றும் பரிபுர மணிந்து'' என நைடதத்தினும், ''காவிவாய்க் கருங்கணார் காமர் பூஞ்சிலம், பாவிவாய் மாளிகை யதிரக் கேட்டொறுந், தூவி வான் பெடை துணைதுறந்த கொல்லென, வாவிவா யிளவன மயங்கு மென்பவே.'' எனச் சூளாமணியினுங் கூறியிருத்தல் காண்க.

பாட்டு. 206—இச்செய்யுளைக் கலித்தொகை நெய்தற்கலி 26-ஆம் பாட்டில் ''நெய்த னெறிக்கவும்.........றோளாள்பவன்'' என்ற பாவடிகளுட னொப்பிடுக.

,, 208—''ஆடவர் பெண்மையை யாவாவுந் தோளிணாய்'' என்றார் கம்பரும். உயர்வு நவிற்சியணி.

,, 210—அன்புருக்கொண் மன்மதனே: இல்பொருளுவமையணி.

(மீட்டுமெழுந்து) அவ்விடத்தி லேதோ கிடக்கின்றதே!

(மருந்துப் பெட்டியைக் கையிலெடுக்கின்றாள்.)

ஓகோ! இஃதொரு மருந்துப்பெட்டிபோலும்! இதன் பேரிலென்னவோ வெழுதியிருக்கின்றதே! (படிக்கின்றாள்.) "இதனை யுண்ண மறவாதே!" என்றெழுதி யிருக்கின்றதே! என்ன மருந்தோ இது? தெரிந்திலதே! எஃதேயாயினுமாகுக. (சிறிது மருந்து அருந்துகின்றாள்.) இஃதென்னவோ கைப்பாயிருக்கின்றதே! ஒருவேளை விடமாயிருக்குமோ? என்னவோ மயக்கமுண்டாகின்றதே! விடந்தான்! விடந்தான்!! விடமாயின் "இதனை யுண்ண மறவாதே" என்று எழுதப்பட்டிருக்க மாட்டாதே! ஓகோ! என்னிறைவன் சிதாநந்தன் தான் மண்ணுலகைத் துறந்து விண்ணுலகம் புகுந்தமையால் என்னையும் இம் மருந்துண்டு விண்ணுலகிற்கு வருமாறு கருதி "இதனை யுண்ண மறவாதே" யென்றெழுதிப் போட்டு வைத்தனனோ? அப்படி யிருப்பினு மிருக்கும்! ஐயோ! மயக்க மதிகமாகின்றதே!

சிதாநந்தன் ஒருபுறத்து வருகின்றான்.

ஓ! சிதாநந்தா! சிதாநந்தா!! இதோ நீயிருக்குமிடத்திற்கு வந்துவிட்டேன்!!

(கீழே மயங்கி வீழ்கின்றாள்.)

சிதாநந்தன்:—ஏ! கலாவதி! கலாவதி!! நின்னருமைச் சிதாநந்தன் இதோ இருக்கின்றேன்! இருக்கின்றேன்!! (ஓடிவருகின்றான்.) ஆகா யான்வரத் தாமதமாய் விட்டதென்ற கோபத்தினாலோ என் கண்ணே யிவ்வாறு செய்கின்றனை?

(பாடுகின்றான்.)

பாகையும் வென்றநற் பண்பு சேர்மொழி
யோகையின் மிழற்றிடு முயர்ந்த பூவையே
கேகய மேயெழில் கிளரு மன்னமே
கோகில மேயென்மேற் கோப மேகொலோ? (214)

ஏ! கலாவதி! ஏ! பிரியநாயகி! என் னுயிர்க்காதலீ! நீயென்மீது கோபித்துக்கொள்ளும்படியாக யானென்ன தவறு செய்தேன்? போர்முடிந்ததுமுடனே யோரேயோட்டமா யோடிவந்தேனே! அப்படியிருக்க, நீயென்மீது கோபிக்கப்படாதேடி யென்முத்தே! (பாடுகின்றான்.)

திங்கண்முக மானேதே னேமாகச் செங்கமல
மங்கைதிற நின்வாய் மலர். (215)

(முத்த மிடுகின்றான்.)

---

பாட்டு. 215—இது விருச்சிகபந்தம். இதனிலக்கணத்தை யுபதேச முறையானுணர்க. மாகச்செங்கமல மங்கை—தெய்வத் தன்மை பொருந்திய செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் மங்கையே!

[மௌனம்] ஏது நானென்னவேண்டியும் பேசமாட்டே னென்கின்றனை?
நீயிதுவரைக்கு மிந்தமாதிரி யென்னோடு ஊடினையல்லையே! அப்படி
யிருக்க, இஃதென்னை! [மௌனம்] ஓகோ! யான் உன்றந்தையார்மீது
வெற்றிகொண்டதை வந்தவுடனே சொல்லவில்லை யென்பதுபற்றியோ
ஊடுகின்றனை! ஏ! ஆனந்த நாயகி! இன்பவல்லி! யானுன்றந்தையாரை
வென்று வாகைமாலை சூடி வந்திருக்கின்றேன்! எழுந்திரு! எழுந்திரு!!
[மௌனம்] என்னன்பே! என்பிழைகளையெல்லாம் பொறுத்து என்மீது
கருணைபுரிவாய்! (வணங்குகின்றான்.) யானென்னவணங்கியு மெழுந்
திருக்கமாட்டே னென்கின்றனையே! இஃதென்னை யாச்சரியம்!
[மௌனம்] ஓகோ! மயக்கம்போலும்! இவளுக்கிப்போது மயக்கமுண்டா
வதற்கு ஒரு காரணத்தையுங் காண்கிலேனே! ஒருவேளை "என்னிறைவ
னுக்கு யுத்தத் தின்கண் யாது நேரிட்டதோ" என்ற ஏக்கத்தாலுற்ற
மயக்கமோ? ஐயோ! ஏதோ மருந்துண் டிருக்கின்றனள்போலும்!
(மருந்துப்பெட்டியை யெடுக்கின்றான்.) ஆகா! இது நமக்கு மகாருஷி
கொடுத்த அமிர்தகுளிகை யாயிற்றே! இதனை யுட்கொண்டால் மயக்கமு
முண்டாகுமோ? ஓகோ! இது வஞ்சகமாய்த்தா னிருத்தல்வேண்டும்!
அப்படி யிருப்பினு மிம்மருந்தை யிவளுண்பானேன்? (சுற்றிப் பார்க்
கின்றான்) ஐயோ! மோசம் போய்விட்டதுபோலும்! ஏடா! பாவி!
குலாந்தகா! நீயோ எனக்கு இடையூறாய்வந்தனை? என்னுடைய வுடை
களையெல்லாங் காணாதுகவர்ந்துள கள்வன் நீயேயோ? அந்தோ! பாதகா!
நீயிதற்கோ திருடினாய்? ஐயோ! தெரியாமற் போயிற்றே! உன்னை
யானென மயங்கியோ இம்மருந்தை யுட்கொண்டு என்னுயிர்க்காதலி
யுயிரிழந்தனள்? ஐயோ! தெய்வமே! இஃதோ என்விதி! இஃதோ
என்விதி!! (தலையிலடித்துக் கொள்ளுகின்றான்.) ஏடா! பாவி! குலாந்தகா!
நீ யிறந்துங் கேடிழைத்தனையே! எங்களிருவர் குலத்திற்கும் அந்தக
னாய்ப் போந்தனையே! ஏடி! சம்பகப் பூவெனத் தயங்கு மேனியாய்! இயற்
கையின் மணங்கம ழினிய கூந்தலாய்! மானமே யுயிரெனு மாண்ட
கோளினாய்! குணப்பெருஞ் செல்வியே! கோமளத் தையலே! மெல்லியற்
பாவையே! என்னுயிர்க் கலாவதி! உன்னை யிந்நகரிற் கண்டது முதல்
யான் பட்டபாடுகளை யென்னவென்று சொல்வேன்! உனக்காகவன்றே
யுன் றந்தையாரோடு மல்ல யுத்தஞ் செய்ய விணங்கினேன்! ஏடி! இன்ப
ரசமுறு மினிய கனியே! கலாவதி! யான் வெற்றியடைந்ததை யினியார்
பாலுரைப்பேன்? ஓ! என்னின்னுயிர்ப்பாங்கனே! சத்தியப் பிரியா! நீ
யுனது நண்பன் சிதாநந்தனை யிழந்தாய்! என்னருமைத் தாயே! ஆநந்த
வல்லி! தந்தையார் சுகேசரே! நீவிரிருவிருந் தவங்கிடந்து பெற்ற

---

வரி 8-9—தலைவன் றலைவியை யூடல் நீக்கக் கருதி வணங்குதல் இன்ப நூலாரைக் கேட்டுணர்க. "ஆதிபகவன் றனதூடல்" என்ற பிரபுலிங்க லீலைச் செய்யுளினு மிக்கருத்துண்மை காண்க.

வரி 26-29.—பதுமினி ஜாதிப் பெண்டி ரிலக்கண மீண்டுக் காண்க.

நுமதொரே மகனை யிழந்தீர்! எடி! எள்ளின மலரென விலங்கு நாசியாய்! தெள்ளமிழ் தூறிடுஞ் செய்ய வாயினாய்! என் புயங்களுக் கணியெனப் பொலிந்த நங்கையே! கலாவதி! உன்னை யக்கினி சாட்சியாய் மணந்து சுகியாம லுயிர் துறக்கின்றேன்! இதோ உனக்கு யான் கொடுத்த மோதிர மிருக்கின்றதே!

(இரங்கிப் பாடுகின்றான்.)

தக்கசோ ழர்குலத் தடத்திற் றாமரைப்
பக்குவப் போதெனப் பகரும் பான்மையா
யிக்குமே கைத்திட விசைக்குந் தேமொழிச்
சக்கிர வாகமே தனித்தெங் கேகினாய்? (216)

கல்வியுங் காதலுங் கவினப் பூத்திடு
மல்வளர் குணமெனு மணம்ப ரப்புமெ
லில்வளர் முல்லையே யென்னை யாளுறு
செல்வியே தமியையாய்ச் சேற னீதியோ? (217)

செழுமலர் கொய்துமெல் விரல்சி வந்தனை
விழுமலர்த் துகளிற்பட் டடிமெ லிந்தமா
வுழுமலர் தாங்கியென் னிடையொ சிந்ததென்
றெழிலுற விசைப்பவ ளேயெங் குற்றனை? (218)

---

வரி 1-3—பதுமினி ஜாதிப் பெண்டி ரிலக்கண மீண்டுக் காண்க.

பாட்டு. 216—சோழர் குலத்தை யொரு தடாகமாகவுங் கலாவதியை யதன்க ணுள்ள மலரும் பக்குவ மெய்திய தாமரைப் போதாகவும் குறித் திருத்தல் காண்க. சக்கிரவாகம் = இரவியைக் கண்டின்புறூஉ மொருவகைப்புள். தாமரையுஞ் சக்கிரவாகமும் பரிதியி னுதயம் விரும்புதலிற் கற்பனைக் கேற்பச் சிதாரத்தனைச் சூரியனெனக் கோடல் சிறப்பு.

217—கல்வி காதலாகிய விரண்டு மலர்களைத் தன்னகத்தேந்தி நற்குண மாகிய நறுமணம் வீசுறும் முல்லைக்கொடியே! என்பதாம். வன முல்லையி னின்றும் வேறுபடுத்தற்கு 'இல்வளர் முல்லை'யெனப் பட்டது. கற்பினுக் கறிகுறி முல்லை யாதல்பற்றி யிங்ஙனங் கூறிற்று. கற்புடை மங்கை தனித்து யாண்டுஞ் சேறலடா தாதலி னிவ்வா றுரைக்கப்பட்டது.

பாட்டு. 218—"மாவுழுமலர் தாங்கி யென்னிடை யொசிந்தது"; வண்டு கிண்டுறு மலர்களைக் கூந்தலிற் றாங்குதலானென திடை தளர்ச்சியுற்றது. இக்கருத்து 'வண்டோச்சி மருங்கணைதல்' என்னும் அகப்பொருட்டுறையினுண்மை காண்க.

களிநறுப் பிலிற்றுபூங் கனிச்செவ் வாயினாய்
வளியினை யுயிர்ப்பினான் மணமு றுத்துவா
யெளியனிவ் விருளிருந் தேங்கு மாவிடுத்
தொளிதவழ் மேனியா யொளித்த தெங்ஙனே? (219)

அனிச்சமு நெருஞ்சிலா யஞ்சு மம்புயத்
தனிச்சிறு தாளினாய் தாழை வாண்மலர்ப்
பனிச்சையங் கூந்தலாய் பசிய மஞ்ஞையே
கனிச்சுவை மொழியினாய் காந்து நிற்றியோ? (220)

செறிமணிச் சிலம்படி சிறிதெ டுப்பினு
மிறுமெனு மிடையினா யினிமை யெய்திய
வெறிகமழ் மெய்யினாய் விளங்கு மின்னனா
யறிதுயி லமர்தியோ வாடல் செய்தியோ? (221)

மங்கையர் திலகமே மணிப்பொன் னாரமே
திங்களு நாணுறத் திகழ்மு கத்தினாய்
செங்கயற் கண்ணினாய் சிறந்த கன்னியே
யெங்கொளித் தாய்கொலெ னின்ப வல்லியே? (222)

சுந்தரக் கிள்ளையே சுடரும் பூணினாய்
சந்தமார் வடிவுறு தைய லேயென்றன்
மந்தவா ணகைசெறி மாத ராய்மணிப்
பைந்தொடி யேயெங்குப் பறந்திட் டாய்கொலோ? (223)

---

பாட்டு. 219—"வளியினை யுயிர்ப்பினான் மணமுறுத்துவாய்": தனது மூச்சினானே காற்றினிடத்து வாசனை யேற்றுகின்றவளே! முன்னர் மூன்றாம் அங்கத்திறுதியில் "ஏ! கலாவதீ! நீயே யென் அறிவின் பிரகாசம்! நீ யென் பக்கலிராவிடில் யான் காணுமொளியும் ஒளியா?" என்று கூறியதற் கேற்ப "அளியனிவ்விருளிருந் தேங்குமா விடுத்தொளித வழ்மேனியா யொளித்த தெங்ஙனே?" என்றான் சிதாநந்தன்.

,, 220—"அனிச்சமு மன்னத்தின் றூவியுமாத, ரடிக்கு நெருஞ்சிற்பழம்" என்ற திருக்குறளையு மிதனுட னொப்பிடுக. மன்மதனுடைய வாளாதலின் "தாழைவாண் மலர்" என்றது.

,, 221—'அடி சிறிது எடுப்பினும் நின்னிடையினும்' என்று நின்றன் மாணிக்கப் பரல் செறிந்த சிலம்புகள் அரற்றிச் சொல்லா நிற்கும் என்பதாம். வெறி = நறுமணம். வெறி கமழ் மெய்யுடைமை பதுமினிப்பெண்டி ரிலக்கணம். ஆடல் = விளையாட்டு.

,, 222—எதிர் நிலையணி.

பாடகச் சீறடிப் பாவை யேமணிச்
சூடகக் கையினாய் சுகுண நாரிகா
மூடியுங் கூடியு முற்ற வின்பெலா
நாடக மாயின நங்கை நாயகீ! (224)

ஆவியே யமுதமே யருஞ்சஞ் சீவியே
கூவியே யெனைத்தழூஉங் கோக மேயென்றன்
றேவியே நினைத்துனைச் சிந்தை மாழ்குறும்
பாவியே னிறந்திலேன் பார்த்து முன்னையே! (225)

[சிறிதுநேரம் மௌனம்.]

ஐயோ! கலாவதீ! கலாவதீ!! இதோ யானும் நின்னிடம் வருமாறு புறப்பட்டுவிட்டேன்! புறப்பட்டுவிட்டேன்!!

(தற்கொலை புரிவான் வாளை யோச்சுகின்றான்.)

விகடவசநன் வருகின்றான்.

விகடவசநன்:—பதறுதீர்! பதறுதீர்!! நின்மின்! நின்மின்!!

(விகடவசநன் சிதாநந்தன் கையைப் பிடித்துக்கொள்கின்றான்.)

இஃதென்னை! பாண்டியவீரரே! ஒரு பெண்ணிற்காக நீவிர்உயிர் துறப்பதென்றால் அது நன்றா யிருக்கவில்லையே! —மேலும் மம்மாது சிரோமணி யிறந்திலளே! காண்மின். ஏதோ மயக்கமா யிருக்கின்றனள்போலும்!

சிதாநந்தன்:—ஏ! விகடவசநரே! என்னருமைக் கலாவதியைச் சமானியமான வொரு பெண்ணாகவோ நினைத்தீர்?

விகடவசநன்:—அல்லாமற்போனா லவள் ஆண்மகனோ? எனக்குத் தெரியாதையா! அவள் பெண்ணோ ஆணோ அது தங்களுக்குத்தான் றெரியும்!

சிதாநந்தன்:—என்ன? விகடவசநரே! விளையாடுகின்றீர்! இதுவோ விளையாடுஞ் சமயம்?

விகடவசநன்:—பின்னே யெது? வெகு நன்றாயிருக்கின்றது! (பாடுகின்றான்.)

---

பாட்டு. 224—'நாயிகா' என்னும் வடசொல் தமிழில் நாயகியென்று மருவிற்று.
,, 225—கோகம் = சக்கிரவாகம்.

"பாளையாந் தன்மை செத்தும் பாலனாந் தன்மை செத்துங்
காளையாம் பருவஞ் செத்துங் காமுறு மிளமை செத்து
மீளவின் மொய்ப்பு செத்து மேல்வரு மூப்பு மாகி
நாளுநாஞ் சாகின் றாமா னமக்குநா மழாத தென்னோ?" (226)

அப்படியிருக்க ஒருவர்க்காக மற்றொருவ ரழுவானேன்? அஃதன்றியும், அதோ பாரீர் ஐயா கலாவதியின் கை யசைகின்றது! யானது மயக்கந் தானென்று முன்னமே சொல்லவில்லையா?

சிதானந்தன்:—ஆகா! கலாவதி! மோசஞ்செய்யத் துணிந்தேனே!

(பாடுகின்றான்.)

என்னுயிர்த் தலைவியே யெழிற்க லாவதீ
யின்னிசை யாழ்குழ லினையுந் தீஞ்சொலாய்
பொன்னனை யாயுயிர் போக்கி னேயென்றே
யென்னைமோ சஞ்செய விசைந்திட் டேனரோ? (227)

[மௌனம்.]

சத்தியப்பிரியன் வருகின்றான்.

அப்பா! சத்தியப்பிரியா! சிறிது போதிற்குள்ளே யிருகுலத்தையு மொருங்கே தொலைக்க வெண்ணினேனே! என்னைமதியீனம்!! என்னை மதியீனம்!!

சத்தியப்பிரியன்:—என்னசமாசாரம்? என்ன? என்ன?

விகடவசநன்:—ஒன்றுமில்லை! ஒன்றுமில்லை!! நீர்சென்று அதோ அந்த யந்திர வாவியிலிருந்து கொஞ்சந் தண்ணீர் வெகு சீக்கிரமாய்க் கொண்டுவம்மின்! தாமதஞ் செய்யாதீர்!

சத்தியப்பிரியன்:—ஆ! அப்படியே! இதோ கொண்டுவந்து விட்டேன்!

[சத்தியப்பிரியன் விரைந்து போகின்றான்.

---

பாட்டு. 226—குண்டலகேசி: பாளை=பாளைப் பருவம். அது கருவில் ஒரு பருவமாம். அதனைப் 'பீள்' என்பாருமுளர். ஈண்டுச் சாதலாவது நாம் ஒன்றினின்றும் நீங்குதலாம். இவ்வாறு நாடோறும் சிறிது சிறிதாக நாம் செத்துக்கொண்டிருப்பவும் அதனையொரு சிறிதும் பாராட்டாமலும் அதுபற்றி யிரங்கி யழாமலுமிருத்தலென்னை கொல் என்பதாம். அஃதாவது நந்தம்உடல் பாளைப்பருவம் நீங்கிப் பாலபருவமுறுதலும் அதன்பின் பாலபருவம் நீங்கிக் காளைப்பருவமுறுதலும் இன்னுமிவ்வண்ணமே பல பருவமுறுதலும் இயற்கையாமாறுபோல நமது உயிரும் ஒருடலினீங்கி மற்றோருடலுறுதலும் இயற்கையே யாகவும் அதுபற்றியாம் அழுத்தலைப்படுதல் யாவர் மாட்டும் நகைவிளைக்குமேயன்றி வேறு பயன்றாதென்பது இதனாற் குறிப்பிக்கப்பட்டது.

விகடவசநன்:—யாரங்கே? குலாந்தகனோ? ஆகாகா! அவனை யார் குத்தினார்? இந்தப்பயல் சுகசரீரனோ?

(குலாந்தகனை நன்கு திருப்பிப்பார்த்து உயிர் துறந்திலனென் றறிகின்றான்.)

இருக்கட்டும். இவன்மீதுந் தண்ணீர் தெளித்துப் பார்ப்போம். சத்தியப்பிரியரும் வரட்டும்.

சிதாநந்தன்:—ஓ! விகடவசநரே! நீவிரன்றோ எம்மிருவரையு முயிர்துறத்தலினின்றுங் காப்பாற்றினீர்! உமக்கி யானென்ன கைம்மாறு செய்யப் போகின்றேன்!

விகடவசநன்:—நீ ரெனக்கு வேறொரு கைம்மாறுஞ் செய்யவேண்டாம்! ஒரேயொரு காரியமாத்திரஞ் செய்தல்வேண்டும்! அதனை நீர் செய்வீராயின் நீரெனக்குச் சகல வுதவியுஞ் செய்தீரென்று நினைத்துக்கொள்வேன்!

சிதாநந்தன்:—இத்தகைய வுபகாரிக் கெது செய்தாற்றான் றகாது? உமது விருப்பத்தின்படியே செய்கின்றேன்! சொன்மின் உமது விருப்பத்தினை.

விகடவசநன்:—எது? எனக்கேற்ப நீவிர் என்விருப்பத்தை நிறைவேற்ற மாட்டீரென்றே தோன்றுகின்றது.

சிதாநந்தன்:—இல்லை. இல்லை. அப்படி நினையாதீர்! யாதொருதலையாய்ச் செய்கின்றேன். உரைமின் நுமது விருப்பத்தை.

விகடவசநன்:—எனது விருப்பத்தையா?— நீவி ரிவ்வள வுறுதிமொழி கூறியுஞ் செய்வீரோ மாட்டீரோ வென்ற வையப்பாடின்னுமுளது.

சிதாநந்தன்:—யானெவ்வள வுறுதிமொழி கூறியு மிவர்க்கென்மீது நம்பிக்கை பிறந்திலதென்றால் யானினி யென்செய்வது? வேறெவ்வுறுதிமொழி கூறுவேன்? ஓ! ஐயரே! நீரையப்படாதீர். நீவிர் கூறும்வண்ணமே செய்கின்றேன். தாமதியாதீர். கூறுமின். கூறுமின்.

விகடவசநன்:—அப்படியாயின் அது வேறொன்றுமில்லை! நீர் "இனிமேல் யானெந்தக் காரியங்களிலும் பதறுகிற்பே னல்லேன்" என்று வாக்குத் தத்தஞ் செய்ம்மின்! அதுவேயெனக்கெல்லா வுதவியும்!

சிதாநந்தன்:—என்ன? விகடவசநரே! இதுதானோ? வேறொன்று மில்லையோ? வேறென்னையோ சொல்லப்போகின்றீ ரென்றன்றோ நினைத்தேன்! இது செய்வதென்? ஒரு வருத்தமோ?

விகடவசநன்:—இது செய்யாமற்றானே யொரு பெருங்கேடு விளைக்கத் தொடங்கினீர்! ஆகையா லுடனே வாக்குத் தத்தஞ் செய்ம்மின்!

சிதாநந்தன்:—ஆ! அப்படியே செய்கின்றேன்!

விகடவசநன்:—எப்படி? அதனை நன்றாய்ச் சொல்லிவிடும்?—

சத்தியப்பிரியன் வருகின்றான்.

சிதாநந்தன்:—“இனிமேல் யானெந்தக் காரியங்களினும் பதறுகிற்பேனல்லேன்.”—

(சத்தியப்பிரியன் றண்ணீர்கொண்டு போந்தவுடனே சிதாநந்தன் கலாவதியைத் தனது மடிமீதிருக்கச் செய்து அவளது முகத்திற் றண்ணீர் தெளித்தலுங் கலாவதி கண் விழிக்கின்றாள்; விகடவசநன் குலாந்தகன் முகத்திற் றண்ணீர் தெளித்தலும் அவனுங் கண் விழித்து ‘விகடவசநரே’ என்கின்றான்.)

விகடவசநன்:—சரி!—

கலாவதி:—அம்மா!

சிதாநந்தன்:—என் கண்ணே! கலாவதி! நீ பிழைத்திருக்கின்றனையோ?

(பாடுகின்றான்.)

கஞ்சமுறு காரிகையே காதற் கலாவதியே
கொஞ்சுகுயி லேயினிய கோற்றேனே—விஞ்சுமெழிற்
பஞ்சரமா வென்மனத்தைப் பாங்குடனே கொண்டுறையும்
பஞ்சவனக் கிள்ளாய் பரதநட—குஞ்சரமே
துஞ்சுறுமென் றெல்லுயிர்க்காத் தோன்றிய நற்றெள்ளமுதே
பஞ்சணையி லாடும் பசுந்தோகாய்—செஞ்செவே
யஞ்சுவித மாமலரு மார்ந்து மணநாறு
மஞ்சரியே பூந்தேன் மகிழ். (228)

(முத்தமிடுகின்றான்.)

கலாவதி:—என்னுயிர்த் தலைவனே! சிதாநந்தா!—

(தழுவிக்கொள்கின்றாள்.)

விகடவசநன்:—சரி. சரி. இனித் தாமதிக்கவேண்டாம். இதற்காகத்தானே சிதாநந்தரே! சிதாநந்தராவுமதுபெயர்?. நீரிவ்வளவுதூரம் கஷ்டப்பட்டது! கஷ்டப்பட்டதன்பயன் கைம்மேலே சித்தித்துவிட்டது!

(பாடுகின்றான்.)

* “மெய்புகு வன்ன கைகவர் முயக்கத்
தோருயிர் மாக்களும் புலம்புவர் மாதோ.” (229)

கலாவதி:—(சிதாநந்தனைத் தழுவிய கரங்களை வாங்கிக்கொண்டு பாடுகின்றாள்.)

---

பாட்டு. 228—இஃதொருவிகற்பக் கலிவெண்பா. இதன் கணுள்ள சொற்பொருட் செறிவுகளையும் அணிநயப் பொலிவினையு மோய்ந்துணர்க.

* அகநானூறு.

களமாயவ சயதுங்கனை நொடிவென்றிகொல் கழறு
யிளமாவரி யெனநின்றரு ளெனதாருயி ரிறையென்
னுளமாகிய வெளியம்பல நடமாடிடு மொருவா
வளமார்தரு மதுராபுரி வதிகின்றவெ னரசே! (230)

சிதாநந்தன்:—(பாடுகின்றான்.)

வென்றேனுன் றாதையினை வென்றேன் கணப்பொழுதின்
வென்றேன் சயதுங்க வீரனையா—னின்றே
னலம்புமலர்க் கோதா யரவிந்த மாதே
குலஞ்சிறந்த மங்கைகளி கூர். (231)

விகடவசநன்:—ஐயா! சத்தியப்பிரியரே! இங்கே கொஞ்சம் வரவேண்டும்.

(யாவருங்குலாந்தகனை நோக்குகின்றனர்.)

சத்தியப்பிரியன்:—ஏன்? இவர் யார்? நம்முடைய மந்திரி குமாரர் குலாந்தகரோ?—

(கைகொடுத்துத் தூக்குதலுங் குலாந்தகன் வருத்தத்துட னெழுந்து விகடவசநன்மீது சாய்ந்து நிற்கின்றான்.)

குலாந்தகன்:—விகடவசநரே! என்னை வீட்டிற்குக் கொண்டுபோய் விடவேண்டும்.

விகடவசநன்:—இப்போதுதான் வீட்டிற்குப் போக விருந்தனையே! மறுபடியும் வீடுவீடென்றே னிழவு கூட்டுகின்றாய்! போவோம் வா. மற்று நீவிரும்வம்மின் இனித் தாமதியாதீர். மகாராஜாவவர்கள் நம்மை யெதிர் பார்த்துக்கொண்டிருப்பார்!

[யாவரும் போகின்றனர்.

## மூன்றாங்களம்.

இடம்: காஞ்சியிற் சோழனரண்மனையி னந்தப்புரம்.
காலம்: மாலை.
பாத்திரம்: மனோமோகினி.

மனோமோகினி:—(தனக்குள்) இனிக்காலகரணங் காலற்கிரையிடும்! ஆதலிற் கணப்பொழுதுங் கழியலாகாது. ஆகா! யானென்ன வெல்லாமோ நினைத்து என்னவெல்லாமோ செய்து எப்படியோ இந்நிலைமைக்கு வந்துவிட்டேன்! என்னைச்சூழ நாற்புறத்தினுந் தீ வளைந்துகொண்டது! எனக்

பாட்டு 230—இதனை 'அதிகரிணி' விருத்தமென்பர் வடநூலார். உருவகவணி.

குப் பெரும்பற்றுக் கோடாயிருந்த சுகசரீரப்பிரபுவும் வாய்பிளந்தனர்!- ஐயோ! சுகசரீரரே! இனி யான் யாரைத் துணைக்கொள்வேன்? எவ்வித முய்வேன்? எவ்விடமோடுவேன்?—[மௌனம்] மதுரையான் வென்ற னன்! மன்னவன் தோற்றனன்! பாண்டியன் படையெடுத்து வந்தனன்! யானோ முள்ளின்மே லிருக்கின்றேன்! யானிவ்விட மிருக்கவிருக்க எனக் குக் கேடேதவிர நலமென்பதுண்டோ? இல்லை! இல்லை!! யான் இனித் தாமதிக்கமாட்டேன்! தாமதிக்கமாட்டேன்!! ஏடி! கலாவதி! உன்னைப் படுத்திய பாடெல்லா மல்லவோ என்னையிந்த நிர்ப்பாக்கிய நிலைக்குக் கொண்டுவந்துவிட்டன! ஓ! எப்பொழுதும் எவ்விடத்தும் நன்மையே வெல்லும்! தீமையே யழியும்! ஐயோ! யான் என்றைக்காவது இன்ப மடைந்த துண்டா? ஒருபோதுமில்லை! என்னைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கியவள் எனது தாயே! அந்தச் சண்டாளியே யென்கேட்டிற் கெல்லாங் காரணம்! அழகிய ஆடவர்களையெல்லாம் என்னிடம் வாரா வண்ணமோட்டினாள்! ஒருவரிடத்திலும் யான் நிலைபாயிருக்கக்கூடா தென்று என்னையாட்டி யலைக்கழித்தாள்!—அந்தோ! யான் பட்டதுன்ப மொன்றோ? பலவே!—ஓ! கலாவதி! நீயே பாக்கியவதி! நீயே வென்றனை! யானே தோற்றேன்!—இரவிமுன் னிருள்நிற்குமோ? தீயைச் சருகவிக் குமோ? வயிரக்கல்லைச் செல்லரிக்குமோ? குற்றங் குணத்தை வெல் லுமோ? ஆதலிற் பெண்கள் நாயகமே! பொங்கார மாலையே! சிங்கார திலகமே! அங்காவி மலரே! செங்காதன் மணியே! கற்புக்கனியே! கலா வதி! நீயுன் றலைவனோ டின்பமாய் வாழ்ந்திரு!—யான் வாழ்த்தித்தானோ நீ வாழவேண்டும்? ஈசனருள்பெற்ற வுனக்கு ஒருகுறையுமில்லை! நீ யினி மையாகவே வாழ்ந்திருப்பாய்!—யான் என்றலை யெழுத்தின்படி போகின் றேன்! கன்னடராசன் தம்பி ஆறுமாதமாய்க் கடிதம் வரைந்துகொண் டிருக்கின்றனன்! இனியவன்பாற் செல்லுகின்றேன்! — பெண்ணே! மரகதம்!—

மரகதம் வருகின்றாள்.

மரகதம்:—அம்மா! யான் சிலதியரு ளொருவருக்குந் தெரியாமல் யாவற்றை யுஞ் சேவக கோபாலன்வச மனுப்பிவிட்டேன்! அவன் புறப்பட்டுச் சென்று ஒருநாழிகைக்கு மேலாயிற்று. இனி நாந்தாம் புறப்படவேண் டியவர்கள்!—மற்றைப்படி தங்களுக்கு நிருபமொன்றுளதம்......(காதோடு சொல்லுகின்றாள்)..,கொடுத்துவிட்டுப் போனான்.

(மனோமோகினி திருபத்தைப் பிரித்துப் பார்க்கின்றாள்.)

மனோமோகினி:—சரி. சரி. புறப்படு. இனிமேல் மயிர்முனைப் பொழுது மிவ் விட மிருக்கப்படாது. கன்னடன் றம்பி மங்களநாதன் இவ்வூர்க்குப் பதினேழாவது நாழிகை வழித்தூரத்திற் சைனர் சாவடியில்வந்து நம்மை யழைத்துக்கொண்டு போவதற்காகக் காத்துக்கொண் டிருக்கின் றனனாம்! யான் முன்னரே யவனை மோசஞ்செய்து விட்டேனாம்! இப் பொழுது யான் அவனிடஞ் செல்லாவிடி னுயிர்துறப்பானாம்!—இதோ நீபார்!—

(திருபத்தை மரகதத்தின் கையிற்கொடுக்கின்றாள்.)

எல்லாம் வரும்போது வரும்! நாமிப்போ திதனை யெதிர்பார்த்தோமோ?

மரகதம்:—(திருபத்தைப் பார்த்து) அம்மா! மிகவு மன்போடு வரைந்திருக் கின்றனர்! ஆகையால், தாங்க ளிப்போதிங்கே மகாராசா வவர்களிடம் நடந்ததுபோல அங்கே யவர்களிடமும் நடக்கப்படாது!

மனோமோகினி:—அதைக்குறித்திப்போ தென்ன பேச்சு? நாம் போகலாம் வா. தாமதியாதே!

[இருவருஞ் செல்லுகின்றனர்.

ஆறும் அங்கம் முற்றிற்று.

# அங்கம்—எ.

## முதற்களம்.

| | |
|---|---|
| இடம்: | காஞ்சியிற் சோழனரண்மனையிற் சங்கீத விலாசம். |
| காலம்: | இருண்மாலை. |
| பாத்திரங்கள்: | சயதுங்கன், மேதாநிதி, ஆத்தானிகர்கள், கனவான்கள், மற்றையோர். |

(சயதுங்கன் தனதிருபுறத்திலும் பணிப்பெண்கள் சாமரம் வீசச் சிங்காதநத்திருக்கின்றான்.)

சயதுங்கன்:—சொல்லியவண்ணமே செய்தற்குத் தடையென்னை? ஏன்? மேதா நிதியாரே!

மேதாநிதி:—யாவற்றினுக்கும் அப்பாண்டிய வீரராயினரும் வரட்டும், வந்த பின்னர் விசாரித்துச் செய்வோம்.—

சோமதத்தன் வருகின்றான்.

சயதுங்கன்:—என்னேடா? சோமதத்தா! என்ன விசேடம்?

சோமதத்தன்:—மகாராசா! மனோமோகினி யம்மையை யெங்கேயோ காணேம்! அரண்மனைக்கு வந்து சாமான்களை யெல்லாம்வாரிக்கொண்டு எங்கேயோ மாகதனும் அந்த அம்மாவுஞ் சேர்ந்துகொண்டு ஓடிப்போய்விட்டார்களாம். இது சமாசாரம் அரண்மனை அந்தப்புரத்திலே மங்கள விலாச மாதர்கள் சொன்னார்கள்.

சயதுங்கன்:—அப்பா! சனி ஒழிந்தது! சங்கடம் நீங்கிற்று!—(தனக்குள்) 'பொய் சொன்ன வாய்க்குப் போசனமில்லை' என்றபடியாயிற்று! (வெளியாய்) சரி. நீபோ சோமதத்தா!

[சோமதத்தன் போகின்றான்.

முதலாத்தானிகன்:—மற்றைப்படி படையெடுத்து வந்திருக்கின்ற பாண்டிய ராசனுக் கென்ன செய்யலாம்?

சயதுங்கன்:—நம்மை வென்ற மதுரையம்பதிமாவீரனைத் தானைத் தலைவனாக்கிப் பாண்டியனோடு போர்புரியுமா றனுப்புவோம்.

விகடவசகனுஞ் சிதாநந்தனுஞ் சத்தியப்பிரியனும் வருகின்றார்கள்.

வம்மின்! வம்மின்!! இப்படி இருமின்!

பாணன், பாடினி, மதங்கி, கட்டியக்காரன் சங்கூதுவோன் முதலியோர் வருகின்றார்கள்.

விகடவசகன்:—மகாராஜா வவர்களுக்கு நல்லமருகனகப்பட்டான்!

(பாடினியை நோக்கிப் பாடுகின்றான்.)

மருகன்வந் தானென்று வாழ்த்துவாய் மாதே
மாறன்வந் தானென்று வாழ்த்துவாய் மாதே!! (232)

(இருவருங் குதிக்கின்றனர்.)

(பாணனை நோக்கிப் பாடுகின்றான்.)

பாண்டிய வீரனைப் பாடுவாய் பாணா!
பைந்தமிழ் நாடனைப் பாடுவாய் பாணா!! (233)

(இருவருங் குதிக்கின்றனர்.)

(மதங்கியை நோக்கிப் பாடுகின்றான்.)

அறிஞன் வந்தானென் றாடும தங்கி!
ஆனந்தன் வந்தானென் றாடும தங்கி!! (234)

(இருவருங் குதிக்கின்றனர்.)

(சங்கூதுவோனை நோக்கிப் பாடுகின்றான்.)

உத்தமன் வந்தானென் றாதூது சங்கே!
உண்மையு ரைத்தோமென் றாதூது சங்கே!! (235)

(இருவருங் குதிக்கின்றனர்.)

(கட்டியக்காரனை நோக்கிப் பாடுகின்றான்.)

கைதவன் வருகின்றான் கட்டியக் காரா!
காஞ்சி முழுவதுங் கட்டியங் கூறாய்! (236)

(இருவருங் குதிக்கின்றனர்.)

சயதுங்கன்:—இவை யெல்லா மென்ன? விதூடகரே! வேடிக்கையாயிருக்கின்றனவே! கட்குடித்தவர்போலக் குதிக்கின்றீர்! நன்று! நன்று!! பாண்டியன் படையெடுத்து வந்துவிட்டதனாலே யாம் பயந்துகொண்டு அவன் மகனுக்கு எமது மகள் கலாவதியை மணம் புரிவிப்பேமென்று எண்ணினீரோ?

(பாணன் முதலாயினர் ஒதுங்கி நிற்கின்றனர்.)

விகடவசநன்:—அஃதொன்று மில்லை! மகாராஜா!

(சிதாநந்தனுஞ் சத்தியப்பிரியனும் ஒருபுறம் பேசிக்கொள்கின்றனர்.)

சோமதத்தன் வருகின்றான்.

சோமதத்தன்:—மகாராசா! மந்திரியவர்களைக் கூட்டிப்போகும்படி அவர்கள் வீட்டிலிருந்து ஆள் வந்திருக்கின்றான்.

மேதாநிதி:—சரிதான்! நீ சென்று அவனைச்சற்றே அப்படி இருக்கச்சொல்.

சயதுங்கன்:—சரி. [சோமதத்தன் போகின்றான்.

(சிதாநந்தனை நோக்கி) ஓ பாண்டிய வீரரே! உம்முடைய வீரத்திற்கும் சத்திக்கும் மிகவு முவந்தேம்! எல்லா நாட்டரசர்களையும் மல்ல யுத்தத்தில் இதுகாறுந் தொலைத்து வெற்றிக்கொடி நாட்டினேம்! அத்தகைய வெமதாற்றல் நும்மிடத்தேறுது போயிற்று! மற்று நீவிரெம்மீது வெற்றி கொண்டமையினால் யாம் முன்னரே நுமக்கு வாக்களித்த வண்ணம் நீவிரின்று முதல் எமது தானைத்தலைவராகுமாறு நும்மைக் கேட்டுக் கொள்ளுகின்றனம்.

மேதாநிதி:—ஏன்? நம்முடைய மகாராசாவவர்கள் கூறுமாறு நீவிர் சேனாதிபதிப்பட்டம் பெற்றுக்கொள்ளலாமென்று தோன்றுகின்றது.

விகடவசநன்:—(தனக்குள்) ஒரு பெரிய இராஜகுமாரன் வந்து இவர்களிடத்திற் சேனாதிபதியாயிருக்கமாட்டானோ? இருப்பான்! இருப்பான்!! இவர்கள் யோசனை வெகுநன்றா யிருக்கின்றது! மல்லயுத்த மகாவீரனையும் வென்ற மன்னனுக்கு இதுதானோ ஒரு பெரிய பரிசில்!

சிதாநந்தன்:—ஆ! அங்ஙனமே! மகாராசாவவர்கள் தந்தருளும் ஆணையின் வண்ணமே நடக்கக் காத்திருக்கின்றேம்!

விகடவசநன்:—ஏ! சிதாநந்தரே! உம்முடைய பெருந்தன்மையே பெருந் தன்மை! உம்முடையடக்கமே யடக்கம்!

"அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
யாரிரு ளுய்த்து விடும்." (237)

என்ற வள்ளுவர் வாக்கியம் உம்மை நோக்கியே யெழுந்தது போலும்!

சயதுங்கன்:—அப்படியாயின் நீவிரமது தானை முழுவதிற்குந் தலைமை பூண்டு இப்போது நந்நாட்டின்மீது படையெடுத்துப் போந்துள பாண்டியனோடு போர்புரியுமாறு நானைக்காலைத் தானைகளைச் சந்நாகப்படுத்திக் கொண்டு செல்லவேண்டும்! இதைக் குறித்து மற்றைய தளகர்த்தர்களுக்கும் படைஞர்களுக்கும் படைப்பாணர் முதலாயினோர்க்கும் உத்தரவு அனுப்பிவிடுகின்றேம்!

சத்தியப்பிரியன்:—பாண்டியராசர் சுகேசராபடையெடுத்து வந்திருக்கின்றனர்?—அப்படிப் படையெடுத்து வருதற்கு ஒரு காரணத்தையுங் காண்கிலேனே! அங்ஙனமிருப்ப அவர் படையெடுத்து வருவானேன்?

மேதாநிதி:—மற்றைப்படி யெனக்குக் கொஞ்சம் உத்தரவு கொடுக்கவேண்டும்! அப்பொழுதே சோமதத்தன் வந்து சொல்லிவிட்டுப்போனான்! என்ன விசேஷமோ? தெரியவில்லை!

விகடவசநன்:—(தனக்குள்) தங்கள் குமாரன் குலாந்தகனை அரம்பைமாதர் அழைத்துக்கொண்டு போகப்பார்த்தார்கள்! யானிருந்து தடுத்து உதவி செய்தேன்! அதுதான் விசேஷம்! வேறென்னை?

சயதுங்கன்:—ஆனாற்சரி. நீர்போய்வாரும்.

[மேதாநிதியர் போகின்றார்

(சத்தியப்பிரியனை நோக்கி) ஐயா! உமது வினாவிற்கு இதுகாறும் விடை பகாதிருந்தமை பற்றிப் பொறுத்தருளவேண்டும்! யாது காரணமோ? இன்னுந் தெரியவில்லை!—யாம் யுத்தரங்கத்தை விட்டுவந்ததும் இந்தச் சமாசாரம் கேள்விப்பட்டேம்! உடனேயொரு தூதுவனை யனுப்பியிருக்கின்றேம். சகலமும் அவன் வந்த உடனே தெரியும்.

சிதாநந்தன்:—(சயதுங்கனை நோக்கி) மற்றுநாம் பாண்டியராசர் சுகேசரோடு போர்புரியவே வேண்டுமோ? அல்லாக்கால் நாம் சாமோபாயத்தின் வண்ணமேதாவது செய்யலாமோ?

சயதுங்கன்:—அஃதும்முடைய இஷ்டம்! நமக்குத்தெரியாது!

சத்தியப்பிரியன்:—அப்படியாயிற் சிதாநந்தா! நீ சென்று சமாதானம் பேசு. தாமதஞ் செய்யாமற் செல்!

சிதாநந்தன்:—மகாராசாவவர்கள் அடியேனுக்கு உத்தரவு தரக்கூடுமோ?

சயதுங்கன்:—சரி! விரைவினில் வருதிர்!

**சிதாநந்தன்:**—அன்னைமே! (சத்தியப்பிரியனை நோக்கி) அப்பா! சத்தியப்பிரியா! யான்சென்று வருகின்றேன்!

**சத்தியப்பிரியன்:**—சரி. சரி.

[சிதாநந்தன் போகின்றான்.

**விகடவசநன்:**—மகாராஜா வவர்கள் சமுகத்திலே அடியேன் விகடவசநன் நமஸ்காரம்!

(விகடவசநன் தரையில் விழுதலும் யாவரும் நகைக்கின்றனர்.)

**சயதுங்கன்:**—என்ன? விகடவசநரே! என்னசமாசாரம்?

**விகடவசநன்:**—ஒன்றுமில்லை! ஒரு விண்ணப்பம்!

**சயதுங்கன்:**—என்ன? சொல்லும்! கேட்போம்.

**விகடவசநன்:**—யுத்தரங்கத்திலிருந்து வசந்தச்சோலைவழியாய் வந்தேன். மகாராஜா! அங்கே யொரு பெண்கிளிக்காக மூன்று ஆண்கிளிகள் ஒன்றோடொன்று சண்டையிட்டுக்கொண்டன! அதில் யோராண்கிளி யிறந்தது! இன்னொன்று குத்துண்டு கீழே விழுந்தது! மூன்றாவது பிறக்க முயன்றது!

**சயதுங்கன்:**—(சிறிதுகோபத்துடன்) இஃதென்னே? விகடவசநரே! வீண்சமாசாரமெல்லாம் சொல்லுகின்றீரே! ஏதோவிண்ணப்ப மென்றீரே! என்ன அதைச் சொல்லுமேன்!

**விகடவசநன்:**—அதைத்தான் சொல்லிக்கொண்டே வந்தேன்! நடுவிலே தடுத்து விட்டீர்கள்! இனிமேல் நான் சொல்லுவேனே?

**சயதுங்கன்:**—சொல்லவேண்டாம். நீரே வைத்துக்கொள்ளும்! மற்றைப்படி நம்முடைய சுகசரீரரெங்கே? காணோம்! (நாலுபக்கமுஞ்சுற்றிப்பார்த்து) இன்று மாலை யுத்தரங்கத்திற்கு வருகின்றேனென்று சொன்னார்! அங்கும் வரவில்லை! இப்பொழு திங்கும் வரவில்லை!—ஒருவேளை மனோமோகினியோடு கூட ஓடிப்போய் விட்டனரா என்ன? ஒன்றுந்தெரியவில்லையே யவரைப்பற்றி!

**விகடவசநன்:**—மகாராஜா! அவர் அப்பொழுதே போய்விட்டனரே!

**சயதுங்கன்:**—எங்கே?

**விகடவசநன்:**—சூரியபகவானுடைய குமாரரிலொருவ ரிருக்கின்றாரே! மகாநுபாவர்! மகாத்மராஜர்! அவருடைய நகரத்திற்கெழுந்தருளியிருக்கின்றார்!

**சயதுங்கன்:**—எங்கே? எங்கே?

**விகடவசநன்:**—எங்கே! யமலோகத்திற்குத்தான்? பின்னை வேறெங்கே?

**சயதுங்கன்:**—(ஆச்சரியத்துடன்) என்ன? நிசந்தானா?

**சத்தியப்பிரியன்:**—ஆமாம். மகாராஜா! நிஜந்தான்!

---

வரி 12-15—புனைவிலி புகழ்ச்சியணி.

விகடவசநன்:—ஏன்? அவ்வளவுதானா? இன்னுங் கேளுங்கள். சொல்லுகின்றேன். அவர் நம்முடைய மந்திரி மேதாநிதியார் குமாரர் குலாந்தகனை முன்னரனுப்பிவிட முயன்றும் முடியவில்லை. பிறகு தாமே தனியாய்ப் புறப்பட்டுப் போனார்.

சயதுங்கன்:—இஃதென்னை? விந்தையாயிருக்கின்றதே! ஓகோ! அதுதானே நம்முடைய மந்திரி மேதாநிதியார் அவசரமாய்க் கிருகத்திற்குப் போனதன் காரணம்?

விகடவசநன்:—பின்னை வேறென்னை மகாராஜா!

சயதுங்கன்:—நம்முடைய சுகசரீரரா குலாந்தகனைக் கொல்ல முயன்றனர்? ஆச்சரியம்! ஆச்சரியம்!!

விகடவசநன்:—ஆமாம்! தங்களுடைய சுகசரீரர்தாம்! இவை எல்லாவற்றிற்கும் மூலகாரணம் தங்களருமைப் புதல்வி கலாவதியம்மையே!

சயதுங்கன்:—இஃதென்னை? நீவிர் கூறுவது விநோதமாயிருக்கின்றதே!

விகடவசநன்:—எல்லாம் விநோதமாய்த்தானிருக்கும், அது நிற்க. தங்கள் மகள் ஏன் அவ்வளவு அழகுள்ளவளாயிருக்கின்றாள்?

சயதுங்கன்:—அதனாலென்னை?

விகடவசநன்:—ஒன்றுமில்லை!—ஒருவரிறந்தனர்! மற்றொருவர் குத்துண்டனர்! மூன்றாமவர் தற்கொலைபுரிய முயன்றனர்!—அவ்வளவுதான்! மகாராஜா!

சயதுங்கன்:—அஃதெப்படி யிருக்கக்கூடும்?

விகடவசநன்:—எப்படி யிருக்கக்கூடுமா? யான் சொல்லுகின்றேன். சிறிது கேட்டருளுங்கள். 'அழகு ஆசையை விளைக்கும்; ஆசை முயலுமாறேவும்; முயற்சியில் இடையூறு பலவெதிர்ப்படும்; இடையூறகற்றுழி யிறுதிபு மெய்தும்' என்னும் சுபாவ நியமத்தின்படியே யாவும் நிகழ்ந்தன.

சயதுங்கன்:—அந்தச் சுபாவநியம மிருக்கட்டும்; நீவிர் சுகசரீர ரிறந்தனரென் றுரைத்தீரே! அஃதெப்படி? அதைச் சொல்லுமென்றால் என்னவெல்லாமோ பேசுகின்றீரே!

விகடவசநன்:—ஓ! தங்கள் ஆணையின்வண்ணமே சொல்லுகின்றேன்:—நம்முடைய சேனாதிபதி சிதாநந்தர்மீது நமது கலாவதி அன்புகொண்டிருக்கின்றன ளென்பதையுணர்ந்த குலாந்தகன், தான் அம்மாதரசியை மணந்துகொள்ள வெண்ணிச் சிதாநந்தர்தம் முடைகளைத் திருடியெடுத்து அவர்போல வேஷம்பூண்டு நமது கலாவதிக்காரிகையைச் சந்திக்குமாறு வசந்தச் சோலைக்கட் சென்றனன்!—

சயதுங்கன்:—அதற்கென்?

---

வரி 22-24.—மென்மேலுயர்ச்சியணி.

விகடவசநன்:—அப்பொழுது நம்முடைய சுகசரீரர் தாமும் நமது பெண்மணி கலாவதியைக் கைப்பிடித்துக்கொள்ள நினைத்து நம்முடைய மகாராக்கிநி மநோமோகிநியம்மை மூலமாய் முயன்று பார்த்தும் முடியாமையாற் கலாவதி நங்கை காதல்கொண்டிருக்கும் அவ்வீரனைத் தொலைத்தால், தமக்குந் தங்களுக்கும் மிகவும் நலம் விளைக்குமென்று கருதிப் போர்க் கோலம்பூண்டு நமது சிதாநந்தரை வசந்தச்சோலை மார்க்கமாக யுத்தரங் கத்திற்குச் செல்வழிக்குத்திவிடுவோ மென்று நினைத்து அங்கே யொளி த்துக்கொண்டிருந்தனர்! அச்சமயத்தில் நமது மந்திரியார்குமாரன் செல் லலும் அவனைச் சிதாநந்தர் தாமென்று மயங்கிக்குத்தி விட்டனர்!

சயதுங்கன்:—ஏடா! பாவி! கொலைக்காரச் சுகசரீரா!—

விகடவசநன்:—உடனே நங்ஙஞ் சிதாநந்தருஞ் சத்தியப்பிரியரும் வசந்தச் சோலைவழியாய்ப் போகும்போது அவ்விடத்தினில் யாரோ ஒருவர் வஞ்சகமாக மகாருஷிபோல வேஷம் பூண்டுவந்து அமிர்த குளிகையெ ன்று மயக்குறுமருந்தைக் கொடுத்தனராம்! அதனைப் பெற்றுக்கொண்டு இவ்விருவரும் விரைந்து செல்வுழி அழுகைச் சத்தங் காதிற்பட்டதாம்! படலும் இஃதென்னெனத் திரும்பிப் பார்க்கும்போது நமது சுகசரீரர் சிதாநந்தரை நோக்கிக் குத்துதற்கு ஓடிவந்து தாமே குத்துண் டுயிரிழந் தனர்! அச்சச்சரவினில் மகாருஷிகொடுத்த மருந்து கீழேவிழுந்து விட்டது!—

சயதுங்கன்:—அதன்பின்?—

விகடவசநன்:—இவர்களிருவரும் யுத்தரங்கத்திற்கு வந்துவிட்டார்கள். அப் புறம் யுத்தம் நடந்தபின் திரும்பிவரும்போது சிதாநந்தரோடு பேசிக் கொண்டு வரலாமென்று திரும்பிப்பார்த்தா லவரைக்காண வியலவில்லை. உடனே யானும் சத்தியப்பிரியரும் விரைவாக வசந்தச்சோலைக்கு வந் தோம். அப்பொழுது நமது சிதாநந்தர் தமதுடைவாளை யோச்சித் தம் மையே வெட்டிக்கோடற் றுணமாயிருப்பதுகண்டு அவர்தங் கரங்களைப் பிடித்துக்கொண்டு தடுத்தேன்!—

சயதுங்கன்:—அவரேன் தம்மைவெட்டிக் கோடல்வேண்டும்?

விகடவசநன்:—எல்லாம் அந்தக் காதலாலேதான்!—ஏ! காதலே! நினக்குக் கோறலென்னும் பொருள்பட நல்லபெயர் லபித்தது!—மற்றுநீங்கள் கேளுங்கள்!— (பாடுகின்றான்.)

காதலி தொழில்க ளெல்லாங் காதலன் றனவன் றோர்க
ளாதர மிருந்து பொங்க வன்பெனுந் தளையிற் பட்டிப்
பூதலத் திரவுநாளும் பொருந்திய முடிவு மொன்றி
வேதனை சிறிது மின்றி மேன்மையின் மிளிர்வ ரன்றே! (238)

என்றபடி இவருந் தங்கள்கலாவதியும் உள்ளவாறே மெய்யன்பி னியல் புணர்ந்த மேன்மையாளராகவே, (பாடுகின்றான்.)

வஞ்ச மென்பதன் பெயரையு மறிகிலர் மனத்திற்
கொஞ்ச மாயினுந் துயரமென் பதறிகிலர் கோதில்
விஞ்சை தேர்ந்திடு காதல ரிருவரும் விரவிக்
கொஞ்சு வார்நலங் கொள்ளுவா ருவந்துளங் குளிர்வார்! (239)

இன்னும், (பாடுகின்றான்)

இருவர் கொள்கையு மெண்ணமு மிசையினில் விழைவு
மிருவர் நாடிய வின்பமும் விருப்பமு மிணைந்த
விருவர் நேசமு மேக்கமு மியைதலா லுடலின்
மருவி வாழ்தரு முயிரென நாடொறும் வளர்வார்! (240)

ஆதலின், தங்கள் அருந்தவக்குமாரி கலாவதிப் பைந்தொடியின் பொருட்டுத் தாமு முயிர்துறக்கத் துணிந்தனர்!

சயதுங்கன்:—அவள்பொருட் டிவர் தம்முயிர்துறக்கத் துணிவானேன்? எமதருமைக் கலாவதிக் கேதேனு மேதம் நிகழ்ந்ததோ?

விகடவசநன்:—அவ்வா றொன்றுமில்லை. மற்றப்படி தங்கள் குமாரி கலாவதி நம்முடைய சிதாநந்தர் ஆஞ்ஞாபித்தவண்ணம் வசந்தச் சோலைக்கு வந்து அவ்விடத்திற் சிதாநந்தர் உடைகளைத் தரித்துக்கொண்டு குத்துண்டு வீழ்ந்து கிடந்த குலாந்தகனைக்கண்டு தன்னுடைய பிராணநாதர் சிதாநந்தரேயென்று நினைத்து மனமுடைந்து இம்மாய வாழ்க்கையினை வெறுத்து உயிர்துறக்கக் கருதிப் பக்கத்திற் கிடந்த மகாருஷிகொடுத்த மருந்தினை யுட்கொண்டு மயங்கி வீழ்ந்தனள்!

சயதுங்கன்:—ஏடி! பாவி! மனோமோகினி! உன் காமவலையி னகப்பட்டு என்னவெல்லாஞ் செய்தேன்! என்னவெல்லாஞ் செய்தேன்!! என் வயிற்றிற் பிறந்த வென்னருமைத் திருமகளுக்குங் கேடிழைத்தேனே!—

(பாடுகின்றான்.)

மாயமார் வஞ்சகீ வன்மனோ மோகினீ
பேயனே னுன்மயற் பித்தனே வீட்டினுற்
றுயிலாப் பெண்ணெனுச் சற்றுமே யோர்ந்திலேன்
தீயனே னையகோ! தீயனே னையகோ! (241)

---

பாட்டு. 239—'என்பதறிகிலர்': என்பது என்றபாலது என்பதறிகிலர் என விரித்தல் விகாரம் பெற்றது சந்தவின்பம் பற்றி. இப்பிரயோகம் தணிகைப் புராணத்தி லரங்காங்குக் காணப்படும்.

பாட்டு. 241—இதனை 'சிரக்குவிணி' யென்பர் வடநூலார்,

ஐயோ! காமமே! உன்னுடைய வல்லமை மிகவும் பெரிது! பெரிது!!

(பாடுகின்றான்.)

*"பாம்பின் கொருதலை காட்டி யொருதலை
தேம்படு தெண்கயத்து மீன்காட்டு—மாங்கு
மலங்கன்ன செய்கை மகளிர்தோள் சேர்வார்
விலங்கன்ன வெள்ளறிவி னார்." (242)

என்றும்,

†"நாயும் போல்வர்பல் லெச்சிலு ணச்சலாற்
றீயும் போல்வர்செய் நன்றி சிதைத்தலா
னோயும் போல்வர் நுகர்தற் கருமையான்
வேயும் போல்வரிவ் வேனெடுங் கண்ணினார்." (243)

†"நுண்பொரு ளாளை நுகர்ந்திட்டு வான்பொரு
ளான்குறை யாளை நயந்தனர் கோடலின்
வம்பிளி மென்முலை வாணெடுங் கண்ணவர்
கொம்பிடை வாழுங் குரங்கும் புரைகுப." (244)

என்றும்,

‡"தூம மேது புகைக்கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கைய ரான்வருங்
காம மில்லை யெனிற்கடுங் கேடுறு
நாம மில்லை நரகமு மில்லையே." (245)

---

பாட்டு. 243—'வேயும் போல்வர்' எனக் காரணங்கூறாது வாளாவிடுத்தனர் மாணாக்கர் உய்த்துணர்தல் கருதி. வேயினிடத்துள்ள தேனினால் கொள்ள விரும்பிய வேடன் அதன்கட் செறிந்துள முட்களானுடலங்கீறுண்டு வருந்துமாறுபோல வேசையரிடத் தின்பந்துய்ப்பான் விழைந்தவிடன் அவனகத்துற்ற பல்வகை யிடையூறுகளானுந் துன்புறுவனென்பதாம். அதான்றியும் இங்கோட்டினுய்ப்பதற்கு வேய்கருவியாதல்போல இவ்வேசையருங் கருவியாதல் போல இவ்வேசையருங் கருவி யாவரென்பது மறிக. மேலும் வேயினிடத்துப் பிணக்கனே யுறுதலாற் "பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறையில், லேதில் பிணந்தழீஇ யற்று" என்ற திருக்குறள் ஞாபகத்து வருதல் காண்க. வெயிலேறவே யுருகுமாறுபோற் கையிற் பொருளேறப் பொருட் பெண்டிருந் தாழாது தலை நிமிர்வரென்பது மறிக. இனித்தாப்பிசையாக்கி 'நுகர்தற் கருமையான்' என்பதனை 'வேயும் போல்வர்' என்பதனோடுங் கூட்டியுரைப் பாருமுளர்.

* நாலடியார். † வளையாபதி.

,, 244—நயந்தனர் கோடல்: முற்றெச்சம். ‡ கம்பராமாயணம்.

,, 245—'தோன்றிய' என்பதனை 'மங்கைய'ரோடு கூட்டிக் கொள்ளாது 'காமம்' என்பதனோடு கூட்டி முடித்துக் கொள்க. ஆகாயத்தில்

என்றும், பெரியார்கள் கூறியனவற்றை யெல்லா முணர்ந்திருந்தும் மதி மாழ்கினேனே!— அந்தோ! என்னுடைய பொன்னைய மந்திரி மேதாநிதியார் கூறியவற்றைச் சிறிதேனுங் கவனித்திலேனே!— [மௌனம்] ஐயா! விகடவசநரே! இப்பொழு தென்னருமைக் கலாவதி யெங்குளள்? எங்குளள்?—

(சயதுங்கன் சிங்காதநத்தின்மீது சாய்கின்றான்.)

விகடவசநன்:—(தனக்குள்) நம்முடைய மகாராஜாவுக்கு இப்பொழுதுதான் புத்திவந்தது! இனிமேற் சரியாய் நடப்பார்!—(வெளியாய்) மகாராஜா! கன்னிமாடத்தி லிருக்கின்றனள்!—ஏ! சோமதத்தா!—சோமதத்தா!—

சோமதத்தன் வருகின்றான்.

சோமதத்தன்:—எசமான்களே! சித்தம்!—

விகடவசநன்:—நீ அந்தப்புரஞ்சென்று கன்னிமாடத்திலுள்ள கலாவதித் தாயை யிங்கே மகாராஜாவவர்கள் வரச்சொன்னார்களென்று அவ்விடத்திலுள்ள சிலதியரிடத்திற் சொல்லிவிட்டுவா! சீக்கிரம்! தாமதஞ் செய்யாதே!—

(சோமதத்தன் போகின்றான்.)

சோமதத்தன்:—அப்படியே செய்கிறேன்! எசமான்களே!

சயதுங்கன்:—ஐயா! விகடவசநரே! நம்முடைய புத்திரி கலாவதியை அவள் தானே விரும்பிய சிதாநந்தருக்கே மனைவியாய்க் கொடுத்துவிடுவோம்! முன் நாம் நம்முடைய மேதாநிதியாரோடுகூட ஆலோசித்தவண்ணம் பாண்டியராசன் மகனுக்குக் கொடுக்கலே வேண்டாம்! ஏன்? விகடவசநரே! நாம் தீர்மானித்தது சரிதானே?—

விகடவசநன்:—ஆமாம் அப்பொழுது செய்த தீர்மானமுஞ் சரிதான்! இப்பொழுது செய்த தீர்மானமுஞ் சரிதான்! ஆயினும் நம்முடைய தானைத் தலைவர் சிதாநந்தருடைய குலங்கோத்திரம் முதலியவற்றை விசாரித்துத் தான் மணவினை முடிக்கவேண்டி யிருக்கின்றது!—ஆகையினாலே தாங்கள் நம்முடைய சத்தியப்பிரியரிடம் நமது சிதாநந்தரைப்பற்றி விசாரிக்கலாமென்று தோன்றுகின்றது!—

சயதுங்கன்:—ஆ! அந்தப்படியே விசாரிப்போம்!—

(சயதுங்கன் சத்தியப்பிரியனை நோக்குகின்றான்.)

சத்தியப்பிரியன்:—(எழுந்து) ஐயனே! ஜயதுங்க வள்ளலே! இப்பொழுது தங்களுடைய சேநாதிபதியா யிருப்பவரும் கலாவதியை யினி மணந்துகொள்

---

றோன்றிய தூமகேதுவே பூவுலகிற்குத் துன்பம் விளைக்குமாயின், இப்பூவுலகினிடத்தேயே யொரு தூமகேது தோன்றிற்றாயின் அஃததனினு மிக்க துன்பஞ் செய்தல் வேண்டுமென்பது தானே விளங்கும்.

*ளப் போகின்றவரும், எங்கள் தலைவர் சிதாகந்தரும் பாண்டியநாட்டிறை வன் சுகேசவழுதியின் அருமைத் திருமகனுரே!—*

சயதுங்கன்:—*அப்படியாயிற் பழம் நழுவிப் பாலில்விழுந்தாற்போ லாயிற்று!*

விகடவசநன்:—*அற்றன்று, கற்கண்டுக் குன்றிற் றேன்மாரி பொழிந்தாற்போ லாயிற்று!*

சத்தியப்பிரியன்—*ஏ! மன்னர் மன்னனே! (பாடுகின்றான்.)*

*"பொன்னுந் துகிரு முத்து மன்னிய
மாமலை பயந்த காமரு மணியு
மிடைபடச் சேய வாயினுந் தொடைபுணர்ந்
தருவிலை நன்கல னமைக்குங் காலை
யொருவழித் தோன்றியாங் கென்றுஞ் சான்றோர்
சான்றோர் பால ராப
சாலார் சாலார் பாலரா குபவே."* (246)

*என்பது முன்னோர்களா லேற்பட்ட வுண்மையுரை யன்றோ?*

*(கலாவதியும் வாசந்திகையும் வருகின்றார்கள்.)*

முதலாத்தானிகன்:—*ஆகா! என்ன அதிசயம்! என்ன அதிசயம்!! இதுவன்றே யீசுரசங்கற்ப மென்பது!*

சயதுங்கன்:—*(கலாவதியைத் தழுவி முத்தமிட்டு) அம்மா! கலாவதி! என்னரு மைத் திருமகளே! யான் வஞ்சகமே யொரு வடிவாய் வந்த மனோமோகினி மயக்கி னகப்பட்டு உன்னை யிதுகாறுங் கவனியாதிருந்தமைக்காக என் மீது நீ பொறை பாராட்டவேண்டும்! பொறை பாராட்டவேண்டும்!!*

*(பாடுகின்றான்.)*

காம வலைப்படு காளைய னேனென் கருத்து மயங்குதலான்
வாம குமாரி கலாவதி யேயிது காறு மதித்திலனேற்
கோமள வல்லி குணக்கரி யாயிழை கோது பொறுத்தருளித்
தேமலர் மாதெளி யேனறி யாதுசெய் தீமை சகித்தருளே! (247)

*அந்தோ! பாவியேன் சிறிதேனும் புத்திரி வாஞ்சை யென்பதில்லாம லிருந்தேனே! என் கண்ணே! கலாவதீ! உனக்குப் பெருந்தவ றிழைத் தேன்! பெருந்தவ றிழைத்தேன்!! என்ன செய்வேன்? (பாடுகின்றான்.)*

---

பாட்டு. 246—இடைபடச்சேய: நடுவில் வெள்ளிடை யுண்டாகத் தூரியவாய பொருள்கள். * புறநானூறு.

,, 247—இதனை 'அசவகதி' யென்பர் வடநூலார்.

பெண்ணேபொ றுப்பாய் பிணையேபொ றுப்பாய்
நண்ணேன நீதி நடையேது மாதே
கண்ணேநி னுள்ளங் கனியாயெ னில்யா
னுண்ணேன்மற் றொன்று முறங்கேனென் றென்றும். (248)

கலாவதி:—என்னருமைத் தந்தையாரே! தாங்களேன் வீணே மனவருத்தப் படல் வேண்டும்? (பாடுகின்றாள்.)

*"அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்
திங்களுந் தீங்குறுதல் காண்டுமாற்—பொங்கி
யறைப்பா யருவி யணிமலை நாட
வுறற்பால யார்க்கு முறும்." (249)

†"உறற்பால நீக்க லுறுவர்க்கு மாகா
பெறற்பா லனையவு மன்னவா மாரி
வறப்பிற் றருவாரு மில்லை யதனைச்
சிறப்பிற் றணிப்பாரு மில்." (250)

‡"ஆவது விதியெனி னனைத்து மாயிடும்
போவது விதியெனி னெவையும் போகுமாற்
றேவருக் காயினுந் தீர்க்கத் தக்கதோ
வேவரு மறியொணா வீசற் கல்லதே." (251)

‡"தீங்குவந் தடையு மாறு நன்மைதான் சேரு மாறுந்
தாங்கள்செய் வினையி னாலே தத்தமக் காய வல்லா
லாங்கவை பிறரால் வாரா வமுதநஞ் சிரண்டி னுக்கு
மோங்கிய சுவையின் பேத முதவினர் சிலரு முண்டோ?" (252)

சயதுங்கன்:—அறிவே யுருவா யமைந்த கலாவதீ! உன்னிஷ்டப்படியே யுனக்கு விவாகம் நடத்துகின்றேன்! நீ விரும்பிய அரசிளங் குமாரனையே மணப்பாய்!—

கலாவதி:—என்னைப் பெற்றுவளர்த்த தந்தையே! யான் இதைக் குறித்து என்ன சொல்லப் போகின்றேன்!—

(கண்ணீர் விடுகின்றாள்.)

சயதுங்கன்:—அம்மா! கலாவதி! அழாதே! அழாதே!! நீயழுவையே லாற்றேன்! ஆற்றேன்!!—

(சயதுங்கன் கலாவதியின் கண்ணீரைத் துடைக்கின்றான்.)

,, 248—இதனை 'இந்திரவச்சிரை' யென்பர் வடநூலார். * பழமொழி
,, 252—எடுத்துக் காட்டுவமையணி,
† நாலடியார். ‡ கந்தபுராணம்.

விகடவசநன்:—மற்றைப்படி சமூகத்தினுடைய சம்பந்தியார் சுகேசவழுதியாரையும் மருகர் சிதாநந்தரையும் எதிர்கொண்டு சென்று அழைத்துவருமாறு ஏற்பாடுகள் செய்ய வேண்டாமோ? நாமேன் தாமதஞ் செய்தல் வேண்டும்?

தூதுவன் வருகின்றான்.

தூதுவன்:—மகாராஜா வவர்களுக்கு அடியேன் வந்தனம்!

சயதுங்கன்:—என்ன சமாசாரம்? சீக்கிரம் சொல்லாய்.

தூதுவன்:—மகாராசா! பாண்டியராசர் மகனும் இன்னொருவருமாகத் தேசசஞ்சாரஞ்செய்ய வெண்ணிப் புறப்பட்டு நம்முடைய நாட்டிற்கு வந்தார்களாம்! அவ்விருவரையும் நாம் பிடித்துச் சிறையிலிட்டிருப்பது கேட்டபின்னரே பாண்டியன் படையெடுத்து வந்திருக்கின்றானாம்! தாங்கள் அவ்விருவரையும் நாளை மாலைப்பொழுதிற்குள் அந்தப் பாண்டியனிடமே யனுப்பாமற் போனாற் போர் நிகழுமாம்! இவ்வளவும் பாண்டியன் மந்திரி சந்மதி யென்பவர் கூறினார்!—பலமான சேனையோடு வந்துளர்! மகாராசா!

சயதுங்கன்:—சரிதான்! சரிதான்!! அப்புறம்பேசிக்கொள்ளலாம் இதைப்பற்றி. ஆச்சரியமாயிருக்கின்றது!

(தூதுவன் ஓராதனத்தமர்கின்றான்.)

முதலாத்தானிகன்:—இனி நாம் நமது விகடவசநர் சொல்லுகிறபடி செய்யத் தாமதிப்பானேன்?—

சயதுங்கன்:—ஆம். உண்மைதான். தாமதமின்றி அப்படியே செய்வோம்.—(எழுகின்றான்) எம்மீது பிரியம்பூண்ட ஆத்தானிகர்காள்! சதசியர்காள்! பிரபுக்காள்! கனவான்காள்! நீங்களெல்லாஞ் சிறிதேனுந் தாமதமின்றி மேதாநிதியார் வரக்கூடுமானால் அவரோடுகூடப் பாண்டியன் பாசறைககுச்சென்று அவர்களை நாளைக்காலை நமது அரண்மனைக்கு வாத்தியகோஷங்களுடனும் நாட்டியச் சிறப்புடனும் படையணிவகுப்புச் சிறப்புடனும் அழைத்துக்கொண்டு வம்மின்! யாம் இங்கே மணவினைக்கேற்ற முயற்சி செய்கிறோம். ஏடா! சோமதத்தா!—

சோமதத்தன்:—மகாராசா! சித்தம்!

சயதுங்கன்:—நீசென்று கோட்டைக்காவலர்க்கு நமது இந்தத் திருமுகத்தைக் காட்டி மணமுரசஞ் சாற்றும்படிசெய்!

சோமதத்தன்:—ஆ! அப்படியே!

[யாவரும் போகின்றனர்.

## இரண்டாங்களம்.

| | |
|---|---|
| இடம்: | காஞ்சிக்கடுத்த வெள்ளிடையிற் பாண்டியன் பாசறை. |
| காலம்: | காலை. |
| பாத்திரங்கள்: | சுகேசன், ஆனந்தவல்லி. |

சுகேசன்:—(பாடுகின்றான்.)

பாச மற்ற பண்பனே பார்த்தி ருந்த பானுவே
யாசகன்ற வையனே யாரு ஞான வேந்தனே
தேசு நின்ற தேவனே செய்ய யோக மூர்த்தியே
யீச நின்னை யான்மகிழ்ந் தேத்து கிற்ப தெங்ஙனோ ? (253)

[மௌனம்.]

நம்முடைய செல்வச்சிதாநந்தனெங்கே? இன்னும் படுக்கை விடுதியினின்றும் வெளியேவந்திலனோ?

ஆநந்தவல்லி:—இன்னும் வந்திலன்! ஏதோசிறிது அயர்ந்து தூங்குகின்றான். நேற்றிரவு வெகுநேரம்வரைக்கும் நம்மோடு தன்னுடைய செயல்களையெல்லாம்பற்றிப் பேசிக்கொண் டிருந்தமையினாலேதான்! மற்று நமது குழந்தை சிதாநந்தன் மல்லயுத்தத்தில் மகாவீரனென்று பேர்படைத்த சயதுங்கசோழனையும் வென்றதாகக் கேள்வியுற்றது முதல்எனக்கு அடங்காப் பெருமகிழ்ச்சி யுண்டாகின்றது!

சுகேசன்:—நமதுகுமாரன் சிதாநந்தன் ஆதியில் தேசசஞ்சாரமாகப் புறப்பட்டுப் போகும்போதே இவனுக்கு எத்தகைய வீரனையும் வெல்லக்கூடிய ஆற்றலுண்டென்பது தெரிந்தேம். ஆயினும் நமது புதல்வன் சிதாநந்தன் சயதுங்க சோழனைப்பற்றி யலட்சியமாயெண்ணாது சாக்கிரதையா யிருக்கவேண்டுமென்பது பற்றியே யாம் அவ்வாறு கூறினேம்! அதுவுமன்றி நமது சிதாநந்தன் எத்தனையோ பேரிடர்களின்றுந் தப்பியிருப்பதாகவும் தோன்றுகிறது! அவையெல்லாவற்றையும் பற்றித் தனது நண்பன் சத்தியப்பிரியனிடம் கேட்டுக் கொள்ளும்படி சொல்லிவிட்டனன்! சத்தியப்பிரியனோ இன்னும் வரக்காண்கிலேம்!

சேவகன் வருகின்றான்.

சேவகன்:—மகாராசா நம்முடைய சத்தியப்பிரியர் பாசறை வாசலில் வந்திருக்கின்றார்! இப்போது இவ்விடம் வருகிறதற்குத்தக்க வமயந்தானோவென்றுகேட்டு வரச்சொன்னார்!

சுகேசன்:—ஏடா! சேவகா! போயவரையுடனே வரச்சொல்!

[சேவகன் போகின்றான்.

253—இதனைச் 'சுகந்தி' யென்பர் வடநூலார்.

இதோ நம்முடைய சத்தியப்பிரியனும் வந்துவிட்டான்! அவனிடத்தில் எல்லாவற்றையுங்குறித்து விசாரித்துக் கொள்ளலாம்!

*சத்தியப்பிரியன் வருகின்றான்.*

சத்தியப்பிரியன்:—மகாராஜாவவர்களுக்கு அடியேன் சத்தியப்பிரியன் வந்தனம்!

சுகேசன்:—அப்பா! சத்தியப்பிரியா! வா. வா.—இப்படியிரு.—

*சத்தியப்பிரியன் வீற்றிருக்கின்றான்.*

சத்தியப்பிரியன்:—தாங்கள் இப்பொழுது சோழனரண்மனைக்குப் புறப்படுவதற்குத்தக்க ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்! சோழராஜனது ஆஸ்தானிகர்களும் பிரபுக்களும் சனவான்களும் வாத்தியகோஷங்களுடன் நம்மையழைக்க வருவார்கள்! நம்முடைய சிதாநந்தருக்குஞ் சோழ ராஜன் மகள் கலாவதிக்கும் விவாகமகோற்சவம் நடத்தப்போகின்றனர்!—ஆகையினாலே அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொள்ளும்படியாகச் சொல்லுதற்காகவே சோழன் என்னை மீண்டனுப்பினான்!

ஆனந்தவல்லி:—இஃதென்னை! ஆச்சரியமாயிருக்கின்றதே! நம்முடைய சிதாநந்தன்தான் சோழனிடமிருந்து நம்மோடு சமாதானம் பேசுவதற்காக உத்தரவு பெற்றுக்கொண்டு வந்ததாகவும் அவனது தானைத்தலைவனையமர்ந்ததாகவும், அதன்பின் அவனதுமகள் கலாவதியின்மீது தான் காதல் கொண்டிருப்பதாகவும், அவளுந் தன்மேற் காதல்கொண்டிருப்பதாகவுங் கூறினனே!

சத்தியப்பிரியன்:—அம்மையே! சோழராஜர் ஜயதுங்கருக்கு நம்முடைய சிதாநந்தர் இன்னாரென்று நேற்று இரவுவரைக்குந் தெரியாதிருந்தமையினாலே அவர் நமது சிதாநந்தருக்குச் சேனாதிபதிபட்டங் கொடுப்பதாகக் கூறினார்! மற்றைப்படி நம்முடைய சிதாநந்தர் நமது மகாராஜாவவர்களது குமாரரென்று உணர்ந்துகொண்டதும் அவர் அடைந்த ஆனந்தத்திற்கோ அளவில்லை! (பாடுகின்றான்.)

திங்க ளுறுஞ்சடை நாதர் தேவி யருளினன் மாதர்
தங்க டிலகமாந் தையல் சந்திர காந்தமென் மைய
னங்கை கலாவதி யாளு நம்ம சிதாநந்த வேளு
மங்கள மாக வடைந்தார் மாமகிழ் வெய்தி யிருந்தார்! (254)

இவ்வாறு நம்முடைய சிதாநந்தரும் சோழராஜர் ஜயதுங்கரது புத்திரி கலாவதியுமாகிய விருவரும் ஒருவரையொருவர்கண்டு காதல்கொண்டமையினாலே அவ்வரசரது மனமுந் திரும்பிற்று! துஸ்ஸகவாசமுந் தொலைந்தது!—அவர்பக்க லிருந்துகொண்டு அவருக்கே கேடிழைத்துக்

---

254—இதன்க ணடிதோறும் மூன்றாஞ் சீரும் ஆறாஞ் சீரும் எதுகை யொன்றிவரல் காண்க.

கொண்டிருந்தவர்களெல்லா மொழிந்தனர்!—சோழராஜரும் தாம்தவறி வீழ்ந்து தத்தளித்த காமக்கடலிலேயே யாழ்ந்துவிடாது உயிர் தப்புதற்குரிய அற்புதமரக்கலம் பெற்றுக் கரையேறி விட்டனர்! சோழராச்சியத்திற்கும் இனி நல்லகாலம் பிறந்தது! யாங்களும் ஒரு குறைவுமின்றி யிதுவரையிலுஞ் சௌக்கியமாயே யிருந்து வருகின்றோம்! இனிமேலும் அவ்வாறிருக்கும் படியாகத் தாங்களும் எங்களை யாசீர்வதித்தல் வேண்டும்!—யாங்கள் அநுபவிக்கும் பாக்கியங்க ளெல்லாம் தங்களுடைய அநுக்கிரகத்தாலேயன்றி வேறெதனாலுமல்ல!—

சுகேசன்:—அப்பா! சத்தியப்பிரியா! உனக்குத் தெரியாத தொன்று மில்லை!—எல்லாம் ஈசன் செயல்! இறைவன் திருவருள்!—அப்படியிருக்க என் செயலாவ தொன்று மில்லை!— (இறைவனைத் துதித்துப் பாடுகின்றான்.)

*"நற்பதத்தார் நற்பதமே ஞானமூர்த்தி
நலஞ்சுடரே நால்வேதத் தப்பா னின்ற
சொற்பதத்தார் சொற்பதமுங் கடந்து நின்ற
சொலற்கரிய சூழலா யிதுவுன் றன்மை
நிற்பதொத்து நிலையிலா நெஞ்சந் தன்னு
ணிலாவாத புலாலுடம்பே புகுந்து நின்ற
கற்பகமே யானுன்னை விடுவே னல்லேன்
கனகமா மணிநிறத்தெங் கடவு ளானே." (255)

சன்மதி வருகின்றார்.

சன்மதி:—மகாராஜாவவர்களுக்கு அடியேன் சன்மதிவந்தனம்!

சுகேசன்:—வம்மின் சன்மதியாரே! இப்படி வீற்றிருந்தருளுமின்!

சன்மதி:—ஆ! அப்படியே. அது நிற்க. சோழராஜனது ஆஸ்தானிகர்கள் முதலாகிய யாவரும் நம்மை மணவினைக்காக அழைக்க வருவதாகக் கேள்விப்படுகின்றேன்! அஃதுண்மைதானோ?

சத்தியப்பிரியன்:—ஆமாம். அஃதுண்மைதான்.—

சன்மதி:—அப்பா! சத்தியப்பிரியா! உன்னைப்பற்றிய விஷயங்களை யெல்லாம் நம்முடைய சிதாநந்தன் சொல்லக் கேள்வியுற்றேன்! மற்று நீ சௌக்கியந்தானே?

சத்தியப்பிரியன்:—தங்களுடைய ஆசிர்வாதத்தினா லடியேன் ஒரு குறையுமில்லேன்! எல்லா வின்பமுமுடையேன்! அது நிற்க. நாம் தாமதஞ்செய்வானேன்? அவர்கள் வருமுன் நாமே போய் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தல் கூடாது?—

ஆநந்தவல்லி:—நாம்தாம் ஏன் காலதாமதஞ் செய்தல் வேண்டும்?—(மந்திரியை நோக்கி) தாங்கள் யாவருக்கும் உத்தரவு கொடுத்தருளலாமே!—
(நேபத்தியத்துட் பல்வகைவாத்தியங்களும் மெதுவாய் முழங்குகின்றன.)

* தேவாரம்,

சுகேசன்:—ஆ! அங்ஙனமே செய்வோம்.— (சற்றுச் செவிசாய்த்து) ஏதோ வாத்தியகோஷம் மெதுவாய்க் கேட்பதனாலே வெகுதூரத்தி லவர்கள் வருகின்றார்கள்போலும்!—இனிமேற் சங்கதியாரே! நாம் காலநீட்டித்தல் நியாயமன்று.— (ஆநந்தவல்லியை நோக்கி) நீ யந்தப்புரத்திலிரு! இதோயான் வெகுசீக்கிரத்தினில்வந்து விட்டேன்!— (சத்தியப்பிரியனை நோக்கி) சத்தியப்பிரியா! நீ யென்னுடன் வருதி!—

[யாவரும் போகின்றார்கள்.

## மூன்றாங்களம்.

இடம்: காஞ்சியிற் சோழனரண்மனையிற் கல்யாண விலாசம்
காலம்: நாள் வெயிற்காலை.
பாத்திரங்கள்: சயதுங்கன், மேதாநிதி.

சயதுங்கன்:—நாம் இவ்வாறெல்லாம் முடியப் போகின்றன வென்று எண்ணினோம்? இவையெல்லாம் ஏகாம்பரேசர் தம் மின்னருட்செயல்களே யல்லவோ?— (பாடுகின்றான்.)

கல்லாலமர் காரணனை
நல்லானுமை நாறுடலா
யெல்லாமொளி யீசரனை
யெல்லாமின தேசருளே! (256)

ஆகலின்,

காமரு காட்சியனே காமனைக் காய்ந்தவனே
பூமரு பூட்சியனே புண்ணிய தேசிகனே
வாமகா மாட்சியனே மாண்புறு சற்குருவே
யாமுற வாட்சியனே யாங்ஙனு னைப்பணிவேம் ? (257)

மேதாநிதி:—மற்றைப்படி இம்மணவினைக்கு யான் செய்ய வேண்டியவற்றை யெல்லாஞ் செய்து விட்டேன். அரண்மனை வாயிலில் மணமுரசம் முழங்குகின்றது. நகர்முழுதும் அலங்காரஞ் செய்தாயிற்று. இனிமேல் அவர்கள் வரவேண்டியதுதான் தாமதம்.

சயதுங்கன்:—அப்படியானாற் சரி;—அதுநிற்க. உம்முடைய குமாரனுக்கு உடம்பு எப்படி இருக்கின்றது ?

மேதாநிதி:—வைத்தியர் அகோபலர்தாம் காயப்பட்ட இடங்களில் மருந்து வைத்துக் கட்டியிருக்கின்றார். சீக்கிரத்தினிற் சௌக்கியமாகுமென்று சொல்லுகின்றார். அவன் நம்முடைய சிதாநந்தருடைய போருடை

„ 257—முரண்போலியணி, இதன்கண் ஒவ்வோரடியினுமுள்ள இரண்டாஞ் சீர் எதுகை யொன்றுமா றறிக.

களை அப்பொழுது தரித்துக் கொண்டிருந்தமையினாலே காயம் அவ்வளவு நன்றாய்ப்படவில்லை யென்கின்றார். எல்லாவற்றிற்கும் தெய்வ கடாட்சம் வேண்டும் !

சயதுங்கன்:—மற்று, இன்னொரு சமாசாரந் தங்களிடஞ் சொல்லவில்லையே நாம் ! கன்னடன் றம்பி மங்களநாதன் நம்முடைய மனோமோகினியையும் மரகதத்தையுஞ் சைனர் சாவடியிற் சந்தித்து இட்டுக்கொண்டு போகும்போது நம்முடைய காவலாளர்கண்டு பிடித்ததும் அவனும் மரகதமும் ஓடிப் பாலியாற்றில் விழ்ந்திறந்தனர்களாம் ! மங்களநாதன் மட்டும் பிடிபட்டுச் சிறைச்சாலையின்கணடைக்கப்பட்டுளன் !

மேதாநிதி:—அப்படியா ? நல்லவேளை ! பிழைத்தோம் ! பிழைத்தோம் !!

சயதுங்கன்:—என்ன ? என்ன ?

மேதாநிதி:—எனது மைத்துனர் மகள் வாசந்திகையை யவனுக்குக் கொடுப்பதாக யோசனைகள் நடந்து கொண்டிருந்தன ! இனி யந்த யோசனையேது ?

சேவகன் வருகின்றான்.

சேவகன்:—மகாராசா ! பாண்டியராசரையும், நம்ம சிதாநந்தரையும், நம்முடைய கனவான்களும் சபையார்களும் கூட்டிக்கொண்டு வருகிறார்கள்! இந்நேரம் அவர்கள் யாவருங் கோட்டைக்குள் வந்திருப்பார்கள் !

சயதுங்கன்:—ஆனாற் சரிதான். நீ அந்தப்புரஞ்சென்று சிலதியரிடஞ் சொல்லி நம்முடைய குமாரி கலாவதியைச் சன்னத்தமாயிருக்கும்படி செய் !

சேவகன்:—சித்தம் மகாராசா !

[சேவகன் போகின்றான்.

சயதுங்கன்:—என் மந்திரியாரவர்களே ! நம்முடைய வழக்கப்படி சிறை காவலாளர்க்குத் திருமுகமனுப்பிச் சிறையிலுள்ளாரை விடுதலை செய்ய வேண்டாமோ ?

மேதாநிதி:—ஆமாம். அஃதுடனே செய்யவேண்டுவதுதான்.

சயதுங்கன்:—சோமதத்தா !

சோமதத்தன் வருகின்றான்.

சோமதத்தன்:—மகாராசா !

சயதுங்கன்:—அப்படியானால் மங்கள நாதனையும் விடுதலை செய்யவேண்டியது தானே ?

மேதாநிதி:—ஆமாம். தொலைந்துபோகிறான். விட்டுவிடுங்கள்.

சயதுங்கன்:—ஆனாற் சரி. ஏடா ! சோமதத்தா ! நீ சென்று நமது சிறை காவலாளரிடம் இத்திருமுகத்தைக் காட்டிச் சிறையிலுள்ளாரை யெல்லாம் விடுதலை செய்யும்படி சொல். போ. தாமதஞ் செய்யாதே !

[சோமதத்தன் போகின்றான்.

என்ன மேதாநிதியாரே! ஈசுர சங்கற்பமென்பது ஓரரசனது செங்கோன்மை போலும்! (பாடுகின்றான்.)

தீயவரைக் காய்கிற்குஞ் செம்மையு நல்லோரை
நேயமொடு காக்கின்ற நேர்மையு—மாயுங்கால்
யாவையுந் தானாகி யாண்டு முளவிறைவன்.
கோவெனக் கோடல் குறிப்பு. (258)

(நேபத்தியத்தினுட் பல்வகை வாத்தியங்களும் முழங்கு கின்றன.)

மேதாநிதி:—ஓகோ! வாத்தியகோஷங் கேட்கின்றதே! அவர்கள் யாவரும் வந்துவிட்டார்கள் போலும்!

சேவகன் வருகின்றான்.

சேவகன்:—மகாராசா! அவர்களெல்லோரும் இதோ வந்து விட்டார்கள்.

சயதுங்கன்!—சரிதான். நீயப்படியிரு!

(சேவக னொதுங்கி நிற்கின்றான்.)

சுகேசன், சன்மதி, சிதாநந்தன், சத்தியப்பிரியன், விகடவசநன், ஆத்தானிகர்கள், பிரபுக்கள் முதலிய யாவரும் வருகின்றார்கள்.

(சயதுங்கனும் மேதாநிதியாரு மெழுகின்றார்கள்.)

வந்தனம்! வந்தனம்!! யாவர்க்கும் வந்தனம்!!!

(சயதுங்கன் கையமைப்ப யாவரும் வீற்றிருக்கின்றனர்.)

(சுகேசனை நோக்கி) ஐயா! சுகேசவழுதியாரே! நாமிருவரு மெப்பொழுதும் பகைபாராட்டாது நட்பாளராகவே யிருத்தல் வேண்டுமென்பது நம்பெருமான் விருப்பம் போலும்!

விகடவசநன்:—(தனக்குள்) இவ்வுண்மை யின்றுதான் நந்தம் மகாராஜாவவர்களுக்குப் பிரகாசமாயிற்றோ?

சுகேசன்:—(பாடுகின்றான்.)

நித்த நிகழ்கின்ற நீடுலகின் மாந்தர்செய
லத்தனையு மீச னருள். (259)

மேதாநிதி:—ஆ! அதற்கு மையமுண்டோ?—

சயதுங்கன்:—(சிதாநந்தனை நோக்கி) என்னருமைச் சிதாநந்தவீரனே! இவ்வயின்வருகி. (சிதாநந்தன் சமீபித்தலுமவனைத் தழுவி முத்தமிட்டு) எமதன்பார் மருகனே! உன்னை யாம் இன்னாரென் றறிகிலாமையாற் செய்த செயல்கட் கெல்லாம் மனம்வருந்துகின்றேம் ஆதலிற் பொறுத்துக் கோடல்வேண்டும்!—

" 258—இவ்வாறு கடவுளை யரசனென முன்னுரையின் கண்ணுஞ் சூத்திரதாரன் கூற்றினாற் குறித்திருத்தல் காண்க.

" 259—இதனுடன் "அவனின்றி யோரணுவு மசையாது" என்ற ஆப்தர் மொழியை யொப்பிடுக.

**சிதாநந்தன்:**—எந்தையார் சிறிது முன்னர்க்கூறியது போல வல்லா மிறைவனரு ளா யிருப்புழி, யாம் செய்யற் பாலனயாவுள? ஆதலி னெந்தம் பிரியமுள் ளமாமனுரே! சயதுங்கவள்ளலே! தாங்களிதைக்குறித்துக் கவற்சியுற லொழிமின்!

**சத்தியப்பிரியன்:**—நாமேன் தாமதித்தல் வேண்டும்?

**சயதுங்கன்:**—தாமதமொன்றுமில்லை! ஏ! சோமதத்தா!

சோமதத்தன் வருகின்றான்.

**சோமதத்தன்:**—மகாராசா!

**சயதுங்கன்:**—நம்முடைய செல்வப்புத்திரி கலாவதி யிங்கே கல்யாண விலாசத் திற்குச் சீக்கிரம் வருமாறு கன்னிமாடக் காவலாட்டியரிடஞ் சொல்லி விட்டுவா:—

[சோமதத்தன் போகின்றான்.

(சந்மதியை நோக்கி) என்ன? சந்மதியாரவர்களே? நாமும் நமது நண்பர் சுகேசவழுதியாரும் முகூர்த்தநிச்சயம் பண்ணி விவாகம் முடிக்கு முன் னரே யவர்களிருவரு மொருவரை யொருவர்கண்டு காதல்கூர்ந்தன ரென்பது எம்பெருமான் ஏகாம்பரேசனது திருவருட்பிரேரகமே யன்றோ?

**சந்மதி:**—ஆமாம். அஃதுண்மைதான். யாங்களுமெங்கள் சிதாநந்தர் தேச சஞ்சாரமாய்ப் புறப்படும்போது அவர்க்கு இந்தச் சோணாட்டிற்குச் சேறலொழிகவென்று கூறியிருந்தும் அவர் இங்கேயே வந்து இவ்வா றெல்லாம் நிகழ்ந்திருத்தலை யாலோசித்துப் பார்க்குமிடத்து இது ஜக தீசன் றிருவருளே யென்பதை யாட்சேபிப்பவன் யாவன் ?

**விகடவசநன்:**—அவன்றா னுலோகாயதன் ! உலோகாயதன் !!

(யாவரும் நகைக்கின்றார்கள்.)

பணிப்பெண்க ளிருபுறமுஞ் சூழ்ந்துவரக் கலாவதி வாசந்திகை மாணிக்கமாலைகளோடு பிரவேசிக்கின்றாள்.

**சயதுங்கன்:**—என்னருமைத்தாயே ! கண்ணே ! கலாவதீ ! இப்படிவா. (கலாவதி தந்தையா ரருகிற்சேறலுஞ் சயதுங்கன் பலரையுஞ்சுட்டி)

---

வரி 23—உலோகாயதன் : " காட்சியே யளவை யாவதென்றும், நிலநீர் தீவளியெனப் பூதம் நான்கே யென்றும், அவற்றது புணர்ச்சி விசேடத்தாற் றோன்றிப் பிரிவான் மாய்வதாய வுடம்பின் கண்ணே அறிவுமதுவின்கட் களிப்புப்போல வெளிப்பட் டழியு மென்றும், இறந்த வுயிர் பின்பிறவாதென்றும், இன்ப மும் பொருளு மொருவனாற் செய்யப்படுவவென்றுஞ்" சொல்லி வீட்டினை யிகழுறு மொருவித மயக்கநூலுடையான். இதனை "எள்ளாமை வேண்டுவான்" என்ற குறட் பரிமேலழக ருரையினுஞ் சிவஞானசித்தியார் பரபக்கத்தினுங் காண்க.

அம்மா ! கலாவதி ! சகலமும் உன்னிஷ்டப்படியே முடிந்தன !—அதோ அவ்விடத்திலிருப்பவர் உன்னுடைய மாமனாராகிய பாண்டி நாட்டரசர் சுகேசவழுதியார் !—அவர் சமீபத்தி லுட்கார்ந்து கொண்டிருப்பவர் தாம் பாண்டியராசருடைய பிரதான மந்திரி சந்மதி யென்பவர் !—

விகடவசநன்:—உதோ உவ்விடத்திலிருப்பவர் தாம் உம்பிராணநாதர் சிதாநந்தர்;—இதோ இவ்விடத்திலிருப்பவர் தாம் விப்பிரசிகாமணி விதூஷகதிலகர் விகடவசநர்!—

(யாவரும் நகைக்கின்றார்கள்.)

சயதுங்கன்:—மற்று, இதோ இங்கிருப்பவர்தா முனதுபிராணநாதர் சிதாநந்தர்தம் உயிர்நண்பர் சத்தியப்பிரியர்?—இனிமே லிவர்களெல்லோருந்தா முனக்கு வேண்டியவர்கள் !

விகடவசநன்:—ஏன் ? மகாராஜா ! இன்றைக்கு அமாவாசியை யன்றோ ?

மேதாநிதி:—இன்றைக்கேதையா அமாவாசை ? அதுவருகிறதற் கின்னு மேழெட்டுநாட் செல்லவேண்டுமே !

விகடவசநன்:—மகாராஜா ! தாங்களே கேளுங்கள் ! யான் இன்றைக்கு அமாவாசியை யென்கின்றேன் ! நம்முடைய மேதாநிதியா ரில்லையென் கின்றார் !— எல்லாவற்றிற்கும் யானின்றைக்குப் பிரத்தியட்சமான அமாவாசியை யென்றே நிரூபிக்கின்றேன் !— ஐயா ! மேதாநிதியாரே! சபையோர்களே ! சூரியனுஞ் சந்திரனுஞ் சேருந்தினம் அமாவாசியை யென்னப்படும். அவ்வாறே யின்று சூரியவம்சத் தரசராகிய நம்முடைய ஜயதுங்கராஜரும், சந்திரவம்சத் தரசராகிய நம்முடைய சுகேசவழுதி யாரு மிங்கே சேர்ந்திருக்கின்றார்களாகவே யின்று அமாவாசியைதான்!—

(யாவருங் கைகொட்டி யார்த்து நகைக்கின்றார்கள்.)

பிராமணரிருவர் வருகின்றனர்.

பிராமணர்:—ஜயஜய விஜயீபவ! மகாராஜ! விவாகசாலையிற் புரோகிதர் முதலிய யாவரும்வந்து காத்துக்கொண்டிருக்கின்றார்கள்! தங்களுடைய வரவைத் தான் எதிர்பார்த்துக்கொண் டிருக்கின்றார்கள்!

சயதுங்கன்:—அப்படியானல் வழுதியாரே! சந்மதியாரே! நாம் சிதாநந்தருக்கும் கலாவதிக்கும் இப்பொழுதே விவாகத்தை நிறைவேற்றி விடலாமே;—(சபையிலுள்ளாரை நோக்கி) எனது பிரியசபையோர்காள்! தாங்களெல் லோரும் விவாகசாலைக்குச்சென்று எம்மைக் களிப்படுத்தல் வேண்டும்!

சபையோர்கள்:—ஆ! அப்படியே!

[சயதுங்கன், சுகேசன், சிதாநந்தன், கலாவதியாகிய விவர்களொழிய மற்றவர் யாவரும் போகின்றனர்.]

(சிதாநந்தனுங் கலாவதியுஞ் சேர்ந்து நிற்கின்றனர்.)

சயதுங்கன்:—(பாடுகின்றான்.)

*"தேவர்கோ வறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோ னென்னையும்வந் தாண்டு கொண்டான்
யாமார்க்குங் குடியல்லோம் யாது மஞ்சோ
மேவினோ மவனடியா ரடியா ரோடு
மேன்மேலுங் குடைந்தாடி யாடு வோமே." (260)

[சயதுங்கன் போகின்றான்.

சுகேசன்:—(பாடுகின்றான்.)

தழையுமியல் பிற்றெனும் பத்தியுறு மனனுடைய
தாணியீர் தாமதமெவ
னழலிடை யகப்பட்டு மாழ்குறு புழுப்போல
வழியாது வருதிர்நம்மை
யுழையிருந் தறுதிநமு முண்மைநெறி யிற்செல
வுறப்பவற் பாடியேத்தி
விழைவுட னவன்றன தருட்கடலின் மேவிநனி
விளையாடி யாடுதுமரோ. (261)

[சுகேசன் போகின்றான்.

சிதாநந்தன்:—(கலாவதியைக் கைபிற்பிடித்துக்கொண்டு பாடுகின்றான்.)

மங்கைப் பருவமுற்றே வளர் கிற்குமெஞ் சிற்றறிவாந்
துங்கக் கவுமுதியை நனி தோயுங் கலாதரனே
யெங்கும் விழியுடையாய் தடுத் தெம்மையாட் கொண்டவனே
யெங்கள் பரசிவமே யுனை யெங்ஙனம் வாழ்த்துதுமே? (262)

[சிதாநந்தனுங் கலாவதியும் போகின்றனர்.

---

பாட்டு. 261—உவமை யணியும் ஏகதேச வுருவகவணியுஞ் சேர்ந்திருத்தலாற் சேர்வையணியாம்.

„ 262—இதன் கண்ணே சிற்றறிவு தலைவியாகவும் இறைவன் றலைவனாக வுங் கூறப்பட்டுளது. மகளிர்க்கு மடமுமொருகுணமாதலிற் 'சிற்றறிவு' என்னப்பட்டது. மங்கைப் பருவமுறல்: பரிபக்குவ தசையடைதல். கவுமுதி: சந்திரிகை. களங்கத்தோடு கூடிய நிலவினின்று நீக்குதற்குத் 'துங்கக் கவுமுதி' யென்றது. கலாதரன்= சந்திரன்; (சந்திரகலையைத் தரித்த) சிவபெருமான். இருவினையொப்பும் மலபரிபாகமு மெய்தியவான்மா இறைவனோடைக்கிய முறுமாறு முன்னிரண்டடிகளிற் கூறியமை காண்க.

## நான்காங்களம்.

---

இடம்: காஞ்சியிலாத்தாநமண்டபம்.

காலம்: பிற்பகல்.

பாத்திரங்கள்: சயதுங்கன், சுகேசன், மேதாதிதி, சந்மதி, சுயம்பிரகாசர், விகடவசநன், ஆத்தானிகர்கள், பிரபுக்கள், கனவான்கள் முதலாயினோர்.

(சிதாநந்தனுங் கலாவதியுஞ் சிங்காதநத்திருக்கிறனர்.)

சிதாநந்தன்:—(கலாவதியோடெழுந்து) மன்னர்காள்! மந்திரிகாள்! மறையோர்காள்! மற்றையோர்காள்! இப்பொழுது நீவிர்யாவருங்கூடி யெம்மிருவரையும் அரியாதனத் தமர்த்திச் சோணாட்டின தரசுரிமை கைக்கொண்டு அதனைப் பரிபாலிக்குமாறு கூறியாங்கே யாங்களிருவேமும் நடந்துகொள்ளச் சித்தமாயிருக்கின்றேம். சற்று முன்னர்ச் சந்மதியாரவர்கள் படித்த இராசநீதிப் பத்திரிகையிற் சொல்லிய வொவ்வொருவிடயத்தினும் அணுத்துணையுந் தவறின்றி நடப்பான் முயல்கின்றேம். அன்னணமே வாக்குறுதியுஞ் செய்கின்றேம். இனி இறைவன் றிருவருளை முன்னிட்டு அவனடித்தாமரையே துணைக்கொண்டு எக்காரியத்தையுமியற்றுவேமாக. 'மன்னுயிரைத் தன்னுயிராமதிக்க' என்னும் நியாயத்தின்வண்ணம், எம்மைப்போலவே சகலமாந்தரையும் விரும்பிப் பாதுகாப்பேமாக. ஒப்புரவறிந்து உயிர்கள்பாற் கண்ணோடி யுலகோம்புவேமாக.

(இருவரு மாதனத்தமர்கின்றனர்.)

(யாவரும் கைகொட்டி யார்க்கின்றனர்.)

சுயம்பிரகாசர்:—(எழுந்து ஆசிர்வதித்துப் பாடுகின்றனர்.)

மண்வளரு மாணுடரு மற்றுமுள பல்லுயிருங்
கண்வளர்ந்து நாடோறுங் கவலையற்றுக் களிகூரத்
துந்துமியின் னியங்கவங்கத் தோகையர்க ணடமாட
வந்தியர்கள் வாழ்த்தெடுப்ப மாகதர்நின் றேத்தெடுப்ப
மாதவத்துப் பெரியோர்கண் மங்கலநற் போற்றிசைப்ப
வேதவித்து வான்களெனும் விமலர்கள்பல் லாண்டிசைப்பத்
துங்கமிகுந் தமிழ்வாணர் சொற்சுவையும் பொருட்சுவையும்
பொங்குநறும் பாட்டிசைப்பப் புரிவனேக ணின்றேங்கத்

திங்கணெடுங் குடைநிழற்கீழ்ச் சிலதியர்சா மரையிரட்டச்
சிங்காத னத்தமர்சி தானந்தப் பெயருடையோய் !
எவ்வுயிருக் கெதுபற்றி யிடரெய்து மாயிடினு
மவ்வுயிருக் குறுதுணையா யருள்பொழியுந் திருவுள்ளம் !
அருந்தமிழ்தம் போலினிமை யார்ந்துதலை யன்பொழுகு
மருந்தமிழ்ச்சொற் பொருட்செறிவுற் றமர்ந்ததுநின் றிருவாகு
கன்றனைய குடிகட்கும் காரிகைக்கும் பொதுவன்றி
நின்றனக்கே யுரியதுகொ னின்மலநின் றிருமேனி !
ஆருயிர்யா வற்றினையு மளிக்கிற்பா மென்றுசொலி
யோருயிர்க்கே யுடலளித்தா யொப்புரவு மறிந்தனைகொல் ?
குவிதனத்துக் கோதைநலார் கொடுமதவே டன்கணையாற்
றவிதரவா ளாதிருப்பாய் தண்ணளியு நிற்கிலைகொல் ?
செங்குமுத விதழ்மடவார் சீரிதய கமலமெலாந்
தங்குதலா னிறைவனெனுந் தனிப்பெயரு முற்றனைகொல் ?
திருந்துகழல் வேந்தர்தொழச் சினவேலோய் வீற்றினிதி
னிருந்தபெரு மங்கலநிற் கியப்புதலுஞ் சிறப்பேயோ ?
மல்வென்றி யோடுமண மங்கலமும் யாம்பாடல்
செல்வென்ற கமுடையாய் சிறிதேனும் புகழாமோ ?
　　விதுநிகர் முகனுடை விமலசு குணவள
　　மதுரையெ ணகர்தனில் வளர்தரு மாசனே !
　　உலகையொ டறுதிற முயர்வினி நகர்வதி
　　பவமகிழ் புரிகுவை பரசுறு சாசனே !
ஆரருளும் புரிவாய்நீஇ! ஆனந்தந் தருவாய்நீஇ!
வீரர்தமுள் வீரனுநீஇ! வேந்தர்தமுள் வேந்தனுநீஇ!
　　　　ஐயனீஇ ! செய்யனீஇ!
　　　　ஆதிநீஇ ! சோதிநீஇ!
　　　　நாதனீஇ! போதனீஇ!
　　　　அறிவனீஇ! இறைவனீஇ!
　　　　　அதனால்,
பொற்புறு மரகதப் பாசடை பொலிந்த
கற்பக நிழற்கட் காவலன் போலப்
பாண்டிய சோழ மாண்டகு நாடுக
ளாண்டருள் செய்யு மாறெம் மனத்தகத்

தாசைமீக் கூர்ந்துநல் லாசிடை யிடுது
மெங்கோ மானே யினிமையாயச்
செங்கோல் செலுத்திச் சிறந்துவாழ் கெனவே ! (263)

[மலர்மாரிபெய்து யாவரும் போகின்றனர்.

## ஏழாம் அங்கம் முற்றிற்று.

---

## வாழ்த்து.

### கலிவிருத்தம்.

வாழ்கசி தாநந்தப் பரிதி மாலுடன்
வாழ்கக லாவதி வளர்க வில்லறம்
வீழ்கமா மழைமிக விளைக நானிலந்
தாழ்க மற்றருந்துயர் தழைக பத்தியே. (264)

---

„ 263—இது வண்ணக வொத்தாழிசைக் கலிப்பா. இதன் கண்முதற் பத்துவரியுந் 'தரவு:' 'எவ்வுயிருக்' கென்பது முதற் 'புகழாமோ' வென்பதிறுதியாகவுள்ள பதினாறு வரிகளும் ஈரடியான் வந்த எட்டுத் 'தாழிசைகள்' இவற்றின் கண்ணே சுயம்பிரகாச முனிவர் மிகவும் விநோதமாகவுஞ் சாதுரியமாகவுங் கூறுநர்போல நற்குணங்களைச் செவ்விதிற் செவியறிவுறுத்து மாறுணர்க. 'காரிகை'யும், 'ஒருயி'ருங் கலாவதியைக் குறிக்கின்றன. இறைவன்: எப்பொருளினுந் தங்குபவன்' என்றார் அடியார்க்கு நல்லாரும். இனி, 'வீற்றிருந்த மங்கலம்,' 'மல்வென்றி,' 'மணமங்கலம்' : இவை புறப்பொருட்டுறைகளாம். இவையிற்றி னிலக்கணங்களைப் புறப்பொருள் வெண்பா மாலையிற் காண்க. 'விதுநிகர்.....................சாசனே' : இந்நான்கு வரிகளும் ஈரடியான் வந்த அராகங்கள். 'ஆருளும்.....................இறைவனீஇ!' இவை யனைத்தும் அம்போதரங்கம். இவற்றின் கண்ணே யுலக பாலருருக்கொடு நின்று உலகோம்புதலிற் சிதாநந்தனிடத்து இறைவன் குணங்களேற்றப்பட்டன. "திருவுடை மன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேனே யென்னும்."—திருவாய்மொழி.

சிதாநந்தன் : தீரோதாத்த நாயகன்.

கலாவதி : சுதுணை நாயகி.

264—சிதாநந்தப் பரிதிமால் : சிதாநந்தன் பரிதியையுந் திருமாலையும் முறையே யிருணீத்து உதவலினுந் துயர் நீத்துக் காத்தலினு மொத்தலினிவ்வா றுரைக்கப்பட்டது. அன்றியும், 'பரிதிமால்' என்ற துணையானே யிந்நூலாசிரியர் பெயருந் தொனிக்குமாறு காண்க.

இயலிசை நாடக மென்னும் பேரவா
முயரெழில் பரந்தசீ ருறுப்பு மேவிய
நயனுறு நற்றமிழ் நங்கை வாழிய
வியனரும் புலவர்மேன் மேலு முய்கவே. (265)

வீடரும் பொதுசந விசயை மண்டப
வாடரங் காகிய வதற்கு நம்மவை
நாடிவந் தாடிய நடர்க்குங் காணிய
கூடிய மாந்தர்க்குங் குறைவில் சோபனம். (266)

## கலாவதி நாடகம் முற்றிற்று.

## திருச்சிற்றம்பலம்.



---

" 265—இதன் கண்ணே தமிழ் மொழியை யொரு நங்கையாகவும், இய லிசை நாடக மென்னும் அதன் முப்பகுதிகளையும் முறையே அந் நங்கையினது பருத்துப் பரந்துதோன்றும் மூன்று றுப்புக்களாக வும் உருவகஞ் செய்திருத்தலை யுய்த்துணர்க.

" 266—பொதுசந விசயை மண்டபம். VICTORIA PUBLIC HALL. நம்மவை : வித்வந் மநோரஞ்சநீ சபை.